திருமந்திரக் கதைகள் - 9
கே.வி.துரைசேகரன்
P. Yahni

என்னுரை

திருமந்திரமும் நானும்

சைவசமயத்தையும், தமிழையும் வளர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தால் பழந்தமிழ் நூல்களுக்குக் கதை எழுதினேன். அப்போது நான் பதவியில் இருந்தமையால் பெரும் சிரமப்படவில்லை. உதவிக்குப் பலர் வந்தனர். அது பெரும் செயலாக எனக்குத் தெரியவில்லை.

அதன்பின் சமய தத்துவங்களுக்குக் கதை எழுதினேன். பழந்தமிழ் நூற்பாடல்கள் மனித மேம்பாட்டை வலியுறுத்துவன. எனினும் அவற்றின் சிறப்பை யாரும் உணரவில்லை. அதற்குக் காரணம் அவை விளங்காமைதான். அவற்றை ஆராய்ந்து கதைகளாக எழுதினேன். அதனால் அவற்றின் கருத்துக்கள் மக்களுக்குப் புரிந்தன. திருமந்திரத்தை 2008ஆம் ஆண்டு கதைகளாக எழுதினேன். அவை சந்நதியான் வெளியீடாக ஞானச்சுடரில் ஒரு வருடம் வெளிவந்தது. 24.05.2008இல் 3000 திருமந்திரப் பாடல்களுக்கும் கதை எழுதும்பணி முடிவடைந்தது; மூவாயிரம் பாடல்களில் எல்லாப் பாடல்களுக்கும் கதை எழுத முடியவில்லை. சில தத்துவங்களுக்குக் கதை எழுத முடியாது. உதாரணமாக ஒரு மலம் உடையவர்கள் விஞ்ஞானகலர், இரு மலம் உடையவர்கள் பிரளயாகலர், மும்மலம் உடையவர் சகலர். இப்படியான சில பாடங்களுக்குக் கதை எழுதவில்லை. சில தத்துவங்கள் திரும்பத் திரும்ப வருவதாலும், கதை எழுத முடியவில்லை.

திருமந்திரக் கதைகள் சாதாரணமான மக்களுக்கும் புரியக்கூடிய வகையில் எழுதியுள்ளேன். வாசிப்பவர்கள் கருத்துக் கூறவும். இது தவறு இருப்பின் திருத்த உதவும் என எதிர்பார்க்கின்றேன்.

மூவர் சொன்ன தமிழ்மறை மந்திரம்
மூவாயிரமும் யாவரும் அறிய
வழிசெய் அருள்வேன் என்று
முக்கண்ணன் சொன்னான். நேரில் வந்து
அவனின் அருளால் முடிந்தது மந்திரம்.
ஆருயிர் அனைத்தும் அறிந்து தெளிய
அண்டமெங்கும் அதிரும் உன் பெயர்
திருமறையாகும். உந்தன் எழுத்து
விளங்காதவற்றை விளக்கி விட்டாய்
வீடு பேறடைய வழியும் அமைத்தாய்

விழலுக்கெழுதி புகழ்பெற அலையும்
வீணரிடையே விண்ணவனானாய்
என்றான் மூலன் அகமே மலர
நன்றி சொல்ல நினைத்தபோது
நாம்தான் நன்றி சொல்லவேணும் உனக்கு
என்றான் மூலன் அகமும் முகமும் மலர.

போதும் போதும் போதும் என்று
செய்ததை நினைத்து மகிழ்ந்தேன் நானும்
இன்று இல்லை என்றோ ஒருநாள்
மூலனைப்போல நீயும் வாழ்வாய்
என்றொரு செய்தி வானில் மிதந்தது
சிவனே அருளி நின்றான் அம்மையுடன்
போதும் எனக்கு போதும் எனக்கு
சிவனின் அருளால் யாவும் நடக்கும்.

கே.வி. குணசேகரம்

திருமந்திரக் கதைகள் - 8
P. Yalini

திருமந்திரக் கதைகள்

ஒன்பதாம் தந்திரம்

(மகுடாகமம்)

1.குருமடத்தரிசனம்

2601 பலியும் அவியும் பரந்து புகையும்
ஒலியும்எம் ஈசன் தனக்கென்றே யுளகிக்
குவியுங் குருமடங் கண்டவர் தாம் போய்த்
தளிரு மலரடி சார்ந்துநின் றாரே.

"சிவனடியார்களே, அன்பால் அமைக்கப்படும் செஞ்சாலியரிசிச் சோறாகிய திருவமுதுப்பலியும், முத்தழற்கண் நந்தி சொரியும் நெய் அவியும், பரந்து சித்தாந்த சைவத் திருமடங்களிலெல்லாம் நறும்புகை கமழாநிற்கும். எனவே மெய்யடியார்க்குச் சமைக்கும் சோறடு பகையும் பொருந்திய சிவ வணக்கத்தின் பொருட்டுச் செய்யப்படும் வேள்வித்தீயில் நெய்பெய் புகையும் எங்கும் பரந்து உள்ளம் பொங்க உலகும் பொங்கியது. திருவருளால் தோன்றிய செந்தமிழ்த் திருமறை திருமுறை சிவ நூற்களின் கண் பிறப்பறுக்கும் அருள்மறைகளே பேசப்பட்டுள்ளன. அவைகளே கீதத்தொலி எனப்படும். இவற்றை நெஞ்சுருகி நினைக்க அன்பர் உள்ளம் குவியும். அதனால் கைகளும் தலைமேல் குவியும். அத்தகைய சிவகுரு மடங்களைக் கண்டவர் சிவபெருமானின் திருவடியை அடைந்து இன்புறுவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2602 இவனில்ல மல்ல தவனுக்கங் கில்லை
அவனுக்கும் வேறில்லம் உண்டா அறியின்
அவனுக் கிவனில்ல மென்றென் றறிந்தும்
அவனைப் புறம்பென் றரற்றுகின் றாரே.

"சிவனடியார்களே, இவன் என்பது ஆருயிரைக் குறிக்கும். அத்துடன் இவன் என்ற சொல் சிறப்பாகச் சிவகுருவைக் குறிப்பது. அவன் என்பது சிவனைக் குறிப்பதாகும். அதனால் இவனுடைய நற்றவ உள்ளமே அவனது திருக்கோவிலாகும். இதைத்தவிர வேறு எக்கோவிலும் சிவனுக்கு இல்லை. இதையே நூல்கள் எல்லாம் சொல்கின்றன. இதை உணராது சிலர் வீண் வார்த்தைகளைப் பேசிக் காலத்தை வீணாக்குகிறார்கள்."

"சிவனடியார்களே, வெளியூருக்குச் சென்ற ரவீந்திரன் அன்று மடத்திற்கு வந்து கதிரேசனது பாதங்களைக் கழுவி, அதைத் தூய்மையான துணியால் துடைத்துவிட்டுத் தூபதீபங் காட்டினான். அதைப்பார்த்த குமாரசாமி நல்லைநாதனுக்குச் சொன்னான்; "நல்லை இப்போ புதுப்புது முறைகளையெல்லாம் மடத்தில்

புகுத்துகிறார்கள். கதிரேசன் ரவீந்திரனுக்கு வேண்டியவர் என்றால் வீட்டில் அதை வைத்திருப்பதை விட்டுவிட்டுப் பொது இடத்தில் இப்படி நடந்து கொள்ளலாமா? பார்ப்பவர்கள் கதிரேசனுக்குக் கொம்பு முளைத்துவிட்டதாக நினைப்பர். இதெல்லாம் பிரச்சாரம்" என்று சொன்னபோது நல்லைநாதன் சொன்னான்; "நீங்கள் ஆசிரியராக இருந்தும் அறிவில்லாதவர் போலவே எப்பொழுதும் நடந்து கொள்கிறீர்கள். ரவீந்திரன் கதிரேசனைத் தனது சிவகுருவாக நினைப்பவன். சிவகுருவை இவன் என்பார்கள். அவன் என்பது சிவனை. இவன் என்பது சிவகுருவையும் ஆருயிரையும். இரண்டையும் இருப்பிடமாகக் கொண்டவன் சிவன். இவன் என்ற ஆருயிரில் சிவன் இருக்கிறான். இவன் என்ற சிவகுருவில், சிவன்கோவில் கொண்டிருக்கிறான். அதனால் சிவகுரு சிவனாகிறான். அதனால் தான் சிவகுருவாக ஏற்றுக் கதிரேசனை ரவீந்திரன் சிவனாக நினைத்திருக்கிறான். இதனால் உனக்கென்ன பிரச்சினை. பாவச்செயல்களில் ஈடுபட்டுப் பாவத்தைத் தேடாதே என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2603 நாடும் பெருந்துறை நான்கண்டு கொண்டபின்
கூடுஞ் சிவனது கொய்மலர்ச் சேவடி
தேட வரியன் சிறப்பிலி எம்மிறை
ஓடும் உலகுயி ராகிநின் றானன்றே.

"சிவனடியார்களே, நன்னெறி நான்மை நற்றவத்தோரால் நாடப்பெறும் மிகுசைவத்துறையே பெருந்துறையாகும். அத்துறையினரைத் திருவருளால் நான் கண்டு கொண்டேன். அதன்பின்பு சிவபெருமானின் திருவடியைச்சேரும் பேறு பெற்றேன். சிவகுருவின் திருவுள்ளத்தை உடைமையாகக் கொண்டு எழுந்தருளியிருப்பவன் சிவபெருமான். அவன் உலகாகவும், உயிராகவும் பிரிப்பின்றி நிறைந்து நின்று இயங்குகிறான். அவனை நான் கதிரேசனின் வடிவில் காண்பதால் சிவனுக்குச் செய்யும் சேவைகளையும், பூசைகளையும் கதிரேசனுக்குச் செய்கிறேன் என்று பலமுறை அவன் மடத்தில் பிரசங்கம் செய்யும்போது கூறியிருக்கிறான். அதைப் பலர் கேட்டும் உணர்வதில்லை. அதனால் தான் அவ்வாறு பேசுகின்றனர். ரவீந்திரன் சொல்வான் யாரையும் எந்த வகையிலும் திருப்திப்படுத்த முடியாது. தென்னைமரம் மாங்காய் காய்ப்பதில்லை. அதுபோல மாமரம் தேங்காய் காய்ப்பதில்லை. இது நடைமுறை. அதுபோலத்தான் சில மனிதர்களும் திருந்த மாட்டார்கள். நாம் திருத்தவும் கூடாது என்பான். அது உண்மை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2604 இயம்புவன் ஆசனத் தோடு மலையும்
இயம்புவன் சித்தக் குகையும் இடமும்
இயம்புவன் ஆதாரத் தோடு வனமும்
இயம்புவன் ஈரா றிருநிலத் தோர்க்கே.

“சிவனடியார்களே, நல்லைநாதன் குமாரசாமிக்குச் சொன்னார்; “ஒவ்வொருவரும் பார்க்கும் பார்வையால் உலகத்தைத் தாம் புரிந்து கொண்டதாக நினைப்பார்கள். பார்க்கும் பார்வை நிதானத்துடன் இருத்தல் வேண்டும். சிவனடியாரான கதிரேசன் ஒருவருடன் கதைத்தால் அது சிவனது கதையென்று பலர் நினைப்பர். சிலர் வேறுவிதமாகவும் நினைப்பர். ஒவ்வொருவரும் தன்னைப் போலத்தான் பிறரும் இருப்பார்கள் என்று நினைப்பார்கள். புலித்தோலைப் போர்த்தினாலும் பசு புலியாகாது. சிவவேடமணிந்து கள்ளத்தனம் புரிபவர், சிவவேடமணிந்த எல்லோரும் கள்ளர் என்றுதான் நினைப்பார் இது இயல்பு. சிவபெருமான் ஆருயிர்கள் உய்யும் பொருட்டுத் தான் எழுந்தருளியிருக்கும் இடங்கள் எவையெவையென்று சொல்லியருளியுள்ளான். முக்கியமான இருக்கை சிவனடியார்களின் உள்ளமாகும். திருமடம், திருக்கோவில், காடு வீடு சேர் இடங்களெனப் பல உண்டு. முக்கியமானது இவன் என்ற சிவகுருவின் உள்ளம். அதில் சிவன் கோவில் கொண்டிருக்கிறான் என நூல்கள் பலவும் கூறுகின்றன. இதை நீ கற்றிருக்கிறாய். கற்றதை அனுபவத்தால் உணர்பவன் தான் மேலான மனிதன். எதையும் புரிந்து கொள்ளக் கல்வியறிவு தேவையில்லை. பயிற்சியும், அனுபவமும் தான் தேவை. ஒரு நாய் மனிதனால் கண்டுகொள்ள முடியாதவற்றைக் கண்டு கொள்கிறது. அதற்கு நூற்பயிற்சி இல்லை. தேர்வு இல்லை. கட்டுரை எழுதவில்லை. எழுதி வாசிக்கவும் இல்லை. குமாரசாமிப்புலவர் நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். சில நூல்களை எழுதியவர். பலர் அதை ஆராய்ச்சி செய்து கலாநிதிப்பட்டம் பெறுகின்றனர். அப்படியா அந்த நாய் படித்தது. நீ படித்தவன் என்று நினையாது சமய சம்பிரதாயங்களை ஏற்று ஆராய்வு செய். யாவும் புலனாகும் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2605 முகம்பீட மாமட முன்னிய தேயம்
அகம்பர வர்க்கமே யாசில்செய் காட்சி
அகம்பர மாதனம் எண்ணெணண் கிரியை
சிதம்பரந் தற்குகை யாதாரந் தானே.

“சிவனடியார்களே, நல்லைநாதன் குமாரசாமிக்குச் சொன்னார்; “சிவபெருமானுக்கும் சிவகுருவின் திருமுகமே தாமரை இருக்கையாகும். சிவகுருவின் திருமடமே சிறந்த இடமாகும். ஆருயிர்களின் தூய்மையான மனமே குற்றமற்ற அருட்காட்சிகளை அருளும் நிலைக்களமாகும். அதனால் ஒவ்வொருவரும் தமது உள்ளங்களைத் தூய்மைப்படுத்திச் சிவபெருமானை அதில் அமர்த்திப் பேண வேண்டும். அத்துடன் பதினாறு வகையான வழிபாடுகளை உள்ளன்புடன் செய்தல் வேண்டும். அன்புள்ள உள்ளம் இன்ப உள்ளமாகும். அது அறிவுப்பெருவெளியின் நுண்ணிய நிலைக்களமாகும். இவற்றை உணராது கண்டபடி கதைப்பதால் தான் உன்னை

எல்லோரும் வெறுக்கிறார்கள். கதிரேசனைக் கண்டதும் பலர் கைகூப்பி வணங்குகின்றனர். அது அவர்களது விருப்பம். அதில் தலையிட உனக்கு எப்படி உரிமை வந்தது. யாராவது பிறருக்குப் பாதிப்பில்லாமல் வாழ்ந்தால் யாரும் குறைசொல்லமாட்டார்கள். தில்லையம்பலம் மது அருந்துபவன். மதுவைக்குடித்து விட்டு அமைதியாகச் சென்று தனது வேலைகளைச் செய்வான். வீட்டாரும் ஊரவரும் அவனைக் குறை சொல்வதில்லை. உன்னைக் குறைசொல்கிறார்கள். ஏனென்றால் நீ அடுத்தவனின் விடயத்தில் தேவையின்றித் தலையிடுகிறாய். அதைப் பிடிக்காத சிலர் உன்னைத் தாக்கியிருக்கிறார்கள். அதனால் இனியாவது மற்றவர்களின் விடயங்களில் தலையிடாதே. சிவபெருமான் தான் இருக்கும் இடங்களைச் சொல்லியுள்ளார். அங்கு சென்று வழிபடு எல்லாம் சரி வரும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2606 அகமுக மாம்பீடம் ஆதார மாகுஞ்
சகமுக மாஞ்சத்தி யாதன மாகுஞ்
செகமுக மாந்தெய்வ மேசிவ மாகும்
அகமுகம் ஆய்ந்த அறிவுடை யோர்க்கே.

"சிவனடியார்களே, நல்லைநாதன் குமாரசாமிக்குச் சொன்னார்; "உனக்கு எதைச் சொன்னாலும் புரியாது. புரியாத மாதிரி நடந்து கொள்வாய். ஆனால் கற்ற அறிவு சிலசமயம் விழித்தால் பயன்படும் என்பதற்காகச் சொல்கிறேன். நினைவு அகலாத உள்ளம்தான் சிவபெருமானின் இருப்பிடம். எத்தனையோ தீயவர்கள் குடிகாரர்கள் கதிரேசன் சொல்வதைக் கேட்டு ஒழுகியமையால் இன்று பெருவாழ்வு வாழ்கின்றனர். ஒரு கணம் இவனை நினைத்தால் அவன் உடனே வந்து நினைப்பவரின் உள்ளத்தில் குடியேறி விடுவான். அதன்பின் அந்நினைவு படிப்படியாக அதிகரிக்கும். உலகினைத் தொழிற்படுத்தும் திருவருளாற்றல் தான் சிவனது திருவுரு. அத்திருவுருவின்கண் விளங்கித் தோன்றி உலகில் வெளிப்படுபவன் சிவபெருமான். திருவருளால்தான் இவற்றைப் புரிந்து கொள்ள முடியும். காற்று வீசுவதை யாராவது கண்டார்களா? இவை உணர்வால் உணரப்படுபவை. அதுபோலச் சிவனை வணங்கினால் அவனது உருவம் வெளிப்படும். அதுதான் திருவருள். அதைத் திருவருளால்தான் உணர முடியும். உனது பிள்ளை உன்மீது அன்பு செலுத்துவதை நீ எப்படி உணர்கிறாயோ அப்படித் திருவருளையும் உணர வேண்டும் என்றபோது தவராசா சொன்னான்; "இவரை எந்தப் பிள்ளை மதிக்கிறது. இவர் மதித்தால் தான் அது தெரியும். அது போலக் கடவுளை வணங்கினால்தான் திருவருளின் மகிமை புரியும். எவ்வளவு காலமாக இதைச் சொல்கிறீர்கள். இவன் புரிந்து கொண்டவனா? புரிந்து கொள்ளக்கூடியவனுக்கு ஒருமுறை சொன்னால் போதும் என்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2607 மாயை யிரண்டு மறைக்க மறைவுறுங்

காயமோ ரைந்துங் கழியத்தா னாகியே
தூய பரஞ்சுடர் தோன்றச் சொரூபத்துள்
ஆய்பவர் ஞானாதி மோனத்த ராகுமே.

"சிவனடியார்களே, நல்லைநாதன் தவராசாவுக்குச் சொன்னார்; "மகனே, கோபப்படாதே. கோபம் என்பது அறியாமையின் வெளிப்பாடு. மடத்தில் இதைச் சுவாமிகள் எத்தனை முறை சொல்லியிருப்பார். சொல்லும்போது மெய்மறந்து கேட்பவர்கள் அதன்பின் மறந்து விடுகிறார்கள். ஆருயிருக்கு அமைந்த உடல் மெய், உணர்வு மெய் என்னும் மெய்களுக்கு வேண்டிய மாயை இரண்டாகும். அவற்றைப் பகுதி மாயை, தூவா மாயை எனப்படும். இம் மாயைகள் ஆருயிரை உண்மையினை உணராதபடி மறைத்து வைத்துள்ளன. உண்மைத்தன்மையான உடம்பு ஐந்து வகையானது. பருவுடம்பு, நுண்ணுடம்பு, வளியுடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, இன்ப உடம்பு என்பனவாகும். இவற்றைச் சிவகுரு மூலமாகத் தேர்ந்து தெளிதலே கழிதலாகும். அழிந்ததும் உண்மை புலனாகும். அதனால் சிவபெருமான் தோன்றியருளுவான். அதனால்தான் ஆருயிர் தன்னை அறியும். நீ திருக்குறளைப் படித்தால் அதை எழுதிய வள்ளுவனையும் அறிந்தவனாவாய். அதுபோல் ஆருயிர்கள் சிவனை உணரும்போது தன்னையும் உணரும். நீ சிவனை வணங்குகிறாயே தவிரச் சிவனை உணரவில்லை. சிவனை உணர்பவன் தன்னையும், பிறரையும் உணர்வான். குமாரசாமி எதைச் சொன்னபோதும் கதிரேசன் அதைப்பற்றிப் பேசாமைக்கு இதுதான் காரணம் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2. ஞானகுரு தரிசனம்
(சிவகுருக் காட்சி)

2608 **ஆறொடு முப்பதும் அங்கே யடங்கிடிற்**
கூறக் குருபரன் கும்பிடு தந்திடும்
வேறே சிவபத மேலாய் அளித்திடும்
பேறாக ஆனந்தம் பேணும் பெருகவே.

"சிவனடியார்களே, நல்லைநாதன் தவராசாவுக்குச் சொன்னார்; "மகனே, சிவனைப்பற்றி நினை. வேறெதையும் நினைக்காதே. அப்படி நினைத்தால் மற்றவர்களின் வாழ்க்கைநிலை, நடத்தை போன்றவற்றை நினைக்க மனம் விடாது. மனம் தூய்மையானதாக இருந்தால் அது அழுக்கை ஏற்காது. பாலுக்குள் தண்ணீரை விடு. அது அதை ஏற்கும். தேன், சர்க்கரை என்பவற்றை விடு அவற்றையும் அது ஏற்கும். ஏனென்றால் அவை நல்லவை. புளிப்பான பாலை விடு அதையும் ஏற்றுத் தயிராகும். இதைவிட்டு விட்டு வேறு ஏதாவது தீயவற்றைக் இட்டால் அது திரைந்து கெட்டுவிடும். அத்தகையது தான் மனம். அருஞ்சைவர் மேற்கொள்ளும் முப்பத்தாறு மெய்களும்

சிவகுருவின் அருள்வழி நின்றால் அது அடங்கிவிடும். திருவைந்தெழுத்தை ஓத மனம் அடங்கிக் கும்பிடுதல் கைகூடும். அது கைகூடினால் சிவன் பேரின்பப் பெருவாழ்வைத் தந்தருள்வன். அதன்பின் அவனது திருவடியைத் தொழுது வந்தால் பேரின்பம் ஊறி உடலெங்கும் பரவி ஓடும். இது மெய்யுணர்வுள்ளவரின் நிலை. இது உனக்குப் பொருந்துமா? ஆமைபோல வாழ். சலசலப்புகளுக்கு இடமளியாதே என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2609 **துரியங்கள் மூன்றுங் கடந்தொளிர் சோதி**
அரிய பரசிவம் யாவையு மாகி
விரிவு குவிவற விட்ட நிலத்தே
பெரிய குருபதம் பேசவொண் ணாதே.

"சிவனடியார்களே, நல்லைநாதன் தவராசாவுக்குச் சொன்னார்; "சொர்க்கபூமி என்று எந்த அண்டங்களையும் சொல்வதில்லை. நாம் வாழும் பூமியைத்தான் ஏழு அண்டங்களில் வசிப்பவர்களும் சொல்கிறார்கள். இங்கில்லாதவை எவையுமில்லை. கடவுளர் உட்படத் தேவர்களெல்லாம் இங்குவந்து தான் தவஞ்செய்து தாம் விரும்பியதை அடைகின்றனர். பூமியில் வாழ்பவர்கள்தான் ஏழு உலகிற்கும் சென்று வர முடியும். ஆருயிரானது செயலறல், அருள் செயலறல், அருளோன் செயலறல் ஆகிய துரியங்கள் மூன்றும் கடந்து அப்பால் திகழும் அறிவுப் பேரொழிப்பிழம்பு சிவபெருமான். அவன்தான் பரமசிவன். விரிவும் குவிவும் என்று பேசப்படும் அவ்விரண்டும் அகல அகன்றதாகிய தூயநிலம் விட்டநிலம் இதுவே வானோர்க்கு உயர்ந்த இடம். அவ்விடமே திருவடிப் பெரும் பேறாகும். அந்நிலைபேறு ஒண்ணாப் பெருநிலை. அதனால் தான் சிவபெருமான் திருவருள் அம்மை உட்பட எல்லோரும் பூமிக்கு வந்து தவம் செய்து நன்மைகளைப் பெற்றனர். இதை எந்த மனிதரும் உணர்வதில்லை. உணர்ந்தால் அவர்கள் தமக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்தியிருப்பர். இவற்றையெல்லாம் தெரிந்த நீயே சில சந்தர்ப்பங்களில் அறியாமைக்குட்பட்டு வருகிறாய் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2610 **ஆயன நந்தி யடிக்கென் றலைபெற்றேன்**
வாயன நந்தியை வாழ்த்தவென் வாய்பெற்றேன்
காயன நந்தியைக் காணவென் கண்பெற்றேன்
சேயன நந்திக்கென் சிந்தைபெற் றேனன்றே.

"சிவனடியார்களே, தாயை ஒத்த நந்தியின் திருவடியை வணங்கிச் சுமக்கும் பேற்றைத் திருவருளால் தலை பெற்றுள்ளேன். அத்தலை அடியேனுக்குத் தொண்டின் பொருட்டு அருளால் கொடுக்கப்படும் இரவல் கருவியாகும். கற்பவர்களுக்குக் கொடுக்கப்படும் நூல் இதற்கொப்பானதாகும். உணவின் சுவையிலும் பார்க்கச் செவிச் சுவையே மேலானதாகும். சுவை உணவை உண்ணும் வாயை நான் பெற்றது நந்தியை

வாழ்த்துவதற்காகவே. அவனை உணர்வினால் உணர்ந்து கொள்ளவே எண்ணத்தையும், சிந்தனையையும் பெற்றேன்."

"சிவனடியார்களே, இவ்வாறு திருமூலர் கூறுகிறார். உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் பெற்றது நந்தியாகிய சிவபெருமானை வாழ்த்தி வணங்கவே. இதைவிட்டுவிட்டுக் கோவிலடியில் கற்ற குமாரசாமியும், தவராசாவும் வாயால் வாழ்த்தாது வீணாக வார்த்தைகளைப் பேசிச் சண்டையிடுகிறார்கள். இதைப் படிக்காத இருவர் கூடச் செய்யக்கூடாது. ஏனென்றால் இது பற்றிப் பலரும் பலமுறை இங்கு பேசியுள்ளனர். அதனால் சிவனை வாழ்த்தத் தந்த வாயால் தீயவற்றைப் பேசாதீர்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2611 **கருடன் உருவங் கருலும் அளவிற்**
பருவிடந் தீர்ந்து பயங்கொடு மாபோல்
குருவின் உருவங் குறித்தஅப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே.

"சிவனடியார்களே, ரவீந்திரன் கதிரேசனைத் தனது சிவகுரு என்கிறான். இது குருவுக்கும் சீடனுக்கும் உள்ள உறவு. குருவுக்குச் சீடனைத் தெரியாது. சீடனுக்குக் குருவைத் தெரியாது. காலம் அவர்களைச் சேர்த்து வைக்கும். பாம்பால் தீண்டப் பெற்றவனின் நஞ்சை அகற்றுபவன் பாம்புக்குப் பகையான கருட மந்திரத்தை முறைப்படி பயின்று தன்னைக் கருடனாக உருவகித்துப் பாம்பு தீண்டியவனைக் கண்ணாற் பார்ப்பான். பார்த்ததும் அக்கொடிய நஞ்சு அகன்றுவிடும். அதுபோலச் சிவகுருவின் அருட்பார்வையால் மும்மலங்களும் அகலும். உயிரும் திருவடிப்பேறு பெற்றுச் சிவனாக விளங்கும். இவற்றிற்கு உறுதுணையாக இருப்பது திருவைந்தெழுத்து. இதை உணர்ந்தார்களே மெய்யுணர்வு உடையவராவர். ஒரு வாலிபன் இலட்சக்கணக்கான பெண்களைக் காண்கின்றான். அதுபோலப் பெண்ணும் இலட்சக்கணக்கான ஆண்களைச் சந்திக்கிறாள். ஆனால் காதலிப்பது ஒருவரைத் தானே. அவர்களை நீங்கள் ஏன் காதலிக்கிறீர்கள்? எதற்காக ஒன்று சேர்ந்தீர்கள் என்று கேட்டால் சிரிப்பார்கள். இதுபோன்று ஒரு பெண் ஆயிரம் சேலைகளைப் பார்த்துவிட்டு ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறாள். அதைப் பார்த்துவிட்டு அழகில்லை என்று விலக்கியவள் அப் பெண் உடுத்தியபோது அழகான சேலை என்கிறாள். இது தான் உலகம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2612. **தோன்ற அறிதலுற் தோன்றல்தோன் றாமையு**
மான்ற வறுவு மறிநன வாதிகள்
மூன்றவை நீங்குந் துரியங்கள் மூன்றற

ஊன்றிய நந்தி யுயர்மோனத் தானன்றே.

"சிவனடியார்களே, சிவகுருவின் அருளினால் திருவடியுணர்வு தோன்ற அதை அறிவர். அறிந்தபின் தோன்றல் தோன்றாமையாகிய நினைப்பும் மறப்பும் நீங்கும். மயக்க அறிவுகளும் அகலும். அறிகின்ற நனவு கனவு உறக்கம் முதலிய பாடுகள் மூன்றும் நீங்கும். ஆருயிரின் செயல் அறல், அருட்செயல் அறல், அருளோன் செயல் அறல் மூன்றும் அறம். அறுந்ததும் சித்தத்தின்கண் திருவடியூன்றிய நந்தி எழுந்தருள்வான். அந்நிலையில் அப்பேறு பெற்றவன் உயர்ந்த மோனநிலைக்கு ஆளாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2613. **சந்திர பூமிக் குடன்புரு வத்திடைக்**
கந்த மலரில் இரண்டிதழ்க் கன்னியும்
பந்த மிலாத பளிங்கின் உருவினள்
பந்தம் அறுத்த பரங்குரு பற்றன்றே.

"சிவனடியார்களே, திங்கள் மண்டிலத்தோடு கூடிப் புருவநடுவாக இருக்கும் நறுமணம் கமழும் இரண்டு. இதழ்த் தாமரை மலரை நெருங்குதல் வேண்டும். நெருங்கி அங்கு வீற்றிருக்கும் திருவருளாற்றலாகிய கன்னியைக் காணுதல் வேண்டும். அவள் பளிங்கு நிறத்தவள். அத்திருவருளின் அருள்த்துணையால் சிவகுருவின் திருவடியினைப் பற்றுதல் வேண்டும். அதுதான் ஆருயிரின் பெரும்பேறாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2614. **மனம்புகுந் தானுல கேழு மகிழ**
நிலம்புகுந் தானெடு வானிலந் தாங்கிச்
சினம்புகுந் தான்திசை எட்டும் நடுங்க
வனம்புகுந் தானூர் வடக்கென்ப தாமே.

"சிவனடியார்களே, மெய்யடியார்களின் தூய உள்ளத்தின் உள்ளே சிவபெருமான் புகுந்திருந்து அருளுவான். அவ்வாறு அவன் புகுந்திருந்து அருளுவது ஏழு உலகும் மகிழ்ந்து இன்புறுவதற்காகவே. நீண்ட வானிலத்தைத் தாங்கிக்கொண்டு இந்த மாநிலத்தே புகுந்தருளினன். ஆருயிர்களின் கொடுமை கண்டு எட்டுத்திசைகளும் நடுங்கும் வண்ணம் சினம் கொண்டான். அவனே பேரொடுக்கம் செய்யும் பெரும் பொருளானவன். அவனுக்குரிய சிறந்தவூர் திருக்கைலை ஆகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2615. **தானான வண்ணமுங் கோசமுஞ் சார்தருந்**
தானாம் பறவை வன்மெனத் தக்கன
தானான சோடச மார்க்கந்தான் நின்றிடில்
தானாந் தசாங்கமும் வேறுள்ள தானன்றே.

“சிவனடியார்களே, உணவுடம்பு, வளியுடம்பு, அறிவுடம்பு, இன்பவுடம்பு என்ற ஐவகை உடம்புகளையும் ஆருயிர் தான் என்று எண்ணி வாழும். இதை ஐங்கோசம் என்று கூறுவர். இதைப் பறவை என உருவகிப்பர். அத்துடன் தத்துவக் கூட்டங்களையும் ஆருயிர் தான் என்று கருதுகிறது. இவையாவும் தனக்கு வேறானவை என்று சிவகுருவின் அருளால் புலனாகும். புலனாகவே நற்றவ நான்மையின் விரிவுகள் பதினாறும் விளங்கும். விளங்கவே அவற்றை மேற்கொண்டு அவ்வுயிர் தானாகவே நிற்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2616. மருவிப் பிரிவறி யாளங்கள் மாநந்தி
உருவ நினைக்கநின் றுள்ளே யுருக்குங்
கருவிற் கரந்துள்ளங் காணவல் லார்க்கிங்கு
அருவினை கணசோரும் அற்றார் அகத்தே.

“சிவனடியார்களே, மெய்யுணர்வு பெற்ற ஆருயிரைத் திருவருளால் ஆட்கொண்ட மாநந்தி பின்வரும் பிறவிகளில் பிரித்தறியான். அவனது திருவடியை உணர்வின்கண் நினைக்க ஆருயிரின் தன்முனைப்பு அடங்கி அச்சிவத்தின் கண் ஒடுங்கிக் காண வல்லவர்களுக்கு அருவினைகள் சோர்ந்து அற்றழியும். இதற்குக் காரணமாக இருக்கும் மாயையும் அழியும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2617. தலைப்பட வாமெங்கள் தத்துவன் தன்னைப்
பயப்படு பாசம் அறுத்தறுத் திட்டு
நிலைப்பெற நாடி நினைப்பற வுள்கில்
தலைப்பட லாகுந் தருமமுந் தானே.

“சிவனடியார்களே, திருவருளால் சிவபெருமானைத் தலைப்படுதல் உண்டாகும். அத்தலைப்பாட்டினால் பல்வேறுபட்ட ஆசாபாசங்களை அறுத்து ஒழிக்கலாம். அதனால் திருவடியை நாடுங்கள். சிவநினைவு நீங்காது வாழுங்கள். அதனால் அவனது திருவடியை அடையலாம். அவன் போகங்களை அள்ளித்தரும் புண்ணியவான் ஆவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2618. நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மைச்
சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னானைத்
தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனுங்
கனத்த மனத்தடைந் தாலுயர்ந் [1]தாரே.

“சிவனடியார்களே, பூபாலசிங்கம் என்ற குடிகாரன் நன்றாகக் குடித்துவிட்டு சிவன் கோவிலின் தலைவரைப்பற்றி வாயில் வந்தபடி ஏசிக் கொண்டிருந்தான். கதிரேசன்

வந்தபோது மிகவும் அமைதியாகவும், அடக்கமாகவும் நின்ற அவன் கதிரேசன் சென்றதும் மீண்டும் குழப்பம் செய்தான். அவனது தொல்லையைத் தாங்கமுடியாத நல்லைநாதன் ரவீந்திரனிடம் வந்து சொன்னான்; "பூபாலன் காலையிலிருந்து குழப்பம் விளைவிக்கிறான். கதிரேசன் காணாதவர் போலச் சென்றுவிட்டார். இப்ப என்ன செய்வது." ரவீந்திரன் சொன்னான்; "அவன் குடித்துவிட்டுப் பேசுவதுபோலத் தெரியவில்லை. வேணுமென்று பேசுகிறான். கோவில் தலைவரான அருளானந்தம் பல தவறுகள் செய்வதாக மக்கள் பேசிக் கொள்கின்றனர். அதில் விசயம் இல்லாமல் இல்லை. இருப்பினும் கோவிலடியில் குழப்பம் செய்வது மன்னிக்க முடியாத குற்றம் என்றவன் ஏதும் பேசாது பூபாலசிங்கத்தின் அருகே சென்றான். அதைக் கவனித்த பூபாலசிங்கம் மெல்ல நழுவினான்; "அண்ணை நில்லுங்கோ. கோவிலுக்கு மக்கள் அமைதிக்காக வருகின்றனர். அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது. உனக்கு அருளானந்தத்தின் மீது கோபம் இருந்தால் அதை அமைதியாகச் சென்று கேள். இவ்வாறு பொது இடங்களில் பேசிப் பலரைப் புண்படுத்தாதே. ஒருவர் பேரன்புடன் சிவனை நினைத்தால் அவரைச் சிவபெருமான் திருவருளால் அறிந்து கொள்வார். அத்துடன் திருவைந்தெழுத்தை ஓதி அவனை வழிபட்டு வந்தால் கேட்டதெல்லாம் கிடைக்கும். தீயவர்களும் ஐந்தெழுத்தை ஓதினால் அவன் அவர்களை நல்லோராக்குவான். அதனால் சிவனின் இருப்பிடமாகிய கோவிலில் குழப்பம் செய்வது பாவமானது. அது அவனுக்குப் பிடிக்காது. என்று சொல்லும்போது பூபாலசிங்கம் சொன்னான்; "ஐயாவின் பேச்சுக்கு யாரும் மறுபேச்சுப் பேசமாட்டார்கள். ஆசிரியராக இருந்து பிள்ளைகளுக்கு இலவசமாகக் கல்வி கற்பிக்கிறீர்கள். நீங்கள்தான் ஊரவர் வழிபடும் சிவன். ஆனால் அருளானந்தன் மிகவும் மோசமானவன்...." என்று சொல்லும்போது, ரவீந்திரன் சொன்னான்; "அதை நீ தூயமனத்துடன் ஐந்தெழுத்தை ஓதிபின் இறைவனுக்குச் சொல். அவர் அதை நல்லமுறையில் செய்வார். தீயவர்களைத் திருத்தி அவர்களுக்கும் இன்பத்தைக் கொடுப்பவன் சிவன் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2619. தலைப்படுங் காலத்துத் தத்துவன் தன்னை
விலக்குறின் மேலை விதியென்றுங் கொள்க
அனைத்துல காய்நின்ற ஆதிப் பிரானை
நினைப்புறு வார்பத்தி நேடிக்கொள் வாரே.

"சிவனடியார்களே, ரவீந்திரன் பூபாலசிங்கத்திற்குச் சொன்னான்; "எல்லாம் சிவன் செயல். முழுமுதல்வனான சிவனை அவனருளால் வணங்குமிடத்தும் பல இடையூறுகள் ஏற்படும். இதற்கு நாயன்மாரின் வாழ்க்கை வரலாறு உதாரணமாகும். தீயவர்களின் கொட்டம் அதிகரிக்கும். துன்பங்கள் பலவும் வந்து சேரும். சமணர்கள் நாயன்மார்கள் சிவனை வணங்கும்போது எவ்வளவு துன்பங்களைச் செய்தார்கள்.

அரக்கர்கள் தேவர்களுக்கு எவ்வளவு துன்பங்களைச் செய்தார்கள். இது விதியாகும். ஒவ்வொருவரும் விதியைத் தாமே எழுதுகிறார்கள். மெய்யுணர்வுள்ளவர்கள். துன்பங்களை வெறுத்துச் சிவனை அடைய விரும்புகின்றனர். தீயவர்கள் எந்தச் செயலையும் துணிவுடன் செய்து இன்பம் என்று நினைத்துத் துன்பத்தை வரவழைக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் சிவன் அறிவைக் கொடுத்துள்ளான். எப்படி வாழவேண்டும் என்று மெய்யுணர்வு பெற்றவர்கள் சொல்லியும், எழுதியும் வருகிறார்கள். இவற்றைப் பின்பற்றாதவர்கள் பல்வேறு வகையான துன்பங்களுக்குள்ளாவார்கள். மெய்யடியார்கள் துன்பம் வந்தபோதும் அவர்களது ஆசியுடன் கூடிய அப்பனை இடையறாது வணங்குவர். அதைத்தான் கதிரேசன் செய்கிறார். செயல்களுக்குப் பயன் கிடைக்கும் என்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2620. நகழ்வொழிந் தாரவர் நாதனை யுள்கி
நிகழ்வொழிந் தாரெம் பிரானொடுங் கூடித்
திகழ்வொழிந் தார்தங்கள் சிந்தையி னுள்ளே
புகழ்வழி காட்டிப் புகுந்துநின் றானே.

"சிவனடியார்களே, ரவீந்திரன் திடீரென்று நோய்வாய்ப்பட்டதால் சுயநினைவை இழந்து விட்டான். அது குடும்பத்தினருக்குப் பெருங் கவலையைக் கொடுத்தது. அவனது மனைவியால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் கதிரேசனுக்குச் சொன்னாள்; "அவர் எந்த நேரமும் சிவநினைவுடன் இருப்பார். தானதர்மங்களைச் செய்பவர்; எல்லோருக்கும் இலவசமாகக் கற்பிப்பவர். இவருக்கேன் இப்படியான நோய் வந்தது. இனி இவரது கடமையை யார் செய்வார்கள். கடவுளுக்குக்கூட இரக்கமில்லை. நாற்பத்தைந்து வயதில் இந்த நிலை வரவேண்டுமா...? என்று அழுதாள். அதற்குக் கதிரேசன் சொன்னார்; "மகளே, மெய்யுணர்ந்தவர்களுக்கு வரும் இடையூறுகளைச் சிவபெருமானின் அருளால் நீக்கிக் கொள்வர். இது விதி. வினைப்படி உடல் கிடைக்கின்றது. விதிப்படி வாழ்க்கை அமைகிறது. இதில் கடவுளைக் குறைசொல்ல முடியாது. ரவீந்திரன் சுகமடைய வேண்டுமென்று எத்தனை ஆயிரம் மக்கள் சிவனை வேண்டுகின்றனர் என்று பார்த்தாயா? எல்லோரும் ரவீந்திரனுடைய செயல்களைப் புகழுகின்றனர். இது சிவன் கொடுத்த வரம் பயப்படாதே. ரவீந்திரன் சுகப்பட்டு இன்னும் பல காலம் சிவனுக்குச் சேவை செய்வான். அவனது வினைகள் அகல வேண்டும். அவனது மெய்யுணர்வு உலகிற்குத் தெரிய வேண்டும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2621. வந்த மரகத மாணிக்க ரேகைபோற்
சந்திடு மாமொழிச் சற்குரு சன்மார்க்கம்
இந்த இரேகை யிலாடத்தின் மூலத்தே
சுந்தரச் சோதியுட் சோதியு மாகுமே.

“சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; “பொதுவாக மக்களில் பெரும்பான்மையானவர்கள் கடவுளை வணங்கினால் எல்லாம் கிடைக்கும். நோய்கள், துன்பங்கள் வராது என்று நினைக்கின்றார்கள். அது பொய். விதிப்படி யாவும் நடக்கும். மெய்யுணர்வால் வரும் திருவருள் அதைத்தடுக்கும். அதனால் ரவீந்திரனுக்கு எதுவும் நடக்காது பயப்படாதே.” என்றபோது நல்லைநாதன் சொன்னான்; “மரகத மணியான பச்சைமணி மருள்நிலைக்கு ஒப்பாகும். அப்பச்சை மணியில் செம்மணிக்கதிர் பாய்வது மருளின்மீது அருள்க் கதிர் பாய்ந்து ஆருயிரின் அறியாமையை அகற்றுவதை ஒக்கும். அத்தகைய அருமறை மொழியினை மெய்க்குரவன் அருளும் மெய்நெறிக்கண் அவன் அள்ளித் தந்திடுவான். அவன் திருவைந்தெழுத்தாகிய அருமறைக்கதிர் நெற்றியில் இருந்து மூக்கின் மூலமாகிய புருவநடுவில் ஊடுருவி ஒளிரும். அதுவே அழகிய ஒளிகளுக்கெல்லாம் ஒளி கொடுத்துக் கொண்டிருக்கும் அருள் ஒளியாகும். கதிரேசனும் சுவாமியாரும் முறைப்படி ரவீந்திரனது காதுக்குள் ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு இருக்கின்றனர். உணர்வின்றியிருந்த ரவீந்திரன் இப்போது உணர்வு பெற்றுள்ளான். திருவைந்தெழுத்து அவனைக் காப்பாற்றும் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2622. உண்ணும்நன் வாயும் உடலும் உயிருமாய்க்
கண்ணுமா யோகக் கடவுள் இருப்பது
மண்ணுநன் நீரனல் காலொடு வானுமாய்
விண்ணு மிலதாம் வெளியானோர் மேனியே.

“சிவனடியார்களே, நல்லைநாதன் சொன்னான்; “ரவீந்திரன். அறிவுக் கண்ணில் புலனாகும் கடவுள் மாயோகக் கடவுள். அவர் கலப்புத்தன்மையால் உண்ணும் வாயின் கண்ணும், அவ்வாய் உறுப்பினை உடைய உடம்பின் கண்ணும், அவ்வாய்ப்பயன் கொள்ளும் உயிரின் கண்ணும், பயன்விளை புலனாம் மண் நீர் தீ காற்று வானம் ஆகிய ஐம்பூதங்களின் கண்ணும் பிரிப்பின்றிக் கலந்து நின்று அருள்கின்றான். பூதவெளியாகிய விண்ணையும் கடந்து அறிவுப் பெருவெளியில் நிற்கும் செறிவினரின் திருமேனியைத் தனக்குத் திருமேனியாகக் கொண்டு சிவன் எழுந்தருளுவன். தற்போதைய நிலையில் சிவன் ரவீந்திரனது திருமேனியைத் தனது திருமேனியாகக் கொண்டுள்ளான். அதனால் அவன் இன்று சுகமாவான் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2623. பரசு பதியென்று பார்முழு தெல்லாம்
பரசிவ னானை நடக்கும் பாதியாற்
பெரிய பதிசெய்து பின்னாம் அடியார்க்கு
உரிய பதியும்பா ராக்கிநின் றானே.

“சிவனடியார்களே, கதிரேசன் ரவீந்திரனது மனைவிக்குச் சொன்னார்; “மகளே, பயம் கொள்ளாதே. பரசு என்னும் கோடாரியைத் தாங்கியுள்ள சிவபெருமான் அனைத்து உலகங்களுக்கும் அனைத்து உயிர்களுக்கும் பதியானவன். அவனது திருவாணைப்படி தான் உலகங்கள் இயங்குகின்றன. மெய்களைப் பகுத்துணர்ந்த தத்துவஞானம் பெற்ற வெம்பொருட்டுணிவினர்க்கு பெரிய பதியாகிய திருவடியுலகினைச் சிவன் அமைத்தருளியுள்ளான். அவன் நீக்கமற உலகெங்கும் நிறைந்திருப்பதனால் உலகைப் பற்றியும் உலக உயிர்களைப் பற்றியும் நன்கறிந்துள்ளான். அதனால் ரவீந்திரனது சேவை சிவனடியார்க்குத் தேவை என்று உணர்ந்து சிவன் ஆவன செய்வான் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2624. அம்பர நாதன் அகலிட நீள்பொழில்
தம்பர மல்லது தாமறி யோம்என்பர்
உம்பருள் வானவர் தானவர் கண்டிலர்
எம்பெரு மானருள் பெற்றிருந் தாரன்றே.

“சிவனடியார்களே, கதிரேசன் ரவீந்திரனது மனைவிக்குச் சொன்னார்; “மகளே, உலகின் பெருந்தலைவன் சிவபெருமான். அவன் அழகிய மேலான முதல்வன் என்பதால் அம்பரநாதன் என்று மெய்யுணர்வுடையோர் அழைப்பர். உலகம் முழுவதும் அவனது திருவாணைப்படியே இயங்குகின்றன. இதைத்தவிர நாம் வேறு எதையும் அறியவில்லை. வானவரும் தானவரும் இவ் உண்மையை உணரவில்லை. இவ் உண்மையை உணர்ந்த மெய்யடியார்கள் எம்பெருமானின் திருவருள் பெற்று இன்பமாக நீண்ட நாட்கள் வாழ்வர் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2625. கோவணங் கும்படி கோவண மாகிப்பின்
நாவணங் கும்ப டிநந்தி யருள்செய்தான்
தேவணங் கோமினிச் சித்தந் தெளிந்தனம்
போய்வணங் கும்பொரு ளாயிருந் தோமன்றே.

“சிவனடியார்களே, உலகிலுள்ளோர் அனைவரும் கோவென வணங்கும் கோவணன் சிவபெருமான். கோவணமாகிப் பின் மெய்யடியார்களால் திருமுறைகளால் போற்றப்படுபவனும் அவனே. அவரை வணங்கும்படி அருள் புரிந்தவன் நந்தி. அதனால் மனம் தூய்மையானது. கள்ளம் அகன்றது. அதனால் சிறு தெய்வங்களை வணங்க மாட்டோம். அத்தெய்வங்கள் யாவும் சிவபெருமானையே தெய்வம் என்று வணங்குகின்றன. அவனது திருவடியின் கீழ் இருப்பதே எமது விருப்பம். பிறவாப் பெருந் தெய்வம் சிவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

3. பிரணவ சமாதி

(ஓங்காரத் தொடுக்கம்)

2626. தூலப் பிரவணஞ் சொரூபானந் தப்பேர்
பாலித்த சூக்கும மேலைச் சொரூபப்பெண்
ஆவித்த முத்திரை யாங்கதிற் காரணம்
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே.

"சிவனடியார்களே, பாரிய ஓமொழி தூலப் பிரணவமாகும். அதனால் பெறுவது பருவுடலின்பம். நுண்மை ஓமொழி நுண்ணுடற்குரிய இன்ப வாயிலாகும். மேலைச் சொரூபம் என்னும் இன்ப ஓமொழி காரணப் பிரணவமாகும். அது திருவருள் வீழ்ச்சிக்கு வாயிலாகும். அப்பிரணவம் கைக்குறியாம் முத்திரை வடிவாக இருக்கும். மா முதல் ஓமொழி மேலைப் பிரணவமாகும். இதுவே மாகாரணமெனவும் சொல்லப்படும். இது திருவடியுணர்வான வேதாந்த வீதியில் சேர்ப்பதாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2627. ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே.

"சிவனடியார்களே, ஓமென்று ஓதப்படும் ஓங்காரத்தில் ஒப்பில் ஒரு மொழி தோன்றும். இதனை மகாவாக்கியம் எனக் கூறுவர். அவ் ஓங்காரத்துள்ளே உருவும் அருவும் தோன்றும். உருவினைச் சகளம் என்றும் அருவினை நிட்களம் என்றும் கூறுவர். அவ் ஓங்காரத்துள்ளே ஆருயிர் வேறுபாடுகள் யாவும் உண்டு. அவ் வேறுபாடுகள் மா, மாக்கள், மக்கள், ஆன்றோர், அறிவர். அமரர் முதல் பலராகும். அவ் ஓங்காரத்துள்ளே பிறப்பும் சிறப்பும் உளப்பெறும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2628. ஓங்காரத் துள்ளே யுதித்தஜம் பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்கார தீதத் துயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே.

"சிவனடியார்களே, ஓங்காரத்தில் இருந்து தான் ஐம்பூதங்களும் தோன்றின. ஓங்காரத்தை இயைந்து இயக்கும் தெய்வங்கள் அயன், அரி, ஆரன், ஆண்டான்,

அருளோன் முதலியேராவர். அவர்களே ஐம்பூதங்களையும் இயக்குகின்றனர். ஓங்காரத்துள்ளே தான் இயங்குதிணை நிலத்தினைப் பொருட்கள் அனைத்தும் தோன்றின. ஓங்காரத்துள் மூவகை உயிர்களும் சார்ந்தன. மூவகை உயிர்கள் எனும்போது ஒரு மலமுடைய உயிர், இரண்டு மலங்களுடைய உயிர், மும் மலங்களுடைய உயிர் என்பனவாகும். அப்பால் ஓங்காரம் ஓங்காரா தீதம் என இரண்டு உண்டு. இதை மாகாரண ஓங்காரம் என்பர். அவ்வோங்காரத்துள்ளே ஆருயிர் உரு, அருளுரு, அருளோன் உரு என்பன தோன்றும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2629. வருக்கஞ் சுகமாம் பிரமமு மாகும்
அருக்கஞ் சராசர மாகும் உலகில்
தருக்கிய வாதார மெல்லாந்தன் மேனி
சுருக்கமின் ஞானந் தொகுத்துணர்ந்தன் தோரே.

"சிவனடியார்களே, ஓமொழியின் இன்மாகிய அகர, உகர, மகரங்கள் வருக்கம் எனப்படும். இவை இன்ப நிலைகளாகும். இறைவனுமாகும். அம் மூன்றினதும் தொகுப்பாகிய அருக்கம் சராசரமாகும். ஆண்மை மிக்க ஆதார நிலைகளின் உருவமெல்லாம் ஓங்காரமாகும். ஓங்காரத்தின் உண்மையை உணர்ந்தோர் திருவடியுணர்வாகிய நிறைஞானத் தொகுப்புணர்ந்தோராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2630. மலையு மனோபவ மருள்வன வாவன
நிலையிற் றரிசனம் தீப நெறியாந்
தலமுங் குலமுந் தவஞ்சித்த மாகும்
நலமுஞ்சன் மார்க்கத் துபதேசந் தானே.

"சிவனடியார்களே, ஓயாது அலைந்து கொண்டிருக்கும் மனம் உயிர்ப்பு மயங்குவதற்கு இடமாகவுள்ளது. அந்நிலையில் மயக்கத்தை ஒழிப்பதற்குச் சிவகுருவின் விளக்கத்தைப் பெறல் வேண்டும். அதைத் தீபநெறி எனப்பட்டது. இவ்விளக்கத்திற்கு இடமும், சார்பும், உள்ளமும், தவமும் தூய்மையாதல் வேண்டும். அதுவே வாய்ப்புடையதாகும். சிவ மறையாகிய நலம் நன்னெறிக்கண் செவியறிவுறுக்கும் உபதேசமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2631. சோடச மார்க்கமுஞ் சொல்லுஞ்சன் மார்க்கிகட்கு
ஆடிய ஈராறின் அந்தமும் ஈரேழிற்
கூடிய அந்தமுங் கோதண்ட முங்கடந்து
ஏறியே ஞானஞே யாந்தத் திருக்கவே.

"சிவனடியார்களே, நன்னெறி நான்மையையும் அனுசரிப்பவர்கள் சன்மார்க்கர்கள் எனப்படுவர். அவர்களுக்கு நான்மைனெறி ஒவ்வொன்றும் நான்காகப் பகுக்கப்படும். அதனால் அவை பதினாறு வகைப்படும். அவற்றில் பன்னிரண்டின் அந்தம் செறிவில் அறிவாகும். பதின்நான்கின் அந்தம் அறிவில் நோன்பாகும். கோதண்டம் எனப்படுவது அறிவிற் செறிவாகும். திருவருளால் இவை அனைத்தையும் பயின்று கை வந்தபின் அறிவின் அறிவு வாயிலாகத் திருவடிப்பேறு கிடைக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

4. ஒளி

2632. ஒளியை யறியில் உருவும் ஒளியும்
ஒளியும் உருவும் அறியில் உருவாம்
ஒளியின் உருவம் அறியில் ஒளியே
ஒளியும் உருக வுடனிருந் தானே.

"சிவனடியார்களே, ஆருயிரின் அறிவு பளிங்கின் ஒளியைப் போன்றது. அருளால் அதை நாடின் அவ்வுயிரின் நிலைக்களமாகிய உடம்பின் நாட்டம் மறையும். ஒடுக்கமான மறைவே இயல்பாக உள்ள உருவமாகும். உடம்பினை நாடினால் அது பிறப்பிற்கு வழிவகுக்கும். அறிவை நாடினால் சிவவுருவான ஒளி அருளொளி வெளிப்படும். ஆருயிர் அறிவால் சிவபெருமானின் திருவடி மீது நோன்பு பூண்டு பக்தியோடு நின்றால் சிவபெருமான் வெளிப்பட்டு இன்புறுத்துவான்".

"சிவனடியார்களே, ரவீந்திரன் முழுமையாகச் சுகப்பட்டு விட்டான். ஆனால் உடல் மிகவும் பலவீனப்பட்டிருந்தது. கல்வி அமைச்சின் செயலாளர் ஒரு முக்கிய கருத்தரங்கிற்குத் தன்னுடன் ரவீந்திரனை அழைத்துச் செல்ல விரும்பினார். ஆனால் ரவீந்திரனது உடல் மெலிந்து பலவீனப்பட்டிருப்பதாக அவனது நண்பன் சொன்னபடியால் தான் தனியே செல்ல விரும்பினார். அதை அறிந்த ரவீந்திரன் சொன்னான்; "நான் மனதளவில் தேறிவிட்டேன். அறிவு பளிங்கைப் போன்றது. உடல் பலவீனமானாலும் அறிவின் ஒளி மங்காது. அருளால் அதை நாடினால் அது மேம்படும். அறிவிற்கு நிலைக்களனான உடல் பலவீனப்பட்டாலோ அல்லது சேதமடைந்தாலோ அறிவு பாதிக்கப்பட மாட்டாது. எனது உடல் சிறிது பலவீனப்பட்டாலும் மனம் தைரியமாக உள்ளது. உடல் எதற்கும் ஒரு காரணியே தவிர உடலால் தனித்து எதையும் செய்ய முடியாது. மனம் சிவபெருமானின் மீது அன்பு கொண்டு அவனது திருவடியுணர்வுடன் இருந்தால் சிவபெருமான் உடலைப் பலவீனமடைய விடமாட்டான். அதனால் நான் உங்களுடன் வருகிறேன் என்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2633. புகவெளி தாகும் புவனங்கள் எட்டும்

அகவொளி தாயிரு ளாசற வீசும்
பகலொளி செய்தது மத்தா மரையிலே
இகவொளி செயதெம் பிரானிருந் தானே.

"சிவனடியார்களே, ரவீந்திரன் சொன்னான்; "ஐயா, திருவருளால் சிவஒளி கைவந்து அறிவொளியைக் கண்ட ஆருயிருக்குப் புவனங்கள் அனைத்திலுமுள்ள நிகழ்வுகளை உள்ளவாறு அறிந்து கொள்ள முடியும். அறிவின் அறிவான செவ்வொளி எங்கும் பரந்து நிற்கிறது. அது எங்கும் நிறைந்த சிவவொளியாகும். அவ் ஒளிக்கதிரால் குற்றங்கள் அகலும், எதிர்காலத்தில் நடக்கவிருப்பவை புரியும். அது சூரிய ஒளியை விடப் பிரகாசமானது. அது சிவபெருமானின் செஞ்சுடர் ஒளியாகும். தற்பொழுது உங்களுக்கெதிரானவர்கள் எதிரிகளுடன் சேர்ந்து சதி செய்கின்றனர். நான் நோயாளியாகியதால் உங்களைத் தனியே அழைத்துப் பழிவாங்க நினைக்கின்றனர். உங்களைப் பற்றியும் அலுவலக நடைமுறைகளைப் பற்றியும் எனக்குத் தெரியும். அதனால் நான் கட்டாயம் உங்களுடன் கூட வருதல் வேண்டும். மனம் அறிவு எண்ணம் யாவும் உடலுக்குள் இருந்தாலும் அதை இயக்குவது மனம். மனம் சோர்வடைந்தால் தோல்விகள் தான் கிடைக்கும். உடல் சோர்வடைந்தால் மனம் அதைத் திடப்படுத்தும். இதை மெய்யறிவுள்ளவர்களால் தான் புரிந்து கொள்ள முடியும் என்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2634. விளங்கொளி யங்கி விரிகதிர் சோமன்
துளங்கொளி பெற்றன சோதி யருள
வளங்கொளி பெற்றதே பேரொளி வேறு
களங்கொளி செய்து கலந்துநின் றானே.

"சிவனடியார்களே, எரிபொருளின் உதவியால் ஒளியைத் தரும் தீயும், விரிந்த கதிர்களை உடைய சூரியனும், சூரியனின் கதிரின் துணையால் ஒளியைத் தரும் சந்திரனும் சிவபெருமானிடமிருந்தே ஒளியைப் பெற்று உலகை ஒளிர்வடையச் செய்கின்றன. அம்மூன்றையும் படைத்தருளியவன் சிவபெருமான். அவற்றிற்கு இயல்பாக ஒளி இல்லை. அதனால் அவற்றிற்கு ஒளியைக் கொடுத்து அவற்றுடன் வேறறக் கலந்து நின்று ஒளிர்கிறான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2635. இளங்கொளி யீசன் பிறப்பொன்று [1]மில்லி
துளங்கொளி ஞாயிறுந் திங்களுங் கண்கள்
வளங்கொளி யங்கியு மற்றைக்கண் நெற்றி
விளங்கொளி செய்கின்ற மெய்காய மாமே.

"சிவனடியார்களே, இயற்கையாகவே பேரொளியை உடையவன் சிவபெருமான். உலகிற்கு ஒளியைக் கொடுக்கும் சூரியனும் சந்திரனும் சிவபெருமானது

வலது கண்ணும், இடது கண்ணும் ஆவர். அத்துடன் உலகிற்கு ஒளியைக் கொடுக்கும் தீ அவனது நெற்றிக் கண்ணாகும். இம்மூன்று திருக்கண்களுடன் அறிவுப்பெருவெளியைத் திருமேனியாகக் கொண்டவன் சிவபெருமான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2636. மேலொளி கீழதன் மேவிய மாருதம்
[2] பாவொளி யங்கி பரந்தொள யாகாசம்
நீரொளி செய்து நெடுவிசும் பொன்றிலும்
மேலொளி யைந்தும் ஒருங்கொளி யாமே.

"சிவனடியார்களே, ஐம்பூதங்களுள் மேலாக நிற்கும் ஒளி ஆகாயமாகும். அந்த ஆகாயத்தைத் தடவி வரும் ஒளிப்பொருள் காற்றாகும். அக்காற்றின் பாலாய் விளங்கும் ஒளி தீ. நீருக்கு இடங் கொடுத்து எங்கும் பரந்திருப்பது நிலம். அந்நிலத்தின் மேல் விளங்குவது நீர். அப்பூதங்கள் ஐந்தும் ஒன்றாக விளங்குகின்றன. இவை இயங்குவது சிவனது திருவருளாலேயே" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2637. மின்னிய தூவொளி மேதக்க செவ்வொளி
பன்னிய ஞானம் பரந்த பரத்தொளி
துன்னிய வாறொளி தூய்மொழி நாடொறும்
உன்னிய வாறொளி யொத்தது நானன்றே.

"சிவனடியார்களே, தூய வெள்ளொளியானவன் சிவபெருமான். அவ் வெள்ளொளியினின்றும் உலகை இயக்க ஐம்பேரொளியின் மேலாகக் காணப்படும் செவ்வொளி விளக்க முற்றுறது. வெள்ளொளி அறிவுப் பண்பாகும். அறிவு பரந்த பேரொளி மெய்யுணர்வுப் பண்பாகும். பரத்தொளி அருள் நிறைந்து ஆருயிரொளியாகும். திருவடிக்கு நெருக்கமாகக் காணப்படும் நெறி நன்னெறியாகும். அற் நெறியின் ஒளி ஆறொளியாகும். திருவைந்தெழுத்து மறையொளியாகும். இவ்வாறும் ஒத்து நிறைந்து விளங்குவது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2638. விளங்கொளி மின்னொளி யாகிக் கரந்து
துளங்கொளி யீசனைச் சொல்லும்எப் போதும்
உளங்கொளி யூனிடை நின்றுயிர்க் கின்ற
வளங்கொளி எங்கும் மருவிநின் றானே.

"சிவனடியார்களே, மேகத்திலே மறைந்திருந்து இடை இடையே சிறு கோடு போல் தோன்றும் மின்னொளி போன்று ஆருயிர்களுடன் வேரற விரவி நின்று இடைஇடையே சிவபெருமான் அருள் விளக்கம் தந்தருள்கிறான். அருள் நிறைந்த மெய்யடியார்களின் உள்ளத் தாமரையினை இடமாகக் கொண்டு உயிருக்குள் உயிராய்

உணர்வுக்குள் உணர்வாய் வேறறப் பொருந்தி நின்று அருள்பவன் சிவபெருமான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2639. விளங்கொளி யவ்வொளி யவ்விருள் மன்னுந்
துளங்கொளி யான்தொழு வார்க்கும் ஒளியான்
அளங்கொளி யாரமு தாகநஞ் சாருங்
களங்கொளி யீசன் கருத்தது [1]தானே.

"சிவனடியார்களே, பேரூளிக் காலத்தில் எங்கும் இருள் பரந்திருக்கும். பேரொளிப் பெரும் பொருளான சிவபெருமான் அளவில்லாத அன்பால் அறம்புறம் ஒத்தொழுகும் மெய்யடியார்க்கு மறையாது நின்று வெளிப்பட்டருளும் சிவபெருமான் விளக்கம் மிக்க ஒளிசேர் நிறையமுதம் ஆதற் பொருட்டு கடலில் தோன்றிய பெருநஞ்சினை உண்டு கண்டத்துள் அடக்கியவன். இவை அனைத்தும் அவனுடைய திருவுள்ளத்தில் உள்ள அன்பால் நடைபெற்றவை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2640. இலங்கிய தெவ்வொளி யவ்வொளி மீசன்
துலங்கொளி போல்வது தூங்கருட் சத்தி
விளங்கொளி மூன்றே விரிசுடர் தோன்றி
உளங்கொளி யுள்ளே யொருங்குகின் றானே.

"சிவனடியார்களே, உண்மையான அறிவு இன்பப் பேரொளி சிவபெருமானின் அறிவுப் பேரொளியாகும். அதில் மிகுந்திருப்பது திருவருள். உளங்கொளியாவது அருள் நிறைந்த ஆருயிராகும். இம் மூன்று ஒளியையும் கொண்டு விரிந்த சுடராகத் திகழ்பவன் சிவபெருமான். அவன் ஒளிக்குள் ஒளியாக உடன் நின்றருள்கிறான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2641. உளங்கொளி யாவதென் உள்நின்ற சீவன்
வளங்கொளி யாநின்ற மாமணிச் சோதி
விளங்கொளி யாய்மின்னி விண்ணில் ஒடுங்கி
வளங்கொளி யாயத்து ளாகிநின் றானே.

"சிவனடியார்களே, உள்ளத்துள் உள்ளொளியாக நிற்பது ஆருயிர். அவ்வுயிருக்கு உயிராய் ஒளிக்கு ஒளியாய் விளங்குவது வளக்கம் மிக்க சிவனொளி. அவ்வொளி தூய சோதியாகும். விளக்கம் மிக்க ஒளியாக விளங்கும் தூய அறிவு விண்ணில் ஒடுங்கும். அவ்வொளிக்கூட்டத்துள் நின்றருள்பவன் சிவபெருமான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2642. விளங்கொளி யாய்நின்ற விகிர்தன் இருந்த

துளங்கொளி பாசத்துள் தூங்கிருள் சேராக்
களங்கிருள் நட்டமே கண்ணுத லாட
விளங்கொளி யுள்மனத் தொன்றிநின் றானே.

"சிவனடியார்களே, விளங்குகின்ற பேரொளியாக நிற்பவன் சிவன். அவனது திருச்செயல்கள் பலபடித்தாய் திகழ்வன. அதனால் அவனை விகிர்தன் என்று அழைப்பர். அவன் விளக்கம் மிக்க ஒளியாக நிற்கும்போது தொன்றுதொட்டுத் தங்கியுள்ள இருண்மலம் மாயாகாரியப் பாசத்துள் மயங்காது. ஆணவ வல்லிருள் அகலுதற் பொருட்டுச் சிவபெருமான் ஐந்தொழிற்கூத்தை அம்மை காண நிகழ்த்துகின்றான். அவன் விளக்கொளியாக உள்மனதுள் ஒன்றி நின்றருள்கின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2643. போது கருங்குழற் போனவர் தூதிடை
ஆதி பரத்தை அமரர் பிரானொடுஞ்
சோதியும் அண்டத்துப் பாலுற்ற தூவொளி
நீதியி னல்லிருள் நீக்கிய [1]வாறன்றே.

"சிவனடியார்களே, பேரரும்பு சூடிய கரிய கூந்தலையுடைய திருவருளம்மையுடன் நிறைந்து கலந்து நிற்பவன் சிவபெருமான். அத்திருவருள் அம்மை ஆருயிர்களை வனப்பாற்றலாக நின்று ஆதிபரத்து ஐயுடன் கூட்டுவிப்பவள். ஆதிபரத்து ஐ எனப்படுபவன் சிவபெருமான். அவன் பல்பேறு அண்டங்கள் அனைத்திற்கும் அப்பால் நிற்கும் தூய அறிவொளியானவன். அவனே ஆருயிர்களின் மெய்யுணர்வுக்கேற்ப ஆணவ வல்லிருளை அகற்றுபவன் " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2644. உண்டில்லை யென்னும் உலகத் தியல்வது
பண்டில்லை யென்னும் பரங்கதி யுண்டுகொல்
கண்டில்லை மானிடர் கண்ட கருத்துறில்
விண்டில்லை யுள்ளே விளக்கொளி [2]யாகுமே.

"சிவனடியார்களே, இவ்வுலகம் உண்டு என்று ஒரு சாரார் கூறுகின்றனர். அதனை இன்னொரு சாரார் மறுத்து அது கானல் நீரைப் போல இல்லாதது என்கின்றனர். இத்தகைய உலகத்தில் இருள் மலத்துடன் கூடிய புலம்பு நிலையில் ஆருயிர்கள் புலம்பு நிலையும் புணர்வு நிலையும் கடந்த புரிவு நிலையாகிய திருவடிப்பேறு இல்லை என்னும்படி நின்றன. புணர்வு நிலைக்கு வந்தபின் அவ் உயிர்களுக்குப் புரிவு நிலையும் உள்ளதா என்ற சந்தேகம் உண்டாகும். திருவடிப்பேறு ஏனையவற்றைப் போலல்லாது சுட்டுணர்வுக்கும், சிற்றுணர்வுக்கும் எட்டமாட்டாது.

மனிதர்கள் திருவடிப்பேற்றை அடைந்துவிட்டதாகக் கூறுவாராயின் அது உண்மையாகாது. அத்திருவடிப்பேறு சொல்ல முடியாத ஆருயிர் பேருயிரின் ஆத்மாத்தமான அறிவுப் பேரொளியாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2645. சுடருறு ஓங்கிய ஒள்ளொளி யாங்கே
படருறு காட்சிப் பகலவன் ஈசன்
அடருறு மாயையி னாரிருள் வீசில்
உடலுறு ஞானத் துறவிய னாமே.

"சிவனடியார்களே, சிவபெருமான் ஒளிக்கு ஒளியாகத் திகழும் அறிவுப் பேரொளியானவன். அவன் அகத்துள் அறிவொளியாகத் திகழும் உணர்வொளிப் பகலவன். திருவருளால் பல்வேறுபட்ட பிறப்புக்களுக்கு வாயிலாகத் திகழும் மாயையின் இருள் நீக்கப்படல் வேண்டும். அவ்வாறு நீக்கப் பெறுபவன் மெய்யுணர்வுள்ள மேலோனாகிச் சிவபெருமானுமாவான். அவனே திருவடியுணர்வின் உறவுடையவனாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2646. ஒளிபவ ளத்திரு மேனிவெண் ணீற்றன்
அளிபவ ளச்செம்பொன் ஆதிப் பிரானுங்
களிபவ ளத்தினன் காரிருள் நீங்கி
ஒளிபவ ளத்தென்னோ டீசன்நின் றானே.

"சிவனடியார்களே, பவளத்தைப்போல மிக்க ஒளியை உடைய திருமேனியை உடைவன் சிவபெருமான். ஒளிக்கு ஒளியான அறிவொளி அவன். வெண்ணீற்றை அணிந்த மேனியன். முத்துப்பவளமும், தாமரைப்பூவும் நீரில் தோன்றுபவற்றுள்ச் சிறந்தவை. முத்து சிவபெருமானின் ஆறறிவையும், பவளம் அளவில்லாத ஆற்றலையும் குறிப்பது. ஆற்றலாகிய திருவருளே அவனது திருமேனியாகும். திருவெண்ணீற்றைப் பூசிய சிவபெருமான் பவளத்தையும், செம்பொன்னையும் போன்றவன். அவன் ஆருயிர்களுக்கு மிக்க மகிழ்ச்சியை உண்டு பண்ணுபவன். அவ்வாறு உண்டாக்குவதில் அவன் மெய்யுணர்வுப் பகலவனாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2647. ஈசன்நின் றானிமை யோர்கள்நின் றார்நின்ற
தேசமொன் றின்றித் திகைத்திழைக் கின்றனர்
பாசமொன் றாகப் பழவினை பற்றற
வாசமொன் றாமலர் போன்றது தானன்றே.

"சிவனடியார்களே, தேவர்களும் இணைந்து நின்றனர். இருப்பினும் தேவர்கள் மனம் ஒருமைப்படாமையால் திருவடியைக் காணாது திகைத்து நின்றனர். இருவினையொப்பு எய்த எஞ்சுவினைப்பற்று அகலும். அது அகன்றதும் ஏறுவினை இன்மையால் துச்சில் நச்சிச் செல்லும். அதனால் ஏற்றவினை அழியும். அதனால் ஆருயிரும் சிவபெருமானும் மலரும் மணமும்போல விளங்குவர். அதனால் அவ்வுயிர் பேரின்பப் பெருவாழ்வு பெறும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2648. தானே யிருக்கும் அவற்றில் தலைவனுந்
தானே யிருக்கும் அவனென நண்ணிடும்
வானா யிருக்குமிம் மாயிரு ஞாலத்துப்
பானா யிருக்கப் பரவலு மாகுமே.

"சிவனடியார்களே, தமிழில் இருக்கு என்று ஓதப்படுவது திரு இருக்கு ஆகும். திருஇருக்காக இருப்பவன் சிவபெருமான். அவ்விருக்கின் முதல்வன் அவன். அவ்விருக்கின் வழி செல்பவர்கள் அவனை அடைவர். தூய அறிவுப் பெருவெளியாகவும், நிலவுலகின் பரனாகவும் இருப்பவன் சிவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

5. தூல பஞ்சாக்கரம்

(பாரிய ஐந்தெழுத்து)

2649. ஒன்றுகண் டேனில் வுலகுக் கொருகனி
நன்றுகண் டாயது நமச்சிவ யக்கனி
மென்றுகண் டாலது மெத்தென்றிருக்குந்
தின்றுகண் டாலது தித்திக்குந் தானன்றே.

"சிவனடியார்களே, திருமறைப் பேற்றுக்குரிய ஆருயிர்களுக்கு திருவருளால் ஒப்பில்லாத ஒரு கனியைக் கண்டு கொண்டேன். அக்கனியின் திருப்பெயர் 'நமசிவய'. அக்கனியை உணர்வில் கணித்து மெல்லுவார்க்கு அ.்.து அனிச்சமலர் போல மென்மையானதாக இருக்கும். அதை உண்ண உண்ணத் தெவிட்டாது தித்திக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2650. அகார முதலாக ஐம்பத்தொன் றாகி
உகார முதலாக வோங்கி யுதித்து
மகார இறுதியாய் மாய்ந்துமாய்ந் தேறி
நகார முதலாகும் நந்திநா [2]மம்மே.

"சிவனடியார்களே, உலகின் மிகத் தொன்மையான இனிய தமிழ்மொழியின் எழுத்துக்களை ஐம்பத்தொன்றாக அமைத்தனர். அதன் பின் ஆயுத எழுத்தையும் சேர்த்தனர். அத்துடன் அக்காலத்து வரிவடியை முப்பத்து மூன்று என்றும் வரையறை செய்தனர். அதுவே அன்று தொட்டு இன்றுவரை வழங்கி வருகிறது. ஒலி

முப்பத்தாறாவது மெய்யாகிய நாதத்தில் இருந்து தோன்றியது. வாயிலுள்ள எந்த உறுப்புக்களின் தொழிலின்றி வாய் திறந்ததும், வரும் ஒலி அகரமாகும். அதனால் அவ்வொலி முதன்மை பெற்றது. அவ் அகரம் முதலாக எழுத்துக்கள் ஐம்பத்தொன்றாகும். விரிந்த பின்பு குவிதல் வேண்டும். அதனால் உகரம் உற்றுத் தோன்றியதாகும். அவ்வொலி ஒடுங்குதல் வேண்டும். அம்முறையில் மகர இறுதியாய் மாய்ந்து மாய்ந்தேறியது. இம் மூன்றும் ஒரு புடையொப்பாக முப்பொருளைக் குறிப்பனவாகும். அவை முறையே அறிவன், உறைவோர், மறைப்பது என்பனவாகும். நகரமுதலாகிய 'நமசிவய' என்பது நந்தியின் முதற் பெயராகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2651. அகராதி யீரெண் கலந்த பரையும்
உகராதி தன்சத்தி யுள்ளொளி யீசன்
சிகராதி தான்சிவ வேதமே கோண
நகராதி தான்மூல மந்திர நண்ம்மே.

"சிவனடியார்களே, திருவருளின் கலப்பால் தோன்றிய அகர முதலிய உயிரெழுத்துக்கள் பதினாறு. உகராதி சிவபெருமானது திருவருளாற்றலாகும். அவ்வாற்றல்களின் உள்ளொளியாக விளங்குபவன் சிவபெருமான். சிவயநம சிவவேதம் என்று சொல்லப்படும் திருவடியுணர்வாகும். இவ் உணர்வினைப் பெறும் ஆருயிர் கோணம் எனப்படும். நமசிவய மூலமந்திரமாகும். இதன்மூலம் திருவடிப்பேறு எய்தப் பெறும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2652. வாயொடு கண்டம் இதய மருவுந்தி
ஆய இலிங்க மவற்றின்மேலே யவ்வாய்த்
தூயதோர் துண்ட மிருமத் தகஞ்செல்லல்
ஆயதீ றாமைந்தோ டாமெழுத் தஞ்சுமே.

"சிவனடியார்களே, புருவநடு, மிடறு, நெஞ்சு, உந்தி, கொப்பூழ், மூலம் ஆகிய ஆறு நிலைகளிலே அகரம் தோன்றும். அவ்வொலி மூக்குநுனியில் இருந்து கபாலம் வரை பரந்து செல்லும். பின் வெளிப்போதரும் வெளிப்போதரம் என்பது எழுத்து வடிவாய்த் தனது செவிக்கும், பிறரது செவிக்கும் புலனாகும் செவியோசையாகும். செவியோசைக்கு உயிராக நிற்பது திருவைந்தெழுத்தாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2653. கிரணங்கள் ஏழுங் கிளர்ந்தெரி பொங்கிக்
கரணங்கள் விட்டுயிர் தானெழும் போதும்
மரணங்கை வைத்துயிர் மாற்றிடும் போதும்
அரணங்கை கூட்டுவ தஞ்செழுத் தாமே.

"சிவனடியார்களே, ஊதா, நீலம், பச்சை, சிவப்பு, மஞ்சள், பழுப்பு, இளநீலம் என்னும் ஏழுநிறக் கதிர்கள் சேர்ந்து எரியொளி உண்டாகும். அவ்வெரி மிகுதிப்படும்போது அருவிக் கூட்டங்களில் இருந்து ஆருயிர் எழுந்து புறம் செல்லும். அவ்வுயிர் உடம்பினை விட்டு நீங்கும். அப்போது அதற்குப் புகலிடமாக இருப்பது சிவபெருமானின் திருவடியே. அத்திருவடியை அமைத்துக் கொடுப்பது திருவைந்தெழுத்தாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2654. ஞாயிறு திங்கள் நலின்றெழு காலத்தில்
ஆயுறு மந்திர மாரும் அறிகிலர்
சேயுறு கண்ணி திருவெழுத் தஞ்சையும்
வாயற வோதி வழுத்தலு மாகுமே.

"சிவனடியார்களே, ஞாயிறுவாகிய வலப்பால் மூச்சும், திங்கள் ஆகிய இடப்பால் மூச்சும் எடுத்தும் தடுத்தும் விடுத்தும் பயிலும்போது ஆராய்ந்து மேற்கொள்ளும் மந்திரத்தின் உண்மையினை உள்ளவாறு யாரும் அறிவதில்லை. திருவருளாற்றலில் இருந்து வெளிப்படும் ஒலி, ஒளி மெய்யாகிய நாத விந்துத் தத்துவங்களிலிருந்தும் எழுத்துக்கள் வெளிப்படும். மந்திரங்களுள் திருவைந்தெழுத்தே முதன்மையானதாகும். அவ்வைந்தெழுத்தே உயிர்ப்புப் பயிற்சியாளனுக்கு ஒப்பில்லாத திருமுறையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2655. குருவழி யாய குணங்களி னின்று
கருவழி யாய கணக்கை யறுக்க
வரும்வழி மாள மறுக்கவல் லார்கட்கு
அருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே.

"சிவனடியார்களே, சிவகுரு அருளிச் செய்த திருவைந்தெழுத்தானது எஞ்சு வினையையும், ஏறு வினையையும் அறுத்தழிக்கும். அதனால் திருவருள் திருவைந்தெழுத்தின் மூலம் திருவடியைக் காட்டும். திருவைந்தெழுத்துப் பொருளின் மறையாகும். அவற்றின் விரிவே பன்னிரு திருமுறைகளும், பதின்நான்கு மெய்நூல்களுமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2656. வெறிக்க வினைத்துயர் வந்திடும் போது
செறிக்கின்ற நந்தி திருவெழுத் தோதுங்
குறிப்பது வுன்னிற் குரைகழல் கூட்டுங்
குறிப்பறி வான்றவங் கோனுரு வாமே.

"சிவனடியார்களே, தீமைகள் தொடர்ந்து வரும்போது எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பவன் நந்தி. அவனது திருப்பெயர் திருவைந்தெழுத்தாகும்.

அத்திருவைந்தெழுத்தை விதிப்படி ஓதிவந்தால் வீரக்கழல் அணிந்த சிவபெருமானின் திருவடியை அடையலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2657. நெஞ்சு நினைந்துதம் வாயாற் பிரானென்று
துஞ்சும் பொழுதுன் துணைத்தாள் சரணென்று
மஞ்சு தவழும் வடவரை மீதுறை
அஞ்சில் இறைவன் அருள்பெற லாகுமே.

"சிவனடியார்களே, திருவைந்தெழுத்தை நீங்காத நினைவுடன் கணித்தும், வாயால் முழுமுதற் சிவனை வாழ்த்தியும் வருவோர் செந்நெறிச் செல்வராவர். அவர் சிவனது திருவடியிலே அடைக்கலம் புகுவர். அதனால் அவர்கள் திருவெள்ளிமலைமீது உறைந்திருக்கும் சிவபெருமானின் திருவருள் பெற்று உய்வர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2658. பிரான்வைத்த ஐந்தின் பெருமை யுணராது
இராமாற்றஞ் செய்வார்கொல் ஏழை மனிதர்
பராமுற்றுங் கீழொடு பல்வகை யாலும்
அராமுற்றுஞ் சூழ்ந்த அகலிடந் தானே.

"சிவனடியார்களே, திருவுள்ளத்தால் காரியப்படும் குண்டலினி என்ற தூமாயைப் பாம்பு என உருவகிக்கப்பட்டுள்ளது. அதை ஆதிசேடன் என்பர். ஆதியாயிய திருவருளால் காரியப்படும் தூமாயையாகும். அக் குண்டலினியால் சுமக்கப்படும் அகலிடத்துள்ளார் அனைவராலும் வணங்கப்படுபவன் சிவபெருமான். அச் சிவபெருமான் ஆருயிர்கள் உய்தற்பொருட்டு அருளிய பொருள் மறை திருவைந்தெழுத்தாகும். அதை உணராதவர் ஆணவ வல்லிருளில் இருந்து நீங்காது என்றும் துன்பப்படுவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

6. சூக்கும பஞ்சாக்கரம்

(நுண்மை ஐந்தெழுத்து)

2659. எளிய வாதுசெய் வாரெங்கள் ஈசனை
ஒளியை யுன்னி யுருகு மனத்தராய்த்
தெளிய வோதிச் சிவாய நமவென்னுங்
குளிகை யிட்டுப்பொன் னாக்குவன் கூட்டையே.

"சிவனடியார்களே, பூபாலசிங்கம் அருளானந்தத்தைப் பற்றிக் கதிரேசனுக்குச் சொன்னான்; "ஐயா நான் முன்பு முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை எளியவனாகக் கருத்திப் பிதற்றினேன். நீங்களும் சிவன் அறிவுப் பேரொளியானவன் அவனைப் பேரன்புடன் நினைத்து வணங்குவோர் சிவனடியார்கள் என்றீர்கள். அவர்கள் சிவகுருவின் திருவருளால் சிவயநம என்னும் திருவைந்தெழுத்தை இடையறாது கணிப்பர் என்றும்

அதனால் அம் மறையை நற்குளிகையாகக் கொண்டு அவ்வுயிரையும் அவ்வுயிரின் உடம்பினையும் செம்பொன் வண்ணமாய்ச் செய்தருள்வன் என்றீர்கள். அது உண்மையென்று ரவீந்திரன் ஆசிரியரின் உடல் நலத்தைக்கொண்டு தெரிந்து கொண்டேன். பெரும் நோய்வாய்ப்பட்ட அவர் உயிர் பிழைக்க மாட்டாரென்று ஊரவர்கள் கதைத்தபோது நீங்கள் மட்டும்தான் ரவீந்திரன் பிழைத்து முன்பைவிட உற்சாகமாக இருப்பார் என்றீர்கள். அது உண்மையென்று புரிந்து நான் சிவனை எளியனாக இப்போது கருதுவதில்லை. ஆனால் கோவில் தலைவர் அருளானந்தன் சிவனைப் பற்றி உயர்வாகக் கதைத்துக்கொண்டு தீய செயல்களையே செய்கிறார்" என்று சொல்லக் கதிரேசன் சொன்னார்; "மகனே, இவற்றையெல்லாம் விட்டுவிட்டு நீ திருவைந்தெழுத்தை ஓதி மேன்மையடையப்பார். இவ்வாறான எண்ணங்கள் மனதைக் குழப்பும். அதனால் உனக்கு நிம்மதியிராது. சூரிய சந்திரரையும் தீயையும் கண்களாகக் கொண்ட சிவன் யாவற்றையும் கவனிப்பார் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2660. சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
அவஞ்சேர்த்த பாச மலைமைந் தகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனார் சேர
அவஞ்சேர்த்த பாசம் அணுககி வாவே.

"சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து பூபாலசிங்கத்திற்குச் சொன்னார்; "மகனே, நீ இப்போது சிவனின் அருட்செயல்களை உணர்ந்துவிட்டாய். அதனால் சிவனை வணங்கித் திருவைந்தெழுத்தை ஓதுகிறாய். அதனால் மகிழ்வாக வாழ்கிறாய். உனது குடும்பத்தினர் உன்னை நேசிக்கின்றனர். ஊரவர் உன்னை மதிக்கின்றனர். அதனால் வீணான பிரச்சினைகளை மனதில் இருத்திக் கவலைப்படாதே. அது உனது வாழ்விற்குக் கேட்டையே தரும். திருவைந்தெழுத்து இம்மைக்கும் மறுமைக்கும் உறுதுணையானது. அவ்வைந்தெழுத்தும் தனித்தனியே ஒவ்வொரு பொருளை உணர்த்தும். அவை முறையே சிறப்பு, வனப்பு, யாப்பு, நடப்பு, மறைப்பு எனப்படும். இவற்றை முறையே சிவன், சக்தி, சீவன், திரோதாய மலம் என்று சொல்லப்படும். மலத்தை செறுமலம் மாயை என்றும் சொல்வர். இவற்றுள் மலம் திருவருளால் அடங்கும். மலம் அடங்கினால் சக்தியாகிய திருவருளால் ஆருயிர் கூடத் தகுதியுடையதாகும். அப்போது திருவருள் அவ்வுயிரைச் சிவத்துடன் கூட்டுவிக்கும். அதனால் பாசம் அழிந்துவிடும். அதனைத்தான் சிவனை வணங்குவோர் அடைய நினைக்க வேண்டும். தீமை செய்பவர்களைத் தண்டிக்க இறைவன் பலரை நியமித்துள்ளான். அதனால் சிவனை மட்டும் நினை என்றவர்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2661. சிவனரு ளாய சிவன்திரு நாமஞ்
சிவனரு ளான்மாத் திரோத மலமாயை
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ னாமே.

“சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; “மகனே, உனது நடத்தையில் தற்போது பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதை நான் கண்டுள்ளேன். அதனால்தான் அக்கறையுடன் உனக்குச் சொல்கிறேன். முன்பெல்லாம் கேட்பாய், ஆனால் அதன்படி வாழமாட்டாய். இப்போது சொல்வதைக் கேட்கிறாய். அக்கறையுடன் வாழ்கிறாய். அதனால்தான் சொல்கிறேன். திருவைந்தெழுத்தால் ஆனது சிவனது திருமேனி. அதனால் அது திருவருள் எனப்படுகிறது. சிவயநம என்பது சிவன், அருள், ஆன்மா, திரோதம், மலமாயை என்னும் ஐந்தினையும் தனித்தனியாகக் குறிக்கும் ஐந்து சொற்களின் முதல் எழுத்தாகும். சிவ என்ற மறைமொழியை முதற்கண் வைத்து சிவயநம எனத் தினமும் அன்புடன் கணித்து நற்றவம் செய்தல் வேண்டும். அதனால் மலமாயை கன்மங்கள் அகன்றுவிடும். அவை அகலப் பிறப்பறும். பிறப்பறுந்தால் சிவப்பேறான திருவடிப்பேறு கிட்டும். இதைத்தான் ஒவ்வொருவரும் விரும்புதல் வேண்டும். இதைவிட்டுவிட்டு வேறு யாராவது செய்யும் குற்றங்களைப் பேசினால் சிவப்பேற்றிற்குத் தடை உண்டாகும் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2662. ஓதிய நம்மலம் எல்லாம் ஒழித்திட்டவ்
வாதி தனைவிட் டிறையருட் சத்தியால்
தீதில் சிவஞான யோகமே சித்திக்கும்
ஓதுஞ் சிவாய மலமற்ற உண்மையே.

“சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; “மகனே, சிவயநம என ஓதும்போது நகரமாகிய மலங்கள் இரண்டும் ஒழிந்துவிடும். அவை ஒழிந்தால் அவ் ஆதி அருளாகிய நகரமும் அதனால் செலுத்தப்படும் மகரமும் ஆகிய இரண்டினையும் நீக்கியவிடத்து திருவருளாற்றலுடன் கூடிய சிவ என்னும் சிறப்பெழுத்துக்களை அமைத்தல் வேண்டும். அமைத்தால் அது சிவய சிவ என்று அமையும். இம்முறையாகக் கணித்தால் சிவச்செறிவு கைகூடும். சிவயசிவ என்னும் மறைமலம் அகன்று உண்மைநிலை ஏற்படும். இது செறிவினர் ஓதும் சீர்மையதாகும் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2663. தெள்ளமு தூறச் சிவாய நமவென்று
உள்ளமு தூற வொருகால் உரைத்திடும்
வெள்ளமு தூறல் விரும்பியுண் ணாதவர்
துள்ளிய நீர்போற் சுழல்கின்ற வாறே.

“சிவனடியார்களே, தெளிந்த திருவடியமுது ஓயாது ஊறி இன்பம் வரும்பொருட்டுச் சிவயநம என்னும் திருமறையை ஒருமுறை ஓதுதல் வேண்டும். அப்போது புருவநடுவில் தோன்றும் வெள்ளம்போல வரும் திங்கள் மண்டிலத்து திருவமுது அளவின்றி ஊறும். அதனை அருளால் விழைந்து உண்ணல் வேண்டும்.

அவ்வாறு உண்ணாதவர் பிறப்பு இறப்புக்கு உட்பட்டு நீர்ச்சுழியில் அகப்பட்டவர் போலத் துன்பப்படுவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2664. நமாதி நனாதி திரோதாயி யாகித்
தமாதிய தாய்நிற்கத் தானந்தத் துற்றுந்
சமாதித் துரியந் தமதாக மாகவே
நமாதி சமாதி சிவவாதல் எண்ணே.

"சிவனடியார்களே, நகராதி ஐந்தெழுத்து நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்குதல் ஆகிய ஐம்பாட்டினையும் நிகழ்த்துவிப்பது திரோதாயி எனப்படும். நடப்பாற்றல் அந் நனவாதிகளைத் தூண்டித் தொழிற்படுத்தும் முதல்வியாகும். அதுவே அவ்வெழுத்துக்களுக்கும் ஆதியாய் நிற்கும் ஆவி அம்முடிவினை எய்தி அகநிலைச் செயலாற்றலாகிய துரியமே தம் உடம்பாக நிற்கும். நிற்கவே நாமாதிக்குச் சமமாகச் சிவமுதலாகத் தோன்றும். தோன்றவே சிவயசிவ என எண்ணுவதே சிறப்பானதாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2665. அருடரு மாயமும் அத்தனுந் தம்மில்
ஒருவனை மீன்றவர் உள்ளுறு மாயை
திரிமல நீங்கிச் சிவாயவென் றோதும்
அருவினை தீர்ப்பதும் அவ்வெழுத் தாமே.

"சிவனடியார்களே, திருவருளைத் தரும் அம்மையாகிய வனப்பாற்றலும் அவ்வாற்றலின் துணையும் அத்தனாகிய சிறப்பும் இருவரும் ஒன்றுகூடி ஆருயிருக்குத் துணை புரிந்து அவ்வுயிரைப் பேணி ஈன்றவராவர். அதனால் உள்ளுறுமாயை, நடப்பாற்றல், ஆணவம், கன்மம், மாயையாக்கம் ஆகிய ஐம்மலங்களும் நீங்கும். நீங்கியவுடன் சிவயசிவ என்று கணிக்கும். நற்றவம் கைகூடும். அதனால் அருவினையகலும். அவ் அருவினையை அகற்றுவது சிவயசிவ என்னும் அருமறையே" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2666. சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவுந் தேர்ந்துள் அடங்கச்
சிவசிவ வாய தெளிவினுள் ளார்கள்
சிவசிவ வாகும் திருவரு ளாமே.

"சிவனடியார்களே, தெளிவில்லாத அறிவுடைய ஊமர்கள் என்னும் மூடர்கள் இம்மை, உம்மை, அம்மை என்றும் மூவிடத்திற்கும் துணையாக இருப்பது சிவசிவ என்னும் திருநாண் மறைத் திருவைந்தெழுத்தாகும் என்ற உண்மையைத்

தெரியாதவாகள் அச் சிவசிவ என்னும் திருமறையை இடையறாது கணித்தல் வேண்டும். அப்படிக் கணித்தால் அடங்காத மனமும் ஒடுங்காத உயிர்ப்பும் அடங்கி ஒடுங்கும். ஒடுங்கினால் சிவசிவ என்னும் சிறப்பினை உணர்ந்த தெளிவினராவர். அதன்பால் சிவசிவ வாக நிலைக்கும் திருவருளைப் பெறுவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2667. சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னைச் சிவகதி தானே.

"சிவனடியார்களே, சிவசிவ என்று ஓதும் வாய்ப்புப் பெறாதவர்கள் பலர் உண்டு. அவரைப் போலத் தீவினையாளர் எங்குமில்லை. அவர்கள் அப்பிழையை இப்பிறப்பிலாவது நீக்கிச் சிவசிவ என்று தூய மனத்தால் ஓதுதல் வேண்டும். அத்தீவினையாளர் அவ்வாறு ஓதுகின்றனரில்லை. அத்தீவினை வேறெதாலும் நீங்காது. சிவசிவ என்று இடையறாது ஓதுவதால் மட்டுமே நீங்கும். அவ்வாறு ஓதி வந்தால் அவர்கள் சிவவுலகச் செல்வராவர். அதனால் திருவடி இன்பம் கிடைக்கும். வினைகள் யாவும் அகலும். அதன் பின்பும் ஓதுவோர் செறிவு நிலையாவர். அதன் பின்பும் இடைவிடாது ஓதி வந்தால் அவர்கள் சிவவுருப் பெறுவர். இதனைத் தினமும் பன்னிருமுறை ஓதுதல் வேண்டும்.

"சிவனடியார்களே, தாமோதரன் கதிரேசனின் இரத்த உறவினன். பெரும் தனவந்தன். அதனால் ஆடம்பரமாக வாழ்ந்து வந்தான். வருமானம் அளவுக்கதிகமாக வந்தமையால் அவனோடு எப்போதும் தீய நண்பர்கள் கூடியிருப்பர். எந்நேரமும் மது அருந்துவதால் அவன் நிலைமை தெரியாது வாழ்ந்து வந்தான். அவனது வீட்டில் வேலை செய்பவள் பரமேஸ்வரி. அவளின் மகள் நிர்மலா நல்ல அழகி. பதினெட்டு வயது நிரம்பாத அவள் உயர்தர வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தாள். தாயுடன் அவள் வரும்போது அவளையே தாமோதரன் ரசித்துப் பார்ப்பான். ஒருநாள் அவள் தனிமையில் இருந்தபோது அவளது கையைப் பிடித்தான் தாமோதரன். அவள் தன்னை விடுவித்துக் கொண்டு தாயிடம் கூறினாள். பரமேஸ்வரி மிக்க கோபம் கொண்டு வந்து தாமோதரனைப் பெரிய கம்பால் பலமுறை அடித்தாள். அவனது மண்டை உடைந்து இரத்தம் பெருகியதால் பயந்து கதிரேசனின் வீட்டுக்கு வந்து நடந்த சம்பவத்தைச் சொன்னாள். தாமோதரன் யாருக்கும் பயப்படமாட்டான். எந்த அநியாயத்தையும் துணிந்து செய்வான் என்பது கதிரேசனுக்குத் தெரியும். அதனால் மறுநாள்க் காலை அவர் தாமோதரனின் வீட்டுக்குச் சென்றார். ஒருபோதும் அங்கு செல்லாத அவர் வருவதைக் கண்ட தாமோதரன் சற்றுப் பயந்து விட்டான். ஊரவர்களும் காவல்துறை அதிகாரிகளும் பெரியவர்களும் கதிரேசனது வாக்கை மீறமாட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியும். அதனால் சொன்னான்; "ஐயா மதுவை அருந்தியமையால் அவ்வாறு நடந்துவிட்டேன்.

இனி அப்படி நடக்கமாட்டேன்" என்றான். அதற்குக் கதிரேசன் சொன்னார்; "இப்படிச் சொல்வது உனது வழக்கம். ஆனால் இன்று எனக்குச் சொன்னதை மீறினால் நான் இனத்தவன் என்றும் பாராது நடவடிக்கை எடுப்பேன். சிவன் மீது ஆணையிட்டுச் சொல்" என்றார். உடனே தாமோதரன் சிவன் மீது சத்தியம் செய்தான். கதிரேசன் சொன்னார்; "வாக்குத் தவறினால் சிவன் கடுமையாகத் தண்டிப்பான். நீ கோவிலுக்கே வருவதில்லை. இனியாவது வா. செய்த பாவங்களுக்குப் பரிகாரம் செய்ய நினைத்தால் தினமும் பன்னிரண்டுமுறை சிவசிவ என்று ஓது. அச்சிவ மந்திரங்கள் உன்னைத் திருத்தி உனது பாவங்களைப் போக்கும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2668. நமவென்னு நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவமென்னு நாமத்தைச் சிந்தையு ளேற்றப்
பவமது தீரும் பரிசும தற்றால்
அவமதிழ தீரும் அறும்பிறப் பன்றோ.

"சிவனடியார்களே, கதிரேசன் மேலும் சொன்னார். "நீ எனது இரத்த உறவினன். அதை நினைக்க எனக்கு வெட்கமாக இருக்கிறது. உறவினன் அல்லது நண்பன் என்று சொன்னால் அவர்கள் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும். நல்ல பண்புகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும். அப்படியில்லாவிட்டால் அவர்களை. உறவினன் அல்லது நண்பன் என்று சொல்லமாட்டன். நீ உனது நிலையை அறியாது ஒரு சிறுமி மேல் இச்சை கொண்டுள்ளாய். உனது மகள் முப்பது வயது கடந்தும் திருமணமாகாது இருப்பதற்குக் காரணம் உனது நடத்தை. உன்னுடன் சேர்ந்து குடிக்கும் அருளானந்தனின் மகன் நாவுக்கரசன் பொறியியலாளன். அவன் உனது மகளைத் தனக்குத் திருமணம் செய்து தருமாறு அருளானந்தத்தைக் கேட்க அவன் என்ன சொன்னவன். நண்பன் வேறு உறவினன் வேறு. சேர்ந்து குடிக்கலாமே தவிர உறவு வைக்க முடியாது என்றவன். அதன் பின்பாவது நீ திருந்தியிருக்க வேண்டும். அவனோடு சேர்ந்து திட்மிட்டுத்தான் நிர்மலாவைப் பிடித்தாய். நீ ஒரு மனிதனா..? இதற்கெல்லாம் காரணம் மனதில் தூய்மை இல்லாமையே. அது தூய்மையாக இருந்தால் அசுத்தமான செயல்களைச் செய்யாது. மனதைச் சுத்தப்படுத்தச் சிவனை வணங்கு. சிவயநம என்று ஓதும்போது சிவ என்ற இரு எழுத்து மந்திரத்தை மனதில் அழுத்திப் பதித்தல் வேண்டும். ய வை மிடற்றின்கண் நிறுத்த வேண்டும். நம என்னும் இரண்டெழுத்தை நாவில் அடக்கி ஒடுக்குதல் வேண்டும். இதுதான் ஓதும் முறை. அப்படி ஓதி வந்தால் இருவினைகளும் அகலும். எவ்வகையான பாவத்தைச் செய்தாலும் அது பாவமென உணர்ந்து மனம் வருந்திச் சிவனின் நினைவோடு சிவயநம என்றோதப் பாசங்கள் யாவும் நீங்கும்" என்று கதிரேசன் சொல்லத் தாமோதரன் சொன்னான்; "நான் இனி ஆச்சிரமத்திற்கு வருகிறேன். அங்கு வருபவர்கள் தீயவர்களுடன் சேர்வதில்லை என்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

7. அதிசூக்கும பஞ்சாக்கரம்

(மீ நுண்மை ஐந்தெழுத்து)

2669. சிவய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே யடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

"சிவனடியார்களே, அன்று ஆச்சிரமத்திற்கு வந்த தாமோதரன் என்னையும் கதிரேசனையும் வணங்கினான். அப்போது கதிரேசன் சொன்னார்; "நீ வருவாயென நான் எதிர்பார்க்கவில்லை. அன்று பரமேஸ்வரி எனக்குச் சொல்வாள் என்று நீ எதிர்பாரததால் தான் அப்படிச் சொன்னாய் என்று நினைத்தேன். நீ வந்ததனால் உன்னில் மாறுபாடு தெரிகிறது. இப்போது உன்னில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதனால் சொல்கிறேன்; "சிவயநம என்று ஓதித் தனது சித்தத்தைச் சிவனது உறைவிடமாக்குதல் வேண்டும். நீங்காத நினைவுடன் சிவ சிவ என்று எண்ணிக் கொண்டிருந்தால் மனம் ஒரு நிலைப்படும். அப்படி ஒரு நிலைப்பாட்டால் வரும் துன்பங்கள் விலகி விடும். அந்த நிலை ஏற்பட்டால் அடிமை நிலை கைகூடும். அது கைகூடினால் நுண்மையான திருவைந்தெழுத்தின் மேநிலை மீதுண்மைத் திருவைந்தெழுத்தாகும். அதுவே சிவய சிவ ஆகும். இதைத் தினமும் மனதில் எண்ணிக் கணித்தல் வேண்டும். இதுவே திருவைந்தெழுத்தின் வழிநிற்கும் முறையாகும். அப்படி நின்றால் திருவடியைச் சேரும் நிலை உண்டாகும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2670. செஞ்சுடர் மண்டலத் தூடுசென் றப்புறம்
அஞ்சண வும்முறையேறி வழிக்கொண்டு
துஞ்சு மவன்சொன்ன காலத் திறைவனை
நெஞ்சென நீங்கா நிலைபெற லாகுமே.

"சிவனடியார்களே, தாமோதரன் இப்போ தினமும் ஆச்சிரமத்திற்கு வரத் தொடங்கினான். அவனுடன் அவனது மனைவியும் மகளும் வருவார்கள். அவனது மனைவி சொன்னாள்; "சுவாமி, சிவனின் அருளால் அவர் திருந்திச் சிவனின் அடியவராகிவிட்டார். அதனால் எனது மனக்குறை நீங்கிவிட்டது" என்றாள். ஆச்சிரமத்திற்கு வந்து தகுதி தராதரம் பாராது தாமோதரன் அடியார்களுடன் இருந்து பிரசங்கம் கேட்பான். அன்று வெளியூரில் இருந்து வந்த வேலாயுதம் என்பவர் பேசினார்; "சிவனடியார்களே, சிவனைத் தொழுங்கள். அவனைத் தொழுவார்களின் எஞ்சுவினையும் ஏறுவினையும் படிப்படியாக அகலும். சிவ நினைவுடன் எத்தொழிலைச் செய்தாலும் அத்தொழில் சிறப்புறும். இங்குள்ளவர்கள் அனைவரும் அகத்தவத்தில் ஈடுபடுபவர்கள். செஞ்சுடர் மண்டிலம் ஞாயிற்று மண்டலமாகும். அகத்தவத்தின் மூலம் அம்

மண்டலத்தின் ஊடாகச் சென்று நிற்றல் வேண்டும். அதன்பின் ஐயுணர்வும் தம்மை ஐந்து புலனும் பின் செல்லும் தகவாய் ஒருங்கிக் கைகூடவே அவ்வழிச்சென்று அசைவின்றி இருத்தல் வாய்க்கும். அதனால் சிவபெருமான் நம்மை விட்டு நீங்காது செம்பொருளாய் நிலை பெற்றருள்வான். அதனால் சிவனை நினையுங்கள். சிவசிவ என்று சொல்லுங்கள் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2671. அங்கமும் ஆகம வேதம தோதினும்
எங்கள் பிரானெழுத் தொன்றில் இருப்பது
சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தால்
அங்கரை சேர்ந்த அருங்கல [2]மாகுமே.

"சிவனடியார்களே, வேலாயுதம் தொடர்ந்து பேசினார்; "அடியார்களே, கருவி நூல்களும், இறைநூல்களும், மறைநூல்களும், சிவபெருமானது திருப்பெயரான சிவயநம என்ற மறையின் சிகரத்தில் அமைந்து கிடக்கின்றன. இதில் ஐயுறாது அதனைக்கற்று அதன்படி வாழ்ந்து வரல் வேண்டும். அப்படி வாழ்ந்தால் இவ்வுடம்பாகிய அருங்கலம் திருவடி என்ற சுனையைச் சேரும். சி கரம்பேசா எழுத்து. அது வகரத்துடன் கூடிச் சிவ எனப் பேசும் எழுத்தாக மாறும். அதனால் பெரும் தீய செயல்களைச் செய்தவர்கள் சிவ என்று அன்புடனும் சிவ நினைவுடனும் நினைத்தால் மேற்கொண்டு தீய செயல்களைச் செய்யும் நிலை தோன்றாது. ஒரு செயலைச் செய்யும்போது சிவசிவ என்று பன்னிரு முறை நினைத்து விட்டுச் செய்தால் அது தீய செயலாக இருந்தால் அதைச்செய்ய மனம் வராது. காலப்போக்கில் செய்த தீவினைகள் படிப்படியாகக் குறைந்து முற்றாக அறுந்து விடும்" என்று சொல்லி வேலாயுதம் தனது உரையை முடித்த பின்பு தாமோதரன் என்னிடம் வந்து சொன்னான்; "சுவாமி, சிவசிவ என்ற மறைக்கு இவ்வளவு சக்தி இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. இப்போ தினமும் சிவசிவ என்று சொல்கிறேன். மனப்பாரம் இல்லை. தீயவற்றை நினைக்க முடியவில்லை. மனதில் அன்பும் பக்தியும் தான் மேலிடுகிறது. எனது மகளுக்கு ஒரு வரன் வந்திருக்கு. அது நடைபெற வேண்டும் என்பதற்காக இப்போ நான் மிகத் தீவிரமாகச் சிவசிவ என்று சொல்கிறேன் என்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2672. நாயோட்டு மந்திரம் நான்மறை வேதம்
நாயோட்டு மந்திரம் நாத னிருப்பிடம்
நாயோட்டு மந்திரம் நாதந்த சோதி
நாயோட்டு மந்திரம் நாமறி யோமன்றே.

"சிவனடியார்களே, தாமோதரன் இப்போ முற்றாக மாறிவிட்டான். ஆச்சிரமத்திற்குத் தினமும் வருவான். ஆச்சிரமத்திற்கு வரும் பிள்ளைகளோடு தனது முழுநேரத்தையும் செலவு செய்வான். ஏழை மாணவர்கள் கற்க உதவுவான். பணக்கார மாணவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வான். இப்போ அவன் ஆச்சிரமத்து நாயாக

மாறி விட்டான். அவன் நான் தனிமையில் இருந்தால் வந்து எனக்கருகில் இருப்பான். சிவனைப் பற்றிக் கேட்பான். அன்று நான் சொன்னேன்; "தாமோதரா, நயப்பது நாய், நயக்கப்படுவோன் நாயன். நாயானது உயர்ந்த பல பண்புகளை உடையது. அது தலைவனை அறியும். அவனது உடைமையையும் பாதுகாத்தல், தலைவன் ஏவற்படி பணி செய்தல், தன் உயிரைக் கொடுத்தல், நன்றிமறவாமை, மோப்பசக்தி முதலிய பல நற்பண்புகள் நாயிடத்தில் உண்டு. அந்த மேலான நாய் மறந்து பிறரைத் துன்புறுத்தினால் அதனை விலக்கும் பொருட்டு இகழ்ச்சிக் குறிப்பாகச் சொல்லும் சொல் 'சீ' என்பதாகும். இதை நாயோட்டு மந்திரம் என்பர். பழங்காலத்தில் மந்திரங்களை உய்த்துணர மாத்திரைகளைக் கூட்டியும் குறைத்தும் ஓதுவது வழக்கம். எனவே நாயோட்டு மந்திரமான சிகரத்தின் கண் நான்மறை வேதமும் அடங்கும். அச்சிகரமே சிவனின் இருப்பிடமாகும். அச்சிகரம் தான் அருஞ்சைவர்மெய் ஆறாறுக்கு அப்பாலுள்ள இயற்கை உண்மைப் பேரின்பப் பேரொளியாகும். இவ்வுண்மையை அல்லாமல் வெளிப்படையாகக் கூறும் 'சீ' என்பதே நாயோட்டு மந்திரம். நீ நாயிற் கடையாய் இருந்து நன்றி மிக்க நாயாகிச் சிவனைத் தலைவனாக ஏற்றுள்ளாய். அதனால் சிவனுக்கு விருப்பமான செயல்கள் அனைத்தையும் விசுவாசத்துடன் செய்கிறாய். நீ உயர்வாய் உன் தொழிலும் உயரும் என வாழ்த்தினேன் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2673. பழுத்தன ஐந்தும் பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் வினையறி வாரில்லை
எழுத்தறி வோமென் றுரைப்பார்கள் ஏதர்
எழுத்தை யழுத்தும் எழுத்தறி யாரே.

"சிவனடியார்களே, வேலாயுதம் அயலூரவர். தாமோதரன் பெரும் வர்த்தகர். அதனால் சமயப் பணிக்காக முன்னொருமுறை அவரைச் சந்திக்க வேலாயுதம் தாமோதரன் வீட்டிற்குச் சில அடியவர்களுடன் சென்றபோது தாமோதரன் அவர்களைச் சந்திக்க விரும்பவில்லை. தாமோதரனின் அருகில் வந்த வேலாயுதம் ; "தங்களது பணி சிறக்கட்டும்" என்றார். தாமோதரன் அவரை அடையாளம் காணாததால் சிரித்தார். பின், "உங்கள் பேச்சு மிகவும் அருமை. அடிக்கடி வந்து உரையாற்றுங்கள். முன்பு தீவினையாளனாக வாழ்ந்ததால் தவறுகள் பலவும் செய்து விட்டேன். இப்போது ஆச்சிரமத்திற்கு வந்த பிறகு தான் சிவனைப் பற்றி அறிந்தேன். சுவாமி சொன்னார்; " செந்தமிழ்ப் பழமறைகளுக்குள்ளே பழுத்து முதிர்ந்தது சிவயநம என்ற திருவைந்தெழுத்தாகும். அதை நம் செயலற்று நாதன் தன் செயலாக நின்று நாடுதல் வேண்டும். அந்நாட்டத்தினை விழித்துறங்கும் நிலை என்பர். இதனை அறிதுயில் என்றும் சொல்லலாம். இதை நான் இதுவரை அறியவில்லை. என்னைப் போலப் பலரும் இதை அறியவில்லை. இதை அறியாத மூடர்கள் சிவயநம என்னும் எழுத்தைந்தும் வன்மை

மென்மை இடைமை என்பன கலந்தவை. இவற்றை நாம் அறிவோம் என்று கூறுவர். இவர்கள் திருவைந்தெழுத்தை ஏனைய எழுத்துக்கள் போலவே கருதுகின்றனர். அது பிறப்பறுக்கும் படைக்கலன் என அறியார். அதை அறிந்தால் உண்மையை அறிந்தவராவர். நான் இதுவரை உண்மையை அறியாத மூடனாகவே வாழ்ந்தேன். ஆச்சிரமம் எனக்கு வழிகாட்டி உண்மையை உணர வைத்தது. சிவயநம என்ற ஐந்தெழுத்து வரும் துன்பங்களை எல்லாம் அகற்றும் படைக்கலன் என்பதை இப்போது உணர்ந்து கொண்டேன். நீண்ட நாட்களாகத் தடைப்பட்ட எனது மகளின் திருமணம் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. அதற்குக் காரணம் திருவைந்தெழுத்து என்று அழுதவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

8. திருக்கூத்துத் தரிசனம்

2674. எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே.

"சிவனடியார்களே, தாமோதரன் சொன்னார்; "சுவாமி எனக்கு இப்போ அறுபது வயது. இவ்வளவு காலமும் நான் இருண்ட பூமியில் தான் வாழ்ந்தேன். என்னுடைய நண்பர்கள் எல்லோரும் என்னைப் போலவே இருண்ட பூமியில் வாழ்ந்ததால் வெளிச்சத்தைக் காணவில்லை. பணம் தான் எல்லோருக்கும் குறிக்கோளாக இருந்தது. பணத்தால் பலவற்றைச் செய்தோம். அவையெல்லாம் தீயவை. ஒரு நல்ல செயலை நாம் பணத்தால் செய்யவில்லை. எனது நண்பன் அருளானந்தன். அவனது மகன் பொறியியலாளன். என்னுடன் உயிராகப் பழகுவான். எனக்காக உயிரையும் தருவேன் என்று கூறுவான். அதை நம்பி எனது மகளுக்கு அவனது மகனைக் கேட்டேன். அவன் சொன்னான்; "நண்பா இது வாழ்க்கைப் பிரச்சினை. நாம் பண விடயத்தில் மட்டும் நண்பர்கள். வாழ்க்கை வேறு. உனது மகள் கறுப்பு நிறமானவள். எனது மகன் அழகானவன். நல்ல நிறமானவன். உனது மகளைச் செய்தால் எமது சந்ததியும் கருமை அடைந்து விடும் என்றான். இப்போ சிவனைப் பற்றி அறிந்த பின்பு தான் உண்மையான் உலகைப் புரிந்து கொண்டேன். சிவபெருமானுக்குத் திருமேனி சிவசக்தியாகும். சிவனின் அருளாற்றல் எங்கும் பரந்து நிறைந்துள்ளது. அவன் பெண்களை மையப்படுத்தி தனது திருத்தொழில்கள் அனைத்தையும் சிவசக்தியின் வாயிலாகவே செய்து வருகிறான். சிவசத்தியும் சிவனும் திருச்சிற்றம்பலத்தில் அமர்ந்து அருள்கின்றனர். அவனது திருக்கூத்தும் எங்கும் நிறைந்து எங்கும் சிவமாக இருப்பதால் உலகங்கள் சிவனையே சார்ந்திருக்கின்றன. அதனால் அனைத்தும் சிவமயமாகவே இருக்கிறது. சிவன் பெண்ணை முதன்மைப்படுத்தித் திருத்தொழில்கள் அனைத்தையும் செய்வதால் பெண் மதிக்கப்படுகிறாள். அதனால் தான் எனது மகள் கறுப்பாக இருந்தபோதும் மாப்பிள்ளை அவளை விரும்பித் திருமணம் செய்தார். இப்போது எந்தவிதமான குறைபாடுகளுமின்றி மகளைக் கவனிக்கிறார். அருளானந்தத்தின் மகன் பெரும் குடிகாரன். அதனால் அவனது

மனைவி அவனைப் பிரிந்து சென்றுவிட்டாள் எது நடக்க வேண்டுமென்று அவன் தீர்மானிக்கிறானோ அது தான் நடக்கும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2675. சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பத மாம்அந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யாரறி வாரன்றே.

"சிவனடியார்களே, தாமோதரன் தொடர்ந்து சொன்னார்; "சுவாமி அருளானந்தன் தனது மகனை உயர்வாகக் கருதி, எனது மகளை மிக மிகத் தாழ்வாகக் கருதி பேசியது எனக்கு மிகுந்த மனவருத்தத்தை உண்டு பண்ணியது. எந்தக் கவலையுமில்லாமல் மிக்க மகிழ்வோடு வாழ்ந்த என்னை அச்சம்பவம் அதிர்ச்சியடையச் செய்தது. அதைப்பற்றி எனது உறவினரான நல்லைநாதனுக்குச் சொன்னபோது அவன் சொன்னான்; "எல்லாம் சிவனின் செயல். அதுதான் நிலையானது. ஏனையவையெல்லாம் அழிவடைவன. உனது பணத்தால் செய்யமுடியாததைச் சிவனின் அருளால் செய்யலாம். நான் சொல்வதை நம்பினால் சிவனைத் தொழு. சிவபெருமான் ஆருயிர்களின் உய்வுக்காக ஆற்றியருளும் திருத்தொழில்கள் ஐந்து. அதுபோலத் திருவருட்கூத்துகளும் ஐந்து. அவை முறையே சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என்பனவாகும். அதனால் சிவனை விசானந்தக் கூத்தன் என்பர். இவ் ஐந்தும் முறையே அறிவு, ஆற்றல், அன்பு, ஆற்றற் கூடுதல் என்பவற்றால் நிகழும். இதைப் புரியாது பலர் வாழ்கின்றனர். சிவனின் ஐம்பெருங் கூத்துக்களால் தான் மேற்சொல்லப்பட்ட ஐந்தும் நடைபெறுகின்றன. நல்லதை வளர்ப்பதும் தீயதை அழிப்பதுமே கூத்தின் தன்மையாகும். இதைப் புரிந்தவர்கள் எல்லாவற்றையும் சிவனிடம் ஒப்படைத்து விட்டுச் சும்மாய் இருப்பார்கள். நீ உனது மகளின் திருமணத்திற்காக என்னென்ன வெல்லாம் செய்தாய். சரி வந்ததா. நான் சொன்னபடி சிவனிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டுச் சும்மாய் இருந்தபோது நல்ல திருமணம் தேடி வந்தது. அருளானந்தன் தனது பணத்தால் யாவற்றையும் செய்யலாமென நினைத்துக் கடவுளை நம்பாதிருந்தான். இப்போ துன்பம் வந்த பின் வணங்குகிறான். இது தான் மனிதர்களின் குணம் என்றவர் " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2676. திருமந் திரமே சிதம்பரந் தானும்
திருமந் திரமே சிறந்த உபாங்கந்
திருமந் திரமே திருக்கூத்தின் செய்கை
திருமந் திரமே திருமேனி தானே.

"சிவனடியார்களே, திருவைந்தெழுத்தே திருமந்திரமாகும். அதுதான் தில்லைத் திருச்சிற்றம்பலம். அதுதான் ஆருயிர்களுக்குத் துணையுமாகும். அத்திருமந்திரமே திருக்கூத்தின் செயல்களாகும். அத்திருமந்திரம் தான் சிவனின் திருமேனியாகும். அதனால் எந்நேரமும் திருமந்திரமான ஐந்தெழுத்தை ஓதுங்கள்."

“சிவனடியார்களே, எனது பேச்சைக் கேட்ட தாமோதரன் சொன்னார்; “சுவாமி திருவைந்தெழுத்துத்தான் திருமந்திரம் என்றீர்கள்; அதுதான் திருச்சிற்றம்பலம் என்றீர்கள் அத்துடன் ஆருயிர்களுக்குத் துணை யென்னும் அதுதான் சிவனது திருமேனி என்றும் சொன்னீர்கள். அது உண்மையென்று அதைச் சொல்லத் தொடங்கிய பின்பு தான் புரிகிறது. எதைப்பற்றியும் அக்கறைப்படாது எனது தந்தை உழைத்துச் சேமித்த பணத்தை எந்தவிதமான யோசனைகளுமின்றிச் செலவு செய்யும்போது எனது தந்தை சொல்வார்; “ மகனே எனது உழைப்பல்ல இது. இது சிவனிட்ட பிச்சை. அதனால் அவனது நினைவோடு செலவு செய் துன்பமிராது” என்பார். நான் அதைக் கேட்பதில்லை. தந்தை இறந்த பின் நான் செய்த முயற்சிகள் யாவும் நட்டத்தையே தந்தன. இப்போது சிவனை நம்பிய பின் நட்டம் வருவதில்லை. அதனால் யாவும் சிவமென உணர்ந்து கொண்டேன் என்றவர் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2677. திருமேனி தானே திருவரு ளாகுந்
திருமேனி தானே திருஞான மாகுந்
திருமேனி தானே சிவநேய மாகுந்
திருமேனி தானே தெளிந்தார்க்குச் சித்தியே.

“சிவனடியார்களே, தாமோதரன் சொன்னான்; “சுவாமி, பணம் பொருள் தான் வாழ்க்கை. பணம் பொருள் தான் தேட வேண்டியவை. பணமில்லாதவன் பிணம். பணமில்லாதவனை யாரும் மதிக்கமாட்டார்கள் என்று நான் பலருக்கும் சொல்வேன். நல்லைநாதன் எனது இரத்த உறவினன். அவன் எனக்குச் சொல்வான்; “தாமோதரா ஐந்தெழுத்தால் அமைந்த திருமேனியே திருவருள். அத் திருமேனியே திருவடியுணர்வு. அத் திருமேனியே அறியப்படும் சிவ உண்மை அறிவு. அதுதான் பேரின்ப வடிவம். திருவருளால் இவ் உண்மையை உணர்ந்தவர்கள் அத் திருமேனியே திருவடிப்பேறான சித்தி என்றும் எதற்கும் பணம் தேவையில்லை. பொருள் தேவையில்லை. செல்வாக்குத் தேவையில்லை. துணை தேவையில்லை. இவை அனைத்தையும் ஐந்தெழுத்துத் தரும் என நம்புங்கள். சுந்தரலிங்கம் மிகவும் வறியவன். அவனது மகள் அகல்யா படித்தவள். சுந்தரலிங்கத்துடன் ஆச்சிரமத்திற்குத் தவறாது வந்து திருத்தொண்டுகள் செய்பவள். அவளை வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவன் விரும்பித் திருமணம் செய்தபோது ஐந்தெழுத்தைத் தவிர எம்மிடம் எதுவும் இல்லை. அந்த ஐந்தெழுத்துத் தான் எல்லாமாகி நின்று எனது திருமணத்தை நடத்தியது” என்றார். ரவீந்திரனுக்குள் கல்வியை கொடுத்தது ஐந்தெழுத்து. மதிப்பு மரியாதையைக் கொடுத்தது ஐந்தெழுத்து. இதை நீ உணரவில்லையா? என்று கேட்பான். அப்போது நான் அவனை வாழத் தெரியாதவன் என்று நினைப்பேன். இப்போது யோசித்துப் பார்த்தால் அவன் பெரும் புத்திசாலி. அவனது பிள்ளைகளுக்கு இலகுவாகத் திருமணம் நடைபெற்றது. மிகவும் வசதியாக வாழ்கிறான். நான் தான் மடையன் முட்டாள் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சிவானந்தக்கூத்து

2678. தானந்தம் இல்லாச் சதானந்த சத்திமேல்
தேனுந்தும் ஆனந்த மாநடங் கண்டீர்
ஞானங் கடந்து நடஞ்செய்யும் நம்பிக்கங்கு
ஆனந்தக் கூத்தாட ஆடரங் [1]கானதே.

"சிவனடியார்களே, ஒருபோதும் குறைவடையாதது திருவருள். அத் திருவருள் எப்போதும் மேன்மையுடைய இன்ப வடிவினதாக இருக்கும். அத் திருவருளை இறுகப் பற்றினேன். முத்தியைத் தரும் சிவபெருமான் இன்பத் திருக்கூத்தாடுகிறான். சுட்டுணர்வு, சிற்றுணர்வு எல்லாம் கடந்த நிலை திருவருள் நிலையாகும். அந்நிலையின் கண் சிவபெருமான் திருக்கூத்து இயற்றியருளுகின்றான். அவ்வாறு திருக்கூத்தியற்றும் சிவபெருமானின் திருப்பெயர் நம்பி. அத்தகைய நம்பிக்கு அத்திருவருள் நிலையே ஆனந்தக் கூத்தாகும். ஆடரங்காகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2679. ஆனந்தம் ஆடரங் கானந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்த வாச்சியம்
ஆனந்த மான அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந் தானுக்கே.

"சிவனடியார்களே, நல்லைநாதன் தாமோதரனுக்குச் சொன்னார்; "சிவபெருமான் ஆருயிர்கள் அனைத்தும் பேரின்பம் அடைவதற்காகவே ஐந்தொழில்களையும் புரிந்தருள்கின்றான். அதனால் எல்லாம் இன்பமயமாகிறது. நோய்வாய்ப்பட்டோர் நோய் நீங்கி நலமுற்ற காலத்தில் முன்புவந்த நோய் நீங்குவதற்காக உண்ட மருந்து உண்ணக்கொடுத்த வைத்தியர் முதலிய அனைத்தும் இன்பத்தின் வாயில் என்ற உண்மையினை உணர்வர். உணர்ந்தபின் அத்தனையும் இன்பமாகவே கருதுவர். இது போன்றதுதான் இறைவனது திருச்செயல்களும். அச் சிவன் ஆடும் அரங்கமும் இன்ப நிலையமாகும். திருமுறைப்பாடல்களும் இன்பத்தையே தருவன. வாத்தியங்களும் இன்பத்தையே தருவன. குழல், யாழ் போன்ற வாத்தியங்களும் இன்பத்தையே தருவன. அனைத்து உலகத்திலுமுள்ள இயங்குதிணை, நிலைத்திணைப் பொருட்கள் எல்லாமும் இன்புறுதற்பொருட்டே சிவபெருமான் திருக்கூத்தாடுகிறான். அதனால் அவைகளும் நீங்காத இன்பத்தைப் பெறுகின்றன. அத்திருக்கூத்து எல்லார்க்கும், எவைக்கும் பேரின்பத்தைக் கொடுக்கும். இதை உணராதவர்கள் தான் சிவநிந்தை செய்கின்றனர். உணர்ந்தவர்கள் திருவருளால் பேரின்பமடைகின்றனர். இதைச் சொல்லிப் புரியவைக்க முடியாது. உணர்ந்து உணரல் வேண்டும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2680. ஒளியாம் பரமும் உளதாம் பரமும்
அளியார் சிவகாமி யாகுஞ் சமயக்

களியார் பரமுங் கருத்துறை யந்தத்
தெளிவாஞ் சிவானந்த நட்டத்தின் சித்தியே.

"சிவனடியார்களே, அறிவுப் பேரொளியாய் விளங்கும் முழுமுதலும் என்றும் மாறாத உண்மையாகத் திகழும் முழுமுதலும் பேரருள் நிறைந்த சிவகாமியேயாகும். சிவகாமி என்பது சிவனார் விழையும் விருப்பமே தனது விருப்பமாகக் கொண்டொழுகும் காமி என்பதாகும். நன்னெறிக்கண் வாழ்பவர்களுக்கு அளவிடமுடியாத பேரின்பப் பெருவாழ்வை அருளிச் செய்யும் முழுமுதலும், பேரன்பர் திருவுள்ளத்தின்கண் வெளிப்பட்டுத் தெளிவினை நல்கும் முழுமுதலும் சிவபெருமானேயாவன். இவை ஆருயிர்களுக்குக் கைவருவது. அப்பெருமானார் செய்தருளும் திருக்கூத்தினைக் கண்டு கும்பிட்ட திருப்பேற்றின் பயனாலாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2681. **ஆன நடமைந் தகள சகளத்தர்**
ஆன நடமாடி ஐங்கரு மத்தாக
ஆன தொழிலரு ளாலைந் தொழிற்செய்தே
தேன்மொழி பாகன் திருநட மாடுமே.

"சிவனடியார்களே, தனக்கெனத் திருவுருவம் இல்லாத சிவபெருமான் ஆருயிர்களின் நலத்தைக் காப்பதற்காகத் திருவுருக் கொண்டுள்ளான். அத்திருவுருவம் மாயாகாரியமாகிய எம்போன்ற பருவுருவம் போன்றதன்று. திருவருளே அவனது திருவுருவம். கல் முதலியவற்றால் அமைக்கப்படும் திருவுருவம் நீரிற் கரையாது. அடியிற் சென்று தங்கும். கற்கண்டால் செய்த திருவுருவம் நீரில் கரைந்து நீராகிவிடும். மாயாகாரிய உருக்கள் திருவருள் வெளியில் வேறுபட்டு நிற்கும். அருளுரு திருவருள் வெளியில் கலந்துவிடும். அவன் அருட்பெருங்கூத்தினை ஆருயிர்களின் நன்மையின் பொருட்டே இயற்றுகின்றனன். அவன் திருவருளால் புரியும் திருத்தொழில்கள் ஐந்து. அவன் அம்மையைச் செம்பாகமாக உடைய திருவினன். அவ்வுருவினைக் கொண்டே அவன் திருக்கூத்தியற்றுகின்றனன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2682. **பூதாண்ட பேதாண்ட போகாண்ட யோகாண்ட**
மூதாண்ட முத்தாதண்ட மோகாண்ட தேகாண்ட
தாகாண்ட மைங்கரு மத்தாண்ட தந்பரத்து
ஏகாந்த மாம்பிர மாண்டத்த என்பவே.

"சிவனடியார்களே, அண்டங்கள் ஒன்பது வகைப்படும். அவை ஐம்பெரும் பூதங்களானாகிய அண்டமும், அவற்றின் வேறுபட்டவையாகக் காணும் பேத அண்டமும், ஆங்காங்கே இருவினைகளுக்கீடாக இன்ப துன்பங்களை நுகரும் நுகர்வண்டமும், செறிவினர் சேர்ந்து பயன்துய்க்கும் யோக அண்டமும், இவை அனைத்திற்கும் மேலாக நிற்கும் மூதண்டமும், திருவடிப் பேற்றினை அருளும் முத்தண்டமும், இத்திருவடிப்பேற்றின்கண் நீங்காத பெருவிளைவு கொள்ளும் மோகாண்டமும், நுகர்வுக் கருவியான தேகாண்டமும், நுகர்வின் மேல் மிகு விழைவாகிய வேட்கை கொள்ளும்

தாகாண்டமும் என்பன. இவ் அண்டங்கள் அனைத்தையும் ஐம்பெரும் தொழிலால் ஆண்டு அருள்பவன் சிவன். அவனே முழுமுதல்வன். அவனது திருவடியில் வேறறக் கலந்து நிற்பதே பிரமாண்டம் எனப்படும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2683. வேதங்க ளாட மிகுஆ கமமாடக்
கீதங்க ளாடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினான் ஞானானந் [1]தக்கூத்தே.

"சிவனடியார்களே, வேதங்களாகிய மறைநூல்கள் தொழிற்படுவதே ஆடுதல் என்பதன் அர்த்தமாகும். தொழிற்படுவது என்பது உலகோர் ஓதியும், ஓதுவித்தும் அதன்படி ஒழுகலாற்றின் மேற்கொண்டொழுகி உய்யத் துணைநிற்பது. வேதத்தை தெறிநூல் எனவும், ஆகமத்தை துறைநூலென்றும் கூறப்படுகிறது. கீதங்களான பண்நூற்கள் ஆட, விளக்கம் மிக்க ஏழு அண்டங்களும் ஆட, ஐம்பூதங்களும் ஆட, இருநூற்று இருபத்து நான்கு என்னும் எண்களுக்குட்பட்ட உலகங்கள் முழுவதும் ஆட முப்பத்தாறாம் மெய்யாகிய நாததத்துவத்தை இடமாகக் கொண்டு சிவபெருமான் திருக்கூத்தாடுகிறான். அத்திருக்கூத்தே உண்மை அறிவின்ப பெருங் கூத்தாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2684. பூதங்கள் ஐந்திற் பொறியிற் புலனைந்தில்
வேதங்கள் ஐந்தின் மிகுமா கமந்தன்னில்
ஓதுங் கலைகாலம் ஊழி யுடன்அண்டப்
போதங்கள் ஐந்திற் புணர்ந்தாடுஞ் சித்தனே.

"சிவனடியார்களே, புலன் நுகர்விற்கு இடமாகக் காணப்படும் ஐம்பெரும் பூதங்களிலும், புலனைக் கொள்ளும் ஐம்பொறிகளிலும், அப்பொறிகளுக்குப் பொருளான ஐம்பூதங்களிலும், வேதங்களிலும், ஆகமங்களிலும், ஓதியொழுகும் ஏனைய கலைகளிலும், காலத்திலும், ஊழியிலும் அண்டத்துணர்வாகிய ஐந்தினும் விழுமிய முழுமுதற் சிவபெருமான் வேறறப் புணர்ந்து திருக்கூத்தாடுவான். அவனே சித்தன் என்னும் செந்தமிழ்ச் சிறப்புத் திருப்பெயரினை உடையவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2685. தேவர் சுரர்நார் சித்தர்வித் தியாதரர்
மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள்
தாபதா சந்தா சமயஞ் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை யாடவே.

"சிவனடியார்களே, சிவபெருமான் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பவன். அதனால் எவ்வுயிரும் எப்பொருளும் புடைபெயர்வதனால் அவன் திருவுள்ளப் புடைப்பெயர்வின் திருக்குறிப்பாலேதான் ஆகும். அதையே அவனது ஆடல் என்று கூறுவர். தேவரும், சுரரும், நரரும், சித்தரும், வித்தியாதரரும், மூவர்களும், முப்பத்து

மூவர்களும், தாமதரும், ஏழு முனிவர்களும், சமயத்தாரும், இலங்குதிணைப் பொருட்களும், நிலைத்திணைப் பொருட்களும் ஆகிய அனைத்தும் சிவபெருமான் ஆட ஆடும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சுந்தரக்கூத்து

2686. அண்டங்கள் ஏழினுக் கப்புறத் தப்பாலும்
உண்டென்ற சதம்தி சதாசிவத் துச்சிமேற்
கண்டங் கரியான் கருணை திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந் [2]தானன்றே.

"சிவனடியார்களே, அண்டங்களுக்கு அப்பாலும், அதற்கு அப்பாலும் உண்டு என்று சொல்லப்படும் திருவருள் அருளோன் என்று சொல்லப்படும் சதாசிவ தத்துவத் துச்சியின் மேற் கண்டங் கரிதாய் அருளே திருவுருவாய் உமையம்மையார் கண்டு மகிழத் திருக்கூத்தியற்றும் சிவபெருமான் செய்யும் செயல்கள் அனைத்தும் சிவசக்தியின் செயலே. அதனால் திருவருளே திருக்கூத்தை இயக்குகிறது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2687. கொடுகொட்டி பாண்டரங் கோடுசங் கார
நடமெட்டோ டைந்தாறு நாடியுள் நாடுந்
திடமுற் றெழுந்தேவ தாருவாந் தில்லை
வடமுற்ற மாவன மன்னவன் தானே.

"சிவனடியார்களே, சிவபெருமான் செய்தருளும் திருக்கூத்துக்கள் இவை. கொடுகொட்டி, பாண்டரங்கம், கோடு ஐவகையான சங்காரத்துடன் காளிக்கூத்து, முனிக்கூத்து, இன்பக்கூத்துடன் கூடிய எட்டு ஐந்தொழிற்கூத்து, அறுசமயக்கூத்து என இருபத்தி இரண்டு. இக்கூத்துக்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் நிகழ்த்தி அருளப்பட்டவை. அவற்றுள்ச் சிறந்தது இரண்டாகும். அவை முறையே உறுதியின் விழைவு பொருந்தத் தில்லைவனக் காட்டிலும், ஆலவவனக் காட்டிலும் நிகழ்த்தப்பட்டது. தில்லைவனத்தில் அன்பியல் கூத்தும், ஆலவனத்தில் அருளியற் கூத்தும் நிகழ்ந்தன. இவற்றால் இன்பியல் வாழ்வு உண்டாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2688. பரமாண்டத் தூடே பராசக்தி பாதம்
பரமாண்டத் தூடே படரொளி ஈசன்
பரமாண்டத் தூடே படர்தரு நாதம்
பரமாண்டத் தூடே பரன்நட மாமே.

"சிவனடியார்களே, பரமாண்டம் எனப்படும் அப்பால் அண்டத்தில் பராசக்தியாகிய வனப்பாற்றலின் திருவடி காணப்படும். அங்கே சிவபெருமானும்

காணப்படுவான். அத்துடன் அங்கு ஓசைமெய்யாகிய நாதமும் காணப்படும். அங்கு பரனாகிய சிவபெருமான் நடனமாடியருள்கின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2689. அங்குச மென்ன எழுமார்க்கம் போதத்தில்
தங்கிய தொந்தி எனுந்தாள ஒத்தினில்
சங்கரன் மூலநா டிக்குள் தரித்தாடல்
பொங்கிய காலம் புகும்போகல் இல்லையே.

"சிவனடியார்களே, சன்மார்க்கம் என்பது நன்னெறியாகும். அந்நன்னெறி அங்குசம் என்னும் தோட்டியை ஒத்தது. அந்நன்னெறியின் முழுமுதல்வன் சங்கரன் ஆவான். அவன் நடுநாடியுள் அறிவினில் தங்கித் தொம்திம் எனத் தாளமிசைத்துத் திருக்கூத்தாடுவான். அப்பொழுது திருவருள் பொங்கும் காலமாகும். அத்திருவருள் எம்முள் புகும். ஆனால் அது புறத்தே போகாது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2690. ஆனத்தி யாடிப் பின்மைக் கூத்தாடி
கானத்தி யாடிக் கருத்தில் தரித்தாடி
மூனச் சுழுனையுள் ஆடி முடிவில்லா
ஞானத்துள் ஆடி முடித்தான்என் நாதனே.

"சிவனடியார்களே, ஆருயிர்களை உய்விப்பதற்காக அவ்வுயிர்களின் மீது அளவிறந்த அன்பு கொண்டு படைத்தல் முதலிய ஐந்தொழிற் திருக்கூத்தாடுகின்றவன் சிவன். ஆடிய பின்பு அருவம் நான்கு உருவம் நான்கு அருஉருவம் ஒன்று ஆக ஒன்பது திருவுருவங்களின் இடமாக நின்று ஒன்பது வகையான திருக்கூத்தை ஆடுகின்றவன். அத்துடன் பேரூழிப் பெருங் கூத்தாடுகின்றவன். ஆருயிர்களின் கருத்தினிலும் தங்கியாடுகின்றனன். மூன்று நாடிகளும் ஒன்று கூடும் நடுவிடமாகிய சுழுமுனையுள்ளும் திருக்கூத்தாடுகின்றனன். அத்துடன் மெய்யுணர்வின் கண் படிப்படியாக வந்து திருக்கூத்தாடி நிறைந்து நிற்கின்றனன். அவனே அடியேனுடைய ஆருயிர் நாதனாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2691. சத்திகள் ஐந்துஞ் சிவபேதந் தானைந்தும்
முத்திகள் எட்டும் முதலாம் பதமெட்டுஞ்
சித்திகள் எட்டுஞ் சிவபதந் தானெட்டுஞ்
சுத்திகள் எட்டீசன் தொல்நட மாடுமே.

"சிவனடியார்களே, திருவருளாற்றல் ஐந்து வகைப்படும். அவை வனப்பாற்றல், நடப்பாற்றல் எனவும், நடப்பாற்றலின் வகையாகிய அறிவாற்றல், தொழிலாற்றல், அன்பாற்றல் எனவும் வழங்கப்படும். இத் திருவருளாற்றல் ஐந்தும் முறையே பராசக்தி, ஆதிசக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி, இச்சா சக்தி எனப்படும். இவ்வாற்றல் நிலைக்கேற்பச் சிவபெருமானும் ஐவகையாக நின்றருள்வன். முத்தியாகிய வீடுபேறு எட்டாகும். அவை முறையே சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்னெறி நன்மையின் பேறுகள் நான்கு. அவை உருவ நிலையிலும் அருவ நிலையிலும் எட்டாகும். ஆண்டான் மெய்யின் கான் உறையும் அறிவு முதல்வர்கள் எண்மர்.

நிலையும் பதம் எட்டாகும். எண் பெரும் சித்திகளும் சித்தி எட்டாகும். ஐம்பெரும் பூதங்கள் ஞாயிறு, திங்கள், ஆருயிர் என்னும் எட்டும் சிவநிலை எட்டாகும். இவ் எட்டின் உண்மை காண்டல் சத்தியாகிய தூய்மை எட்டாகும். இவை அனைத்திலும் சிவபெருமான் திருநடம் பதிப்பன். அதனால் தான் உலக உயிர்கள் ஆடவும் பாடவும் கூடவும் செய்கின்றன. இவையே திருநடனக் குறிப்பாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2692. மேகங்கள் ஏழும் விரிகடல் தீவேழுந்
தேகங்கள் ஏழுஞ் சிவபாற் கரன்ஏழுந்
தாகங்கள் ஏழுடன் சாந்திகள் தாம்ஏழும்
ஆகின்ற நந்தி யடிக்கீழ் அடங்குமே.

"சிவனடியார்களே, எழுவகை மேகங்களும் எழுவகைத்தீவுகளும் சிவஞாயிறு ஏழும், ஏழுநாவினை உடைய தீயும் சாந்தியாகிய ஏழு வகை அடக்கங்களும் சிவபெருமானின் திருவடியின் கீழ் அடங்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

பொற்பதிக்கூத்து

2693. தெற்கு வடக்குக் கிழக்குமேற் குச்சியில்
அற்புத மானதோர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில்பே ரின்பத் துபய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே.

"சிவனடியார்களே, தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு உச்சியாகிய திருமுகங்கள் ஐந்தும் அருளோன் குறியிற் காணப்படும். அருளோன் குறி என்பது சதாசிவலிங்கம் பேரின்பத்தையே வடிவமாக உடைய சிவபெருமான் அருவம், உருவம், அருஉருவம் என்னும் திருமுகங்களை இடமாகக் கொண்டு தனிநடம் புரிந்தருள்கிறான். இதுவே பெற்புறு நடனமாகும். திருமுகங்கள் ஐந்தும் நடுக்கம், விளக்கம், ஆட்சி, தோற்றுவித்தல், இயக்கம் என்பவற்றைக் குறிக்கும். இவற்றை முறையே அகோரம், வாமதேவம், தற்புருடம், சத்தியோசாதம், ஈசானம் என்பர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2694. அடியார் அரனடி யானந்தங் கண்டோர்
அடியா ரவராவ ரத்தரு ளுற்றோர்
அடியார் பவரே யடியவ ராமால்
அடியார்பொன் னம்பலத் தாடல்கண் டாரே.

"சிவனடியார்களே, திருவடியின்பத்தைத் திருவருளால் அடைந்தோர் மெய்யடியாராவார். திருவருளைப் பெற்றோர் அருளடியாராவர். சிவ குழுவினால் திருவடியின்பத்தைப் பெற்றோர் திருவடியாராவர். பொன்னம்பலத்தில் திகழும் திருக்கூத்தைக் கண்டோர் சிவனடியாராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2695. அடங்காத என்னை அடக்கி அடிவைத்து
இடங்காண் பரானந்தத் தேஎன்னை இட்டு
நடந்தான் செய்யும்நந்தி நன்ஞானக் கூத்தன்
படந்தான்செய் துள்ளுட் படிந்திருந் தானே.

"சிவனடியார்களே, பொறி புலன்கள் அடங்கி நன்னெறிக்கண் செல்லாத என்னைச்சிவகுருவாய் எழுந்தருளி வந்து திருவடியைச் சூட்டி அடங்கியொழுகுமாறு செய்தனன். அத்துடன் பேரின்பப் பெருந்தேனை ஊட்டியருளினன். என்னுனர்வின் கண் தன்நிகரில்லாத் திருக்கூத்தைப் புரிந்தருள்கின்றனன். அவனது திருப்பெயர் நந்தி. அவனே ஞானக்கூத்தன். அவன் அடியேனைப் படத்தின் கண் காணப்படும் உயிர்ஓவியம் போன்று அசைவற நிற்றலாகிய நிட்டையில் கூட்டுவித்தனன். அதன் பின் அவன் என் உணர்வினுள்ப் புகுந்து படிந்திருந்து அருள்கின்றான் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2696. உம்பரிற் கூத்தனை உத்தம கூத்தனைச்
செம்பொற் றிருமன்றுட் சேவகக் கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை
இன்புற நாடிஎன் அன்பில்வைத் தேனன்றே.

"சிவனடியார்களே, திருக்கைலையாகிய உம்பரின் கண் ஆருயிர்கள் உய்யத் திருக்கூற்றியற்றும் கூத்தனை, முதல்வனாக நின்று தலையாய கூத்தியற்றும் கூத்தனை, பொன்னம்பலத்தில் கூத்தியற்றும் சேவகக் கூத்தனை, ஆருயிர்களுடன் வேறறக் கலந்து நின்று அவ்வுயிர்களைத் திருவடியோடு தொடர்புபடுத்தும் சம்பந்தக் கூத்தனை, அடியேன் இன்புறும் வண்ணமாக நாடி வந்து திருக்கூத்தினைப் புரிகின்ற சிவனை அடியேன் அன்பினுள் வைத்து வழிபடுகிறேன் என்கிறார் திருமூலர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2697. மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைச்
பூணுற்ற மன்றுட் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யாருரைப் பாரன்றே.

"சிவனடியார்களே, மணி மண்டபத்துள் நடனம் புரியும் மாணிக்க கூத்தனை, திருச்சிற்றம்பலக் கூத்தனை, திருச்சடைக் கூத்தனை, சிவானந்தக் கூத்தனை, ஆணிப்பொற் கூத்தனை அளவிட்டுக் கூறத்தக்க திறமையானவர் யார்? என்று திருமூலர் கேட்கிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2698. விம்மும் வெருவும் விழும்எழும் மெய்சோருந்
தம்மையுந் தாமறி யார்கள் சதுர்கெடுஞ்

செம்மை சிறந்த திருஅம் பலக்கூத்துள்
அம்மலர்க் பொற்பாதத் தன்புவைப் பார்க்கே.

"சிவனடியார்களே, திருஅம்பலத்தில் கூத்தியற்றும் அம்பலக்கூத்தின் போது தோன்றும் அழகிய பொன் போன்ற திருவடித் தாமரை மீது நீங்காத பேரன்பு கொண்டவர்களுக்கு உயிர்ப்புப் புலனாகும். கிடைக்கப் பெறாமையின் பேரச்சம் கொள்ளும் அச்சம் தோன்றும். தானே எழுந்து விழும். மெய்சோரும். திருவைந்தெழுத்தே திருச்சிற்றம்பலத்திற்குக் கொண்டு சேர்க்கும். இவை யாவும் கண்ணப்பநாயனாரின் வரலாற்றில் நடந்தவை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2699. **தேட்டறுஞ் சிந்தை திகைப்பறும் பிண்டத்துள்**
வாட்டறுங் கால்புந்தி யாகி வரும்புலன்
ஒட்டறு மாசை அறுமுளத் தானந்த
நாட்ட முறுக்குறு நாடகங் காணவே.

"சிவனடியார்களே, அம்பலவாணரின் பொற்பதிக் கூத்தினை அன்புடன் கண்டு வழிபட்டு இன்புறுபவர்களுக்கு மனத்திகைப்பு அகலும். உடம்பில் ஏற்படும் தளர்வு வாட்டம் என்பன நீங்கும். உயிர்ப்பும் இறுப்பும் புத்தியின் வசப்படும். புலன்கள் ஒட்ட அறும். வேட்கையும் அவாவும் அறும். ஆருயிரின் உள்ளத்துணர்வில் திருவடிப் பேரின்ப நாட்டம் முறுகி வளரும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2700. **காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்**
கூளியோ டாடிக் குவலயத் தேயாடி
நீடிய நீர்தீக்கால் நீள்வா னிடையாடி
நாளுற அம்பலத் தேயாடும் நாதனே.

"சிவனடியார்களே, சிவபெருமான் காளியை அடக்குவதற்காகக் காளியுடன் ஆடி அருள்கின்றனன். பொன் மலையான மேருமலையில் ஆடி அருள்கின்றனர். பேய்க் கூட்டங்களுடன் ஆடி அருள்கின்றனர். ஐம்பெரும் பூதங்களிடமாகவும் நின்று ஆடியருள்கின்றனர். தில்லைச் சிற்றம்பலத்திலும் சிறப்பாக ஆடியருள்கின்றனர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2701. **மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை**
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் திலைவனத் தண்மா மலயத்தூ
டேறுஞ் சுழுனை இவைசிவ பூமியே.

"சிவனடியார்களே, பொன்மலை அண்டத்தின் நடுவாக உள்ளது. உடம்பில் நடுநாடி இதுபோல உள்ளது. நடுநாடியைக் கழுகுமுனை என்பர். மேருவை நிலத்தின் நடுக்கோடு என்பர். நடுக்கோட்டின் வடக்கிலும் தெற்கிலும் உள்ள கோடுகளை

வழிக்கோடுகள் என்பர். இடப்பால் நாடியை இடைகலை எனவும், வலப்பால் நாடியை பிங்கலை என்றும் சொல்வர். வானவெளியின் நடுக்கோட்டின் நிலையினை இலங்கை என்பர். இவ் இலங்கைக் கோட்டுடன் தில்லைச் சிற்றம்பலக் கோடும் பொருந்தியுள்ளது. தில்லைக்கும் பொதிகை மலைக்கும் ஊடாகச் செல்லும் நாடி நடுநாடியாகும். இவையே தென்நாட்டுச் சிவபூமியாகும். இம்முறை சிறப்பு முறையாகும். பொது முறையால் நோக்கினால் இலங்கைக்கும் பொன் மலைக்கும் நடுவே உள்ளது தில்லை. இவ்விரண்டிற்கும் இடைப்பட்டது சிவபூமியாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2702. பூதல மேருப் புறத்தான தெக்கணம்
ஓதும் இடையிங் கலையொண் சுழுனையாம்
பாதி மதியோன் பயில்திரு வம்பலம்
ஏதமில் பூதாண்டத் தெல்லையி னீறன்றே.

"சிவனடியார்களே, பூதமேரு எனப்படும் பொன்மலையும் தெக்கனைப் புறத்தான இலங்கையும் முறையே இடகலை பிங்கலை எனப்படும். இவ்விரண்டிற்கும் நடுவே காணப்படும் திருத்தில்லை நடுநாடியாகிய சுழுனையாகும். பாதி மதியாகிய ஆருயிர் ஐந்தெழுத்தின் நடுவே நிற்கும் யகரத்தால் பெறப்படும் ஆவியேயாகும். அதனையே சிவபெருமான் சூடியருள்கிறான். பாதி மதியைச் சூடியுள்ள சிவபெருமான் தில்லையிலே இடையறாது திருக்கூத்தினைச் செய்தருள்கிறான். நிலவுலக அண்டத்து எல்லை திருத்தில்லையாகும். சிவபெருமானின் திருத்தலை அன்பியலாகும். திருவடி அருளியலாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

பொற்றில்லைக் கூத்து

2703. அண்டங்கள் ஓரேழும் அம்பொற் பதியாகப்
பண்டையா காசங்கள் ஐந்தும் பதியாகத்
தொண்டினிற் சத்தி திருஅம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானன்றே.

"சிவனடியார்களே, எழு வகையான அண்டங்களும் சிவபெருமானார் தழுவும் அழகிய ஊராகவும் அவற்றின் உறுப்பாகவும் காணப்படும். ஐம்பெரும் பூதங்களிலும் விரவி நிற்கும் பானங்கள் ஐந்தும் பதியாகவும் கொண்டு அவன் புறத்துத் திருக்கூத்தியற்றுகின்றனன். அதுபோல அவன் ஆருயிரின் கண் திருவருளாற்றலை அம்பலமாகக் கொண்டு திருக்கூத்தியற்றுகின்றனன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2704. குரானந்த ரேகையாய்க் கூர்ந்த குணமாஞ்
சிரானந்தம் பூரித்துத் தென்திசை சேர்ந்து
புரானந்த போகனாய்ப் பூவையுந் தானும்
நிரானந்த மாகி நிருத்தஞ்செய் தானே.

"சிவனடியார்களே, சிவகுருவால் அருளப்பட்ட இன்பநெறியாய், அந் நெறியொழுக்கத்தால் மேம்பட்ட சிவபெருமானின் எண்குணங்களும் நிறைந்து நிற்றல் வேண்டும். அது மாதவம் செய்து தென்திசையைச் சேர்ந்தவர்களுக்கே கைகூடும். அன்பே வடிவாக ஆருயிர்களுக்குப் போகத்தைப் புரிதற் பொருட்டு பூப்போன்ற திருமேனியை உடைய திருவருளம்மையும் தானுமாகப் புணர்ந்து நின்று திருக்கூத்தியற்றி அருள்கின்றனன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2705. ஆதி பரன்ஆட அங்கைக் கனலாட
ஓதுஞ் சடையாட உன்மத்த முற்றாடப்
பாதி மதியாடப் பாரண்ட மீதாட
நாதமோ டாடினான் நாதாந்த நட்டமே.

"சிவனடியார்களே, சிவபெருமான் ஆட நினைத்ததும் அவனது அங்கையில் உள்ள அனல் ஆடிற்று. அத் திருச்சபையில் சூடியிருந்த ஊமத்தமலரும் ஆடிற்று. திருச்சபையில் வீற்றிருக்கும் பாதி மதியும் ஆடிற்று. நில அண்டங்களும் ஆடின. அருஞ்சைவர் கொள்ளும் முப்பத்தாறாம் மெய்யாகிய நாதத்தின் கண் திருவருளாற்றலுடன் சேர்ந்து ஆடினன். இதை நாதாந்த நடனம் என்பர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2706. கும்பிட அம்பலத் தாடிய கோனடம்
அம்பரன் ஆடும் அகிலாண்ட நட்டமாஞ்
செம்பொரு ளாகுஞ் சிவலோகஞ் சேர்ந்துற்றால்
உம்பர மோனஞா னாந்தத்தில் உண்மையே.

"சிவனடியார்களே, அனைத்துயிர்களும் அன்புடன் வணங்கி இன்பமடையச் சிவபெருமான் ஆடும் திருநடனம் திருச்சிற்றம்பலத்தில் நடைபெறும் அகிலாண்டத் திருக்கூத்தாகும். திருச்சிற்றமபலம இவ்வுலகமாகும். அதனைச் சார்ந்தார் சிவ உலகத்தவராவர். அங்கு புரியும் திருக்கூத்தே மேலான ஞானத்தின் உண்மைக் கூத்தாகும். திருத்தில்லையே திருவடிப்பேற்றைச் செயன்முறையில் எளிதில் கூட்டுவிக்கும் திருவூராகும். திருவாரூரில் பிறப்பதும் திருக்காசியில் இறப்பதும் மேன்மை உடையதாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2707. மேதினி மூவேழ் மிகுமண்டம் ஓரேழு
சாதக மாகுஞ் சமயங்கள் நூற்றெட்டு
நாதமோ டந்த நடானந்த நாற்பதப்
பாதியோ டாடிப் பரனிரு பாதமே.

"சிவனடியார்களே, நாதத்தையும் நாத அந்தத்தையும் மேற்கொண்டு சீலம் நோன்பு செறிவு அறிவு என்றும் நானிலையும் நாற்பாதம் எனப்படும். அதனை அருள்பவர்

திருவருளம்மையாவள். அவள் சிவனின் சரி பாதியானவள். அவளுடன் சிவபெருமான் திருக்கூத்தாடுகின்றனன். அவனது திருவடியே மூவேழ் உலகினையும் ஆட்டுவிப்பதாகும். ஏழு அண்டங்களையும் ஆட்டுவிப்பதும் அவையே. கைக்கொள்பவர்களின் தகுதிக்கேற்பப் படிமுறை போன்று விரிந்த நெறிகள் நூற்றெட்டையும் அவனது திருவடியே ஆட்டுவிக்கின்றன" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2708. இடையிங் கலையிம வானோ டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை
கடவுந் திலைவனங் கைகண்ட மூலம்
படர்வொன்றி யென்னும் பரமாம் பரமன்றே.

"சிவனடியார்களே, அகத்தே காணப்படும் இடகலை, பிங்கலை இரண்டும் புறத்தே முறையே பொன்மலை யாவும் இலங்கையாகவும் கொள்ளப்படும். நடுநாடியாகிய சுழுனை தில்லைவனம் எனப்படும். நடுநாடியே எல்லாவற்றையும் நடத்துகின்றது. அதுபோலப் புறத்துத் தில்லைவனம் பொன்மலை முதல் இலங்கை ஈறாகக் கொள்ளப்படும் நிலம் அனைத்தையும் நடு நின்று நடத்துவிக்கின்றது. அதனால் கடவும் தில்லைவனம் கைகண்ட மூலமாகும். எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பவன் படர்வொன்றியாவான். அவனே பரமாம் பரமுமாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2709. ஈறான கன்னி குமரியே காவிரி
வேறா நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழுள்
பேறான வேதா கமமே பிறத்தலான்
மாறாத தென்திசை வையகஞ் சுத்தமே.

"சிவனடியார்களே, தமிழகத்தின் தெற்கு எல்லை கன்னியாகுமாரியாகும். வடக்கு எல்லை பொன்மலையாகும். இதனகத்தே சிறப்பாக ஓடும் தீர்த்தங்கள் ஒன்பதாகும். அவை முறையே காவிரி, யமுனை, கங்கை, சரசுவதி, பொற்றாமரை, புட்கரணி, கோதாவரி, குமரி, தாமிரபரணி என்பனவாகும். இங்கு ஏழு மலைகள் உள்ளன. அவை முறையே கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், எமகூடம், நீலகரி என்பனவாகும். இவற்றிற்கிடையே தென்திசையில் உள்ள நாட்டிலே வேதமும், ஆகமமும் தொன்மைக்காலத்திலே தோன்றின. அங்கு வாழ்ந்த தூயோர் உயிர்க்கொலை செய்து புலாலை உண்ணாது தமிழ்நெறிப்படி வாழ்ந்து முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானைத் தமிழிற் தொழுது வாழ்ந்தனர். அதனால் தென்திசைத், தமிழகம் என்னும் பெயரைப் பெற்றது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2710. நாதத் தினிலாடி நாற்பதத் தேயாடி
வேதத்தி லாடித் தழலந்த [1] மீதாடி
போதத்தி லாடிப் புவன முழுதாடுந்
தீதற்ற தேவாதி தேவர் பிரானன்றே.

"சிவனடியார்களே, இயற்கை உண்மை அறிவு இன்பப் பெருமான் தேவாதி தேவர்களின் முதல்வன் சிவபெருமானானவர். அவன் திருவருளால் நாதத்தில் நின்று ஆடி அருள்கிறான். சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நாற்பாதத்தினும் ஆடியருள்கின்றான். வேதத்திலும் ஆடியருள்கின்றான். சிவ வேள்வித் தழலிலும் ஆடியருள்கின்றான். சிவஞான போதத்தைத்தரும் துணைநூலாகிய தமிழ் ஆகமத்துள்ளும் ஆடியருள்கின்றான். இம் முறையாக இருநூற்றிருபத்து நான்கு புவனங்களிலும் ஆடியருள்கின்றான். அவன் முழுமுதற் சிவபெருமானாவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2711. **தேவரோ டாடித் திருவம்பலத் தாடி**
மூவரோ டாடி முனிசனத் தோடாடிப்
பாவினுள் ஆடிப் பராசத் தியிலாடிக்
கோலினுள் ஆடிமுங் கூத்தப் பிரானன்றே.

"சிவனடியார்களே, சிவபெருமான் தேவர்களோடும், ஆடியருள்கின்றான். அத்துடன் திருவம்பலத்திலும் ஆடியருள்கின்றான். முத்தொழில்களைச் செய்யும் அயன், அரி, அரன் என்னும் மூவருடனும் ஆடியருள்கின்றான். செந்தமிழ்த் திருமுறைத் திருப்பாட்டுக்களுடனும் ஆடியருள்கின்றான். திருமுறைப்பாவின் செழும்பொருளாய் விளங்கியருள்பவள் திருவருளம்மை அவளுடனும் ஆடியருள்கின்றான். கோ என்று சொல்லப்படும் ஆருயிரின் கண்ணும் ஆடியருள்கின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2712. **ஆறு [2]முகத்தில் அதிபதி நானென்றுங்**
கூறு சமயக் குருபரன் நானென்றுந்
தேறினர் தெற்குத் திருஅம்ப லத்துளே
வேறின்றி யண்ணல் விளங்கிநின் றானன்றே.

"சிவனடியார்களே, ஆறுதிருமுகங்களை உடைய முழுமுதல்வனான சிவபெருமானே அம்பலவாணனாவான். ஐந்து திருமுகங்களும் ஐந்து தொழிலுக்குரியன. மறைவாகக் கீழ்நோக்கிய திருமுகம் ஒன்றுண்டு. அதையும் சேர்த்தால் சிவபெருமானுக்கு ஆறு திருமுகங்களாகும். ஆறாவது திருமுகம் சிவகுரு. ஆறு திருமுகக் குறிப்பு ஆறு ஆதாரங்களைக் குறிக்கும் உண்மையாகும். அவ்வுரு குமரகுருபரன் என இருவகை வழக்கிலும் வழங்கப்படுகிறது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2713. **அம்பலம் ஆடரங் காக அதன்மீதே**
எம்பரன் ஆடும் இருதாளி னீரொளி
உம்பர மாம்ஐந்து நாதத்து ரேகையுள்
தம்பத மாய்நின்று தான்வந் தருளுமே.

"சிவனடியார்களே, திருச்சிற்றம்பலத்தை ஆடும் அரங்கமாகக் கொண்டு சிவபெருமான் திருக்கூத்தை ஆடுகிறான். அவன் தனது இரண்டு திருவடிகளிலும் இருபெரும் அறிவொளி தோன்றுமாறு திருக்கூத்தியற்றுகிறான். இருபெரும் ஒளி நூலுணர்வும் நுண்ணுணர்வுமாகும். மேலோங்கி ஒளிரும் ஐவகை ஓசையின் கோட்டின்கண் நின்று திருக்கூத்தியற்றுகின்றான். அதைவிட அவ்வோசைகள் திகழும் தூமாயை-யினையே தன் நேர்நிலையாகக் கொண்டு எழுந்தருளி வந்து அருள்கின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2714. ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமுங்
கூடிய கோலங் குருபரன் கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறன்றே.

"சிவனடியார்களே, திருக்கூத்துப் புரியும் திருவடியும், அத்திருவடியில் இருந்து ஒலிக்கும் சிலம்பொலியும், அவ்வொலியின் விரிவாகக் காணப்படும் திருமுறைத் திருப்பாட்டுக்களும், அத் திருப்பாட்டுக்களின் மறைப் பொருளாய் விளங்கும் பல வகையான திருநடனங்களும் சிவபெருமான் திருவருளால் புரிந்தருளுகின்றனன். அதன்பொருட்டுக் கொண்டருளும் திருக்கோலங்களும் பலவாகும். அத் திருக்கோலங்களைக் கொண்டு வருபவன் குருபரன். அவ்வாறு வருவதும் மெய்யுணர்வைப் பெற்றவர்கள் கொண்டாடுதற் பொருட்டும், உய்தற் பொருட்டுமேயாம். அவனை அடியேன் திருவருளால் உணர்வின் உள்ளே தேடிக் கண்டு கொண்டேன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2715. இருதயந் தன்னில் எழுந்த பிராணன்
கரசர ணாதி கலக்கும் படியே
அரதன மன்றினின் மாணிக்கக் கூத்தன்
குரவனாய் எங்கணுங் கூத்துகந் தானே.

"சிவனடியார்களே, மாணிக்கக்கூத்தன் என்று சொல்லப்படும் சிவபெருமான் திருவாலங்காட்டில் உள்ள மணிமண்டபத்தில் தனியாகப் பெருங்கூத்து ஆடுபவன். மணிமண்டபம் ஐவகை மன்றங்களிலும், முதன்மை வாய்ந்தது. ஏனைய நான்கு மன்றங்களும் பொன், வெள்ளி, செம்பு, ஓவியம் எனப்படும் இவ்வைந்து மன்றங்களும் சிவயநம என்னும் திருவைந்தெழுத்தினைக் குறிப்பதாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

அற்புதக்கூத்து

2716. குருவுரு வன்றிக் குனிக்கும் உருவம்
அருவுரு வாவதும் அந்த அருவே
திரிபுரை யாகித் திகழ்தரு வாளும்

உருவரு வாகும் உமையவள் தானே.

"சிவனடியார்களே, குருவின் திருவுருவையல்லாமல் இடையறாது நினைத்து இன்புறும் திருவுரு வேறொன்றும் இல்லை. அருமை வாய்ந்த கட்புலனாகாத வடிவம் குருவின் வடிவமாகும். திரிபுரை என்னும் திருவருள் திகழ்ந்து விளங்குவதும் அக்குருவடிவிலே தான். உருவமாகவும், அருவமாகவும் உற்று விளங்குபவள் உமையாவாள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2717. **திருவழி யாவது சிற்றம் பலத்தே**
குருவடி வுள்ளாக் குனிக்கும் உருவே
உருவரு வாவது முற்றுணர்ந் தோர்க்கு
அருள்வழி யாவதும் அவ்வழி தானே.

"சிவனடியார்களே, சிவபெருமானின் திருவடியை அடைய இலகுவான வழி நன்னெறி நான்மையாகும். அதுவே சிற்றம்பலத் திருக்கூத்துக்கும் சிவகுருவினை இடையறாது எண்ணுவார்க்கு அவ்வுருவே சிற்றம்பலத்தின் கூத்தாகும். திருவுரு என்பது தெள்ளத் தெளிவாகப் புலனாகும். சிவகுருவின் திருவுருகே. அவ்வுருவாய் நடிக்கும் அம்பலவாணரின் அருளாகும். இவ்வுண்மையினை அருளால் உணர்ந்தோர்க்குத் திருவருள் வந்து சேர்வது அத் திருச்சிற்றம்பலத்தின் வழியேயாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2718. **நீருஞ் சிரசிடைப் பன்னிரண் டங்குலம்**
ஓடும் உயிரெழுந் தோங்கி யுதித்திட
நாடுமின் நாதாந்த நம்பெரு மான்உகந்
தாடும் இடந்திரு அம்பலத் தானன்றே.

"சிவனடியார்களே, சிரசின் மீது உச்சிக்கு மேல் பன்னிரண்டு விரல் அளவான உயிர்ப்பு எழுத்து ஓடும். அதை யாவரும் நாடுங்கள். நாத முடிவாகிய சிவபெருமான் மிக்க மகிழ்வுடன் கூத்தாடும் இடம் அதுவாகும். அதுவே திருவம்பலம் என்று சொல்லப்படும் தில்லைத் திருச்சிற்றம்பலமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2719. **வளிமேக மின்வில்லு வானக வோசை**
தெளிய விசும்பில் திகழ்தரு வாறுபோல்
களியொளி யாறுங் கலந்துடன் வேறாய்
ஒளியுரு வாகி ஒளித்துநின் றானே.

"சிவனடியார்களே, வானவெளியில் காற்று வீசுகிறது. ஆனால் மேகம் தவழ்கின்றது. மின்னல் மின்னுகின்றது. வானவில் தோன்றுகின்றது. ஓசை எழுகின்றது. இவற்றிற்கெல்லாம் வானம் இடங்கொடுத்த போதும் அது இவற்றால் பாதிக்கப்பட மாட்டாது. ஒவ்வொன்றும் வேறுவேறாகத் தனித்தனியே நடக்கிறது. அதுபோலச் சிவபெருமான் ஒளிகள் ஆறுடனும் கலந்து அவற்றிற்கு ஒளி கொடுக்கிறான். அவ்வாறு

கொடுத்தபோதும் தனிப்பேரொளி வடிவாய் மறைந்து நின்றருள்கின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2720. தீமுதல் ஐந்துத் திசையெட்டுங் கீழ்மேலும்
ஆயும் அறிவினுக் கப்புறம் ஆனந்தம்
மாயைமா மாயை கடந்துநின் றார்காண
நாயகன் நின்று நடஞ்செய்யும் மாறன்றே.

"சிவனடியார்களே, ஐம்பெரும் பூதங்களில் ஒளி உருவாய் நடுவில் நின்று ஒளி தருவது தீ. அத்தீயின் ஒளியால் புற இருள் நீங்கியது. வெப்பம் வெளிவருகிறது. அதுபோலச் சிவபெருமான் அறிவொளியையும், அருட்பதத்தையும் புரிந்தருளுகிறான். அம்முறையால் தீ அவனுக்கு ஒரு புடையெடுப்பாகும். ஐம்பூதங்களும், திசைகள் எட்டும் கீழும் மேலும் ஆகிய பத்துப்புலனையும் நிலைக்களனாகக் கொண்டு ஆருயிரின் அறிவுக்கு அப்பால் காணப்படுவது திருவடிப் பேரின்பம். தூவாமாயை தூமாயை என்று சொல்லப்படும் மாயை மாமாயைக் கடந்து நிற்கும் மெய்யுணர்வினர் அறிவுக்கண் கொண்டு காணுமாறு சிவபெருமான் நீங்காது நின்று திருநடனஞ் செய்தருளுகின்றான். இதுவே அம்பலவாணனின் ஆருயிரின் அகத்திடையும், அறிவிடையும் இடையறாது செய்யும் திருவருட் கூத்தாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2721. கூத்தன் கலந்திடுங் கோல்வளை யானொடுங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஆனந்தங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஞானத்துக்
கூத்தனுங் கூத்தியுங் கூத்ததின் மேலன்றே.

"சிவனடியார்களே, கூத்தனாகிய சிவபெருமான் அழகிய புள்ளிகளையுடைய வளையல்களை அணிந்த, திருவருளம்மையுடன் கலந்து ஆருயிர்களுக்கு அளவில்லாத ஆனந்தத்தைக் கொடுக்கின்றான். அவனது திருவருளால் குற்றமற்ற பேரின்பம் பெருகும். திருவடியுணாவு என்ற சிவஞான விளக்கம் உண்டாகும். கூத்தனும் கூத்தியுமாகிய சிவனும் சிவையும் திருக்கூத்தின்மேல் திருநோக்கம் கொண்டருள்கின்றனர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2722. இடங்கொண்ட சத்தியும் எந்தை பிரானும்
நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்
படங்கொடு நின்றஇப் பல்லுயிர்க் கெல்லாம்
அடங்கலுந் தாமாய்நின் றாடுகின் றாரே.

"சிவனடியார்களே, சிவபெருமானின் இடப்பாகத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டவள் திருவருளம்மையாகிய சக்தி. அவளை ஒருபோதும் விட்டுப் பிரியாதவன் சிவபெருமான். படம்போல் மறைப்பினைச் செய்யும் ஆணவ முனைப்புடைய பல்வேறு

உயிர்களுக்குப் பேரறிவும் பேராற்றலும் பேரன்பும் காட்டி அதை நீக்குவதற்காகத் தாமாகதின்று ஆடியருள்கின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2723. சக்தி வடிவு சகல ஆனந்தமும்
ஒத்தஆ னந்தம் உமையவன் மேனியாஞ்
சத்தி வடிவு சகளத் தெழுந்திரண்டு
ஒத்தஆ னந்தம் ஒருநட மாகுமே.

"சிவனடியார்களே, எப்பொருளால் எவ்விடத்தும் எவ்வகை இன்பம் காணப்பட்டாலும், அவ்வின்பம் அனைத்தும் சக்தியின் அருளால் நடைபெற்றவையே. அதனால் அனைத்து இனங்பங்களும் அருளாற்றலின் திருவருளாகும். உண்மை, அறிவு, இன்பம் என்ற மூன்றுள் உடமையாகிய உலகமும், உலகியற் பொருட்களும், அவற்றின் முதலாகிய மாயையும் உண்மை ஒனறு மட்டும் உள்ளன. அடிமையாகிய ஆருயிர்கள் உண்மையும் அறிவும் உடையன. உடையனாகிய சிவபெருமான் உண்மையும் அறிவும் இன்பமும் உடையவன். அவனது திருவருள் அழியாத பேரின்பத் திருமேனியாகும். சக்தியின் வடிவம் அரிசிமாவைப் போன்றது. அம்மாவால் பல்வேறு உருவங்களைச் செய்வர். அதுபோலத் திருவருளில் இருந்து சிவனின் திருவுள்ளத்திற்குத் தக்கவாறு சிறந்து தோன்றும். அதனால் சக்தியின் தோற்றம் சகளமாகிய வடிவ நிலைக்களத்துத் தோன்றி எழும். எழுந்த சிவனும் சிவையுமாகிய இரண்டும் ஒத்துத்திரண்டு ஆருயிர்களுக்குப் பேரின்பத்தினை ஊட்டுவதாகிய உயர்ந்த நிலை திருநடனமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2724. நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடஞ்
சிற்றம் பலமென்று தேர்ந்துகொண் டேனன்றே.

"சிவனடியார்களே, புருவமத்தியில் காணப்படும் இடைவெளி தில்லைத் திருச்சிற்றம்பலமாகும். சொல்லச் சொல்ல உருப்பெற்று ஒளிவிடும் மந்திரம் சிவசிவ என்னும் செந்தமிழ்த் திருமறையாகும். பற்றற்றவருக்குப் பற்றாக விளங்கும் சிவபெருமானே பரமன். அவனின் இருப்பிடம், புருவ நடுவாகிய தில்லைத் திருச்சிற்றம்பலம் என்று திருவருளால் தெரிந்து கொண்டேன் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2725. அண்டங்கள் தத்துவ மாகிச் சதாசிவந்
தண்டினிற் சாத்தவி சாம்பவி யாதனந்
தெண்டினில் ஏழுஞ் சிவாசன மாகவே
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானன்றே.

"சிவனடியார்களே, அண்டங்களும் அவற்றின் அடக்கமாகிய தத்துவங்கள் ஆகும், அருளோன், ஆண்டான், அரன், அரி, அயன் என்னும் ஐம்பெரும் நிலைகளும், சக்தியின் வடிவாயுள்ள சாத்தவி, சாம்பவி என்னும் இரண்டும் உரிய ஏழுநிலைகளும், சிவனின் இருக்கைகளாகும். அவ் ஏழு நிலைகளையும் இருக்கையாகக் கொண்டு பரஞ்சோதியான சிவன் திருக்கூத்தியற்றுகின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2726. மன்று நிறைந்த விளக்கொளி மாமலர்
நன்றிது தானிதழ் நாலொடு நூறவை
சென்றது தானொரு பத்திரு நூறுள
நின்றது தானெடு மண்டல மாகுமே.

"சிவனடியார்களே, தில்லைத் திருச்சிற்றம்பலம் நிறைந்த விளக்கொளி போன்று கதிர்களை வீசும் பெருமலராகும். இது நன்மைகளைத் தரும் மென்மையான மலராகும். இதன் இதழ்கள் நூற்று நான்கு என்றும், இருநூற்றுப் பத்து என்றும் கூறப்படுகிறது. இம்மலர்கள் ஆறாதாரத்துள் காணப்படும். இவை அனைத்தும் சிவபெருமான் நின்றருளும் நெடு மண்டலங்களாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2727. அண்டம் எழுகோடி பிண்டம் எழுகோடி
தெண்டிரை சூழ்ந்த திசைகள் எழுகோடி
எண்டிசை சூழ்ந்த இலிங்கம் எழுகோடி
அண்டன் நடஞ்செயும் ஆலயந் தானன்றே.

"சிவனடியார்களே, எழுகோடி அண்டங்களும், அவை போன்று ஏழுகோடிப் பிண்டங்களும், தெளிந்த அலையை உடைய கடலால் சூழப்பட்ட திசைகளும், ஏழுகோடித் தீவுகளும், எட்டுத் திசைகளிலும் காணப்படும் அளவில்லாத சிவலிங்கங்கங்களும் ஏழு கோடியாகும். இவ்விடயங்கள் அனைத்தும் அண்டனாகிய சிவபெருமான் திருநடனம் புரியும் திருக்கோவில்களாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2728. ஆகாச மாமுட வங்கார் முயலகன்
ஏகாச மாந்திசை வெட்டுந் திருக்கைகள்
மோகாய முக்கண்கள் மூன்றொளி தானாக
மாகாய மன்றுள் நடஞ்செய்கின் றானன்றே.

"சிவனடியார்களே, வெளியாம் உடலும், காலின்கீழ் கரிய நிறமுடைய முயலகனும், மேலாடை போன்று காணப்படும் எட்டுத்திசைகளையும் கைகளாகக் கொண்டு மிக்க வேட்கையுடைய ஞாயிறு, திங்கள், தீ ஆகிய முத்தீக்களை மூன்று கண்களாகக் கொண்டு திகழ்பவன் சிவன். அவன் அறிவுப் பெருவெளியில் அறிவுப் பெருநடனம் செய்தருளுகின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2729. அம்பல மாவ தகில சராசரம்
அம்பல மாவது ஆதிப் பிரானடி
அம்பல மாவது அப்புத்தீ மண்டலம்
அம்பல மாவது அஞ்செழுத் தாகுமே.

"சிவனடியார்களே, அனைத்துலகிலும் காணப்படும் இலங்குதிணை, நிலைத்திணைப் பொருட்கள் அனைத்தும் சிவபெருமான் திருக்கூத்தியற்றும் திருவம்பலமாகும். ஆதியாகிய நடப்பாற்றலை உடைய நயன் திருவடியும் அம்பலமாகும். நீர்மண்டலம், தீமண்டலம் ஆகியனவும் அம்பலமாகும். மெய்மையான அம்பலம் என்பது செந்தமிழ்த் திருவைந்தெழுத்தேயாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2730. கூடிய திணமுழ வங்குழ வோமென்று
ஆடிய மானுடர் ஆதிப் பிரானென்ன
நாடிய நற்கண மாரம்பல் பூதங்கள்
பாடிய வாறொரு பாண்டரங் காகுமே .

"சிவனடியார்களே, சிவபெருமான் ஆடிய திருக்கூத்தினைக் காணும் பேற்றைத் திருவருளால் பெற்ற மானிடர் முழவின் ஓசையையும், புல்லாங்குழலின் ஓசையையும் பொலிவு பெறக் கேட்டனர். அவை ஓம் என்று ஒலிக்கும் நுண்மையையும் உணர்ந்தனர். அதனால் சிவனை ஆதிப்பிரான் என்று போற்றினர். கணங்களும், பல்வேறு வகையான பூதகணங்களும் அவன் ஆடும் கூத்தினைக்கண்டு மகிழ்வுடன் பாடியாடித் தொழுதனர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2731. அண்டத்தில் தேவர்கள் அப்பாலைத் தேவர்கள்
தெண்டிரை சூழ்புவிக் குள்ளுள்ள தேவர்கள்
புண்டரி கப்பதப் பொன்னம் பலக்கூத்துக்
கண்டுசே வித்துக் கதிபெறு வார்களே.

"சிவனடியார்களே, வெவ்வேறு அண்டங்களிலுள்ள தேவர்களும், புற அண்டங்களிலுள்ள தேவர்களும், கடலால் சூழப்பட்ட உலகங்களிலுள்ள தேவர்களும் செந்தாமரையை ஒத்த திருவடியைத் தூக்கிப் பொன்னம்பலத்தில் சிவபெருமான் புரியும் திருக்கூத்தினைக் கண்டு தொழுது வழிபட்டனர். அதனால் அவர்கள் பெருநிலையினை எய்தினர். இன்னும் வழிபடுதலால் மேல்நிலையை அடைவார்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2732. புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோற்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
துளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்குனா னந்தத் தமுதூறும் உள்ளத்தே.

"சிவனடியார்களே, புளியினைக் கண்டவர்களுக்கு நாக்கில் நீர் சுரப்பது இயல்பு. இது காட்சியினால் மீட்சியில் மாட்சியின்பம் உண்டென்பதனை உணர்த்துகிறது. இதுபோலத் தில்லைத் திருச்சிற்றம்பலக் கூத்தனான சிவபெருமானைக் கண்டவர்களுக்கு மெய்சிலிர்த்துக் கண்களால் இன்பக் கண்ணீர் முத்து முத்தாக வழியும். நெஞ்சமானது அன்பின் மேலீட்டால் தழலைக் கண்ட வெண்ணெய் போன்று உருகி உள்ளத்தின் கண் உணர்வொளிக்குள் வற்றாத பேரின்ப அமுது ஊறும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2733. திண்டாடி வீழ்கை சிவானந்த மாவது
உண்டார்க் குணவுண்டால் உன்மத்தஞ் சித்திக்குங்
கொண்டாடு மன்றுட் குனிக்குந் திருக்கூத்துக்
கண்டார் வருங்குணங் கேட்டார்க்குக் ஒக்குமே.

"சிவனடியார்களே, கொடுமையான துன்பங்களைத் தரும் பிறவிக்கு அஞ்சி பற்றைவிடும் வேட்கையுடன் வரும் மெய்யடியார்க்கு விரும்பித் தங்கும் இடம் சிவானந்தமாகிய திருவடியாகும். அச் சிவானந்த உணர்வின் உணவு என்ற திருவடியை நினைப்பவர்களுக்குச் செயலறுதலாகிய உன்மத்தம் கைகூடும். தில்லைச் சிற்றம்பலத்தில் சிவபெருமான் புரியும் திருநடனத்தைக் கண்டவர்களுக்கு அளவில்லாத பேரின்பம் வந்து சேரும். அதைச் சொல்லக் கேட்டாருக்கும் அதேயளவு பேரின்பம் வந்து சேரும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2734. அங்கி தமருகம் அக்குமா வைபாசம்
அங்குசஞ் சூலங் கபால முடன்ஞானந்
தங்கு பயந்தரு நீல மும்முடன்
மங்கையோர் பாகமாய் மாநட மாடுமே.

"சிவனடியார்களே, சிவபெருமான் திருக்கூத்துப் புரியும்போது கைகளில் வைத்திருக்கும் பொருட்கள் இவை. மழு, உடுக்கு, சிவமணி, கயிறு, தோட்டி, முந்தலை வேல், நான்முகனின் மண்டையோடு என்பனவாகும். அத்துடன் நீலத்திருக்கண்களை உடைய மங்கையான திருவருளம்மையும் கூட நடனமாடுவாள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2735. ஆடல் பதினோ ருறுப்பும் அடைவாகக்
கூடிய பாதஞ் சிலம்புகைக் கொள்துடி
நீடிய பாதம் பராற்பர நேயத்தே
ஆடிய நந்தி புறமகத் தானன்றே.

"சிவனடியார்களே, சிவபெருமான் திருக்கூத்துப் புரியும்போது ஆடலுக்கு வேண்டிய பதினொரு பொருட்களையும் குறைவில்லாது வைத்திருப்பான். திருவடியில் சிலம்பும், திருக்கையில் உடுக்கையும் என்றும் இருந்து ஓம் என்னும் ஒலியினை எழுப்பும் அவன் மேலோர்க்கும் மேலாக இயற்கை உண்மை அறிவு இன்ப வடிவத்தே நின்றுநின்று திருக்கூத்தை அருள்கின்றான். அத்திருக்கூத்துப புறமாகிய

அண்டத்துள்ளும், அகமாகிய உடம்பினுள்ளும் அவனருளால் இடைவிடாது இயற்றப்படுகிறது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2736. ஒன்பதும் ஆட ஒருபதி னாறாட
அன்புறு மார்க்கங்கள் ஆறும் உடனாட
இன்புறும் எழினும் ஏழைம்பத் தாறாட
அன்பது பாடினான் ஆனந்தக் கூத்தன்றே.

"சிவனடியார்களே, சிவம், சக்தி, நாதம், விந்து, சதாசிவன், ஈசன், உருத்திரன், மால், அயன் என்று சொல்லப்படும் சிவபெருமானின் பெருநிலைகள் ஒன்பதும், சிவபெருமான் புகுந்தருளும் திருக்கூத்தால் ஈடுதலாகிய தொழில்நிலையை எய்தும் எட்டுத் திசைகளும், எட்டுத் திருவுருவங்களும் திருக்கூத்தின்போது ஆடும். சமயம் ஆறு வகைப்படும். அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என அவை நான்கு பிரிவுகளைக் கொண்டவை. அதனால் இருபத்து நான்காகும். அவைகளும் ஆகும். உலகங்கள் எட்டும் ஆடும். ஆருயிரின் பிறப்பின் வகைகள் ஏழு அவையும் ஆடும். நாடுகள் ஐம்பத்தாறு அவையும் ஆடும். இவை அனைத்தும் சிவபெருமான் ஆடும் ஆனந்தக் கூத்தினால் நிகழ்வனவாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2737. ஏழினில் ஏழாய் இகழ்ந்தெழுத் தேழதாய்
ஏழினில் ஒன்றாய் இழிந்தமைந் தொன்றாகி
ஏழினிற் சன்மார்க்கம் எங்கள் பரஞ்சோதி
ஊழிசை நாடகத் தேஇசைந் [1]தானன்றே.

"சிவனடியார்களே, பண் ஏழு. அவை குரல், துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி எனப்படும். அவ்வேழும் தனித்தனியாக ஏழு பிரிவுகளை உடையது. அதனால் அவை நாற்பத்தொன்பதாகும். இகழ்ந்தெழுத்து ஆறும், திகழ்ந்தெழுத்து ஒன்றும் ஆக எழுத்துக்கள் ஏழாகும். அவையவன ஆதாரமாகிய நிலைகள் ஆறுக்கும் உரிய எழுத்துக்கள் ஆறு. ஓமொழிப் பிரணவ எழுத்து ஒன்று. மொத்தம் எட்டு. இவ் ஏழு எழுத்துக்களுள் முதன்மையானது ஓமொழியே. அறுவகை நெறியும் நடுவாக உள்ள நன்றிக்கண் தங்கல் சமரச சன்மார்க்கம் இதனை நடுநெறி எனவும் கூறுவர். நடுநெறியினை சமயாதீதம் எனவும் கூறுவர். சமயாதீதமே சித்தாந்த சைவமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2738. மூன்றினில் அஞ்சாகி முந்நூற் றறுபதாய்
மூன்றினில் ஆறாய் முதற்பன்னீர் மூலமாய்
மூன்றினில் அக்க முடிவாகி முந்தியே
மூன்றிலும் ஆடினான் மோகாந்தக் கூத்தாமே.

"சிவனடியார்களே, ஒரு மலம் உடையவர், இரு மலம் உடையவர், மும்மலம் உடையவர் என ஆருயிர்கள் மூவகைப்படும். மும்மலமும் ஆணவம், கன்மம், மாயை எனப்படும். இவை விரியும்போது ஆணவம், கன்மம், மாயை, மாயையாக்கம்

இவற்றைத் தொழிற்படுத்தும் நடப்பாற்றலான திருவருள் என ஐந்தாகும். ஆருயிர்களின் மூச்சு முன்நூற்றறுபதுடன் ஆறு உறழ இரண்டாயிரத்தொரு நூற்றறுபது உயிர்ப்பாகும். பன்னிரண்டு ஆதாரங்களும் வழியாய் அக்கமாகிய ஆன்மாவின் கண்ணும், மூன்று உலகின் கண்ணும், தொன்மையே சிவன் ஆடியருள்கிறான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2739. தாமுடி வானவர் தம்முடி மேலுறை
மாமணி ஈசன் மலரடித் தாளிணை
வாமணி யன்புடை யார்மனத் துள்ளெழுங்
காமணி ஞாலங் கடந்துநின் றானன்றே.

"சிவனடியார்களே, அழகிய மணிகண்டத்தை உடைய சிவபெருமானின் செங்கமலத் தாளிணைகள் பிறந்திறக்கும் தன்மையுள்ள ஆருயிர்கள் இனத்தராய்ப் புண்ணியப் பேற்றினால் வான்வராய்த் திரியும் வானவர் முடிக்கண் உறைந்தருளின. சிவ அன்புடையார் உள்ளத்தில் எழுந்தோங்கி நிற்கும் சிவபெருமான் வேண்டக் கொடுக்கும் கற்பகத்தையும், சிந்தித்துக் கொடுக்கும் சிந்தாமணியையும் ஒரு புடையொப்பாக உள்ளவன். அவன் அம் மெய்யன்பர்களைத் தனதாக்கிக் கொண்டருளினன். அவன் ஞாலங்கடந்து நின்றருளும் மேலோனாயினன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2740. புரிந்தவன் ஆடிற் புவனங்க ளாடுந்
தெரிந்தவன் ஆடும் அளவெங்கள் சிந்தை
புரிந்தவ ணாடிற்பல் பூதங்கள் ஆடும்
னிந்தவன் ஆடல்கண் டின்புற்ற [1]வாறே.

"சிவனடியார்களே, சிவபெருமான் புரிதலாகிய திருவுளங்கொண்டு உலகு தொழிற்பட வேண்டுமென விருப்பங்கொண்டு ஆடுதலைப் புரிபவன். அவன் ஆடப் புவனங்கள் ஆடும். இயற்கை உணர்வும் முற்றும் உணரும் முழு முதல் தன்மையும் இயல்பாக அமைந்த விழுமியோன் சிவன். அதனால் அவன் அனைத்தும் உணர்ந்த அருளாளன். அவன் ஆடுமளவும் எமது சிந்தையும் ஆடும். பூதங்களும் ஆடும். இயற்கையாகவே பேரறிவுப் பேரொளி வண்ணன் சிவபெருமான். அதனால் அவன் எரிந்தவன் எனப்படுகிறான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2741. ஆதி நடஞ்செய்தான் என்பர்கள் ஆதர்கள்
ஆதி நடஞ்செய்கை யாரும் அறிகிலர்
ஆதி நடமாட லாரும் அறிந்தபின்
ஆதி நடமாட லாமருட் [2]சத்தியே.

"சிவனடியார்களே, முதல் பாடலில் சொல்லப்பட்ட உண்மையை உணராத புல்லறிவாளர்கள் சிவபெருமான் தனது நன்மைக்காகத் திருநடனம் புரிகிறான் என்பர். அவன் திருவருளால் புரியும் உண்மையான செய்கையினை அவனருளில்லாத எவரும் அறியமாட்டார்கள். அவனது திருவிளையாடல்களை அவனருளால் அறியும் பேறு

பெற்றபின் அவ் ஆடல் அருட்சக்தியினால் நிகழ்கிறது என்னும் உண்மையையும் அதுவும் ஆருயிர்களின் உய்யும் பொருட்டு என்றும் நன்மையினையும் கண்டு புகழ்வர். அத்துடன் தாமும் திருவருள் வண்ணமாய்த் திகழ்வர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2742. ஒன்பதோ டொன்பதாம் உற்ற இருபதத்து
அன்புறு கோணம் அசிபதத் தாடிடத்
துன்புறு சத்தியுள் தோன்றிநிள் றாடவே
அன்புறு எந்தைநின் றாடலுற் றானன்றே.

"சிவனடியார்களே, ஆருயிர்களுக்கு அமைந்த நுண்ணுடம்பு புரியட்டம் எனப்படும். அது புலனாகிய தன்மாத்திரை ஐந்தும், மனம், எழுச்சி, இறுப்பு என்னும் மூன்றும் கூடிய எட்டினாலும் ஆனது. அவ் உடலே பிறக்கும் எவ்வுயிர்க்கும் என்றும் மாறாத பிறப்புடல் ஆகும். அவ்வுடலும் ஐம்போர்வையும் பொருந்தியவிடத்து அமைந்து விளங்கும் ஆள்நிலை ஒன்றும் கூட்டி மெய் ஒன்பதாகும். அவ் ஒன்பது வகையான பின்னும் ஒன்பது வகைப் பொதுமையும், தனிமையும் இவற்றைப் பொதுவும் சிறப்பும் என்று கூறுவர். சமட்டி வியட்டி எனினும் பொருந்தும் பருவுடலுடன் பொருந்தும். பருவுடலுடன் கூடித் தொழிற்படுநிலை தனிமை அல்லது இருமொழிக்கண்ணும், அன்பான இரண்டும் விட்டு நீங்காது ஒட்டி ஓங்குவது தூங்குவது என்னும் கூட்டத்தினைப் புலப்படுத்தும் ஆருயிரும் பேருயிரும் ஓர் உயிராய்ச் சேர்ந்து புணர்ந்து தீர்வரிய இன்பத்தில் திளைத்தல் தேனினை உண்பவன் தேனும் நாவும் தானும் ஒன்றுகூடியவிடத்து ஏற்படும் இனிய நுகர்வு இதற்கு ஒப்பாகும். ஆருயிர்களின் நிலைகண்டு துன்புறும் நடப்பாற்றலாகிய ஆதி சக்தியினுள் நின்று ஆடியருள்வள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2743. தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தன்றே.

"சிவனடியார்களே, அவன் ஆட அனைத்தும் ஆடுகின்றன. மெய்களாகிய தத்துவங்கள் ஆடின. அவைகளுடன் சேர்ந்து அருளோனாகிய சதாசிவனும் ஆடினான். சிவனாரின் சித்தமான திருவுள்ளமும் ஆடிற்று. சக்தியும் அடினாள். இயங்குதிணைப் பொருட்களும், நிலத்திணைப் பொருட்களும் ஆடின. மறைகளும் ஆடின. யாவும் ஆட அத்தனாகிய சிவபொருமான் பேரின்பப் பெருங்கூத்தாடினான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2744. இருவருங் காண எழில்அம் பலத்தே
உருவோ டருவோ டுருபர ரூபமாய்த்
திருவருட் சத்திக்குள் சித்தனா னந்தன்

அருளுரு வாகநின் றாடலுற் றானே.

"சிவனடியார்களே, பதஞ்சலி முனிவரும், புலிக்கால் முனிவரும் காணச் சிவபெருமான் அழகிய பொன்னம்பலத்தில் திருக்கூத்தாடினான். அதனால் பாத அஞ்சலியார் பதஞ்சலியார் என்று அழைக்கப்பட்டார். இது சிவபெருமானின் திருவடியை வணங்குபவர் என்பதைக் குறிக்கும். மெய்யடியார்களின் மெய்யுணர்வுக்கேற்றவாறு விளக்கமுற்று அருளும் திருவருளாற்றலின் வண்ணமானது அத்திருவருளை உருவாய் அருவாய் உருவாய் வருவாய் விளங்கி நிற்பன். சொல்லின் வரிவடிவம் கட்புலனாகும் உருவமாகும். சொல்லின் ஒலி வடிவம் செவிக்குப் புலனாகும் அருவடிவமாகும். சொல்லின் உள்ளப்பதிவு உருவமாகும். திருவருளும் இம் முத்திறப் பாகுபாட்டினுள் நின்று ஆருயிரை இயந்து இயக்கி அருள்கின்றது. அத்திருவருளுக்குள் சித்தனாகிய சிவபெருமான் பேரின்பப் பெருவடிவினனாகவுள்ளான். அருளுருவாகவும் நின்று ஆடல் புரிகின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2745. சிவமாடச் சத்தியும் ஆடச் சகத்தில்
அவமாட ஆடாத அம்பரம் ஆட
நவமான தத்துவ நாதாந்த மாடச்
சிவமாடும் வேதாந்த சித்தாந்தத் துள்ளே.

"சிவனடியார்களே, மெய்களாகிய தத்துவங்களை இயக்கும் சிவன் ஆடியருளச் சக்தியும் அடியருள்கிறாள். இவ் இருவரும் ஆடியருள்வதால் ஆருயிர்களைப் பிணித்திருக்கும் மலம் முதலிய குற்றங்கள் ஆட்டங்கண்டு அகல்கின்றன. தத்துவமாகிய மெய்களுக்கும், சுழற்சி நல்கித் தானும் சுழன்று கொண்டு நிற்கும். ஒலிமுடிவாய்த் தத்துவம் கடந்த வியத்தகு புதுமைசேர் தத்துவமும் ஆடியது. சிவமும் ஆடி அருளியது. இத் திருவாடலிலேயே ஏனையவும் ஆடுவதாயிற்று. இவ்வுண்மைகளை வேதாந்த சித்தாந்த மெய்மையினுள்க் காணலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2746. நாதத்தின் அந்தமும் நாற்போத அந்தமும்
வேதத்தின் அந்தமும் மெய்ச்சிவா னந்தமுந்
தாதற்ற நல்ல சதாசிவா னந்தத்து
நாதப் பிரமஞ் சிவநட மாகுமே.

"சிவனடியார்களே, நாதமாகிய ஒலியின் முடிவும், அவ்வொலியால் பெறப்படும் நால்வகையான அறிவின் முடிவும், மெய்மைச் சிவபெருமானின் பேரின்பமும், திருவருளால் வந்தெய்தும் அருளோனாகிய சதாசிவப் பேரின்பத்து நாதப் பிரமமாகிய ஓம் மறை சிவ நடம் புரியும் தவநிலையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2747. சிவமாதி ஐவர்திண் டாட்டமுந் தீரத்
தவமார் பசுபாசம் ஆங்கே தனித்துத்
தவமாம் பரனெங்குந் தானாக ஆடுந்
தவமாஞ் சிவானந்தத் தோர்ஞானக் கூத்தே.

"சிவனடியார்களே, அத்தன், அன்னை, அருளோன் ஆண்டான், ஆசான் என்று சொல்லப்படும் தூமாயையின் கண்ணுள்ள திருவுருவினர் ஐவர். அவர்கள் முறையே சிவம், சக்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை என்னும் நிலைகளில் உள்ள திருவருட் பேற்றினராவர். அவர்களது திருக்கூத்தால் உழைப்பாகிய திண்டாட்டம் விலகும். அத்துடன் ஒட்டாது விட்டுநிற்கும் சிற்றுணர்வாகிய உயிரிமையும், சுட்டுணர்வாகிய பிணிமையும் நீங்கும். சிவன் தனது பேரருளால் தானாக ஆடியருள்வன். இத்திருக்கூத்தால் மேலன திகழும். இதுவே நற்றவமே வடிவமாகச் சிறந்த சிவானந்தத்தோர் அருளால் கண்டு மகிழும் திருவடி ஞானத் திருக்கூத்தாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2748. கூடிநின் றானொரு காலத்துத் தேவர்கள்
வீடநின் றான்விகிர் தாவென்னு நாமத்தைத்
தேடநின் றான்திக ழுஞ்சுடர் மூன்றொளி
ஆடநின் றான்என்னை ஆட்கொண்ட வாறன்றே.

"சிவனடியார்களே, ஆருயிர்களின் நன்மைக்கு இடமாக நிற்பது மாயை. அம் மாயையைத் தொழிற்படுத்தி அதனுடன் கூட நின்றருள்பவன் சிவன். ஒரு காலத்தில் தேவர்கள் வினைக்கீடாக மாண்டனர். அக்காலத்திலும் ஆண்டு நின்று அருளினன். விண்ணவர்கள் விகிர்தா என்னும் திருப்பெயரை ஓதித் தேடும்படியாக நின்றருளினன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2749. நாதத் துயங்கடந் தாதி மறைநம்பி
பூதத் துவத்தே பொலிந்தின்பம் எய்தினர்
நேதத் துவமும் அவற்றொடு நேதியும்
பேதப் படாவண்ணம் பின்னிநின் றானன்றே.

"சிவனடியார்களே, நாதத்தத்துவம் கடந்த ஆதியாகிய அம்மையோடு கூடிய சிவபெருமான் வேதப்பொருளாக விளங்கும் நம்பியாவான். அவனை அருளால் கண்டு வணங்குவோர் சிவதத்துவத்தில் கலந்து இன்புற்றனர். நேதத்துவமாகிய தத்துவ நீக்கச் சுத்தியும் நேதி செய்வதாகிய அன்று அன்று என விலக்கும் நேதியும் அம் மெய்யுணர்ந்தார் கைக் கொண்டனர். அதனால் சிவபெருமான் அவர்களுடன் கலந்து நின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2750. ஆனந்தம் ஆனந்தம் என்பர் அறிவிலர்
ஆனந்த மாநட மாரும் அறிகிலர்
ஆனந்த மாநட மாரும் அறிந்தபின்
தானந்தம் அற்றிடம் ஆனந்த மாகுமே.

"சிவனடியார்களே, இன்பம், இன்பம் என்று அறிவில்லாதவர்கள் சொல்வார்கள். ஆனந்தமாகிய இன்பம் மெய்யுணர்வில் தங்கியுள்ளது என்ற

உண்மையை யாரும் அறியவில்லை. அதை அறிந்தால் தான் முனைப்பு அற்றுப்போகும். அறவே பசையாகிய பழக்க வாசனையும் அறும். அதனால் திருவடிப் பேரின்பம் அருளால் வந்து சேரும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2751. திருந்துநற் சீயென் றுதறிய கையும்
அருந்தவர் வாவென் றணைத்த மலர்க்கையும்
பொருந்தில் இமைப்பிலி யவ்வென்ற பொற்கையுந்
திருந்தத்தீ யாகுந் திருநிலை மவ்வே.

"சிவனடியார்களே, முன் ஓதியவாறு மந்திரங்களை மறைவாக ஓதும் முறை பற்றி எழுத்துக்களின் மாத்திரைகளைக் கூட்டியும் குறைத்தும் வழங்குவர். அம் முறைபற்றி இத்திருப்பாட்டின்கண் சிகரம் சீகாரமாக ஓதப்பட்டது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2752. மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பும் அனலுடன் கையுங்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென வோதே.

"சிவனடியார்களே, வலது திருக்கையால் சிகரமும், இடது திருக்கையால் வகரமும், வல அஞ்சலிக் கையால் யகரமும், மழுவேந்திய இடது திருக்கையால் நகரமும் வலது திருவடியால் மகரமும் பெறப்படும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2753. அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையிற்சங் காரம்
அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிர கம்மே.

"சிவனடியார்களே, அரனார் உடுக்கையால் படைப்பையும், அமைவுக் கையால் காத்தலையும், மழுவேந்திய திருக்கையால் அழித்தலையும், ஊன்றிய திருவடியால் மறைப்பையும், தூக்கிய திருவடியால் அருளலையும் செய்தருள்கிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2754. தீத்திரட் சோதி திகழொளி யுள்ளொளி
கூத்தனைக் கண்டஅக் கோமளக் கண்ணினன்
மூர்த்திகள் மூவர் முதல்வ னிடைசெல்லப்
பார்த்தனள் வேதங்கள் பாடினள் தானன்றே.

"சிவனடியார்களே, திகழொளியாகவுள்ளவன் சிவன். அவனது பேரொழியே அனைத்திற்கும் ஒளியைக் கொடுக்கிறது. அவன் பெருங்கூத்தன். அவனை ஆருயிர்கள் உய்ய அகமுறக் கண்ட அழகிய திருக்கண்களையுடையவள் சிவகாமி அம்மை. அயன்,

அரி, அரன் என்னும் மூவரும் முறையே ஒடுங்குங் காலத்து அருளோனிடத்தே ஒடுங்குவர். மேலே சொல்லப்பட்ட மூவரும் ஆசான் மெய்யிலே உறைவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2755. நந்தியை எந்தையை ஞானத் தலைவனை
மந்திர மொன்றுள் மருவி யதுகடந்து
அந்தர வானத்தின் அப்புறத் தப்பர
சுந்தரக் கூத்தனை என்சொல்லும் மாறன்றே.

"சிவனடியார்களே, நந்தியாகிய முழுமுதலை, எந்தையை, மெய்யுணர்வுத் தலைவனை, திருவைந்தெழுத்தினுள் சிறப்பாம் சிவத்தினை வழிபடும் மந்திரம் சிகரமாகும். அதனை முன்னாகப் பொருந்தச் சிவயநம என ஓதுதல் வேண்டும். அதன்பின் சிவ சிவ என ஓதுதல் வேண்டும். இதுதான் மெய்ப்பொருள். அவனே சுந்தரக்கூத்தன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2756. சீய குருநந்தி திருஅம்ப லத்திலே
ஆயுறு மேனியை யாரும் அறிகிலர்
தீயுறு செம்மை வெளுப்பொடு மத்தன்மை
ஆயுறு மேனி அணிபுக லாகுமே.

"சிவனடியார்களே, நந்தியே சிவகுருவானவன். அவன் அம்பலத்தில் பெருங்கூத்துப் புரிபவன். அவனது திருமேனியின் உண்மையை யாரும் அறிந்திலர். ஒரு புடையொப்பாகத் தீயில் காணப்படும் செம்மையும் வெம்மையும் கூறலாகும். அத்தன்மை வாய்ந்த ஆறறிவினுள் அறிவாய் விளங்கும் அவனை அவனருளால் அறிவதே சிறப்பாகும். அவனது திருவடியே அனைத்துலகிற்கும் புகலிடமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2757. தானான சத்தியுந் தற்பரை யாய்நிற்குந்
தானாம் பரற்கும் உயிர்க்குந் தகுமிச்சை
ஞானாதி பேத நடத்து நடித்தருள்
ஆனால் அரனடி நேயத்த தாகுமே.

"சிவனடியார்களே, சிவம் வேறு, சக்தி வேறு அல்ல. சிவமும் சக்தியும் மரமும் காழ்ப்பும் போன்றன. அச்சக்தி வனப்பாற்றலாகிய பராசக்தியாக நிற்கும். மேலும் அவ்வாற்றல் தானாக விளங்கும். சிவனுக்கும் தன்னை நாடும் ஆருயிர்கட்கும் தொழில் அறிவுள்ளவர்களுக்கு வழியாக நிற்கும் விழைவாகிய இச்சையாக நிற்கும். ஆருயிர்களுக்கு ஏற்படும் அறிவு, அறியாமை முதலிய வேறுபாடுகளை உணர்த்தும் நடப்பாற்றலாகவும் நிற்கும். திருவருட்கூத்தையும் திறம்பட நடத்தும். தன்னை வணங்கும் ஆருயிர்களைத் தனது திருவடியில் சேர்த்து இன்பமளிக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2758. பத்தி விதையிற் பயிரொன்று நாணத்தைச்
சித்தி தருவயி ராக்கத்தாற் செய்தறுத்து
உய்த்த சமாதி சிவானந்த முண்டிடச்
சித்தி திகழ்முத்தி யானந்தஞ் சித்தியே

"சிவனடியார்களே, திருவடியை அடையச் சிறந்தவழி பக்தியொன்றேதான். திருவடிமீது பற்றற்ற அன்புபூண்டு, பற்றுக்களை வைராக்கியத்தால் அறுத்தல் வேண்டும். செயலறல் ஆகிய சமாதிநிலையை அடைதல் வேண்டும். சமாதிநிலையை அடைந்தால் சிவயோகம் விளையும். சிவயோகம் வந்தடைந்ததும் சிவனடியை விட்டு நீங்காத நினைவாகிய அப்போகத்தை அருளால் உணரல் வேண்டும். உணரவே திருவடிப்பேறு கைகூடும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

9. ஆகாசப்பேறு
(அருள்வெளிப்பேறு)

2759. உள்ளத்து ளோமென ஈசன் ஒருவனை
உள்ளத்து ளேயங்கி யாய வொருவனை
உள்ளத்து ளேநீதி யாய வொருவனை
உள்ளத்து ளேயுடல் ஆகாய மாகுமே.

"சிவனடியார்களே, திருவருளால் உள்ளத்துள் ஓம் என்று இடையறாது சொல்ல ஒப்பில்லாத இறைவன் அப்பொழுதே எழுந்தருள்வன். அவன் அவ் ஓசை உருவானவன். அவன் உள்ளத்தின் உள்ளே அறிவொளிப் பிழம்பாக நிற்கின்றான் என உணர வேண்டும். அவனை நெஞ்சத்துள் நின்று நினைப்பிக்கும் தன்மையை உடையான் என்பர். அவன் உள்ளத்தில் இருப்பதால் அவ் உள்ளம் அமைந்த உடல் அறிவு வெளியாகத் திகழும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2760. பெருநில மாயண்ட மாயண்டத் தப்பால்
குருநில மாய்நின்ற கொள்கையன் ஈசன்
பெருநில மாய்நின்று தாங்கிய தாளோன்
அருநிலை யாய்நின்ற ஆதிப் பிரானே.

"சிவனடியார்களே, சிவபெருமான் கலப்பினால் பெருநிலமாகவும், அண்டமாகவும், அண்டத்துக்கு அப்பாலுள்ள சிறந்த நிலமான மாயையாகவும் தோற்றமளித்து நிற்பவன். எல்லாவற்றையும் தாங்கி நிற்கும் பெரும் தோள்களை உடையவன். அவனே ஆதிப்பிரானாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2761. அண்ட வொளியும் அகண்ட வொளியுடன்
பிண்ட வொளியாற் பிதற்றும் பெருமையை
உண்ட வெளிக்குள் ஒளிக்குள் ஒளித்தது
கொண்ட குறியைக் குலைத்தது தானன்றே.

"சிவனடியார்களே, ஞாயிற்றின் ஒளியும், எல்லாவற்றிற்கும் ஒளியைக் கொடுக்கும் சிவவொளியும், ஆருயிரின் உடம்பும் அகத்தே காணப்படும் அறிவொளியும், அருளால் ஆராய்ந்ததால் அது நீயே என்று உணர்ந்து கொள்ளலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2762. பயனுறு கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு மாதி பரஞ்சுடர்ச் சோதி
அயனொடு மாலறி யாவகை நின்றிட்டு
உயர்நெறி யாயொளி யொன்றது [2]வாமே.

"சிவனடியார்களே, அன்பினால் உண்டாகும் சிற்றின்ப நுகர்வின்போது கற்புள்ள கன்னிப் பெண்கள் எவ்வாறு துணையாகின்றனர் என்று யாவரும் அறிவர். அதுபோல அருளியற் பேரின்பத்தின்போது ஆதிப்பரஞ்சுடர் சோதியானவன் அம்மைக்குப் பயனுறு துணையாகச் செம்மையாக நிற்பன். அவன் அயனொடு மாலும் அறியாவகைத் துளங்கா எரிசுடராக நின்றவன். அவ்வாறு நின்ற உயர்ந்தவன். அவன் ஒப்பில் ஓர் ஒளியானவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2763. அறிவுக் கறிவாம் அகண்ட வொளியும்
பிறியா வலத்தினிற் பேரொளி மூன்றும்
அறியா தடங்கிடில் அத்தன் அடிக்குள்
பிறியா திருக்கிற் பெருங்கால மாமே.

"சிவனடியார்களே, அறிவுக்கு அறிவாக விளங்கும் எல்லையில்லாப் பேரொளி சிவவொளியாகும். அவ்வொளியின் வசப்பட்டு நீங்காது நிற்கும் பேரொளி மூன்று. அவை அண்டவொளி, அகண்டவொளி, பிரண்டவொளி என்பன. இவற்றை எல்லைசேரொளி, எல்லைதீரொளி, நல்ல உடவொளி என்று கூறுவர். இவ்வொளிகள் மூன்றும் ஒன்றும் தோன்றா நிலையாய்ச் சிவன் நினைவாகவே நிற்றல் வேண்டும். நின்று அவனது திருவடியில் அடங்குதல் வேண்டும். அடங்கியபின் பிரியாதிருத்தல் வேண்டும். அப்படிப் பெற்றால் எல்லையில்லாத ஊழிவரை நல்லவாறு வாழலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2764. ஆகாச வண்ணன் அமரர் குலக்கொழுந்து
ஏகாச மாசுண மிட்டங் கிருந்தவன்
ஆகாச வண்ணம் அமர்ந்துநின் றப்புறம்
ஆகாச மாயங்கி வண்ணனு மாகுமே.

"சிவனடியார்களே, அறிய முடியாத அறிவுப் பெருவொளி வண்ணத்தன் சிவன். அவன் இவ்வுலகில் வாழும் நற்றவத்தவரின் தலைவன். தூமாயை எனப்படும் ஐந்து தலைப்பாம்பை மேலாடையாக அணிந்தவன். அவன் இவ்வுலகிலே வீற்றிருக்கின்றான். அவன் உலகெங்கும் நீங்காது நிறைந்து நின்றருள்கின்றான். அப்பால் நிலவும் அறிவுப் பெருவெளியாய்ச் செஞ்சுடர் வண்ணத்தவனாய் திகழ்பவன் சிவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2765. உயிர்க்கின்ற வாறும் உலகமும் ஒக்க
உயிர்க்கின்ற உள்ளொளி சேர்கின்ற போது
குயிற்கொண்ட பேதை குலாவி யுலாவி
வெயிற்கொண்டென் உள்ளம் வெளியது வாமே.

"சிவனடியார்களே, சிவபெருமான் உலகையும், உயிர்களையும், உடலையும் படைத்தருளியுள்ளான். அவற்றின்கண் உயிர்க்குள் உயிராய் நின்று அவற்றைத் தொழிற்படுத்துகின்றான். அத்துடன் உள்ளொளியாகவும் நின்று உயிர்த்தலாகிய புடைப்பெயர்ச்சிக்குத் திருவுளம் கொண்டருள்கின்றனன். அத் திருவுள்ளத்தின் திருநோக்கம் குயில் போன்ற இனிய குரலை உடைய திருவருளம்மை சிறந்து விளங்கி வெளிப்பட்டருள்வள். வெளிப்பட்டு அருள் ஒளி புரிவள். அப்போது ஆருயிரின் உள்ளம் அறிவுப் பெருவெளியாய்த் திகழும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2766. நணுகி லகல்கில ணாதன் உலகத்து
அணுகில் அகன்ற பெரும்பதி நந்தி
நணுகிய மின்னொளி சோதி வெளியைப்
பணியின் அமுதம் பருகலு மாமே.

"சிவனடியார்களே, ஆருயிர்கள் சிவநினைவுடன் அடிமைத்தொண்டு புரிவதை நணுகுதல் என்று சொல்வார்கள். அவ்வாறு செய்து வந்தால் அவ்வுயிர்களைத் தன் திருவடியில் நுழையுமாறு பணித்தருள்வன். அவ்வாறில்லாது ஆருயிர்கள் உலக இன்பங்களை விரும்பினால் சிவபெருமானாகிய நந்தி அவ்வுயிரைவிட்டு அகன்று நிற்பான். நன்னெறி நான்மை நற்றவத்தார்க்கு மிக நெருங்கிய மின்னொளிச் சோதியாய் விளங்குவன். அவன் பேரறிவுப் பேரொளி வெளியானவன். அவனைப் பற்றுக்களுடன் எண்ணாது கனிந்த மனத்தோடும் கண்களில் நீர் மல்க தொழுதல் வேண்டும். அவ்வாறு தொழுதால் அவனது திருவடிப் பேரின்பத்தினை அவனருளால் அனுபவிக்கலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2767. புறந்துளா காசம் புவனம் உலகம்
அகத்துளா காசமெம் மாதி யறிவு
சிவத்துளா காசஞ் செழுஞ்சுடர்ச் சோதி
சகத்துளா காசத்தின் தானஞ் சமாதியே.

"சிவனடியார்களே, புறத்துக் காணப்படும் பூதவெளி இருநூற்று இருபத்து நான்கு புவனங்களுக்கும், அப்புவனங்களுக்கு உட்பட்ட உலகங்களுக்கும், இடங்கொடுத்துக்கொண்டு நிற்கின்றது. ஆருயிர்களின் அகத்தே காணப்படும் அறிவுவெளி ஆதியாகிய சிவபெருமானினதுவாகும். சிவபெருமானின் உள்ளொளியாகக் காணப்படுவது அவனது செஞ்சுடராகும். இச் சோதிவடிவம் அவனது இயற்கை வடிவமாகும். நிலவுலகவெளி செயலறலாகிய சமாதியின் இடமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

10. ஞானோதயம்

(உணர்வுத் தோற்றம்)

2768. மனசந் தியிற்கண்ட மன்னன வாகுங்
கனவுற ஆனந்தங் காண்டல் அதனை
வினவுற ஆனந்த மீதொழி வென்ப
இனமுற்றா னந்தியா னந்த மிரண்டே.

"சிவனடியார்களே, மனம் ஐம்பொறிகளுடன் சேர்ந்து ஐம்புலன்களையும் கண்டு அறிவு எய்தும் நிலை நனவாகும். இதற்கு இடம் புருவ நடுவு ஆகும். கண்ட பொருட்களைக் கண்டவாறே கனவில் கண்டு அறிவின்பம் எய்துதல் கனவாகும். இதற்கு இடம் கண்டமாகும். இத்தகைய நனவின்பம், கனவின்பம் இரண்டும் ஓரின்பமாகக் கொண்டு ஆராய்ந்தால் இவை இரண்டும் கடந்த அப்பால்நிலையில் ஓர் இன்பம் உண்டு. அது மீதொழிலின்பம் என்று சொல்லப்படும். மனம் கலந்த நனவிலும் கனவிலும் காணும் இன்பம் ஒன்று. அதனால் அவை இரண்டு. பொருட்களை நேரில் கண்டு மகிழல் ஒன்று. நேரில் கண்ட பொருட்களைக் கனவில் கண்டு மகிழ்தல் இன்னொன்று. அதனால் ஆனந்தங்கள் இரண்டாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2769. கரியட்ட கையன் கபாலம்கை ஏந்தி
எரியும் இளம்பிறை சூடும்எம் மானை
அரியன் பெரியனென் றாட்பட்ட தல்லால்
கரியன்கொல் சேயன்கொல் காண்கின்றி லேனே.

"சிவனடியார்களே, ஆருயிர்களின் ஆணவமுனைப்பான மதயானையை அடக்கியவன் சிவபெருமான். அது யானைத்தோலை உரித்துப் போர்த்தவன் என்ற கதையால் அறியலாம். செருக்கடைந்த நான்முகனின் செருக்கை அடக்க தலைமை அகற்றப்பட்டது. அதன் குறிப்பை அவனது மண்டையோட்டைக் கையில் கொண்டுள்ளவன் சிவன் என்பதன்மூலம் அறியலாம். ஒளிவிடும் அறிவுடைய ஆருயிர்களே இளம்பிறையாகும். ஆருயிர்களின் அறிவு சிவபெருமானின் அறிவோடு கூடாவிட்டால் விளங்காது. அதற்காகத்தான் சிவன் இளம்பிறையைச் சூடினான். அவனே எல்லா உயிர்களுக்கும் தலைவன். சிவசக்தி அவனுடன் தோன்றாத்துணையாய் நிற்கும் தன்மையால் அரியன் எனவும், பேரின்பப் பெருவாழ்வைத் தருவதனால் பெரியன் எனவும்

அழைக்கப்படுகிறான். அவன் கருமை நிறமுடையவன் அல்லது செம்மை நிறமுள்ளவன் என எவராலும் காணமுடியாது. நிறமும் வடிவமும் இறைவனின் பொதுத்தன்மையாகும். சிறப்புத் தன்மையைக் கூடி முடிக்க முடியாது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2770. உண்ணல் உறங்கல் உலாவல் உயிர்போதல்
நண்ணல் நரக சுவர்க்கத்து நாட்டிடப்
பண்ணல் வெண்பணி யாலிவன் பாலிடை
திண்ணிதிற் செய்கை சிவன்பணி யாகுமே.

"சிவனடியார்களே, திருவருளால் நிகழும் உண்ணல், உறங்கல், உலாவுதல் போன்ற நிகழ்வுகள் அவ்வுயிருக்கு அன்பறிவாற்றல்களின் நிகழ்ச்சி கைகூடியபோதும் பொருந்துதல்களும் திகழ்கின்றன. இவற்றால் இருவினை நிகழ்வு ஏற்படுகிறது. அவ்வினைப் பயனின் பகுதி நுகர்வை ஒளியுலகத்தும், இருளுலகத்தும் இயைந்து நுகருமாறு நாட்டுதலைச் செய்தலும் நிகழ்கிறது. இவை அனைத்தும் சிவபெருமானின் திருப்பணியாகும். அச் செயலைச் செய்யும் உயிர் சிவனை மறவாத உள்ளத்துடன் அது தனது கடமை என நினைத்துச் செய்தல் வேண்டும். அப்பொழுது அது சிவப்பணியாகும். உடலைவிட்டு நீங்கிய உயிர் இருவிசும்பு ஏறும். இருவிசும்பென்பது ஒளியுலகும் இருளுலகுமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2771. ஓடும் இருக்கும் கிடக்கும் உடனெழுந்து
ஆடும் பறக்கும் அகண்டமும் பேசிடும்
பாடும் புறத்தெழும் பல்லுயிர் ஆனந்தம்
கூடும் பொழுதிற் குறிப்பிவை தானன்றே..

"சிவனடியார்களே, திருவருளால் பல உயிர்களுக்கும் திருவடிப் பேரின்பம் கைகூடும். அது கைகூடியவுடன் அவ் இன்பம் அருட்கதிராய்ப் புறத்தில் பொசியும். அந்நிலையில் அவ்வுயிர்களின் செய்கைகளை அளவிட்டுக்கூற முடியாது. எனினும் வரலாற்றில் உள்ள குறிப்புக்களால் அவ்வுண்மை புலனாகும். அவ்வுயிர் ஓடும், இருக்கும், கிடக்கும், எழுந்து ஆடும், பறக்கவும் செய்யும், இருந்த இடத்தில் இருந்து கொண்டே உலகில் நடக்கும், நடக்கவிருக்கும் செய்திகளைச் சொல்லும். இசையோடு பாடும். இவையனைத்தும் நற்றவத்தோரின் நற்செயல்களாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2772. மிக்கா ரமுதுண்ண நஞ்சுண்ட மேலவன்
தக்கார் உரைத்த தவநெறி யேசென்று
புக்கா லருளும் பொன்னுரை ஞானத்தை
நக்கார் கழல்வழி நாடுமின் நீவிரே.

"சிவனடியார்களே, நல்வினைப்பயன்மிக்க தேவர்கள் அமுதுண்ணும் பொருட்டு அவர்கள் முன்பு சிவனை மறந்த தீவினைப் பயனால் நஞ்சிலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு மன்றாடிக் கேட்டமைக்காகச் சிவன் இரங்கி நஞ்சினை உண்டான்.

அதனால் அவன் மேலோனாகினான். சித்தாந்தச் சைவர்கள் அருளால் உரைத்தருளிய நன்னெறி நான்மையே நற்றவ நெறியாகும். அந்நெறியைப் பயின்று ஒழுகினால் சிவகுருவினால் அருளப்பெறும் பொன்னைவிட உயர்ந்த திருவைந்தெழுத்தின் அருமறை கைகூடும். அது கைகூடினால் வீரச்சிலம்பாகிய கழல் பூண்டுள்ள திருவடியைச் சேரும் வழி புலப்படும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2773. விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல் லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலு மாமே.

"சிவனடியார்களே, திருவருளால் ஆருயிர் உள்ளத்தின்கண் அறிவொளியாய் விளங்கும். அதனால் அவ்வொளியை உடல் உறுப்பு முதலிய தத்துவக் கூட்டங்களின் வேறு எனப் பிரித்துக் காட்டுவதும் காண்பதும் அறிவாகும். பிரித்துக் கண்டபின் உள்ளத்துள்ளே சிவ விளக்கை ஏற்ற வேண்டும். சிவவிளக்கை ஏற்றுவதென்பது சிவனை ஒருபோதும் மறவாது நினைப்பதேயாகும். பாடத்தை வகுப்பது இதற்கு ஒப்பாகும். அச் சிவவிளக்கினுள் ஆருயிர் விளக்குப் பிரகாசிக்கும்படி தூண்ட வேண்டும். தூண்டுதல் என்பது தொடர்ந்து அன்பு கொள்ளல் ஆகும். திருவடியுணர்வு என்ற விளக்கினால் ஆருயிரின் அறிவு விளக்கை விளங்குமாறு செய்ய அன்பு பெருகும். அதனால் சிவபெருமானின் திருவடியை அடைந்து பேரின்பப் பெருவாழ்வை அடையலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2774. தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மை யறிந்தபின்
தத்துவன் அங்கே தலைப்படுந் தானன்றே.

"சிவனடியார்களே, திருவருளால் மெய்யென்று கூறப்படும் தத்துவங்களின் உண்மையை அறிதல் வேண்டும். அவைகள் காரியப் பொருட்கள் என்றும், அறிவில்லாதன என்றும், ஆண்டவனால் மாயையில் நின்றும் படைக்கப்பட்ட அவனது உடமைப் பொருள் என்றும், தோன்றி மறைவன என்றும், நமக்கு இறைவன் அளித்த இரவல் பொருள் என்றும் உணர்தலே தத்துவங்களை அறிதல் என்பது. அவ்வாறு உணர்ந்தால் சிவபெருமான் அங்கு தோன்றியருள்வன். அவனை அவனருளால் அறியும் ஆருயிர்கள் அனைத்தும் மீளா அடிகைளாகும். இவ் உண்மையை உணராதவர்கள் தத்துவ உணர்வு இல்லாதவிடத்துத் தத்துவனாகிய சிவபெருமானின் அருளும் இருப்பதில்லை. இத்தகைய தத்துவஞானத்தின் தன்மையை அறிந்த பின் தத்துவனாகிய சிவபெருமான் அங்கே தோன்றியருள்வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2775. விசும்பொன்று தாங்கிய மெய்ஞ்ஞானத் துள்ளே
அசும்பினின் றூறிய தாரமு தாகும்

பசும்பொன் திகழும் படர்சடை மீதே
குசும்ப மலர்க்கந்தங் கூடிநின் [2]றானே.

"சிவனடியார்களே, ஆகாயத்தைப்போல எல்லையின்றி விரிந்துள்ள திருவடியுணர்வாகிய மெய்ஞ்ஞானத்தின் உள்ளே, திருவடியின்பம் குறைவில்லாத அமுதாய் ஊறிப் பெருகும். அப்பெருக்கின் நிலைகளும் சிவபெருமானாவன். அதனால் கேணியில் இருந்து நீர் ஊறிப் பெருகுவது போலத் திருவடியின்பம் பெருகும். பசும்பொன் போலப் பளபளக்கும். திருச்சடையின் மீது செங்கழுநீர் மலரும், மணமும் கலந்து பிரிப்பின்றி இருப்பதுபோல சிவனும் அடிமையான ஆருயிரும் கூடி நிற்பர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2776. முத்தின் வயிரத்தின் முந்நீர்ப் பவளத்தின்
கொத்தும் பசும்பொன்னின் தூவொளி மாணிக்கம்
ஒத்துயர் அண்டத் துள்ளமர் சோதியை
எத்தன்மை வேறென்று கூறுசெய் வீரன்றே.

"சிவனடியார்களே, முத்தும், வயிரமும், பவளக் கொத்தும், பசும்பொன்னும், மாணிக்கமும் அவற்றின் ஒளியும் வேறுபிரிக்கப்படாமை போன்று சிவபெருமான் எல்லா அண்டங்களிலும், பிரிக்க முடியாத பேரொளியாய் நின்றருளுகின்றான். அதனால் அவன் உள்ளமர் சோதியாகின்றான். அங்ஙனம் கூறுவதல்லாமல் வேறு எப்படிப் பிரித்துக்கூற முடியும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2777. நானென்றுந் தானென்றும் நாடினேன் நாடலும்
நானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பது
நானென்று ஞான முதல்வனே நல்கினான்
நானென்றுந் நானும் நினைப்பொழிந் தேனன்றே.

"சிவனடியார்களே, எதையும் சேர்ந்திருந்து அறியலாமே தவிர எட்டநின்று அறிய முடியாது. அப்படிச் சேர்ந்திருப்பதால் இரு பொருட்களும் ஒரு பொருளாகாது. அதுபோல ஆருயிராகிய அடிமையும், பேருயிராகிய சிவபெருமானும் புணர்ப்பால் ஒன்றுபட்டுத் திகழ்வதன்றிப் பொருளால் ஒன்றாவதில்லை. ஆயின் திருவருளால் நான் என்றும் தான் என்றும் நாடினேன். நாடுதலும் நான் என்றும், தான் என்றும் வேறுபட்டு இரண்டாகக் காண்பதற்கு இல்லை என்னும் பெருமையினைச் சிவன் உணர்த்தியருளினான். நான் என்ற உணர்வினை முன்னம் நடப்பாற்றல் வழியாக நல்கிய சிவன் இப்பொழுது வனப்பாற்றல் வழியாக நான் என்னும் எண்ணம் அகலுமாறு செய்தருளினன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2778. ஞானத்தின் நன்னெறி நாதாந்த நன்னெறி
ஞானத்தின் நன்னெறி நானென் றறிவோர்தல்
ஞானத்தின் நல்யோக நன்னிலை யேநிற்றல்
ஞானத்தின் நன்மோன நாதாந்த வேதமே.

"சிவனடியார்களே, திருவடி உணர்வான நன்னெறியும், நாதாந்த முடிவாம் நன்னெறியும் என நெறி இருவகைப்படும். அவற்றுள் ஞானத்தின் நன்னெறியாவது நான் என்ற முனைப்பற்றுத் திருவடியுணர்வால் நின்று அத்திருவடியினை உணர்தலாகும். நாதாந்த நெறி என்பது அறிவின் செறிவாம் ஞானயோக நெறியாகும். அதன் மேல் அறிவின் அறிவாம் ஞானத்தின் ஞானம் நன்மோன நிலையாகும். அதுவே ஞான முடிவும். கடந்த சிவசிவ என்னும் நான்மறையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2779. உய்யவல் லார்கட் குயிர்சிவ ஞானமே
உய்யவல் லார்கட் குயிர்சிவ தெய்வமே
உய்யவல் லார்கட் கொடுக்கம் பிரணவம்
உய்யவல் லாரறி வுள்ளறி வாகுமே..

"சிவனடியார்களே, பிறப்பு, இறப்பாகிய துன்பத்தில் இருந்து விடுவிக்குமாறு திருவருளால் நினைந்து உய்யவல்லவர்களுக்குத் திருவடியுணர்வாகிய சிவஞானமே உயிராகும். அதுபோலச் சிவவுலகு, சிவணண்மை சிவவுரு எனப்படும் நிலையில் நின்று உய்ய வல்லாருக்குச் சிவமுதலே விழுப்பொருளாகும். உய்யவல்லார்க்கு ஒடுக்கம் ஓமொழியாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2780. காணவல் லார்க்கவன் கண்ணின் மணியொக்கும்
காணவல் லார்க்குக் கடலின் அமுதொக்கும்
பேணவல் லார்க்குப் பிழைப்பிலன் பேர்நந்தி
ஆணவல் லார்க்கே அவன்துணை யாகுமே.

"சிவனடியார்களே, மெய்யன்புடன் திருவருளால் சிவபெருமானைக் காணவேண்டுமென்று நினைத்துத் துதிப்பவர்களுக்குச் சிவபெருமான் கண்ணுக்குள் மணி இருப்பதுபோல உடனாக இருந்து தன்னைக் காட்டியருள்வான். அதனால் அவன் கருமணிபோன்றவனாவான். அவர்களுக்கு அவன் அமுதை ஒத்தவனாவான். அவனது திருப்பெயர் நந்தியாகும். அன்பு கொண்டவர்களுக்கு அவன் என்றும் துணையாக இருப்பான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2781. ஓமெனும் ஓரெழுத் துள்நின்ற ஓசைபோல்
மேனின்ற தேவர் விரும்பும் விழுப்பொருள்
சேய்நின்ற செஞ்சுடர் எம்பெரு மானடி
ஆய்நின்ற தேவர் அகம்படி யாகுமே.

"சிவனடியார்களே, ஓம் என்ற மந்திரத்தில் காணப்படும் ஒன்று போல் விண்ணவர்களின் விழுப்பொருள் சிவபெருமானாவான். அவன் உயிருக்குள் உயிரான நுண்பொருளாக நிற்பவன். அவனே எம்பெருமான். அவனது திருவடியைத் தொழும் தேவர்கள் பலராவர். அவர்களது உள்ளத்துள் அவன் விளக்காக நின்று பிரகாசிக்கிறான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

11. சத்திய ஞானானந்தம்

(உண்மையறிவின்பம்)

2782. எப்பாழும் பாழும் யாவுமாய் அன்றாகி
முப்பாழுங் கீழுள முப்பாழும் முன்னியே
இப்பாழும் இன்னவா றென்பதி லாவின்பத்
தற்பர ஞானானந்தந் தானது வாமே.

"சிவனடியார்களே, இன்ன நிலையது என்று யாராலும் கூறமுடியாததைப் பாழ் என்பர். அப் பாழ் மாயையின் தொடர்பால் மூன்று கூறுகளை உடையது. அவை உடன்மெய், உணர்வுமெய், உணர்த்து மெய் என்பனவாகும். இவற்றைப் பகுதிமாயை, தூவாமாயை, தூமாயை என்றும் கூறுவர். மேலும் உணர்வுத் தொடர்பால் ஆருயிர் செயலறல், அருட் செயலறல், அருளோன் செயலறல் என முப் பாழ் கூறுவர். இவற்றைச் சீவதுரியம், பரதுரியம், சிவதூரியம் எனக் கூறுவர். இவையனைத்தும் எப்பாழ் ஆகும். பின்னர்க் கூறும் பாழ், காரண மாயையைக் கூறுவதாகும். உயிர்களும், பொருட்களும் ஆகிய அனைத்துடனும் கலந்து கலப்புத்தன்மையால் அவையேயாய் நிற்பவன் சிவன். அவனே பொருட்தன்மையால் அன்றாகி நிற்பன். மேற்கூறப்பட்ட முப்பாழ் என்பது அருட் செயலறலாகிய பரதுரியத்தில் நனவு, கனவு, உறக்கம் என்னும் மூன்று பாழாகும். இம்மூன்றும் நிகழாமையே பாழாகும். அவற்றை அபாவம் என்பர். இவை தொகை என்னும் சமட்டியாகும். கீழுள்ள முப்பாழ் ஆருயிர்ச் செயலறலாகும். அவை சிவதுரியம். அதன் கண்ணும், நனவு, கனவு, உறக்கம் என்னும் மூன்றும் நிகழாமை பாழாகும். இவற்றை வகையென்னும் வியட்டி என்பர். இவற்றைப் பொருந்தி இவற்றையும் கடந்து இன்னவாறு என்று எவராலும் கூற முடியாததாகவுள்ள நிலையின்பத்தினை உடையதாய்த் தானே முழுமுதலாய் உண்மை அறிவின் உருவுடையவனாய் விளங்குபவன் சிவபெருமான். அவனே புணர்ப்பால் ஆருயிர் என்னும்படி நின்றருள்வன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2783. மன்னுஞ் சத்தியாதி மணியொளி மாசோபை
அன்னதோ டொப்ப மிடலொன்றா மாறது
இன்னிய வற்பலம் ஒண்சீர் நிறமணம்
பன்னிய சோபை பகராறு மானதே.

"சிவனடியார்களே, சிவனுடன் பொருந்திய திருவருளாற்றல் சக்தி எனப்படும். அது மணியொளிபோல மிக்க அழகுடையது. அச் சக்திதான் மெய்யுணர்வாகும். அவற்றுடன் ஒப்புரைத்தலாகும். இனிமைபொருந்திய கருங்குவளை மலருக்குத் தூய்மை, சிறப்பு, நிறம், மணம், அழகு போன்ற ஐந்து குணங்கள் உண்டு. அதுபோலச் சிவபெருமானுக்கும் ஐவகை ஆற்றல்களும் உண்டு. அவற்றோடு கூட்டாய் அழகிய பொருட்கள் ஆறாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2784. சத்தி சிவன்பர ஞானமுஞ் சாற்றுங்கால்

உய்த்த அனந்தஞ் சிவமுயர் ஆனந்தம்
வைத்த சொருபத்த சத்தி வருகுரு
உய்த்த வுடலிவை யுற்பலம் போலுமே.

"சிவனடியார்களே, திருவருளாற்றலாகிய சக்தியும், சிவபெருமானும், திருவடியுணர்வும் சொல்லுமிடத்து உலகுயிர்களை ஒப்பில் பொருட்களாம். இவை அனைத்தும் முடிவெய்தாத சிவபெருமானின் ஒப்புயர்வில்லாத பேரின்பம் உடையனவாகும். திருவருள் சிவகுருவாக வந்தருள்வான். அத் திருவருள் கொள்ளும் திருமேனி நீலோற்பவ மலரை ஒத்தது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2785. **உருவுற் பலநிறம் ஒண்மணஞ் சோபை**
தரநிற்ப போலுயிர் தற்பரந் தன்னின்
மருவச் சிவமென்ற மாமுப் பதத்தின்
சொருபத்தன் சத்தியாதி தோன்றநின் றானே.

"சிவனடியார்களே, அழகான உற்பவ மலரின் நிறம், மணம், அழகு முதலியன வேறறப் பிரிப்பின்றிக் கலந்து இருக்கின்றன. அதுபோல ஆருயிரும் சிவபெருமானுடன் கலந்திருக்கிறது. அதனால் சிவபெருமானின் எண் பெருங்குணங்களும், ஆருயிரிலும் பதிந்து விளங்கித் தோன்றும். ஆருயிரில் சிவபெருமானின் எண்குணங்களும் பதிந்ததும் ஆருயிர், அருள், அருளோன், ஆருயிர், பேரருள் பெருமான் என்ற மூன்று நிலையுமாகச் சிவபெருமான் மறைந்து நின்றருளாது வெளிப்பட்டு அவ்வுயிருக்கு திருவருள் ஆற்றல்கள் தோன்ற நின்றருள்வான். அதனால் அவ்வுயிர் சிவமாக நிற்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2786. **நினையும் அளவின் நெகிழ வணங்கிப்**
புனையில் அவனைப் பொதியலு மாகும்
எனையுமெங் கோன்நந்தி தன்னருள் கூட்டி
நினையும் அளவில் நினைப்பித் தனனே.

"சிவனடியார்களே, சிவபெருமானின் திருவருளின் துணையால் நினைத்ததும் உள்ளம் உருகித் திருவடியை வணங்கித் திருமறைகளை ஓதி வழிபடும். அவ்வாறு வழிபட்டால் சிவனை உள்ளத்தின் உள் இருத்தும் தன்மை உண்டாகும். அதனால் சிவபெருமான் நந்தி என்னும் திருப்பெயரையுடைய நாதனின் திருவடியுடன் கூட்டுவித்தான். மறவாது நினைத்துக் கொண்டே இருந்தமையால் இந்நிலை ஏற்பட்டது என்று திருமூலர் தனது அனுபவத்தைக் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2787. **பாலொடு தேனும் பழத்துள் இரதமும்**
வாலிய பேரமு தாகும் மதுரமும்
போலுந் துரியம் பொடிபட வுள்புகச்
சீல மயிர்க்கால் தொறுந்தேக் கிடுமாமே.

"சிவனடியார்களே, திருவருளால் செயலறலாகிய துரியம் அடங்கப் பால் போன்ற திருவருள் தட்பமும், தேன் போன்ற சிவனார் வெப்பமும், முப்பழச்சுவையும், தூய திருவருளின் இனிமையும் நிறைந்த திருவடி உணர்வு மயிர்க்கால்கள் தோறும் நிறைந்து நின்று குறைவில்லாத இன்பத்தைக் கொடுத்தருளும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2788. அமரத் துவங்கடந் தண்டங் கடந்து
தமரத்து நின்ற தனிமையன் ஈசன்
பவளத்து முத்தும் பனிமொழி மாதர்
துவளற்ற சோதி தொடர்ந்துநின் றானே.

"சிவனடியார்களே, சிவபெருமான் பிறப்பும், இறப்பும் இல்லாதவன். அவன் கூத்தை வென்றவன். அவன் அண்டங்களுக்கும் அப்பாற்பட்டவன். அவன் ஓசை என்ற நாத தத்துவத்தில் திருவடி வைப்பவன். ஆற்றலாகிய திருவருட்சக்தியுடன் அவன் கூடியருள்பவன். பவழம் போன்ற இதழ்களையும், முத்துப் போன்ற பற்களையும் உடைய சக்தியாகிய பெண்ணுடன் கலந்து நின்று புலன்களை வென்றவன். அத்தகைய அறிவுப் பேரொளியானவன் ஆருயிர்களின் நன்மையின் பொருட்டு அவ்வுயிர்களுடன் கூடிநின்று அருள் புரிகின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2789. மத்திமம் ஆறாறு மாற்றி மலநீக்கிச்
சுத்தம தாகுந் துரியத் துரிசற்றுப்
பெத்த மறச்சிவ மாகிப் பிறழ்வற்றுச்
சத்தியஞா னானந்தஞ் சார்ந்தனன் ஞானியே.

"சிவனடியார்களே, மத்திமமாகிய உண்ணிலைக் கருவிகளையும், முப்பத்தாறு மெய்களையும் திருவருளால் நாமல்ல என்று உணர்வது தத்துவ உண்மை உணரலாகும். அவ்வாறு உணர்ந்து அவை சிவனின் உடைமை, அவனது திருவடியைச் சேர துணை செய்யும்படி அவனால் அருளப்பட்ட கருவிப் பொருட்கள் என்று கைக்கொண்டு ஒழுகுதல் மாற்றுதல் ஆகும். அவை அங்ஙனம் மாற்றப்படவே தானே நீங்கும். அதனால் தூய்மை வந்து சேரும். செயலறலாகிய துரியத் துர்வாமையும் நீங்கும். நீங்கவே கட்டு நீங்கும். இக்கட்டு நீங்கியதும் சிவமாகித் திகழ்வர். இயற்கை உண்மை அறிவு இன்பவடிவினைச் சார்வர். சார்ந்து அவ்வாறு நிற்பதால் பொன்றாப் பேரொளிப் பிழம்பாவர். இதனால் திருவடியை அடையும்நிலை ஏற்படும். இதுவே ஞானநிலையாகும். இவற்றைப் பெற்றவனே ஞானியாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2790. சிவமா யவமான மும்மலந் தீரப்
பவமான முப்பாழைப் பற்றறப் பற்றத்
தவமான சத்திய ஞானானந் தத்தே
துவமார் துரியஞ் சொரூப தாமே.

"சிவனடியார்களே, சிவனிலை அடைந்த ஆருயிர்க்குப் பிறப்பினைத் திரும்பத் திரும்பத் தரும் மும்மலங்களும் அற்றுப்போகும். அதனால் திருவடியை அடையத்தக்க தூய்மை அடையும். அதனால் முப்பாழ் ஆருயிர்த் துரியம், அருட்துரியம் என்று சொல்லப்படும். முத்துரியமும் அகலும். அதனால் சிவனைப் போற்றுகின்ற அறிவின்பப் பற்றுக் கிடைக்கும். அதுவே மேன்மை வாய்ந்த செயலறுதலாகிய துரியமாகும். இந்நிலையே உண்மை நிலையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

12. சொரூப உதயம்

(உண்மை எழுச்சி)

2791. பரம குரவன் பரமெங்கு மாகித்
திரமுற எங்களுஞ் சேர்ந்தொழி வற்று
நிரவு சொருபத்துள் நீடுஞ் சொரூபம்
அரிய துரியத் தணைந்துநின் றானே.

"சிவனடியார்களே, திருவைந்தெழுத்தைச் செவியறிவுறுத்தும் சிவகுரு பரமகுருவனாவான். அவன் ஆருயிர்களுக்காக நீக்கமற நிறைந்து நிற்கின்றனன். எங்கும் நிறைந்துள்ள சிவத்துடன் கூடிய உயிர் சார்பினால் எங்கணும் நிறைந்தனவாகும். அ.ஃது ஆருயிரின் உண்மை நிலையாகும். உண்மைநிலை சொரூபநிலையாகும். அந்நிலையில் நின்று இயங்குபவன் சிவன். இந்நிலையே அரிய தூரிய நிலையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2792. குலைக்கின்ற நீரிற் குவலய நீரும்
அலைக்கின்ற காற்றும் அனலொடா காசம்
நிலத்திடை வானிடை நீண்டகன் றானை
வரைந்து வலஞ்செயு மாற்றி யேனே.

"சிவனடியார்களே, ஒரு நிலைப்படாது ஏனையவற்றின் நிலையினையும் குறைத்துத் தாமும் குலைவுறுவன ஐம்பெரும் பூதங்கள். இவற்றுடனும் இவற்றின் சேர்க்கையாகிய நிலத்துடனும், வானத்துடனும் நீக்கமற விரவி நின்றருள்பவன் சிவன். அத்தகைய சிவனை இடத்தாலும், காலத்தாலும், படிமத்தாலும் எல்லைப்படுத்தி அளவிட்டுரைத்து வலம்செய்து வழிபடுவது எவ்வாறெனின், அதைச் சொல்லவும் முடியாது, எண்ணவும் முடியாததாகும். அக்குறிப்பே ஆறு அறியேனே என்பதாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2793. அங்குநின் றானயன் மால்முதல் தேவர்கள்
எங்குநின் றாரும் இறைவனென் றேத்துவர்
தங்கிநின் றான்தனி நாயகன் எம்மிறை
பொங்கிநின் றான்புவ னாபதி தானன்றே.

"சிவனடியார்களே, தேவர் உலகில் உள்ள அயன், மால், அரன் முதலிய தேவர்களும், எங்கும் நிறைந்துள்ள யாவர்களும் உய்யுமாறு சிவனை இறைவனே என்று பாடிப் பரவிப் பணிவார்கள். தனிப்பெரும் நாயகனான சிவபெருமான் எங்கும் தங்கி நின்று அருளுவான். அவன் இருநூற்றிருபத்து நான்கு உலகங்களுக்கும், ஏனைய அண்டங்களுக்கும் ஒரே தலைவனாய்த் திகழ்கின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2794. சமையச் சுவடுந் தனையறி யாமற்
கமையற்ற காமாதி காரணம் எட்டுந்
திமிரச் செயலுந் தெளிவுடன் நின்றோர்
அமரர்க் கதிபதி யாகிநிற் பாரே.

"சிவனடியார்களே, நன்னெறித் திருவடையங்களையும் தன்னையும் முழுமையாக அறிந்து சிவபெருமானை வழிபட்டு உய்ய வேண்டியது ஆருயிர்களின் கடமையாகும். அதைச் செய்யவிடாது தடுக்கும் காரணிகள் எட்டு. அவை செருக்கு, சினம், சிறுமை, இவற்ன்மை, மாண்பிறந்த மானம், மானா உவகை, மண், பொன் என்பனவாகும். இவை ஆணவத்தை அதிகரிக்கச் செய்யும் தீயசக்திகளாகும். திருவருளால் இவை அனைத்தையும் கண்டு, உண்மை நிலையை உணர்ந்து சிவனைப்பற்றி நிற்பவர்களே மெய்யுணர்ந்த மெய்யடியார்களாவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2795. மூவகைத் தெய்வத் தொருவன் முதலுரு
வாயது வேறா மதுபோல் அணுப்பரண்
சேய சிவமுத் துரியத்துச் சீர்பெற
ஏயும் நெறியென் றிறைநூல் இயம்புமே.

"சிவனடியார்களே, உடல் மெய்யாகிய இருபத்து நான்காம் மெய்யுச்சியில் அயன், அரி, அரன் என்னும் மூவரும் நிற்பர். இம்மூவருள் ஒருவனாகிய அரன் தொழிலால் இவர்கள் வரிசையில் வைத்து எண்ணப்படுவர். எனினும் அவன் ஏனைய இருவரைப்போலப் பெருமயக்கமுறுபவன் அல்ல. அதனால் அவன் வேறுபட்டவனாவான். அதுபோலச் சிவனும் ஆருயிரும் கலப்பால் ஒன்றுபட்டு நிற்பினும் பொருட் தன்மையால் சிவன் வேறானவன். ஆருயிர் செயலறல், அருட் செயலறல் ஆகியவற்றால் ஆருயிர் சிவனின் திருவடியை அடைதல்கூடும். அதுவே வழியென்று இறைநூல்கள் கூறுகின்றன" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2796. உருவன்றி யேநின்று றுருவம் புணர்க்குங்
கருவன்றி யேநின்று தான்கரு வாகும்
அருவன்றி யேநின்ற மாயப் பிரானைக்
குருவன்றி யாவர்க்குங் கூடவொண் ணாதே.

"சிவனடியார்களே, சிவபெருமான் தனக்கென ஓர் உருவம் இல்லாதவன். அவன் ஆருயிர்கள் உய்தற்பொருட்டு அவ்வுயிர்களுக்கு மாயையில் இருந்து முதலுடம்பு, மீநுண்ணுடம்பு, குணவுடம்பு, நுண்ணுடம்பு, பருவுடம்பு என்னும் ஐந்து வகையான உருஉடல்களைப் படைத்தருளியுள்ளான். இதுவே அவன் உயிர்களுக்கு உருவங்கள் படைத்துப் புணர்க்கும் உண்மையாகும். அவன் எல்லாவற்றிற்கும் எப்பொழுதும் வினைமுதற் காரணமாக இருப்பவன். உயிருடனும் உடல் உலகங்களுடனும் புணர்ந்து நிற்கும் மாயப் பெருமானாக விளங்குகின்றனன். அவனருளால் அவனது திருவடியில் கூடும் பெருவாழ்வினை எய்துவதற்கு அவனே சிவகுருவாக எழுந்தருளி வருவான். அப்படிவந்தால் மட்டுமே திருவடி கைகூடும். வேறு எவற்றாலும் முடியாததாகும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2797. உருவ நினைப்பவர்க் குள்ளுறுஞ் சோதி
உருவ நினைப்பவர் ஊழியுங் காண்பர்
உருவ நினைப்பவர் உம்பரு மாவர்
உருவ நினைப்பவர் உலகத்தில் யாரே.

"சிவனடியார்களே, சிவபெருமானின் திருவுருவினை நாடினால் அவன் அறிவுப் பேரொளியாக உள்ளத்தில் வந்தமர்வான். அம்முறையாகத் திருவுருவை நாடுவோர் பல ஊழிகளையும் அருளல் காண்பர். அத்திருவுருவினை எப்போதும் நினைப்பவர்கள் சிவ உலக வாழ்வினராவர். மேலும் அத்திருவுருவின் நினைவுடையவர்கள் உலகத்தோடு இசைந்து வாழினும் அவர்கள் உலகம் கடந்தவராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2798. பரஞ்சோதி யாகும் பதியினைப் பற்றாப்
பரஞ்சோதி என்னுட் படிந்ததற் பின்னைப்
பரஞ்சோதி யுண்ணான் படியப் படியப்
பரஞ்சோதி தன்னைப் பறையக்கண் டேனே.

"சிவனடியார்களே, திருவருளால் பரஞ்சோதியாகிய பேரொளிப் பெரும் பொருளைப் பற்றும் பேறு பெற்றேன். பற்றவே அச்செம்பொருட்சோதி என்னுள்க் கலந்து படிந்தருளிற்று. அதன்பின் அப் பேரொளிப் பரம்பொருள் தன்னை உணர்த்தி உரைத்தருளியது என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2799. சொரூபம் உருவங் குணந்தொல் விழுங்கி
அரியன வுற்பல மாமறு போல
மருவிய சத்தியாதி நான்கு மதித்த
சொரூபக் குரவன் சுகோதயத் தானே.

"சிவனடியார்களே, அரிய செங்கழுநீர் மலரின் சொரூபமாகிய மணமும், உருவமாகிய அழகும், குணமாகிய மென்மையும் பண்டு தொட்டே அதில் நிறைந்துள்ளன. அவற்றுடன் தூய்மையும் சேர நான்காகும். அதுபோலச் சிவம், ஆற்றல், அருள், ஆருயிர் நான்கும் கலந்த பேருயிர் வடிவம் சிவகுரு. அக்குருவினிடத்துப் பேரின்பப் பெருந்தோற்றம் பெருக்கெடுத்துக் கரைபுரண்டு பொலியும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2800. உரையற்ற ஆனந்த மோன சொரூபத்தன்
கரையற்ற சத்தியாதி காணில் அகார
மருவுற் றுகார மகாரம தாக
உரையற்ற தாரத்தில் உள்ளொளி யாமே .

"சிவனடியார்களே, விபரிக்க முடியாத பேரின்பமான உருவத்தை உடையவன் சிவகுரவன். அவனது எல்லையில்லாத அருட்சக்தியைத் திருவருளால் கண்டால், இயற்கை ஒலியாகிய அகரமும், அவற்றோடு கூடும் உகர, மகரங்களும் ஆகித் தோன்றம். அத்தோற்றமே ஓமொழியாகும். அம்மறையின்கண் அறிவுப் பேரொளியாய் உள்ளொளியாய் விளங்குவது திருவருளாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2801. தலைநின்ற தாழ்வரை மீது தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனிற் கண்டுகொண் டேனே.

"சிவனடியார்களே, ஓங்கியுயர்ந்து தலையாய் நின்ற திருவருள் தாழும் திருக்கைலையில் ஒப்புயர்வு இல்லாத நற்றவம் புரிபவள் அன்னை. அவளால் அறியப்படும் வள்ளல் சிவபெருமான். அத்திருவருளால் அடியேனும் பிறவியைக் கடந்துள்ளேன். அன்பின் பிணிப்பில் கள்வன்போல் கட்டுண்டு நின்ற அச்சிவபெருமானைத் திருவருளால் கண்டு கொண்டேன் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2802. ஆமா றறிந்தேன் அகத்தின் அரும்பொருள்
போமா றறிந்தேன புகுமாறு மீதென்றே
ஏமாப்ப தில்லை இனியோ ரிடமில்லை
நாமா முதல்வனும் நானென லாகுமே.

"சிவனடியார்களே, அகத்தே நிற்கும் அரும்பொருளாகிய சிவபெருமானைக் கண்டு கொண்டேன். கண்டதும் அவனை அறிந்து கொண்டேன். அதனால் நான் செருக்கடையவில்லை. வாழ்வதற்குச் சிவபெருமானின் திருவடியன்றி வேறோர் இடமில்லை. அவன் தன்னருளால் நம்முடன் கலந்து நம்மையும் அவன்

வண்ணமாக்கியருளினான். அதனால் நானும் அவனென்று கூறும் அருள் உரிமையையும் பொருளாகப் பெற்றேன். அறியாமை வலுப்பட்டு நிற்கும் மாணவர்களை வலிந்து அழைத்துக் கற்பித்து அறிவுடையவர்களாக்கித் தன்னைப்போல விளக்கமுறச் செய்பவன் பேராசான். அந்நிலையில் அம் மாணவர்களும் அறிவு விளக்கம் விளங்கப் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர். அப்பொழுது அவர்களும் அறிவுடைய ஆசான் என்று அழைக்கப் பெறுகின்றனர். இந்நிலை மேலதற்கு ஒப்பாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

13. ஊழ்

2803. செற்றிலென் சீவிலென் செஞ்சாந் தணியிலென்
மத்தகத் தேயுளி நாட்டி மறிக்கிலென்
வித்தகன் நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தன்மைகுன் றாரன்றே.

"சிவனடியார்களே, திருவருள் வசப்பட்டோர் தங்கள் உடம்புக்கு எது நடந்தாலும் மனதில் 'கவலை' கொள்ள மாட்டார்கள். வீட்டை வாங்கியவன் அதை இடித்துப் புதுப்பிப்பான். அப்போது வீட்டை விற்றவன் எதுவும் நேராததுபோல இருப்பது இதற்கு ஒப்பாகும். முயற்சி செய்யும்போது உண்டாகும் உடல் வருத்தம் பெரிதாகத் தோன்றாமையும் இதற்கு ஒப்பாகும். திருவருளால் மெய்யுணர்ந்து நன்னெறி நான்மைக்கண் நின்று இடையறாது சிவனை நினைக்கும். மெய்யடியார்களை அறியாமையாற் பகைமை பூண்டு அவரைக் கூர்மையான ஆயுதத்தால் தாக்கினால் என்ன அல்லது தாக்காமல் பயமுறுத்தினால் என்ன? அதைவிடப் போற்றிப் புகழ்ந்தாலதான் என்ன? தாக்கினால்தான் என்ன? அவர்கள் நந்தியின் திருவடியை நினைந்து அசையாது நிற்பர். இவைபற்றி அவர்கள் கவலைப்படமாட்டார்கள்"

"சிவனடியார்களே, ரவீந்திரன் உயர் அதிகாரி. சிவனடியான். எப்பொழுதும் நந்தியாகிய சிவனைத் தொழுபவன். அவனைப் பலரும் மதிப்பதைக்கண்டு பொறாமைப்பட்ட கந்தசாமி என்னும் உயர் அதிகாரி மதுவும் பணமும் கொடுத்து அவனைத் தாக்கும்படி கூறினார். அவர்கள் சென்று ரவீந்திரனைப் பொல்லால் தாக்கினர். கூரிய ஆயுதங்களால் தாக்கினர். அவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதும் ஊரே திரண்டு வந்து சேவை செய்தது. கதிரேசன் அவனைப் பார்வையிட வந்தபோது அவனி சொன்னான்; "குருவே, நான் தாக்கப்பட்டபோது உங்கள் வார்த்தைகளைத்தான் நினைத்தேன். பாராட்டும் எதிர்ப்பும் உன்னை எதுவும் செய்யக்கூடாது. பாராட்டுக்களை ஏற்காததுபோல் எதிர்ப்புக்களையும் ஏற்காதே. உன்னைக் கொலை செய்ய வந்தாலும், அது முன்வினைப்பயன் என்று நினைத்து ஆறுதலடை. அதைத்தான் நான் செய்துள்ளேன். என்னைத் தாக்கியோரை எனக்குத் தெரியும். அவர்களைத் தண்டிப்பதால்

எந்தப் பயனும் ஏற்படாது. அவர்கள் உணரவும் மாட்டார்கள் என்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2804. தான்முன்னஞ் செய்த விதிவழி தானல்லால்
வான்முன்னஞ் செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லை
கோன்முன்னஞ் சென்னி குறிவழி யேசென்று
நான்முன்னஞ் செய்ததே நன்னில மானதே.

"சிவனடியார்களே, ரவீந்திரன் கதிரேசனுக்குச் சொன்னான்; "குருவே, உயிர்களின் முன்செய்த வினைக்கீடாகப் பயனைச் சிவபெருமான் வரையறுத்துக் கொடுப்பான். அதுவே விதி என்ற ஊழ். அதையெல்லாம் தெரிந்து கொண்ட நான் யாரையும் குறைப்படாது நன்னெறி நான்மை வழியே சென்று சிவனது திருவடியைப் பணித்தேன். அதனால் எனது உள்ளம் சிவன் தங்கும் திருக்கோவிலானது. நான் யாரையும் குறைகூறவில்லை. எது நடக்க வேண்டுமோ அது சரியாக நடக்கும் என்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2805. ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறி வாரில்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டென் னுள்ளம் பரியகி வாவன்றே.

"சிவனடியார்களே, ரவீந்திரனுடைய விலா எலும்பு உடைந்தமையால் யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியப் பொறுப்பதிகாரி அவனைக் கொழும்பிலுள்ள பெரிய வைத்தியசாலைக்குச் செல்லுமாறு கூறினார். அதனால் நல்லைநாதனும், ரவீந்திரனது குடும்பத்தினரும் பெருங்கவலை கொண்டனர். நல்லைநாதன் மிகவும் துன்பத்துடன் சொன்னான்; "சிவனை வணங்கினால் திருவருளால் தீமைகள் நடைபெறாது என்பார்கள். ரவியைப்போல ஒரு சிறந்த சிவபக்தன் இந்த ஊரில் இல்லை. இருப்பினும் அவனுக்குத் துன்பங்கள் தொடர்ந்து வருகின்றன" என்று கவலைப்படக் கதிரேசன் சொன்னார்; "திருவாணையின்படி அவரவர் செய்த வினைப்பயனை அவரவரே அனுபவிக்க வேண்டும். வினையின் பயன் முற்றாகத் தீர்ந்தால்தான் துன்பங்கள் அகலத் திருவடி ஞானம் கிடைக்கும். அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவித்துத்தான் தீர வேண்டும். உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் இன்பமும் துன்பமும் வரும் போகும். அப்பயனைக் கூறிட்டுக்கொண்டு அனுபவிப்பார் எவரும் இல்லை. அங்ஙனம் அனுவிப்பதும் முறையாகாது. வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது ஆற்றோரங்களில் மேடு பள்ளங்கள் உண்டாகின்றன. அது இயல்பு. அதை நீக்க நீண்ட திருச்சடையை உடைய நந்தியை வழிபட்டு அவனது திருவடியே தஞ்சமென்று இருத்தல் வேண்டும். ரவியைத் தாக்கியோர் அவனைக் கொன்றிருந்தால் என்ன செய்வது? அப்படியான விதி இருந்தாலும் நந்தியின் அருளால் இந்தளவில் முடிந்து விட்டது. எழுதப்பட்ட விதியை அனுபவித்து முடிப்பதுதான் சிறப்பானது. ரவியைத் தாக்கியவர்களை எனக்குத் தெரியும். தாக்கச்

சொன்னவர்களையும் எனக்குத் தெரியும். சிவன் அதைக் கவனிப்பார். கவலைப்படாமல் இருங்கள் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2806. வானின் றிடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானென்றி மாருதஞ் சண்டம் அடிக்கிலென்
நானென்றி நாதனை நாடுவன் நானன்றே.

"சிவனடியார்களே, நல்லைநாதனுக்கும், தனது மனைவிக்கும் ரவீந்திரன் சொன்னான்; "எனக்குப் பெரிதாக எதுவும் நேரவில்லை. வைத்தியர் என்னில் உள்ள அன்பு காரணமாகக் கொழும்புக்குச் செல்லுமாறு கூறுகிறார். முன்பு அவர் என்னிடம் படித்தவர். அதனால் குருவுக்குச் சேவை செய்ய விரும்புகிறார். எனக்கு என்ன நிகழ்ந்தாலும் நான் சிவனை மறக்க மாட்டேன். போர்க்களத்திற்குத் துணிவுடன் செல்லும் போர்வீரனைப்போல எனது மனம் திருவடியையே நாடும். வானம் இடிந்து விழுந்தாலென்ன, கடல் பொங்கி நாட்டுக்குள் நுழைந்தாலென்ன, ஊழிக்காற்று வீசினாலென்ன, பெருந்தீமூண்டு எரிந்தாலென்ன, உலகம் முழுவதும் அழிந்தாலென்ன நான் சிவளைன மறக்க மாட்டேன். என்போன்ற மெய்யடியார்களும் மறக்கமாட்டார்கள். நான் சிவனின் அடிமை. சிறுவயதில் வறுமையால் துன்பப்பட்ட எனது தந்தை என்னைக் கூலி வேலை செய்ய அனுப்பினார். சிவன், கதிரேசனின் உருவில் வந்து என்னை ஆட்கொண்டு உயர்ந்த பதவியையும், கௌரவத்தையும், மதிப்பையும், மரியாதையையும் பெற்றுத் தந்தார். முற்பிறப்பில் நான் அறிந்தோ, அறியாமையோ செய்த வினை காரணமாக இத்துன்பம் வந்து என்னைத் திருவடியில் சேர்க்க முற்படுகிறது. அதுதான் உண்மை. இதை நீங்கள் உணர வேண்டும் என்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2807. ஆனை தூக்கிலென் அம்பூ டறுக்கிலென்
கானத் துழுவை கலந்து வளைக்கிலென்
ஏனைப் பதியினில் எம்பெரு மான்வைத்த
ஞானத் துழவினை நானுழு வேனன்றே.

"சிவனடியார்களே, ரவீந்திரன் இவ்வாறு கூற உணர்ச்சி வசப்பட்ட கதிரேசன் சொன்னார்; "மகனே உன்னைநான் அறிவேன், மெய்யடியார் அல்லாதோர் ஒரு சிறு துன்பம் வந்தாலும் அதைப் பொறுக்கமாட்டாது தாம் செய்த புண்ணியங்களைக் கூறி அவற்றைச் சிவன் கவனிக்கவில்லை என்று ஏசுவர் அல்லது அழுவர். சுடச்சுடப் பொன் ஒளிரும். கரும்பை பிழிந்தால்தான் இனிமையான சாறு வரும். யாவும் துன்பத்தின் பின்புதான் இன்பமாகும். இதைப் புரிந்தவன் நீ. மதம் கொண்ட யானை உன்னைக் கொல்ல வந்தாலும், கூரிய ஆயுதங்கள் நெஞ்சினுள் செலுத்தி அறுத்தால் என்ன? காட்டுப்புலி உன்னை வளைத்துப் பிடித்தாலென்ன? உனது சிவத்தொண்டுகளை நீ கைவிடாய் என்று எனக்குத் தெரியும். சிவசக்தி உனது நெஞ்சில் உறுதியாக இருக்கிறது. அது சலனப்படாது, அச்சப்படாது என்று எனக்குத் தெரியும். நீ இந்த நிலையிலும் ஆச்சிரமத்தில் நடைபெற வேண்டிய பணிகளை மறவாது கவனித்துச்

செய்கிறாய். அதற்கான துணிவு உன்னிடம் உள்ளது என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2808. கூடு கெடின்மற்றோர் கூடுசெய் வானுளன்
நாடு கெடினும் நமர்கெடு வாரில்லை
வீடு கெடின்மற்றோர் வீடுபுக் கால்ஒக்கும்
பாடது நந்தி பரிசறி வார்கட்கே.

"சிவனடியார்களே, கூடு பழுதடைந்தால் இன்னொரு கூடு அமைப்பது மக்களினது வழக்கம். அதுபோல இவ்வுடம்பு கெட்டுப்போனால் வினைக்கீடாக மற்றொரு உடம்பினைச் சிவபெருமான் தந்தருள்வான். அவ்வாறு புதிய உடல் கிடைக்கப் பெறினும் ஆருயிர் பழைய உயிரேயாகும். உயிர் படைக்கப்படுவதில்லை. ஒரு நாட்டில் அழிவு ஏற்பட்டால் அந்நாட்டவர் இன்னொரு நாட்டிற்குச் செல்வதை இதற்கு ஒப்பிடலாம். அதுபோல வசிக்கும் வீடு அழிந்துபோனால் புது வீடு அமைப்பதையும் இது ஒக்கும். பேரருள் மிக்க நந்தியின் அருளால் மெய்யுணர்வு பெற்றவர்கள் இதை உணர்வர். இவற்றையெல்லாம் ரவீந்திரனும் கதிரேசனும் அறிந்து வைத்துள்ளனர். ஒருவனது பணபலத்திற்கேற்ப அவன் வீட்டை அமைப்பான். அதுபோல ஒருவனது சிவபக்திக்கேற்ப அவனுக்கு நல்ல உடல் கிடைக்கும். ரவீந்திரன் கதிரேசனுக்குச் சொன்னான்; "குருவே, எமது நிலைபற்றி அறிந்தவர்களுக்குத்தான் தெரியும். நான் தாக்கப்பட்டதால் மிகவும் துக்கப்படுகிறேன். ஆனால் கவலைப்படவில்லை. இந்த உடம்பு போனால் சிவன் இன்னொரு உடம்பைத் தருவான். அது நல்ல உடம்பாக இருக்க வேண்டுமானால் சிவனின் திருவருள் அதிகம் இருத்தல் வேண்டும். அதற்காகத்தான் மனிதர்களைச் சிவவாழ்வு வாழும்படி எமது சமயம் கூறுகிறது. உயிர் அழியாதது. அது சிவனை அடைந்து பிறவாத நிலை எய்தி அவருடன் இருக்கும். இல்லாவிட்டால் வினைக்கீடாகப் பிறக்கும். இவ் இரண்டு நிலையும் சிவனால் வருவது. அதனால் சிவனை வணங்கும் நான் கவலைப்படமாட்டேன். நான் இறந்தாலும் எனது குடும்பத்தைச் சிவபெருமான் பராமரிப்பான் என்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

14. சிவதரிசனம்
(சிவக்காட்சி)

2809. சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படுஞ்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானன்றே.

"சிவனடியார்களே, கதிரேசன் ரவீந்திரனது மனைவிக்குச் சொன்னார்; "மகளே, உனக்கு ஏற்பட்டது பெருந்துன்பம். அதனால் நீ சிவன்மீது வெறுப்படைந்துள்ளாய்.

சிவனருள் பெற்றோர் எதையும் தமதாக மதிக்கமாட்டார். அதனால் தான் ரவீந்திரன் தனது உடம்மை மதிக்கவில்லை. உலகில் உள்ள எல்லாவற்றிற்கும் நல்லகாலம், கெட்டகாலம் என இரண்டும் உண்டு. பூமியை எடுத்துப் பார்த்தால் மழையாலும் அழியும். மழை பெய்யாவிட்டாலும் அழியும். அரசனது சிம்மாசனம் அரசனெனவே மதிக்கப்படும். அதுபோல கொற்றம் தரும் முரசுக் கட்டில் கொற்றவை என்றே மதிக்கப்படும். இம்முறையில் சிவபெருமானை இடையறாது நினைக்கும் சிந்தை சிவனெனவே மதிக்கப்படும். பாலை வைக்கும் கலனும் பால்போல் மதிக்கப்படும். அதுபோலவே உயிருள்ள உடம்பும் உயிர்போல மதிக்கப்படும். அவ்வாறு மதிக்கப்படும் உயிர் திருவைந்தெழுத்தினை இடையறாது ஓதி வருமானால், சிவன் அதில் வெளிப்பட்டருள்வன். அதைத் திருவருளால்தான் உணர முடியும். அதை ரவீந்திரன் உணர்ந்தமையால் என்னை யாரும் தாக்க முடியாது. என்னைத் தாக்குவதாக எண்ணி என்னுள் இருக்கும் சிவனைத் தாக்கியுள்ளனர். அதனால் இது சிவன் சம்பந்தப்பட்ட விடயம். அதனால் தான் நான் காவல்துறைக்குச் செல்லவில்லை. என்னைத் தாக்கச் சொன்னவரையும், தாக்க வந்தவர்களையும் ஊரவர் பிடித்துத் தாக்கிவிட்டுக் காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர். எல்லாவற்றையும் சிவன் கவனிப்பாரென்று ரவீந்திரன் நினைக்கிறான். அதனால் கவலைப்படாமல் இரு என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2810. வாக்கு மனமு மறைந்த மறைப்பொருள்
நோக்குமின் நோக்கப் படும்பொருள் நுண்ணிது
போக்கொன்று மில்லை வரவில்லை கேடில்லை
ஆக்கமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே.

"சிவனடியார்களே, கதிரேசன் அப்படிக் கூறியும் ரவீந்திரனது மனைவியின் மனம் சமாதானமடையவில்லை. பிடிபட்டவர்கள் செல்வந்தர்களாகையால் இலஞ்சம் கொடுத்துத் தப்பி விடுவார்கள் என நினைத்தாள். அதை உணர்ந்த கதிரேசன் சொன்னார்; "மகளே, சாதாரணமான ஒரு மனிதன் அல்ல ரவீந்திரன். அவன் உயர் அதிகாரி. மக்களால் விரும்பப்படுபவன். அதைவிட அவன் ஒரு சிவபக்தன். சிவன் தனது பக்தர்கள் துன்பமடைய விடமாட்டார். திருவருளால் அவனை நோக்குபவர்களை அருளால் வலுப்படுத்துபவன். அவன் இடம்விட்டு இடம் நகரும் போக்குவரத்து இல்லாதவன். இருந்த இடத்தில் இருந்து கொண்டே எல்லா உலகிலும் நடப்பவற்றை அவதானித்து அதற்கேற்ற வகையில் நடந்து கொள்பவன். அவன் என்றும் ஒன்றுபோல நின்று இயக்கும் மறைவாணன். பிறப்பும் இறப்பும் இலலாதவன். அவனை நினைத்து திருவடியுணர்வில் நிற்பவர்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பவன். அதனால்தான் ரவீந்திரனைத் தாக்கியவர்கள் செல்வாக்குள்ளவர்களாக இருந்தபோதும், அவர்களால் பிணையில் செல்ல முடியவில்லை. செல்லவும் மாட்டார்கள் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2811. பரனாய்ப் பராபர னாகிய பாற்சென்று
உரனாய் வழக்கற வொண்சுடர் தானாய்த்

தரனாய்த் தனாதென வாறறி வொண்ணா
அரனா யுலகில் அருள்புரிந் தானே.

"சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; "மகளே சிவபெருமான் மேலோராய் உள்ளோர்க்கெல்லாம் மேலோனாய் உள்ளவன். இயற்கையாகவே பேரறிவும் பேராற்றலும் உடையவன். எல்லாம் தம் செயல்களை இழந்த காலத்தும் சிவன் எதையும் இழக்காது எல்லா வல்லமையும் பூரணமாக உள்ளவன். எல்லாவற்றையும் தாங்குபவன். ஆறறிவுள்ளவர்களாலும் அறியமுடியாத மேலோன் அவன். அவன் சிவனடியார்களுக்கு எளியவன். அவர்களது மனதில் கோவில் கொண்டிருப்பவன். அதனால் தான் தீயவர்கள் தண்டிக்கப்படுகின்றனர். கல்வி அமைச்சர் ரவியைத் தாக்கியவர்களுக்குப் பிணை வழங்கக்கூடாது என்று அறிவித்துள்ளார். ஒரு சிவபக்தன் மனதால் கூடப் பாதிக்கப்படுவதைச் சிவன் விரும்பமாட்டான். இச்சம்பவத்தின் மூலம் பலகாலம் செய்யக் கூடாதவற்றையெல்லாம் செய்தவர்கள் தண்டிக்கப்படப் போகிறார்கள் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

15. சிவசொரூப தரிசனம்

(சிவ இயல்புக் காட்சி)

2812. **ஓதும் மயிர்க்கால் தொறுமமு தூறிய**
பேதம் அபேதம் பிறழாத ஆனந்தம்
ஆதி சொரூபங்கள் மூன்றகன் றப்பாலை
வேதம தோதுஞ் சொரூபிதன் மேன்மையே.

"சிவனடியார்களே, சிவபெருமான் அளித்தருளும் திருவடிப் பேரின்பம் வேறுபட்டிருக்கும் என்றும், ஒன்றாய்க் கலந்து ஒழிந்துவிடும் என்றும் கூறுவதற்கு எச் சான்றும் இல்லை. மாறுபடாது என்றும் ஒன்றுபோல வேறற ஆருயிர்களுடன் கலந்து நிற்கும் இயல்பினது. ஒவ்வொரு மயிர்க்கால் தோறும் அப்பேரின்ப அமுது அளவிறந்து ஊறித் தெவிட்டாத பேரின்பம் தேங்கிடச் செய்யும். உருவம், அருவம், அருவுருவம் என்ற திருவுருவங்கள் மூன்றும் கடந்து இன்னதன்மையது என்று எவராலும் சொல்ல முடியாத இயற்கை உண்மை அறிவு இன்ப வடிவினன் சிவன். இதுவே திருமறைகள் ஓதும் திருவுருவ மேன்மையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2813. **உணர்வும் அவனே உயிரும் அவனே**
புணர்வும் அவனே புலவி யவனே
இணரும் அவன்தன்னை என்னலு மாகான்
துணரின் மலர்க்கந்தத் துன்னிநின் றானே.

"சிவனடியார்களே, ஆருயிர்களின் உணர்வும் அவனே, உயிரும் அவனே, புணரும் புணர்வும் அவனே, நெஞ்சத் தாமரையாகிய உள்ளத்தின்கண் இடையறாது வீற்றிருந்து அருள்கின்றவனும் அவனே" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2814. இணங்க வேண்டா இனியுல கோருடன்
நுணங்கு கல்வியும் நூல்களும் என்செயும்
வணங்க வேண்டா வடிவை யறிந்தபின்
பிணங்க வேண்டா பிதற்றை யொழியுமே.

"சிவனடியார்களே, திருவடியுணர்வுள்ளவர்கள் உலகோடு சேரார். கல்வியும் நூல்களும் சிவனுடன் புணர்ந்தவர்களுக்குப் பயன்படாது. ஏனையோர்க்கு வழிகாட்டும். அவை வழிகாட்டிச் சிவனின் திருவடியை அடைந்தவர்களுக்குப் பின் அவை பயனளியாது. அதுபோலத் திருவடியை அடையமுன் செய்த வணக்கங்கள், வழிபாடுகள் பின் பயனற்றுப்போகும். இவ் உண்மையை உணராது பிணங்குபவர்கள் பலர். பிதற்றுவாரும் பலர். அவர்கள் பிணங்குவதையும், பிதற்றுவதையும் ஒழித்தல் வேண்டும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2815. துன்னிநின் றான்தன்னை யுன்னிமுன் னாவிரு
முன்னி யவர்தங் குறையை முடித்திடும்
மன்னிய கேள்வி மறையவன் மாதவன்
சென்னியுள் நின்றதோர் தேற்றத்த னாமன்றே.

"சிவனடியார்களே, திருவருளால் உன்னைவிட்டு நீங்காது உன்னுடன் ஒட்டி நிற்கும் சிவபெருமானைக் கனிந்த மனத்தால் நினைத்து அவனது திருவருளை மறவா நினைவுடன் இருப்பாயாக. சிவபெருமான் எம் அகத்தே இருப்பதுபோலப் புறத்தேயும் இருக்கிறான் என்று உணருதல் வேண்டும். அவன் தன்னை நினைப்பவர்களது குறைகளைப் போக்குபவன். அவனது திருவைந்தெழுத்தை முறைப்படி கணிப்பவன் பெருந்தவத்தோனாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2816. மின்னுற்ற சிந்தை விழித்தேன் விழித்தலுந்
தன்னுற்ற சோதித் தலைவன் இணையிலி
பொன்னுற்ற மேனிப் புரிசடை நந்தியும்
என்னுற் றறிபவன் என்விழித் தானன்றே.

"சிவனடியார்களே, திருவருளால் விளக்கம் மிக்க என் அகக்கண் திறக்கப்பட்டது. அதனால் சிவன் அடியேனை ஆட்கொண்டான். அச்சிவபெருமானே ஒப்பில்லாத தலைவனாவான். செம்பொன் போன்ற திருமேனியையும், பின்னிய சடையினையும் உடையவன். அவன் என்னை முழுமையாக அறிந்து கொண்டவன். அவன் நந்தி என்னும் திருப்பெயரை உடையவன். நந்தியின் நாமம் 'நமசிவய' என்பதாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2817. சத்திய ஞானத் தனிப்பொருள் ஆனந்தஞ்
சித்தத்தி னில்லாச் சிவானந்தப் பேரொளி
சுத்தப் பிரம துரியந் துரியத்துள்
உய்த்த துரியத் துறபே ரொளியன்றே.

"சிவனடியார்களே, சித்தம் என்ற இறுப்பின் கண் நில்லாத சிவப் பேரின்ப ஒளி அவன். திருவருட் செயலறலாகிய துரியம் சுத்தம் பிரமத்துரியம் எனப்படும். அத்துரியத்துள் செலுத்திய மற்றொரு செயலறல் உய்த்துரியமாகும். அத்துரியத்துள் மிக்கபேரொளியாக இருப்பவன் சிவன். இத்துரியம் அருளோன் செயலறல் எனப்படும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2818. பரனல்ல நீடும் பராபர னல்ல
உரனல்ல மீதுணர் ஒண்சுட ரல்ல
தரனல்ல தானவை யாயல்ல வாகும்
அரனல்ல ஆனந்தத் தப்புறத் தானே.

"சிவனடியார்களே, செம்பொருள் பரன் அல்ல. அதனிலும் சிறந்த நிலைபேறுள்ள பராபரனும் அல்லன். பேரறிவுப் பேராற்றல் வாய்ந்த பெரும் பொருளும் அல்லன். புணர்ப்பாய் நின்று மேலுணரும் ஒண்சுடரும் அல்லன். அனைத்தையும் தாங்கும் அரும் பொருளுமல்லன். அவை அனைத்தும் அல்லவர்க்கும் அரனல்லன். திருவருளின்பமும் அல்லன். அவன் எல்லாவற்றிற்கும் அப்புறத்தாக நிற்கும் செப்பம்சேர் ஒப்பில்லாத ஒரு பெரும் பொருளாவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2819. முத்தியுஞ் சித்தியும் முற்றிய ஞானத்தோன்
பத்தியுள் நின்று பரந்தன்னுள் நின்றுமா
சத்தியுள் நின்றோர்க்குத் தத்துவங் கூடலாற்
சுத்தி யகன்றோர் சுகானந்த போதரே.

"சிவனடியார்களே, முத்தியாகிய வீடும், சித்தியாகிய பேறும் கைவரப் பெற்ற ஆருயிர் ஞானத்தோன் ஆவன். திருவடியுணர்வு வந்து சேர்ந்தபின்பு பேரன்பான பக்திநிலை கைகூடும். அப் பக்தியில் நிற்போரே பரத்துள் நிற்பர். பின் திருவருள் பெருந்திருவுள் நிற்பர். அவ்வாறு நிற்கும் மெய்யுணர்ந்தோருக்குச் சிவன் காட்சியளித்து ஏற்றுக் கொள்வான். அதனால் பொருள் அருள் தூய்மையும் அகன்றோராவர். அவர்களே பேரின்பப் பேரறிவினராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2820. துரிய அதீதஞ் சொல்லறும் பாழாம்
அரிய துரியம் அதீதம் புரியில்
விரியுங் குவியும் விள்ளா மிளிருந்தன்

உருவுந் திரியும் உரைப்பதெவ் [2]வாறே.

"சிவனடியார்களே, செயலறலாகிய துரியமும், நினைவு அறுதலாகிய துரியாதீதமும் இத்தன்மையது என்று எவராலும் சொல்லமுடியாத பாழாகும். அப்பால் நிலையாகிய துரியாதீதம் உயிர்ப்பு அடங்கலாகும். அந்நிலைமையை எய்தினால் விரித்தலாகிய நினைப்பும், குவித்தலாகிய மறப்பும் உண்டாகாது. ஆருயிர்களின் சுட்டறிவும் சிற்றறிவும் பேரறிவாகத் திரிந்து விளங்கும். அதனால் சிவபெருமான் அவ்வுயிரைத் தானாக்கி நின்றருள்வன். அந்நிலையைச் சொல்லால் சொல்லி முடிக்க முடியாது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

16. முத்தி பேதம், கரும நிருவாணம்
(வழிப்பேறும், விழுப்பேறும்)

2821. ஓதிய முத்தி யடைவே உயிர்பர
பேதமி லச்சிவம் எய்துந் துரியமொடு
ஆதி சொரூபஞ் சொருபத்த தாகவே
ஏதமி லாநிரு வாணம் பிறந்ததே.

"சிவனடியார்களே, சிறப்பித்துச் சொல்லப்படும் வீடுபேறானது முறையாக ஆருயிரும், பேரருளும், பெரும் பொருளும் என்னும் செயலறலாகிய துரியத்தின் கண் எய்தும். இவர்களை ஆருயிர், அருள், அருளோன் எனவும் கூறுவர். இம் மூன்றும் வேறுபாடின்றி ஒருமையாக நிற்றால் ஆருயிரின் நீங்கா இயற்கை உண்மை தோன்றும். அ.்.து சிவத்துடன் கூடுவதாகும். இந்நிலையே குற்றமில்லாத பேற்று நிலையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2822. பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்
கற்றற் றவர்கற்றுக் கருதிய கண்ணுதல்
சுற்றற் றவர்சுற்றி நின்றஎன் சோதியைப்
ஏதமி லாநிரு வாணம் பிறந்ததே.

"சிவனடியார்களே, பற்றற்றவர்கள் பற்றி மீளாத அடிமையாக நிலைத்து நிற்கும் நிலைக்களப் பொருள் சிவபெருமானாகிய பரம்பொருள். அவனே மெய்யடியார்கள் வல்லமை உள்ளவர்களாகக் கருதும் கண்ணுதளாவன். மெய்யடியார் திருக்கூட்டம் சூழ்ந்து சிவ ஒலியுடன் நின்றருளும் பேரறிவுப் பேரொளிப் பிழம்பும் அவனே. அவனது திருவடியை அருளால் பெற்றவர்கள் மாறுபாடுடைய பிதற்றல்களை ஒழித்தவராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2823. சித்தஞ் சிவமாம் [1]சிவஞானி சேர்விடம்
சத்தச் சிவாலயம் தொல்பாச நாசமாம்
அத்த மழையகம் ஆனந்த மேலிடும்
முத்தம் பெருகும் முழுப்பொரு ளாகுமே.

"சிவனடியார்களே, மறவாத நினைவால் சிவனை நினைப்பவர்கள் சிவஞானியாவார். அவர் சேரும் திருவிடம் இயற்கை உண்மை அறிவுப் பெருங்கோவிலாகும். அக்கோவிலைப் பற்றிக் கேட்டாலும், கண்டாலும் நாட்டமுற்று வழிபட்டாலும் பழ மலங்களெல்லாம் அழித்தடங்கும். பேரூழிக்கால மழைவெள்ளம்போல திருவடிப் பேரின்பம் மிகும். மனதில் பேரின்பம் உண்டாகும். அவ்வுயிர் சிவனைச் சார்ந்தமையால் முழுப்பொருளான விழுப்பொருளாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2824. ஆணவ மூலத் தகார முதித்திடப்
பேணி யுகாரங் கலாதி பிறிவிக்கத்
தாணு மகாரஞ் சதாசிவ மாகவே
ஆணவ பாச மடர்தல்செய் யாவன்றே.

"சிவனடியார்களே, மூலாதாரத்தில் இருந்து அகரம் தோன்றுகிறது. அங்கிருந்தே ஆணவ மூலமும் தோன்றுகிறது. ஆருயிர் அகரநிலையில் நின்றால் ஆணவம் அடங்கிவிடும். உகாரம் பேணி ஒன்றாம் கலாதியினைப் பிறிவித்திடும். மகரம் தாணுவாகக் காணப்படும் சதாசிவமாக நின்று எல்லாவற்றையும் ஒடுக்கி அருள் புரியும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2825. நெற்றி நடுவுள் நினைவெழு கண்டமும்
உற்ற விதையமு மோதிய நாபிக்கீழ்ப்
பெற்ற துரியமும் பேசிய மூலத்தே
உற்ற அதீதம் ஒடுங்கும் உடனன்றே.

"சிவனடியார்களே, நெற்றியின் நடுவுள் வெளிப்படும் நினைவு நனவாகிய சாக்கிரமாகும். கண்டமாகிய கழுத்தின்கண் எழும் நினைவு ஆகிய கனவு உண்டாகும். இது சொப்பனம் எனப்படும். பொருந்திய நெஞ்சத்திடத்து உறக்கம் எனப்படும் சுழுத்திநிலை உண்டாகும். கொப்பூழின்கீழ்ப் பேருறக்கமாகிய துரியநிலை உண்டாகும். மூலத்திடத்து உயிர்ப்படங்கலாகிய துரியாதீதநிலை உண்டாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

17. மறைப்பொருட்கூற்று

2826. காயம் பலகை கவறைந்து கண்மூன்றாய்
ஆயம் பொருவதோர் ஐம்பத்தோ ரக்கரம்
ஏய பெருமா னிருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப்பறி யேனன்றே.

"சிவனடியார்களே, உடம்புடன் கூடிய உயிரின் வாழ்க்கை சூதாட்டம் போன்றது. உடம்பு பலகையாகவும், ஐம்புலன்களும் கருவிகளாகவும், வலம், இடம், புருவநடு என்னும் மூன்றும் இடமாகவும், ஐம்பத்தொரு எழுத்துக்களும் சூதாடும் காய்கள்

நிரப்பும் அறையாகவும்,கொண்டு என்றும் ஆருயிருடன் பிரிப்பின்றி நின்று பொருந்தி அருள் செய்யும் சிவபெருமான் ஆருயிர்களைக் கையாளாக வைத்து கவறாடாகின்றான். இத்தகைய மாயக் கவற்றின் வழிச் செய்யும் அவன் தன் மறைப்பாற்றலின் பண்பை அறிவேன் என்கிறார் திருமூலர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2827. தூறு படர்ந்து கிடந்தது தூநெறி
மாறிக் கிடக்கும் வகையறி வாரில்லை
மாறிக் கிடக்கும் வகையறி வாளர்க்கு
மாறிக் கிடந்ததென் உள்ளன்பு தானன்றே.

"சிவனடியார்களே, ரவீந்திரனைத் தாக்கியதாகக் கைதுசெயப்பட்ட சிவபாலன் என்னும் ஆசிரியரின் தந்தை பரமேஸ்வரன் கதிரேசனிடம் வந்து சொன்னார்; "ஐயா ரவீந்திரனைப் போல ஒரு நல்ல நிர்வாகியை நான் கண்டதில்லை. சிவபக்தனான அவன் எல்லோரினதும் விருப்பறிந்து செயலாற்றுபவன். மேலதிகாரியான கந்தசாமிக்குத் தன்னை யாரும் மதிப்பதில்லை என்ற கவலை உள்ளூர இருந்தது. அதனால் மதுவைக் குடிக்கும் அவர் மதுவை வாங்கிக் கொடுத்து எனது மகனையும் பாழாக்கி விட்டார். உயர் அதிகாரியான அவர் அறிவில்லாதவர்கள் போன்று நடந்து கொள்கிறார். கல்வி அறியாமையைப் போக்க வேண்டும். காமம், வெகுளி, மயக்கம் என்று சொல்லப்படும் தடைகளாகிய சிறு சிறு செடிகள் உள்ளத்தில் முளைக்காதிருத்தல் வேண்டும். முளைத்தால் அவற்றைத் திருவருளால் நீக்கித் தூய சிவநெறியின் வழி நிற்க வேண்டும். இதைப் படித்தவர்கள் உணர்கிறார்களில்லை. அவற்றை நீக்கி நன்னெறியில் வாழும் வாய்மையாளர்களுக்குச் சிவன் வெளிப்பட்டருள்வன் என்றும் உணர்கிறார்களில்லை. இரவு முழுவதும் எனது மகனின் வீட்டிற்கும், கந்தசாமியின் வீட்டுக்கும் கல் வீசினார்கள். காவல்துறை அதிகாரியின் மகன் ரவீந்திரனின் மாணவன். அத்துடன் உயர் அதிகாரிகளாக இருப்பவர்கள் ரவீந்திரனின் நல்ல நண்பர்கள். அதனால் வீட்டைவிட்டு வெளியெ வரமுடியவில்லை. தங்களை மக்கள் சிவனென்றே நினைக்கின்றனர். அதனால் அவனை மன்னியுங்கள். நீங்கள் மன்னித்தால் சிவன் உட்பட அனைவரும் மன்னிப்பார்கள் என்று அழுதவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2828. ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியிற்
சாறு படுவன நான்கு பனையுள
ஏறற் கரியதோர் ஏணியிட் டப்பனை
ஏறலுற் றேன்கடல் எழுங்கண் டேனன்றே.

"சிவனடியார்களே, உடம்பின் அகத்தே ஆறு நிலைகள் உள்ளன. இவற்றை ஆறு ஆதாரங்கள் என்பர். அவை மூலம், கொப்பூழ், மேல்வயிறு, நெஞ்சு, மிடறு, புருவநடு என்பர். இவற்றின் சந்தியாக விளங்கும் மூலாதாரத்தில் நான்கு பனைகள் உள்ளன. அவை தேனைப்போல இனிமைதரும் சாறு மிக்கன. பனை என்பது மூலாதாரத்தில் காணப்படும் நான்கு இதழ்களைக் கொண்ட தாமரை ஆகும். அதை

ஏணி வைத்து எட்ட முடியாது. ஆனால் அகக்காலால் எட்ட முடியும். அவ் ஏணியின் உதவியால் அப்பனது திருவடியை அடைந்தேன். அதனால் எனது ஏழு பிறவிகளும் நீங்கியது என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2829. வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே.

"சிவனடியார்களே, அருளால் அகத்தவமாகிய யோகப் பயிற்சியினை மேற்கொண்டேன். அதனால் பற்றுறுதி என்று சொல்லப்படும் வைராக்கியம் உண்டானது. அத்துடன் தத்துவங்களாகிய மெய்யினை ஆராயத் தொடங்கினேன். இவ்வாராய்ச்சியின் பயனாகப் பூசணியாகிய சிவம் பூத்தது. தோட்டக் குடிகளாகிய ஐவரும் தொண்ணூற்றறுவரும் அதனைக் கண்டு தொழுது கொண்டாடினர். திருவடிப் பேறாகிய வாழைக்கனி நன்கு பழுத்து விழுப்பயனானது என்று திருமூலர் சொல்கிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2830. ஐயென்னும் வித்தினில் ஆனை விளைப்பதோர்
செய்யுண்டு செய்யின் தெளிவறி வாரில்லை
மையணி கண்டன் மனம்பெறின் அந்நிலம்
பொய்யொன்று மின்றிப் பகளெளி தாகுமே.

"சிவனடியார்களே, ஐம்பூதங்களின் செயற்கையால் அமைந்த இவ்வுடம்பான வித்தினை விதைக்கும் செய்நடப்பாகிய மறைப்பாற்றலாகும். அவ்வித்தினிடமாவிருந்து ஆணை என்று சொல்லப்படும் ஆருயிரின் தொழிற் தெளிவை அறிவாரில்லை. உண்மைத் தெளிவென்பது ஆருயிர்கள் அவ்வித்தினிடத்துக் கொள்ளும் மயக்கம் நீங்கிச் சத்தாகிய சிவத்திடம் கொள்ளும் அன்பு ஓங்கி வளருமாறு செய்வதேயாகும். அதையே மனம் குறிப்பாகக் கொள்ளல் வேண்டும். அதுதான் தியானமாகும். தெளிவு என்பது உண்மையை உணர்வதாகிய தூய்மையின் தன்மை. அப்பொழுது அந் நடப்பாற்றலாகிய அந்நிலம் மெய்யாகவே ஆருயிர் எளிதில் புகத்தகும் சீரிடமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2831. பள்ளச்செய் ஒன்றுண்டு பாழ்ச்செய் இரண்டுள
கள்ளச்செய் யங்கே கலந்து கிடந்தது
உள்ளச்செய் யங்கே உழசெய் வார்கட்கு
வெள்ளச்செய் யாகி விளைந்தது தானன்றே.

"சிவனடியார்களே, பள்ளச் செய் என்று சொல்லப்படும் செயலறலாகிய உறக்கநிலை ஒன்று உண்டு. அதன்மேல் பாழ்ச் செயலாகிய இன்பமில்லாத கனவும் நனவும் இரண்டுண்டு. அவற்றுடன் சிவபெருமானும் கலந்து நிற்கின்றனன். இம்மூன்று நிலையிலும் ஆருயிர்களின் மனமாகிய வயலின்கண் மெய்யாகிய தத்துவ ஆராய்ச்சி

என்னும் உழவினைச் செய்தல் வேண்டும். அவ்வுழவைச் செய்தவர்க்கு திருவருள் விளைந்து கைகூடும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2832. மூவணை யேரு முழுவது முக்காணி
தாமணி கோலித் தறியுறப் பாய்ந்திடும்
நாவணை கோலி நடுவிற் செறுவுழார்
காலணை கோலிக் களருழு வாரன்றே.

"சிவனடியார்களே, இடப்பால் நாடி, வலப்பால் நாடி, நடுநாடி என்று சொல்லப்படும் மூன்று நாடிகளையும் மூவளை என்பர். அவற்றின் கண் பயிலப்படும் உயிர்ப்பு ஏராகும். அவ் ஏரினால் உழப்படும் நிலம் மூலாதாரமாகும். அம் மூலாதாரம் முக்கோண வடிவினையுடையது. அதனால் அதனை முக்காணி என்பர். அவ் உயிர்ப்பினை முறையாக நிறுத்தினால் நடுநாடியாகிய தனியுறப்பாய்ந்திடும் நாவினை மேல்நோக்கி எழுப்பி உண்நாக்கையொட்ச் சிறு தொளையினை அடைப்பர். அதனால் அறுபகைகளும் இல்லாத அகத்தவம் எனப்படும் யோகவயலைச் சிலர் பயிலுவதாகிய உழவினைச் செய்வதில்லை. இவ்வாறு நன்னெறிப்படாதவர்கள் பிறப்பு இறப்பாகிய பிணிப்பால் விலங்குகளைக் காலில் கட்டிக் கொண்டு பயனில்லாத பிறவி என்ற நிலத்தை உழுவர். அதனால் மீண்டும் மீண்டும் பிறப்பேற்படும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2833. ஏற்றம் இரண்டுள ஏழு துரவுள
மூத்தான் இறைக்க இளையான் படுத்தநீர்
பாத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடிற்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாகுமே.

"சிவனடியார்களே, இடப்பால் நாடியாகிய இடகலையும், வலப்பால் நாடியாகிய பிங்கலையும் ஆகிய இரண்டையும் ஏற்றம் என்பர். மூலமுதலாய நிலைக்களம் ஆறும், ஆயிரம் இதழ்த் தாமரையாகிய உச்சித் தொளை ஒன்றும் ஆகிய ஏழும் துரவுகள் எனப்பட்டன. மூத்தான் என்று சொல்லப்படும் இடப்பால் நாடியாகிய சந்திகலை வாயிலாக விடுத்தலைச் செய்யும் மூச்சு இறைத்த நீர் எனப்பட்டது. இளையான் என்று சொல்லப்படும் வலப்பால் நாடியாகிய பிங்கலை வாயிலாக எடுத்தலைச் செய்யும் மூச்சு படுத்த நீர் எனப்படும். அவ்வுயிர்ப்பு நடுநாடியின்கண் தடுத்தலைச் செய்து நிறுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யாது மீண்டும் விடுத்தலையே புரிந்தால் அது வீணாகப் பாய்ந்து போகும். அங்ஙனம் பாய்ந்து போனால் அது செயல் உத்தி வளத்தோர் கோழில்புள்ளாமே என்பதற்கு ஒப்பாகும். இது தந்தையார் இன்னாரென முடிவெடுக்க முடியாத பிள்ளையைக் குறிக்கும். மேலும் ஆடவரால் வீணாக வெளிப்படுத்தப்படும் விந்து ஆருயிர் வித்தாகும். அது விலை மதிப்பில்லா பெரும் முதலாகும். அறியாமையால் சிலர் அதன் முக்கியத்துவம் புரியாது வீணாக்குகின்றனர்"

“சிவனடியார்களே, திருமகள் என்றொரு பெண் இருந்தாள். அவளது கணவன் திருமணமான சில நாட்களில் அவளைவிட்டு விட்டுச் சென்றுவிட்டான். அதனால் அவளுக்குப் பல ஆண்களின் தொடர்பு ஏற்பட்டது. நக்கீரன் என்பவனின் மனைவி இறந்துபோனாள். அதனால் அவன் திருமகளிடம் சென்று வந்தான். அவன் அங்கிருக்கும்போது பல ஆண்கள் வந்து போவார்கள். நக்கீரன் தனவந்தன். அழகானவன். அவன் வரும்போது அங்கிருக்கும் பலர் சென்று விடுவர். திருமகள் ஒவ்வொருவரையும் தனது இரத்த உறவினர் என்பாள். கணவன் இல்லாததால் தனக்கு உதவி செய்ய அவர்கள் வருவதாகக் கூறுவாள். ஒரு நாள் நக்கீரன் அவளுடன் இன்னொருவன் இருப்பதைக் கண்டு பயந்து போனான். பின் அவன் விசாரித்ததில் அவளுக்குப் பல ஆண்களுடன் உறவு இருப்பது தெரிந்தது. அதனால் அவன் அங்கு வருவதை நிறுத்திக் கொண்டான். சில மாதங்களானபின் திருமகளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்குத் தகப்பன் நக்கீரன் என்று அவள் கதிரேசனுக்குச் சொன்னாள். கதிரேசனுக்கு யாவும் தெரியும். அதனால் அவர் நக்கீரனை அழைத்துச் சொன்னார்; “மகனே, நீ படித்தவன். பண்பான குடும்பத்தில் பிறந்தவன். அப்படியான ஒருவன் மிகக் கேவலமான பெண்ணோடு தொடர்பு கொள்ளலாமா? விந்து என்று சொல்கின்ற உயிர் அணுவைப் பலர் அதன் பெறுமதி தெரியாது வீணாக்குகிறார்கள். நல்லதொரு மகப் பேற்றிற்காகக் காலநேரம் பார்த்துச் சிவ நினைவுடன் இருவரும் உறவு கொள்ளல் வேண்டும். அதன்பின் உறவு கொள்ளலாகாது. இதைப் புரியாது நடந்துள்ளாய். இதனால் தகப்பன் பேர் தெரியாத ஒரு பிள்ளை பிறந்துள்ளது. இனியாவது திருந்து. நீ இளவயதினன். நல்லதொரு பெண்ணை விவாகம் செய்திருக்கலாம். நீ அவளிடம் சென்று வந்தமையால் அவளுக்கு நட்டஈடாகப் பணம் கொடு என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2834. பட்டிப் பசுக்கள் இருபத்து நாலுள
குட்டிப் பசுக்களோ ரேழுள ஐந்துள
குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் பசுவே பனவற்கு வாய்த்ததே.

“சிவனடியார்களே, ஆருயிர்கள் ஒழுக்கமாக வாழ்வதற்காகச் சிவபெருமானால் உடன் மெய் இருபத்து நான்கும் படைத்து அளிக்கப்பட்டுள்ளது. அவற்றை ஆத்ம தத்துவம் என்பர். உணர்வு மெய்யாகிய ஏழும் குட்டிப் பசுக்கள் என்று கூறப்படும். அத்துடன் உணர்த்து மெய்கள் ஐந்தும் குட்டிப் பசுக்கள் என்றே கூறப்படும். உணர்வு மெய், உணர்த்து மெய்கள் வாயிலாக வரும் அகமுக இன்பம் அளவில்லாதனவாகும். அப்படியிருந்தும் ஆருயிர்களுக்கு அவற்றின்கண் நாட்டம் இருப்பதில்லை. புறத்தே தான் நாட்டம் கொள்கின்றன” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2835. ஈற்றுப் பசுக்கள் இருபத்து நாலுள
ஊற்றுப் பசுக்கள் ஒருகுடம் பால்போதும்
காற்றுப் பசுக்கள் கறந்துண்ணுங் காலத்து

மாற்றுப் பசுக்கள் வரவறி யோமன்றே.

"சிவனடியார்களே, ஆருயிர்களுக்குப் புறமுகப்பலன் இன்பம் கொள்வதற்கு வாயிலாக உடன் மெய் இருபத்திநான்கு உண்டு. அவை ஈற்றுப் பசுக்கள் எனப்படும். வற்றாத ஊற்றாக வளமிகத்தரும் அறிவமிழ்திற்கு வாயிலாக உள்ள உணர்வு மெய்கள் ஏழும் ஊற்றுப்பசுக்கள் எனப்படும். அது தரும் அறிவு அளவிடற்கரியது. காற்றுப் பசுக்கள் எனப்படுவது இடப்பால், வலப்பால் நாடிகள் வாயிலாகப் பெறப்படும் உயிர்ப்புக்களாகும். உயிர்ப்பை மூச்சு என்றும், காலென்றும் சொல்லப்படும். அகத்தவத்தின் மூலம் செறிவினை எய்தி ஆருயிர் இன்புறும். அங்ஙனம் அக இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது ஐம்புல இன்பங்கள் பற்றாது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2836. தட்டான் அகத்தில் தலையான மச்சின்மேல்
மொட்டா யெழுந்தது செம்பால் மலர்ந்தது
வட்டம் படவேண்டி வாய்மை மடித்திட்டுத்
தட்டான் அதனைத் தகைந்துகொண் டானன்றே.

"சிவனடியார்களே, ஆருயிரைத் தட்டான் என்று அழைப்பர். ஆருயிர் அகத்தில் தோன்றுவதற்கு நிலைக்களமாக உள்ளது உடல். அவ்வுடலின்கண் மச்சுப்போன்று உயர்ந்த இடத்தில் உள்ளது உச்சித்துளை. அதுதான் முதன்மையான இடம். அவ்விடத்தில் அரும்பு போன்று பொருந்தியிருப்பது அமிழ்தூற்றத் தோற்றமாகும். பின் அது விழைந்து செவ்விய அமிழ்தப் பாலாய் செறிந்தது. அதுவே ஆயிரம் இதழ்த் தாமரையாகும். வட்டமாகிய ஓங்காரம் உள்ளடங்க, வாய்மையாகிய திருவைந்தெழுத்துத் தன்னகத்தாக அருளால், அவ் உயிர் அமைத்துக் கொண்டது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2837. அரிக்கின்ற நாற்றங்கால் அல்லற் கழனி
திரிக்கின்ற வொட்டஞ் சிக்கெனக் கட்டி
வரிக்கின்ற நல்லான் கறவையைப் பூட்டில்
விரிக்கின்ற வெள்ளரி வித்துவித் தாமே.

"சிவனடியார்களே, அரிக்கட்டுக்கள் நிறைந்த துன்பங்கள் பலவும் விளையும் வயல் உடலாகும். அவ்வுடலில் இருந்து உயிர்ப்பு விடுக்கும்போது பன்னிரண்டு விரல் அளவு வெளியே செல்லும். எட்டு விரலளவு உயிர்ப்புத்தான் உள்ளே அடங்குகிறது. மிகுதி நான்கும் வெளியே சென்று விடுகிறது. அவ்வாறு அதை வெளியில் நிறுத்தி விடாமல் உள்ளே இழுத்த நிறுத்துதல் வேண்டும். அந்நான்கு விரல் உயிர்ப்பும் உள்ளே தங்கச் செய்யும் மனம் நல்லான்கறவை எனப்படும். அம் மனத்தினை உயிர்ப்புடன் பூட்டுதல் வேண்டும். அங்ஙனம் பூட்டினால் விரிந்து விளைந்து வெண்மையாகக் காணப்படும் உயிர் வித்து வீடுபேற்றின் வித்தாக அமையும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2838. இடாக்கொண்டு தூவி எருவிட்டு வித்திக்
கிடாக்கொண்டு பூட்டிக் கிளறி முளையை
மிடாக்கொண்டு சோறட்டு மெள்ள விழுங்கார்
கிடாக்கொண்டு செந்நெல் அறுக்கின்ற வாறே.

"சிவனடியார்களே, தாளாண்மையுடன் மனத்தைப் பண்படுத்தி திருவடி நினைப்பை எருவாக இட்டு, மேன்மையுணர்வான மோனமாகிய விதையினை விதைத்து முயற்சியாகிய இடையறாத் தொண்டினைக் கிடாவாகப் பூட்டி, திருவடிப் பேரின்பத்தினை வெளிப்படச் செய்து, மோனத்தில் இருந்து தோன்றும் தேனையை திருவடியின்பத்தினை மிடற்றின்கண் திருவருள் நினைவால் அமைத்தல் வேண்டும். அதன்பின் திருவடிப் பேரின்ப அமிழ்தான சோற்றினைச் சமைத்து உண்ணாதார் விளைவை அறுக்கச் சென்று விளைவு இல்லாததால் அவர் அறுக்க எதுவும் இல்லாதவராவார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2839. விளைந்து கிடந்தது மேலைக்கு வித்தது
விளைந்து கிடந்தது மேலைக்கு காதம்
விளைந்து விளைந்து விளைந்துகொள் வார்க்கு
விளைந்து கிடந்தது மேவுக் காதே.

"சிவனடியார்களே, திருவடிப் பேற்றுக்கு வேண்டிய நன்னெறி நான்மையும் தவமுயற்சியால் விளைந்து கிடந்தது. அதுவே வீடு பேற்றிற்கான வித்தாகும். அமிழ்த நிறைவாகிய அமுதக் கேணி காதம் எனப்படும். அதுவும் திருவடி நினைவால் விளைந்து கிடந்தது. அவ் விளைவினை நனிமிகு விளைவுடன் கொள்வார்க்கு உடம்பின் அகத்தே காணப்படும் ஞாயிறு, திங்கள், தீ என்னும் மூன்று மண்டலங்களிலும் விளைந்து கிடந்தது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2840. களருழு வார்கள் கருத்தை யறியோங்
களருழு வார்கள் கருதலு மில்லை
களருழு வார்கள் களரின் முளைத்த
வளரிள வஞ்சியின் மாய்தலு [1]மாமே.

"சிவனடியார்களே, களர் என்று சொல்லப்படுகின்ற உவர் நிலத்தை உழுபவர்கள் எதற்காக அதை உழுகிறார்கள் என்று யாரும் அறிய மாட்டார்கள். அவர்களின் குறிக்கோள் எதுவென்றும் தெரியாது. அதுபோல ஆருயிர்கள் தவ முயற்சியின்மையால் மீண்டும் மீண்டும் பிறந்து பிறந்து இறக்கிறார்கள். இவர்களது செயல் வீண் செயலாகிறது. இது களர் நிலத்தில் முளைத்து வளரும் தகுதி வாய்ந்த போதும் உப்புத்தன்மையால் பட்டுப்போகும் இளவஞ்சிக் கொடியை ஒக்கும்".

“சிவனடியார்களே, நக்கீரன் நல்லைநாதனிடம் வந்து சொன்னான்; “அண்ணை, என்னால் திருமகளை மறக்பக முடியவில்லை. மனம் எந்நேரமும் அவளையே நாடுகின்றது, என்றபோது நலலைநாதன் கோபத்துடன் சொன்னார்; “நல்ல குடும்பத்தில் பிறந்த நீ ஒரு விபச்சாரியை விரும்பலாமா...? அவள் பல ஆண்களுடன் தொடர்பு வைத்துள்ளவள். தனது குழந்தை உனக்கு மட்டும் பிறந்ததென்றா சொன்னவள். அவளிடம் செல்வோர் அத்தனை பேரிடமும் சொன்னவள், நீ வளமாகவும், மகிழ்வாகவும் இருக்க வேண்டியவன். களர் நிலத்தை உழுகிறாய். எதற்காக அப்படிச் செய்கிறாய். உனது தோற்றம் நல்ல பயனைத் தரும் இளவஞ்சிக் கொடியானது களர் நிலத்தில் தவறி முளைத்தால் தனது பொலிவை இழந்ததைப் போலக் காணப்படுகிறாய். திருந்தி வாழப் பார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2841. கூப்பிடு கொள்ளாக் குறுநிரிக் கொட்டகத்து
ஆப்பிடு பாசத்தை அங்கியுள் வைத்திட்டு
நாட்பட நின்று நலம்புகுந் தாயிழை
ஏற்பட இல்லத் தினிதிருந் தானன்றே.

“சிவனடியார்களே, நெஞ்சினிடத்தே திருவைந்தெழுத்தால் செய்யப்படும் தண்சுடர்த் தழலினுள் ஆருயிரைக் கட்டுறுத்தும் ஆப்பினை வைத்தல் வேண்டும். திருவருள் பிறைபோல வளர்ந்து ஆருயிருடன் நாட்பட நின்று நிலைபெற்று நலம் புரிந்து அருள் வீழ்ச்சியாகிய சத்திநிபாதம் எய்தும். எய்தவே அவ்வுயிர் திருவடிப் பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டு திருவடியில் இருந்து வீற்றிருக்கும்”

“சிவனடியார்களே, நல்லைநாதன் சொன்னார்; “நக்கீரா, மனம் அலை பாய்வது இயல்பு. அதைக் கட்டுப்படுத்த வேண்டும். உனக்குப் பெண் ஆசை இருந்தால் இன்னொரு திருமணம் செய். அது ஒழுக்கமான வாழ்வு. அதை யாரும் குறைசொல்ல மாட்டார்கள். மனதைக் கட்டுப்படுத்தத் திருவைந்தெழுத்தை ஓதி அதனால் நெஞ்சுள் எழும் சிவப் பேரொளிக்குள் உனது மனதை அடக்கு. அப்பேரொளி ஆப்பாகச் செயற்பட்டு மனதை வீணான எண்ணங்களில் ஈடுபடவிடாது. அதைத்தவிர வேறு வழிகள் இல்லை என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2842. மலைமேல் மழைபெய்ய மான்கன்று துள்ளக்
குலைமேல் இருந்த கொழுங்கனி வீழ
உலைமேல் இருந்த உறுப்பெனக் கொல்லன்
முலைமேல் அமிர்தம் பொழியவைத் தானே.

“சிவனடியார்களே, நல்லைநாதன் நக்கீரனுக்குச் சொன்னார்; “மகனே, எந்த நோய்க்கும் ஒரே மருந்து திருவைந்தெழுத்துத்தான். சிவ நினைவோடு அதனை ஓதினால், எல்லா நோய்களும் குணமாகும். முக்கியமாக மனதை அரிக்கும்

எண்ணங்களைத் திருவைந்தெழுத்து அப்புறப்படுத்தும். மலை என்று சொல்லப்படுகின்ற புருவநடுவின்மேல் மழையாகிய உச்சித்துறையமுது இடையறாது ஒழுகுகின்றது. மான் என்று சொல்லப்படும் ஆருயிர் அவ்வமுதை ஆருயிர்ருசித்து சிவப்பேரின்பத்தில் திளைத்து மகிழ்கிறது. குலையாகிய கரையின் மேலிருந்து உணர்வுக்கு உணர்வான கொடுங்கனி ஆருயிரின் மேல் விழுகின்றது. அவ்வுயிர் அதைக் கண்டு மகிழ்கிறது. கனி என்பது திருவைந்தெழுத்தாகும். கொப்பூழின்கண் திருவைந்தெழுத்தால் செய்யப்படும் வேள்விக்குழி உலை என்று சொல்லப்படும். அவ் வேள்விக்கு உறுப்பாகச் சிறந்து நிற்கும் கொல்லன் சிவபெருமானாவன். அவனது திருவருளாற்றலால் உலக அன்னையின் முலையில் இருந்து வழிந்தொழுகும் திருவடியுணர்வு என்னும் அமிழ்தினை இடையறாது பொழியவைத்து அருளுபவன் சிவபெருமான். அதனால் அவனை நினை அமுதான திருவைந்தெழுத்தை ஓது உனது தீய எண்ணங்கள் யாவும் அகலும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2843. பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் [2]சொரியுமே.

"சிவனடியார்களே, நல்லைநாதன் மிகவும் அமைதியாக நக்கீரனுக்குச் சொன்னார்; "மகனே, சைவம் தன்னைச் சார்ந்தவர்களுக்கு எல்லாவற்றையும் சொல்லியுள்ளது. அதையாரும் உணர்வதில்லை. திருமந்திரம் கரு உற்பத்திபற்றி ஏன் கூறுகிறது தெரியுமா? உலகத்தில் நற்பிரசைகள் உண்டாக வேண்டும் என்பதற்காகத்தான் அதைக்கூறுகிறது. மருத்துவ முறைகளைக் கூறுகிறது. மன அடக்கத்தைப் பற்றிக் கூறுகிறது. மனம் அடங்காவிட்டால் ஒருவரால் ஒரு சிறு செயலைக்கூடச் செய்ய முடியாது. பார்ப்பானாகிய ஆருயிர்களின் அகமாகிய உடம்பினுள்ளே பால் தரும் பசுக்கள் ஐந்துள்ளன. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவே. அப்பசுக்களை மேய்ப்பவன் சிவன். அச் சிவபெருமானை ஆருயிர்கள் திருவைந்தெழுத்தால் அர்ச்சித்தல் வேண்டும். அப்படி அர்ச்சித்தால் அவை அப்பசுக்களை மேய்க்கும். திருவைந்தெழத்தைச் சிவ நினைவுடன் எண்ணாவிட்டால் கட்டுப்பாட்டை இழந்த பசுக்கள் தறிகெட்டு அலையும். அவற்றைக் கட்டுப்படுத்தி உரிய பயனைக் கொடுப்பவன் சிவன். உனது பசுக்கள் சிவநினைவு இல்லாமையால் வெறியுடன் அலைகின்றன. அவற்றை அடக்கத் திருவைந்தெழுத்தை ஓது. அது சிவஇன்பத்தை நுகரச் செய்யும். அதனால் பசுக்களின் வெறி அடங்கும். அதனால்தான் சொன்னேன் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2844. ஆமாக்கள் ஐந்தும் அரியேறு முப்பதுந்
தேமா இரண்டொடு திப்பிலி யொன்பதுந்
தாமாக் குரங்கொளிற் றம்மனத் துள்ளன
மூவாக் கடாவிடின் மூட்டுகின் [1]றாரன்றே.

2845. எழுதாத புத்தகத் தேட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந் தோத
மலராத பூவின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணமுண்ட [1]வாறே.

"சிவனடியார்களே, சதாசிவன் மெய்யடியார்களின் உள்ளத்தில் வெளிப்பட்டு நின்று மறையினையும் முறையினையும் உணர்வுள் எழுப்புவான். பின் அந்த மெய்யடியார் அதை நூலாக்குவர். அதனால் மறைகள் எழுத்தாக்கிளவு என்று அழைக்கப்படுகின்றன. அவ் எழுதாத உள்ளுணர் புத்தக ஏட்டில் பொருளைத் திருவருளின் அறிவாற்றல் பெற்ற பெருந்திரு தெளிந்திருந்து ஓதினள். அவள்தானே தெளிந்து கொண்டது அன்றி ஒருவர் தெரிவிக்கத் தெரிந்ததனால்லன். பிறப்பு இறப்பு இல்லாத பெருமான் என்பார் மலராத பூ என்றனர். மலர்தல் என்ற சொல் முன் மலராமையையும், பின் வாடுதலையும் குறிக்கும். மலர்தல் என்பதன் துணைக் காரணங்கள் செயற்கையால் மலர்வது என்பதாகும். ஆகவே இயற்கை இறைவன் என்பதைக் குறிப்பதற்கு இயற்கைப்பூவே குறித்தல் வேண்டும். இறைவனது திருவடித் தேனைத் திருவருளால் உணண்ல் வேண்டும். அவ்வாறு உண்ணும் ஆருயிர் பிறவாத வண்டு எனப்பட்டது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2846. போகின்ற பொய்யும் புகுகின்ற பொய்வித்துங்
கூகின்ற நாவலின் கூழைத் தருங்கனி
ஆகின்ற பைங்கூழ் அவையுண்ணும் ஐவரும்
வேகின்ற கூரை விருத்திபெற் றாரன்றே.

"சிவனடியார்களே, வெளியே போகின்ற பொய்யாகிய விடுத்தல் மூச்சும் ஓயாது நடைபெறுவதால் வீணாகக் கழியும் நால்விரல் மூச்சு கூசுகின்ற விந்து எனப்படும். வெளியிற் செல்லும் உயிர்ப்பினை உள்ளிழுத்தலால் அழைக்கின்ற என்று சொல்லப்பட்டது. விந்து நிலையாக நிற்பது. தடுத்தல் மூச்சினைக் கும்பகம் என்பர். அம்முறை உயிர்ப்புப் பயிற்சியான நாவலனைய உடம்பகத்து இருவினைப் பயனாகிய பைங்கூழை ஆருயிர் உண்ணும் அறிதற் கருவிகள் ஐந்தும், அழியும் தன்மையான உடம்பில் இருந்து நுகர்வைப் பெறும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2847. மூங்கின் முளையில் எழுந்ததோர் வேம்புண்டு
வேம்பினிற் சார்ந்து கிடந்த பனையிலோர்
பாம்புண்டு பாம்பைத் துரத்தித்தின் பாரின்றி
வேம்பு கிடந்து வெடிக்கின்ற வாறன்றே.

"சிவனடியார்களே, மூங்கில் மூளையாகிய மனதில் திருவருளால் ஆருயிர்களை உய்விக்க வேண்டுமென்று வேம்பாகிய சிவன் எழுந்தருளியுள்ளான்.

சிவனார் வேம்பு என்னும் மருந்தாகும். அது பூண்டு வகையைச் சார்ந்தது. அச் சிவனார் வேம்பினைச் சார்ந்தவிடத்து ஒப்பில்லாத கற்பக தருவான பனையுண்டு. பனையென்பது நடப்பாகிய மறைப்பாற்றலாகும். அந்த நடப்பாற்றலால் செலுத்தப்படுவது அறியாமை என்ற பாம்பு. அப் பாம்பாகிய அறியாமையைத் திருவருளின் துணையால் நீக்குதல் வேண்டும். அருளால் அறியாமையை நீக்குவார் இல்லாமையால் சிவம் என்னும் வேம்பு கூடுதலின்றிப் பிரிந்திருக்கிறது. அறியாமையாகிய ஆணவம் பாம்பாகிய மாயையின் வழித்தொழிற்படுகிறது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2848. பத்துப் பரும்புலி யானை பதினைந்து
வித்தகர் ஐவர் வினோதகர் ஈரெண்மர்
அத்தகு மூவர் அறுவர் மருத்துவர்
அத்தலை ஐவர் அமர்ந்துநின் றாரன்றே.

"சிவனடியார்களே, பத்து நாடிகளும் பத்துப் பெரும்புலி என்ப்பட்டன. பூதம் ஐந்து, பூத முதல் ஐந்து, புலன் ஐந்து ஆகிய பதினைந்தும் யானை என்று உருவகிக்கப்பட்டன. அறிதற் கருவிகள் ஐந்தும் வித்தகர் எனப்பட்டன. காற்றுக்கள் பத்தும் விநோதகர் எனப்பட்டன. அமைதி, ஆற்றல், அழுந்தல் என்னும் குணங்கள் மூன்றும் மூவர் எனக் கூறுப்பட்டது. பிறத்தல், கற்றல், தேடல், கூடல், வாழ்வு, தாழ்வு என்னும் அறுவகை நிலையினையும் மருத்துவராகக் கூறினர். அவ்விடத்தில் ஐம்பாடு உண்டு. அவை நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்பன. நாடிகள் பத்து, காற்றுக்கள் பத்து" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2849. இரண்டு கடாவுண்டு இவ் வூரினுள்ளே
இரண்டு கடாவுக்கும் ஒன்றே தொழும்பன்
இரண்டு கடாவும் இருத்திப் பிடிக்கில்
இரண்டு கடாவும் ஒருகடா வாமே.

"சிவனடியார்களே, உடம்பினுள் விடுத்தல், எடுத்தல் ஆகிய உயிர்ப்புப் பயிற்சிக்குரிய இரு தொழிலும் கடாக்கள் எனப்படும். இவ்விரண்டையும் மேய்ந்து நடத்தும் உயிர் ஒன்று உண்டு. அவ்வுயிர் தொழும்பன் எனப்பட்டது. விடுத்தல், எடுத்தலாகிய மூச்சினை இருத்திப் பிடித்துத் தடுத்தலைச் செய்யின் அவ் இரண்டு கடாவும் ஒரு கடாவாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2850. ஒத்த மனக்கொல்லை யுள்ளே சமன்கட்டிப்
பத்தி வலையிற் பருத்தி நிறுத்தலால்
முத்தக் கயிறாக மூவர்கள் ஊரினுள்
நித்தம் பொருது நிரம்பநின் றாரன்றே.

"சிவனடியார்களே, மனம் என்ற கொல்லையினைச் செம்மைப்படுத்திப் பக்தி வலையினைப் பரப்பினால் பருத்தியாகிய சிவன் வெளிப்பட்டு அருளுவன். அளவின்றி

முறுக்கப்பட்ட கயிறு அறுந்து அழிவதுபோல முக்குணங்களும் அழியும். எண்ணத்துள் தன்னைச் சார்ந்த மெய்யடியார்களைக் காத்தல் சிவபெருமானின் கடமையாகும். அதனால் சிவனை நித்தம் பொருதென்றனர். முக்குணங்களும் அகன்றால் சிவபெருமான் உள்நின்று அருளுவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2851. கூகையும் பாம்புங் கிளியொடு பூளையும்
நாகையும் பூழும் நடுவில் உறைவன
நாகையைக் கூகை நணுக லுறுதலுங்
கூகையைக் கண்டெலி கூப்பிடு [2]மாறன்றே.

"சிவனடியார்களே, கூகையாகிய அறியாமையும், பாம்பாகிய சுட்டறிவும், கிளியாகிய அறமும், பூளை ஆகிய பாவமும், நாகையாகிய சிற்றறிவும், பூழாகிய அறுபகையும் உடம்பின் நடுவாகிய எண்ணம் என்னும் சித்தத்தின் கண் தங்கியிருப்பன நாகையாகிய சிற்றறினைக் கூகையாகிய அறியாமை நணுக முயலும். அப்பொழுது அருள் ஒளிபெற்ற வெள்எலியாகிய ஆருயிர் சிவனை நினைத்துக் கூவும். சிவனும் வெளிப்பட்டுக் கூகையை அடக்கியிருள்வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2852. குலைக்கின்ற நன்னகை யாங்கொங் குழக்கின்
நிலைக்கின்ற வெள்ளெலி மூன்று கொணர்ந்தான்
உலைக்குப் புறமெனில் ஓடு மிருக்கும்
புலைக்குப் பிறந்தவை போகின்ற வாறே.

"சிவனடியார்களே, மனத்தில் இயல்பாகவே இருக்கும் நல்ல எண்ணங்களைக் குலைப்பது தீய எண்ணங்கள். அவற்றைத் திருவருள் என்ற அருளொளியான பூந்தூனால் விளக்க வேண்டும். சார்ந்ததன் வண்ணமாக இருக்கும் தன்மை வெண்நிறத்திற்கே உண்டு. அதனால் ஆருயிரினை வெள்ளெலி என்பர். நிலைபெற்று நிற்கின்ற வெள்ளெலியாகிய உயிர் அமைதி, ஆட்சி, அழுத்தல் என்னும் முக்குணங்களையும் உடன் கொண்டு வந்து உலையாகிய உடம்புக்குப் புறமாக அவ்வுயிர் செல்லுமானால் அக்குணங்கள் மூன்றும் கெடும். அவ்வுயிர் உடம்பின்மீது பற்றுக் கொண்டிருக்குமானால் அம் முக்குணங்களும் முனைந்து நிற்கும் புலையாகிய மாயைக்குப் பிறந்த அக் குணங்கள் அகலும் வழி இவையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2853. காடுபுக் காரினிக் காணார் கடுவெளி
கூடுபுக் கானவை ஐந்து குதிரையும்
மூடுபுக் கானவை ஆறுள ஒட்டகம்
மூடுபு காவிடின் மூவணை யாகுமே.

"சிவனடியார்களே, மாயையின் பேரொடுக்கப் பெருவெளி சிவமாகும். அதனால் அது காடு எனப்பட்டது. காட்டோடு அருளாற் சேர்ந்து ஆருயிர்கள் நிலைபெற்றுள்ளன. சுடுவெளியாகிய பாழினைச் சிறிதும் காணாதவர் கூடாகிய உடம்பின்

உள்ளே ஐந்து குதிரைகளாகிய அறிதற் கருவிகள் புகுந்தன. செருக்கு, சினம், சிறுமை, இறவல், மாண் பிறந்த மானம், மாணாவுகை என்னும் ஆறு பெரும் பகையாகும். இவற்றை ஒட்டகம் என்பர். ஆருயிர்கள் அருளின் துணையால் ஒட்டகங்களை அடக்கி மேற்செல்ல வேண்டும். அங்ஙனம் சென்றால் அவ்வுயிர்கள் மூவணை எய்தும். மூவணையாவது ஆருயிர் செயல்களை அறுத்தலாகும். ஆருயிர் செயலறல், ஆருட் செயலறல், அருளோன் செயலறல் என்பன. இவற்றைச் சீவதுரியம், சிவதுரியம், பரதுரியம் என்றும் சொல்லப்படும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2854. கூறையுஞ் சோறுங் குழாயகத் தெண்ணெயுங்
காறையும் நாணும் வளையலுங் கண்டவர்
பாறையி லுற்ற பறக்கின்ற சீலைபோல்
ஆறைக் குழியில் அழுந்துகின் றாரன்றே.

"சிவனடியார்களே, உடுக்கும் உடையும், உண்ணும் சோறும், குழாய்கலத்து எண்ணெய்யும், கழுத்தாணியாகிய காறையும், அரைஞாணும், கைவளையலும் கண்டவர் அவற்றின்மீது பெருமயக்குக் கொள்கின்றனர். இவை அனைத்தும் நிலையில்லாத மாயா காரியப் பொருட்களாகும். இவற்றின் உண்மையினை உணராது இவை நிலைக்குமென மயங்கித் தடுமாறுகின்றனர். அவர்களின் மனம் அப்பொருட்களையே நாடி நிற்கின்றது. இதற்கு ஒப்பு பாறையில் உலர்வதற்காக விரித்த சேலை பெருங்காற்றில் பறந்து செல்வதாகும். அவ்வுயிர்கள் ஆறைக்குழியில் வீழ்ந்து அழுந்தும். ஆறைக்குழி என்பது செருக்கு, சினம் முதலிய ஆறு பகைகளாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2855. துருத்தியுள் ளக்கரை தோன்று மலைமேல்
விருத்திகண் காணிக்கப் போவார்முப் போதும்
வருத்தியுள் நின்ற மலையைத் தவிர்ப்பாள்
ஒருத்தியுள் ளாளவர் ஊரறி [1]யோமே.

"சிவனடியார்களே, நோக்கமும் நீக்கமும் முறையே பிரவிருத்தி, நிவிர்த்தி என்று சொல்லப்படும். இவை இரண்டும் ஒருங்கே நிகழ்வனவாகும். ஊதுந் துருத்தி காற்றை வாங்கி வெளியிடும் கருவி. அக் கருவியே இவற்றிற்கு ஒப்பாகும். நோக்கமும் நீக்கமும் ஆகிய இச் செயல்களுள் அருள் எல்லையாகிய அக்கரை தோன்றும் மலை போன்ற சித்தத்துள் விருத்தியாகிய நோக்கத்தினைச் கண்காணிதற் பொருட்டு ஆருயிர் முப்போதும் போவர். திருவருளம்மை உடன் நின்று நோக்கத்தினைத் தடுத்தலாகிய நீக்கத்தினைப் புரிந்தருள்வன். அவள் ஒப்பில்லாத பேரருள் கடலாவாள். அவள் இணைபுரியாது ஒட்டியிருக்கும் சிவபெருமானை நாமாக அறியமுடியாது. திருவருள் காட்டக் காண்போம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2856. பருந்துங் கிளியும் படுபறை கொட்டத்
திருந்திய மாதர் திருமணப் பட்டார்
பெருந்தவப் பூதம் பெறலுரு வாகும்

இருந்திய பேற்றினில் இன்புறு வாரே.

"சிவனடியார்களே, ஆருயிரின் வினைக்கேற்றவாறு திருவானையால் இன்பதுன்பங்கள் வருகின்றன. இவற்றை இன்பந்தரும் கிளியாகவும், துன்பங்களைத் தரும் பருந்தாகவும் கூறுவர். எனவே துன்பமும் இன்பமும் மலத்தால் வருவனவாகும். அவற்றை அனுபவிக்க எண்ணம், மனம், எழுச்சி, இறுப்புக்களாகிய உட்கரணங்கள் ஆருயிர்களுடன் திருந்தப் பொருந்தின. இதனைத் திருத்திய மாதர் திருமணம்பட்டார் என்று சொல்லப்படும். முதலில் தோன்றும் எண்ணம் பூதம் எனப்பட்டது. எண்ணத்தினால் சிவத்தைப் பேணுவத நன்மைதரும். அதனால் திருவடியின்பம் வந்து சேரும். அதைத் திருத்திய பேறு என்பர். அப்பேற்றின் கண் இருந்து ஆருயிர் இன்புறும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2857. கூடும் பறவை இரைகொத்தி மற்றதன்
ஊடுபுக் குண்டி யறுக்குறில் என்னொக்குஞ்
சூடெறி நெய்யுண்டு மைகான் றிடுகின்ற
பாடறி வார்க்குப் பயனெளி [1]தாகுமே.

"சிவனடியார்களே, மெய், வாய், கண், மூக்குச், செவி ஆகிய ஐந்தும் கூடும் பறவைகளாகும். இவை முறையே தமக்குரிய ஊறு, அவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் புலப்பொருட்களுடன் கூடும். அதன்பால் அவற்றை இரைகொத்தி என்றனர். திருவருளின் அருளால் ஆருயிர் அதனோடு சேர்ந்து உண்டியாகிய நுகர்வினை அறுத்தல் வேண்டும். அவ்வாறு கூடினால் திருவடிப் பேரின்பம் கைகூடும். அதனால் அறியாமை விலகும். அறியாமை விலக மலங்களும் விலகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2858. இலையில்லை பூவுண் டினவண் டிங்கில்லை
தலையில்லை வேருண்டு தாளில்லை பூவின்
குலையில்லை கொய்யும் மலருண்டு சூடுந்
தலையில்லை தாழ்ந்த கிளைபுல ராதே.

"சிவனடியார்களே, இலையாகிய இறைநூற் பயிற்சி இல்லை. பூவாகிய நோக்கம் உண்டு. தொண்ணூற்றாறு மெய்களின் ஆராய்வு இங்கில்லை. தலையாகிய பயிற்சிப் பயனாப் பேறு இல்லை. வேராகிய காரணப் பயிற்சி உண்டு. தாளாகிய முயற்சி இல்லை. பூங்கொத்தாகிய புலப்பொருட்சுவைச் சேர்க்கை இல்லை. ஆனால் உடலூறாம் கொய்யும் மலருண்டு. அம்மலர் உடலூகக் கழிதலின் அம்மலரினைச் சூடும் தலையாகிய ஆருயிர் முனைப்பு இங்கில்லை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2859. அக்கரை நின்றதோர் ஆல மரங்கண்டு
நக்கரை வாழ்த்தி நடுவே பயன்கொள்வர்
மிக்கவ ரஞ்சு துயரமுங் கண்டுபோய்த்

தக்கவர் தாழ்ந்து கிடக்கின்ற வாறன்றே.

"சிவனடியார்களே, ஆருயிர்களை உய்விக்கும் பொருட்டுச் சிவபெருமான் தமிழ் வேதங்களையும், ஆகமங்களையும் ஆக்குவிக்கத் திருவுளம் கொண்டான். அதன் பொருட்டு ஆலமரத்தடியில் தென்முகமாக வீற்றிருந்து நூல்களைத் தோற்றுவித்தான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2860. கூப்பிடு மாற்றிலே வன்கா டிருகாதங்
காப்பிடு கள்ளர் கலந்துநின் றாருளர்
காப்பிடு கள்ளரை வெள்ளர் தொடர்ந்திட்டுக்
கூப்பிடு மீண்டதோர் கூரைகொண் டாரன்றே.

"சிவனடியார்களே, சிவனோடு சேர்ந்தால் உலகக் கட்டுக்கள் அகலும். மிகவும் கொடுமையான காடுகள் இரண்டு உண்டு. அவை நினைப்பும் ஜயமுமாகும். இவை அறியாமையால் வருவன. இவ்வறியாமையைக் கொடுப்பவர்கள் ஐம்புலன்களாகிய கள்வர்கள். அக் கள்ளரை நீக்கினால் வெள்ளராகிய சிவனடியாராகலாம். அருளால் அக் கள்வரை அகற்றலாம். திருவருள் வெள்ளம் அக்கள்வரைத் துரத்தி, வா வா என்று அழைத்து வெள்ளரை வீடு பேறு அடையச் செய்யும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2861. கொட்டடியும் ஆம்பலும் பூத்த குளத்திடை
எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையுங்
கட்டிய தேனுங் கலந்துண்ண மாட்டாதார்
எட்டிப் பழத்துத் கிளைக்கின்ற வாறன்றே.

"சிவனடியார்களே, குணமாகிய ஆருயிரினிடத்து புணர்வும் புலம்புமாகிய கொட்டியும் ஆம்பலும் பூத்துக் கிடந்தன. சுட்டியுரைக்கத் தக்கதாகிய பெயரும், வடிவும் விடத்தக்கன. அதனால் அவற்றை எட்டியும் வேம்பும் என்பர். இவை அகன்றதும் இனிமையான வாழையும், கட்டியும், தேனும் கலந்துண்ணலாம். இவை மூன்றும் முறையே உண்மை அறிவு, இன்ப, வடிவ உருவமாகும். திருவருளால் இவற்றைக் கலந்து நுகரும் நன்னெறியை உணராதவர்கள் எட்டிப்பழம் போன்ற உலக வாழ்க்கையைக் கண்டு அதையே பெரிதென மதித்து நுகர்ந்து பின்துன்புற்று இனைத்துக்களைக்கின்றனர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2862. பெடைவண்டும் ஆண்வண்டும் பீடிகை வண்ணக்
குடைகொண்ட பாசத்துக் கோலமுண் டானுங்
கடைவண்டு தானுண்ணங் கண்கலந் திட்ட
பெடைவண்டு தான்பெற்ற தின்பமு மாமே.

"சிவனடியார்களே, ஆருயிர்கள் மலநீக்கத்தின் பொருட்டு அருளால் உலகில் வாழவேண்டியது இன்றியமையாததாகும். அதற்காக உலக அன்னையாகிய பெடை வண்டும், அத்தனாகிய ஆண் வண்டும் ஒன்று சேர்ந்து திருவுள்ளக் குறிப்பால் ஏவுதலைச்

செய்கின்றன. அதனால் மண் தோன்றியது. வானம் தோன்றியது. ஏனையவும் தோன்றின. ஆருயிர்கள் வினைக்கீடாக நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பினுள் பொருத்தமான உடல்களில் பிறக்கின்றன. கடைவண்டு எனப்படும் வினைக்கீடாக விளையும் இன்பதுன்பங்களை ஆருயிர்கள் அனுபவிக்கும். அதற்காகப் பெடைவண்டு உலகெங்கும் செறிந்து எவற்றிலும் நிறைந்து நீக்கமற நிற்கும். திருவருளாற்றலையே பெடைவண்டு எனக் குறிப்பிடப்படுகிறது. அத்திருவருள் ஆற்றலால் அவ்வுயிர்கள் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்று அனுபவிக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2863. தட்டத்து நீரிலே தாமரை பூத்தது
குட்டத்து நீரிற் குவளை எழுந்தது
விட்டத்தி னுள்ளே விளங்கவல் லார்கட்குக்
குட்டத்தி லிட்டதோர் கொம்மட்டி யாகுமே.

"சிவனடியார்களே, வலதுமூக்கின் வழி எடுத்தலைச் செய்வதை இரேசுக முச்சு எனப்படும். இடது மூக்கின் வழி விடுத்தலைச் செய்வதை பூரக மூச்செனப்படும். வலது மூக்கைப் பிங்கலை என்றும், இடது மூக்கை இடகலை என்றும் கூறுவர். நடுநாடியினுள் தடுத்தல் எனப்படும் கும்பகம் செய்து அவ்வுயிர்ப்பினை அருளால் அகத்தே காண வல்லவர்களுக்குச் சிவபெருமானின் திருவடிப்பேறு மிக எளிதில் கிடைக்கும். இதற்கு ஒப்பாகக் கொல்லையில் தானாகவே காய்த்து அளவின்றிப் பல்கிப் பெருகிக் கிடக்கும் கொம்மட்டிப் பழத்தைக் கூறலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2864. ஆறு பறவைகள் ஐந்தகத் துள்ளன
நூறு பறவை நுனிக்கொம்பின் மேலன
ஏறும் பெரும்பதி ஏழுங் கடந்தபின்
மாறுத லின்றி மனைபுக லாகுமே.

"சிவனடியார்களே, ஐம்பூதங்களிலான உடலின் அகத்தே செருக்கு, சினம், சிறுமை, அறவல், மாண் பிறந்த மானம், மாணாவுகை என்னும் பகையாகிய ஆறு பறவைகள் உள்ளன. எழுச்சியின் கண் எண்ணிக்கையில்லாத எண்ணங்களாகிய நூறு பறவைகள் உள்ளன. புலம்பு, புணர்வு, நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்று சொல்லப்படும். ஏழினையும் கடந்த பின்பு எவ்வகை மாறுதல்களும் இல்லாமல் திருவடிப் பேற்றின்பமாகிய வீட்டை அடையலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2865. கொட்டனஞ் செய்து குளிக்கின்ற கூவலுள்
வட்டனப் பூமி மருவிவந் தூறிடுங்
கட்டனஞ் செய்த கயிற்றால் தொழுமியுள்
ஒட்டனஞ் செய்தொளி யாவர்க்கு மாகுமே.

“சிவனடியார்களே, ஆருயிர்களின் விருத்திகளையும், முனைப்பையும் அடக்குவதே கொட்டனம் செய்தல் எனப்படும். அங்ஙனம் அருளால் அடக்கித் திருவடிப் பேரின்பமாகிய பெருவெள்ளத்தில் மூழ்குதல் வேண்டும். அதனால் வட்டனப் பூமியாகிய நீங்காத பேரின்பநிலை ஓங்கிப் பெருகும். அப் பேரின்பநிலையைத் தாங்கிச் செல்வதாகிய கட்டுப்பாட்டினைப் பக்தி என்னும் கயிற்றால் கட்டுதல் வேண்டும். அப்போது உள்ளத்தின் உள்ளே சிவப்பேரொளி யாவர்க்கும் ஒட்டுதலைப் பெருக்கி விளக்கமுறும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2866. ஏழு வளைகடல் எட்டுக் குலவரை
ஆழும் விசும்பினில் அங்கி மழைவளி
தாழு மிருநிலந் தன்மை யதுகண்டு
வாழ நினைக்கில தாலய மாகுமே.

“சிவனடியார்களே, உலகங்கள் ஏழையும் தனித்தனி எழுந்து வளைவாகச் சூழ்ந்திருக்கம் கடல்கள் ஏழு. ஓங்கிவளர்ந்திருக்கும் மலைகள் எட்டு. இவற்றுடன் வானம், காற்று, தீ, நீர், நிலம் என்னும் ஐம்பூதங்களின் சேர்க்கையாலான இவ் உலகமும், இவ்வுடலும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோவில்களாகும். இவற்றை அருளால் உணருதல் வேண்டும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2867. ஆலிங் கனஞ்செய் தகஞ்சுடச் சூலத்துச்
சாலிங் கமைத்துத் தலைமை தவிர்த்தனர்
கோலிங் கமைந்தபின் கூடப் பறவைகண்
மாலிங்கன் வைத்தது முன்பின் வழியன்றே.

“சிவனடியார்களே, பெருங்காதலுடன் கவவுக்கை நெகிழாமல், கலந்து உள்ளே செல்லாமல், கட்டித்தழுவி அகம் மகிழ இருவரும் கூடினர். அதனால் சூல் உண்டானது. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை என்றும் ஐம்பெரும் சால்பினையும் அச் சூலுற்ற மகவின்பால் வைத்துத் தம் முனைப்பாம் தலைமை தவிர்த்தனர். இல்லொழுக்க முறையான கோலினை அமைத்தனர். செய்யவே பறவைகளை ஒத்த பொறிபுலன்கள் மயங்கி நெறி எல்லாம் நெறிச்செல்லாவாயின எனினும் ஒரே வழி அங்ஙனம் செல்ல நேரின் அ.ஃது அவ்வுயிர்கள் முன் செய்து கொண்ட வினைக்கீடாக நேர்வதாகும். அங்ஙனம் நேரின் அருளால் அவ்வுயிர்கள் அவற்றின் பின் செல்லாது நெறிமுறையே சென்று, நிலைபெறும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2868. கொட்டுக்குந் தாலி இரண்டே இரண்டுக்குங்
கொட்டுக்குந் தாலிக்கும் பாரை வலிதென்பர்
கொட்டுக்குந் தாலிக்கும் பாரைக்கும் மூன்றுக்கும்
இட்டம் வலிதென்பர் ஈசன் [1]அருளன்றே.

"சிவனடியார்களே, புலன் நுகர்ச்சியின் பொருட்டு இருவரும் தீ, ஆசான், சான்றோர், ஊரவர். உறவினர் முதலிய பலரையும் சான்றாக வைத்துத் திருமணம் செய்து கொள்கின்றனர். அதற்கு அடையாளமாகத் தாலி கட்டப்படுகிறது. பெண்ணின் கழுத்தில் காணப்படும் தாலி இருவரது உரிமையையும் எடுத:து இயம்புகிறது. வாழ்க்கை இம்மை, உம்மை, அம்மை என மூவகைப்படும். இம்மை இப்பிறப்பு, உம்மை மேற்பிறப்பு. அம்மை பிறவாப்பிறப்பு. இவையே உரிமையான தாலியின் அருமை பெருமையாகும். இதை நினைவு நீங்கிய உரிமைப் புலனுணர்ச்சி தோறும் விளையும் பலன் இரண்டு. அவை இன்பம்துன்பம் என்பன. புலநுகர்வாகிய கொட்டுக்கும் அதன் உரிமையாகிய தாலிக்கும் மேலாகிய வன்மை உடையது. பணையாகிய விழைவென்ற புலனுணர்வு அதன் உரிமை விழைவு இம் மூன்றிற்கும் வலிது திருவடிக்கண் மீது வைக்கும் அன்பு. அவ் அன்பே சிவபெருமான் திருவருள் இன்பினைத் தரவல்லது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2869. கயலொன்று கண்டவர் கண்டே இருப்பர்
முயலொன்று கண்டவர் மூவரும் உய்வர்
பறையொன்று பூசல் பிடிப்பா னொருவன்
மறையொன்று கண்ட துருவம்பொன் [1]ணாமே.

"சிவனடியார்களே, கயல்போல மாறி மாறிப் பிறழும் இவ் உலகின் இயல்பினை நிலையும் உறுதியும் உலைவில் தன்மையும் உடையதொன்றென மாறாக எண்ணங்கொண்டு கண்டவர், பிறப்பு இறப்பு என்னும் பெரும் துன்பங்களைக் கண்டு கொண்டேயிருப்பர். நற்றவமாகிய சீலம், நோன்பு என்னும் முன்நிலையும் கண்ட மூவரும் செந்நெறி சென்று பெருவாழ்வு வாழ்வர். இதுவே சமரச சன்மார்க்க வாழ்வு. இதைப் பொதுநெறி வாழ்வென்றும் கூறுவர். பறையைப்போல வாயால் பறைபோல மொழியும் சமயக் கணக்கர் செய்யும் பூசையை உண்மையானது என நம்புபவன் ஒருவன் பாசவலைப்பட்டு ஆசை மிகுந்து பிறப்பான். செந்தமிழ் மறையை உறுதியாக நம்பி வாழ்பவன் நிலையான துருவம் போன்றவனாவன். அவன் சுடச் சுடரும் பொன்போல மலம் நீங்கி ஒளிவிட்டுத் திருவருளின் துணையால் திருவடி எய்தி செம்பு செட்டும் பொன்னகும் விழுமிய நிலையை எய்துவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2870. கோரை எழுந்து கிடந்து குளத்தினில்
ஆரை படர்ந்து தொடர்ந்து கிடந்தது
நாரை படுகின்றாற் போலல்ல நாதனார்
பாரை கிடக்கப் படிகின்ற வாறன்றே.

"சிவனடியார்களே, ஆருயிர்களின் எண்ணமாகிய சித்தத்தைக் குளம் என்பர். அக்குளத்தில் விரிந்த அறிவாகிய கோரை எழுந்து கிடந்தது. ஆரைச்செடி ஒன்று பின்னிக் கிடக்கும். ஆசை அவ்விரிந்த அறிவினை மன்றத்துப் படர்ந்து மூடிக் கிடந்தது. குளத்தில் உள்ள மீன்களைக் கவர நாரையாகிய கொக்கு முயல்கிறது. அதைப் பிடிக்கும் நேரம் பார்த்துக் களத்தில் அது காத்திருக்கிறது. அதுபோன்று அல்லாமல்

முழுமுதற் சிவன் ஆருயிர்களின் நன்மையின் பொருட்டு அவ்வுயிர்களின் உள்ளத்தில் செவ்விநோக்கிக் காத்திருக்கிறான். இவ்வுண்மை தெரிந்தவர்கள் அவனை அப்பொழுதே கூடி இன்புறலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2871. கொல்லைமுக் காதமுங் காடரைக் காதமும்
எல்லை மயங்கிக் கிடந்த இருநெறி
எல்லை மயங்கா தியங்கவல் லார்கட்கு
ஒல்லை கடந்துசென் றூர்புக லாகுமே.

"சிவனடியார்களே, பிறப்பினைக் கொல்லும் ஓமொழி கொல்லை எனப்பட்டது. அவ் ஓமொழியின் கண் அகர, உகர, மகரமாகிய மூன்று எழுத்துக்களும் கூடியுள்ளன. அ + உ + ம் என்பது இரண்டரை மாத்திரைகளைக் கொண்டதாகும். அகர உகரம் குற்றெழுத்துக்கள். அவை இரண்டும் மூன்று மாத்திரை பெற்ற எழுத்தாக வேண்டுமாயின் ஒன்று நெடில் ஆதல் வேண்டும். எனவே உகாரம் விகாரமாகக் கொள்ளுதலையும், குற்றெழுத்தாகிய அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் ஒரு புடையொப்பாக முறையே வனப்பாற்றல், நடப்பாற்றல், அன்பாற்றல், அறிவாற்றல், நடப்பாற்றல் எனக் கொள்ளல் வேண்டும். அந்த முறையில் அ + ஊ + ம் = ஓம் என்றாகும் மந்திரமாதலின் மறைத்தும், குறைத்தும், கூட்டியும் கூறுதல் மரபு இதன்கண் கூறப்பட்டது. சிவயநம என்பதன் கண் 'வா' கூட்டிக் கூறப்பட்டது. எனவே ஓ என்பது இரு மாத்திணையாக இருப்பினும் மூன்று மாத்திரையாக அளபெடுத்து ஒலித்தல் வேண்டும். அப்பொழுது 'ஓ, ஒ' என்றாகும். இதுவே முக்காதம் என மொழியப்பட்டது. காடாம் 'ம' கரம் அரை மாத்திரையாகும். திருவடி எல்லை காணவொட்டாது நன்னெறியும் புன்னெறியுமாகிய இரு நெறிகள் மயங்கிக் கிடந்தன. இவ்விரு நெறியையும் முறையே அருள்நெறியும், மருள்நெறியும் என்று கூறலாம். எல்லை மயங்காது அருள்நெறியில் ஒழுக வல்லார்கட்கு திருவருட்ப் பெருந்துணையால் நனிமிக விரைந்து சென்று தனிப்பெரும் வாழ்வான திருவடியின்பம் கிடைக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2872. உழவொன்று வித்து ஒருங்கிள காலத்து
எழுமழை பெய்யாத் திருநிலச் செல்வி
தழுவி வினைசென்று தான்பய வாது
வழுவாது போவன் வளர்சடை யோனே.

"சிவனடியார்களே, நன்னெறி நாண்மை நற்றவமாம் உழவின் அருளால் ஒடுங்கிய மனத்துடன் நெருங்கித் திருத்தச் செய்தால்; இருவினையொப்பு வாய்ந்த செவ்வி நேர்ந்த காலத்துத் திருவருண்மழை எழுந்து பெய்யும். திருவருளின் வீழ்ச்சியாகிய திருநிலச் செல்வி தழுவுவள். தழுவவே எஞ்சுவினை, என்ற வினை, ஏறு வினையாகிய மூன்று வினைகளும் மூளாது. அப்போது சிவபெருமான் கன்றின்பின் செல்லும் தாய்ப்பசுவைப்போல வந்து அருள் புரிவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2873. பதுங்கிலும் பாய்புலி பன்னிரு காதம்
ஒதுங்கிய தண்கடல் ஓதம் உலவ
மதுங்கிய வார்களி யாரமு தூறப்
பொதுங்கிய ஐவரைப் போய்வளைத் தானே.

"சிவனடியார்களே, முயற்சியின்றி ஓர் இடத்தில் அடங்கியிருந்தாலும், எம் வாழ்நாளை வரையறை செய்யும் உயிர்ப்புத் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டேயிருக்கும். அதனால் அதனைப் பாய்புலி என்பர். வாழ்நாளைப் பெருக்குவது என்பது உயிர்ப்பிலேயே தங்கியுள்ளது. அவ்வுயிர்ப்பு இத்துணைத்து நம் வாழ்நாளுக்கு எண்ணிக்கையாக இருக்கிறதென்பதை நம்மவர் அறிவதில்லை. முயன்று தொழில் செய்து வளர்ந்தவன், தந்தை முந்திவந்தணுக மைந்துடன் நிற்பன். வந்த தந்தை மனம் மகிழ்ந்து பாராட்டித் தன்னுடன் சேர்த்துக் கொள்வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2874. தோணியொன் றேறித் தொடர்ந்து கடல்புக்கு
வாணிபஞ் செய்து வழங்கி வளர்மகன்
நீலிக் கிறையுமே நெஞ்சின் நிலைதளர்ந்து
ஆலிப் பழம்போல் அளிக்கின்ற அப்பன்றே.

"சிவனடியார்களே, பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடப்பதற்காகச் சிவபெருமானால் ஆருயிர்களுக்குக் கொடுக்கப்பட்டது உடல். இவ்வுடலைப் பயன்படுத்தி வினைக்கீடாகப் பிறந்தும், இறந்தும் இக்கரையும் அக்கரையுமாக அலைகின்றனர். காலிலும் கலத்திலும், கலத்தினும் வணிகம் செய்வது நூலில் வழிவந்தார் நுண் செயலாகும். அதுபோல நூன்முறையும், கோன்முறையும் கைக்கொண்டு மறப்பினைக் கொடுத்தும் தினைப்பினைக் கொண்டும் பண்டமாற்றுதலாகிய கொண்டு விலையினைச் செய்து வளர்ந்து வருமகன், நீரியாகிய மாயா காரியப் பொருட்களினிடத்துத் தினையிலும் சிறிதளவாகவேனும் பற்றுள்ளம் கொள்ளுதல் ஆகாது. கொள்ளின் நிலை தளரும். நிலை தளரின் தலையிலிருந்து உதிர்ந்த மயிராவர். நீரைப்போன்ற ஓயாது அலை அடிக்கும் எண்ணமாகிய சித்தத்தின் கண் அம் மாயா காரியப் பொருட்கள் நச்சுக்கனியாகிய ஆலிப்பழம் போன்று அருளால் அகற்றப்படல் வேண்டும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2875. முக்காத மாற்றிலே மூன்றுள வாழைகள்
செக்குப் பழுத்த திரிமலங் காயத்தன
பக்கனார் மிக்கார் படங்கினார் கன்னியர்
நக்கு மலருண்டு நடுவுநின் றாரே.

"சிவனடியார்களே, அமைதி, ஆட்சி, அழுந்தல் என்னும் முக்குணம் விரவிய வழியிலே ஓய்வின்றி வழிவழியாய் வருகின்ற வாழைகளாகிய நனவு, கனவு, உறக்கம் என்னும் மூன்றும் நன்னெறி நான்மை நற்றவச் செக்கால் செம்மையுறும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் காய்த்துப் பழுத்து வீழ்ந்து அடங்கின.

திருவருளால் திருவடியுணர்வின் பக்கமானவர் பக்கனார் எனப்படுவர். அவர் அறிவினுள் அறிவினராவர். அதனால் அவரே எல்லாரிலும் மேலானவராவார். அவர் ஆடல், பாடல், அழகு, அணி, உடை, பூச்சு, நடை, ஊடல், கூடல், மிலைதல், மலைதல் முதலியவற்றால் ஆடவரை மயக்கும் படங்காகிய படாமுலைமேல் துசிலணிந்து வரும் நெறி தவறிய மகளிரை சிரித்து ஒதுக்குவர். பிறன் மனையை நோக்கமாட்டார். செங்கமலத் திருவடித்தேனை இடையறாது நுகர்ந்து அடியார் நடுவில் அருளோடு இருப்பார். இதுவே முடியாட்சி பிறவியை முடித்து வைக்கும் மருந்தாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2876. அடியும் முடியும் அமைந்ததோர் ஆத்தி
முடியும் நுனியின்கண் முத்தலை மூங்கில்
கொடியும் படையுங் கோட்சரன் ஐயைந்து
மடியும் வலம்புரி வாய்த்ததவ் வாறே.

"சிவனடியார்களே, தோற்றமும் மறைவும் பொருந்தியுள்ள இவ்வுலகை ஆத்தி என்று சொல்லப்படும். ஆத்தி மலரின் வெண்மை நிறத்தை மாயையாகக் கொள்ளல் வேண்டும். அம் மாயையின் மீதுள்ள பற்று அருளால் அகலும். அது அகன்றதும் திருவடிப் பேரின்பம் கைகூடும். கொடியாகிய திருவடி நினைப்பும், படையாகிய திருவடி மறப்பும் இல்லாமல் அதுவே தானாய் நிற்கும் நிலையில் குற்றம் பொருந்திய அறிதற் கருவிகள் ஐந்தும், சொல்லற் கருவிகள் ஐந்தும் தாமே அகலும். அவ்விடத்தில் அருளின் துணையால் ஞான வாள் ஏந்தி, நாதப் பறையறைந்து, மானமா ஏறி, மதிவெண்குடை பிடித்து, நீற்றுக் கவசம் பூண்டு மாயைப் படையினை வெல்வர். தூய இவ் வெற்றியின் அடையளமாகத் தூவெண் வலம்புரிச்சங்கு முழங்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2877. பன்றியும் பாம்பும் பசுமுசு வானரந்
தென்றிக் கிடந்த சிறுநரிக் கூட்டத்துக்
குன்றாமை கூடித் தராசின் நிறுத்தபின்
குன்றி நிறையைக் குறைக்கின்ற வாறன்றே.

"சிவனடியார்களே, பதுங்கிக் கிடக்கும் பக்தியைப் போன்ற தோல்வியும், பாம்பின் சீற்றம் போன்ற வெற்றியும், பசுவாகிய ஆடலை அடக்கமும், முசுவாரை மனைய அடங்காமையும் எங்கும் விரவிக் கிடந்தன. சிறு நரிக்கூட்டமாகிய பயனில்லாத நினைப்புக்களை ஒருவன் நினைக்காது, திருவடி நினைப்பில் கூடித் தராசின் முள்ளுப்போல நின்று எண்ணத்தால் உணரும் உணர்வினைச் சிவபெருமான் மீது செலுத்தினால் இருள்மனம் தினமும் குன்றிமணியளவு சிறிது சிறிதாகக் குறைந்து அகலும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2878. மொட்டித் தெழுந்ததோர் மொட்டுண்டு மொட்டினைக்

கட்டுவிட் டோடின் மலர்தலுங் காணலாம்
பற்றுவிட் டம்மனை பாழ்பட நோக்கினாற்
கட்டுவிட் டார்க்கன்றிக் காணவொண் ணாதன்றே.

"சிவனடியார்களே, திருவருளால் திருவடிப் பேரின்பம் சிறிய அரும்பாகத் தோன்றிப் பேரரும்பாக வளரும். அதனுள் பற்றாகிய கட்டுக்களைவிட்டு ஆருயிர் ஓடிச்சென்று உணர்வின்றிக் கைக்கொண்டால் அந்த அரும்பாகிய மொட்டும், பேரின்ப மலராக மலரும். மலரவே அதனை நுகர்ந்து பேரின்பம் கொள்ளல் வேண்டும். மருள்நிலையாகிய உலகப்பற்றினைப் பற்றிநின்றால் அம் மனையாகிய திருவடிப்பேறு கிடைக்காது பாழ்பட நோக்கும். திருவடிப் பேரின்பத்தை அனுபவிப்பவர்களுக்கே உணர்வினிற் கண்டு நுகரும் நிலை ஏற்படும். ஏனையோர் காணமாட்டார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2879. **நீரின்றிப் பாயும் நிலத்தினிற் பச்சையாம்**
யாவரும் என்றும் அறியவல் லாரில்லை
கூரு மழைபொழி யாது பொழிபுனல்
தேரினிந் நீர்மை திடரினில் லாதன்றே.

"சிவனடியார்களே, எண்ணமாகிய சித்தச் செலவு நீர் எனப்பட்டது. சிவன் சித்தமும் செல்லாச் சேட்சியன். அதனால் அவன் சித்தமும் ஒடுங்கியதனால் தானே வெளிப்பட்டருள்வன். உணர்வெண்ணத்துள்ச் சிவப் பேரின்பம் வெளிப்பட்டு விளங்கும். அவ்வின்பம் என்றும் குறையாது ஒன்றுபோல விளங்கும். இவ்வுண்மையைத் திருவருளால்தான் அறிய முடியும். அறிந்தால் பொறி புலன்களால் வரும் இன்பம் வெளிப்படாது. சிவப் பேரின்பம் வெள்ளமாகப் பெருகும். சிவனது திருவடியைப் பற்றாது நிற்கும் பாவிகளது உள்ளம் இடிந்த கிணறு போலத் திடலாகும். அதனால் சிவன் அவ்வுள்ளத்தில் நிற்க மாட்டான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2880. **கூகை குருந்தம தேறிக் குணம்பயில்**
மோகம் உலகுக் குணர்கின்ற காலத்து
நாகமும் ஒன்று நடுவுரை செய்திடும்
பாகனு மாகின்ற பண்பனு மாகுமே.

"சிவனடியார்களே, அருட்கண்ணாகிய அகக்கண் திறக்காதவிடத்து ஆருயிர் பொருட்கண்பூந்து உண்பொருள் நாடிப் புகலிழந்த பகல் குருடராவர். அதனால் ஆருயிர் கூகை எனப்பட்டது. சிவகுரு வீற்றிருக்கும் தவநிறை திருமரம் குருந்தம் என்பதாகும். அவரது திருவடி சேர்வதை குருந்தமநெறி என்றனர். சிவகுருவின் திருவருளால் சுட்டியுரைக்கப்படும் உலகும், உடலும், உலகியற் பொருட்களும் முக்குண விரிவாக உள்ளன. அவை மயக்கும் தன்மையானவை. அதை உணர்ந்தால் மனம் அடங்கும். மனம் அடங்கினால் நடுவுரையாகிய திருவைந்தெழுத்தை சிவதீக்கை பெற்று

இடையறாது ஓதும் தாவாச் செல்வியராவர். எண்குணம் நிறைந்த சிவபண்பாளருமாவார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2881. வாழையுஞ் சூரையும் வந்திடங் கொண்டன
வாழைக்குச் சூரை வலிது வலிதென்பர்
வாழையுஞ் சூரையும் வன்துண்டஞ் செய்திட்டு
வாழை யிடங்கொண்டு வாழ்கின்ற வாறன்றே.

"சிவனடியார்களே, வாழையாகிய இன்பமும், சூரையாகிய துன்பமும் இருவினைக்கீடாக வந்து அகப் புறக் கலனாம் எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்னும் நான்கினுள்ளும் மெய் என்றும் புத்தி தத்துவத்தை உறைவிடமாகக் கொண்டன. இன்பமும் துன்பமும் தாமே வருவன அல்ல. அவை மூன்று வாயிலாக வருவன. அவை தன்னைப்பற்றி வருவன, பிறரைப்பற்றி வருவன, தெய்வத் தூண்டுதலால் வருவன. ஒருவர் துன்பம் செய்தால் அவரைத் துன்பப்படுத்தி மகிழ்வோம். அல்லது நினைத்து நினைத்து நெஞ்சம் புண்ணாவோம். அதனால் பாவம் பெருகும். இன்பத்தையும், துன்பத்தையும் திருவருளின் துணையால் வன்மையாக வேறுபடுத்தல் வேண்டும். நாமல்ல இந்திரியம், நம் வழியில் அல்ல, வழியும் நாமல்ல என்று உணர்ந்தால் இன்ப துன்பங்கள் வேறுபடும். அப்படி வாழ்ந்தால் சிவபெருமான் நம் உள்ளத்தை விட்டகலாது மகிழ்ந்து அருள் செய்வான். ஒருவரால் எமக்கு இன்பம் வரும்போது நாம் மகிழ்ந்து அவருக்கு நன்றியைத் தெரிவிப்போம். பாராட்டுவோம் அல்லது மறந்திருப்போம். அந்த நிலையில் துன்பம் செய்வோரையும் துன்புறுத்தாது இருத்தல் வேண்டும்"

"சிவனடியார்களே, மயில்வாகனம் பெரும் தனவந்தன். நிலச் சுவாந்தன். கடல் வாணிபம் செய்பவன். ஆனால் எதையும் கொடுத்தறியாதவன். தனக்கு யாராவது துன்பம் செய்தால் அவர்களைப் பழிவாங்காது விடமாட்டான். அவனது நண்பன் ஏகாம்பரம் மிகவும் நல்லவன். அவனுக்கு வேண்டிய உதவிகள் செய்பவன். அதனால் மயில்வாகனம் அவனைப் புகழ்வான், பாராட்டுவான், உதவிகள் செய்வான். ஏகாம்பரத்தின் எதிரி பற்குணம். மயில்வாகனம் ஏகாம்பரத்தைப் பற்றிப் புகழும்போது பிரச்சினைப்படுபவன். அதனால் மயில்வாகனம் அவனை அடிக்க வேண்டும் என்று நினைத்தான். பல நாட்களாகத் திட்டமிட்டு சில தீயவர்களை ஒழுங்கு செய்து பற்குணத்தைத் தாக்குவித்தான். சில நாட்கள் கழியப் பற்குணத்தைத் தாக்கியவர்கள் மயில்வாகனத்தை வெருட்டிப் பணம்பெறத் தொடங்கினர். இதனால் வேதனைப்பட்ட மயில்வாகனம் கதிரேசனிடம் வந்து சொன்னபேது அவர் சொன்னார்; "மகனே, துன்பங்கள் தாமாக வருவதில்லை. அவை தன்னால் வரும், பிறரால் வரும், வினை காரணமாகத் தெய்வத்தால் வரும். இது உன்னால் வந்த கேடு. நீதி நியாயமாக வாழ்ந்து கடவுளை வணங்குவோருக்குத் துன்பங்கள் வருவதில்லை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2882. நிலத்தைப் பிளந்து நெடுங்கடல் ஓட்டிப்
புனத்துக் குறவன் புணர்ந்த கொழுமீன்
விலக்குமின் யாவர்க்கும் வேண்டிற் குறையாது
அருத்தமு மின்றி யடுவது மாமே.

"சிவனடியார்களே, ஆருயிர்கள் திருவருளாலும், நல்லவர்களின் உறவாலும், சிவபெருமானின் திருவடி உணர்வை உண்டாக்குதல் வேண்டும். அப்படிச் செய்யாது நிலத்தை உழுவதாலும், நிலத்தைப் பிளந்தும் காலில் போதலானும், கலத்தில் சென்றுகடல்கடந்து பெரும் பொருள் ஈட்டலாலும், காலம் களிப்பார்களேயானால் செருக்கும் தன்முனைப்பும் வந்து சேரும். அதனால் அவர் அறிவில்லாத வேடராவார். பிறப்பிற்குட்பட்டுச் சிறப்பில்லாதவராவர். அருள் நாட்டத்தால் இவற்றை அகற்றுதல் வேண்டும். அகற்றாதவர்களுக்குத் திருவடியின்பமாகிய அருந்தம் கிடைக்காது".

"சிவனடியார்களே மயில்வாகனம் பெரும் தனவந்தன். அவனிடம் ஏராளமான பணம் இருந்தது. நிலம் இருந்தது. ஏராளமான கப்பல்கள் இருந்தன. அவன் ஒருபோதும் சிவனை நினைப்பதில்லை. ஆணவத்துடன் நடந்து கொள்வான். அவன் கோவிலில் திருவிழாச் செய்தால் கதிரேசன், ரவீந்திரன், நல்லைநாதன் போன்றோர்தான் வருவர். அப்படியிருந்தும் அவன் தனது குடும்பத்தவரையோ, இனத்தவரையோ, பொதுமக்களையோ மதிப்பதில்லை. அவனது மகன் திருக்குமரன் ஊரில் உள்ள தீய நண்பர்களுடன் சேர்ந்து தீய செயல்களைச் செய்வான். மது அருந்துவான். அதனால் ஏற்பட்ட கலகத்தால் அவன் இறக்க நேர்ந்தது. மயில்வாகனம் எப்போதும் வெளிநாடுகளில் இருப்பதால் குடும்பத்தைக் கவனிப்பதில்லை. அதனால் அவரது மகள் வீட்டில் வேலை செய்யும் ஒருவனோடு சென்று விட்டாள். அவன் சில நாட்கள் மகிழ்வாக இருந்துவிட்டுத் தந்தையிடம் பணம் பெற்று வருமாறு தொல்லை கொடுத்தான். மயில்வாகனம் கொடுக்காததால் அவள் தற்கொலை செய்து கொண்டாள். அதனால் கவலைப்பட்ட மயில்வாகனத்தின் மனைவிக்குப் பைத்தியம் பிடித்தது. ஆகவே அன்பானவர்களே பொருளைத் தேடுங்கள். அதை அறவழியில் தேடுங்கள். கடவுளை வணங்குங்கள். குடும்பத்தை நேசியுங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2883. தளிர்க்கும் ஒருபிள்ளை தட்டா னகத்தில்
விளிப்பதோர் சங்குண்டு வேந்தனை நாடிக்
களிக்குங் குசவர்க்குங் காவிதி யார்க்கும்
அளிக்கும் பத்தொன்றிங் காய்ந்துகொள் வார்க்கே.

"சிவனடியார்களே, கதிரேசன் மயில்வாகனத்திற்குச் சொன்னார்; "மகனே, சிவபெருமானின் திருவடியையன்றி எண்ணத்தில் வேறெதையும் நினைக்காதவன் தட்டான் ஆவன். தட்டான் என்பது தலைகளை அறுத்தவன் என்று பொருள்படும். உன்னிடம் கோடிக்கணக்கான சொத்திருக்கு என்ற செருக்கால் உனது வாழ்வை இழந்துள்ளாய். பணம் பணம் என்று அலைந்தமையால் உன்னால் குடும்பத்தைக் கவனிக்க

முடியவில்லை. குடும்பத்தை நல்லமுறையில் கவனித்திருந்தால் பிள்ளைகளும் மனைவியும் மகிழ்வுடன் இருந்திருப்பர். ஒருவன் சிவசிந்தனையுடன் பணத்தைத் தேடினால்தான் அது அவனை வாழவைக்கும். திருவடி உணர்வு இல்லாதவர்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் பெரும் துன்பப்படுவர். சிவநினைவு உனக்கிருந்திருந்தால் நீ உயிர்களுக்குத் துன்பம் செய்திருக்க மாட்டாய். அந்த நினைவு உன் மனதில் இருந்திருந்தால் நீ செயல்களைச் செய்யும்போது சிவனின் உதவி கிடைத்திருக்கும். சிவனடியார்களுக்குச் சிவன் வெற்றி முழக்கம் செய்யும் சங்கொலி கேட்கும். ஆருயிர் வெளியே விடும் மூச்சும் உள்ளே எடுக்கும் எடுத்தல் மூச்சும் மன அமைதியில்லாதவிடத்து மாறுபாடு அடையும். அதைச் சீர்செய்ய வேண்டுமானால் சிவனை வணங்க வேண்டும். சிவ வணக்கம் அமைதியையும், மகிழ்ச்சியையும் தரும். மனக்குழப்பம் மூச்சை மாறுபடச் செய்வதால் அமைதியின்மை, பழிவாங்கல், துன்பங்கள் என்று பலவும் வரும். எடுத்தல் மூச்சு, விடுத்தல் மூச்சு ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு அகப்பயிற்சி தேவை. அகப்பயிற்சி பெறவிரும்பினால் ஆச்சிரமத்திற்கு வா. உனக்கு அகத்தவப் பயிற்சி தேவை என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2884. குடைவிட்டுப் போந்தது கோயில் எருமை
படைகண்டு மீண்டது பாதி வழியில்
உடையவன் மந்திரி யுள்ளலும் ஊரார்
அடையார் நெடுங்கடை ஐந்தொடு நான்கே.

"சிவனடியார்களே, கதிரேசன் மயில்வாகனத்திற்குச் சொன்னார்; "மயிலு, உள்ளத்தை எப்போதும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் மனம் புலன்வழி செல்லும். அதனால் பற்றுக்கள் அளவுக்கதிகமாக உண்டாகும். பற்றுக்கள் இருந்தால் துன்பங்களில் இருந்து விடுபட முடியாது. அதனால் பற்றுக்களை நீக்கு. பற்றுக்களை நீக்கிய மனதைக் கோவில் எருமை என்பார்கள். கோவில் எருமை ஆருயிரின் நிலைக்களமாகிய எண்ணவளர்ச்சி, உயிர்ப்புப் பயிற்சிக்குத் தடையாகிய காமம் முதலிய ஆறு பசைகளும் வருவதைக்கண்டு அஞ்சி விலகும். அவ்வுயிருக்கு நெருங்கிய நண்பனாகிய வலிய அமைச்சனைப் போன்ற இறுப்புமெய் உண்மையை உரைக்கும். உரைத்ததும் ஒன்பது வாசல்களையுடைய உடலுள் தீயவை புகமாட்டாது. அதனால் மனம் சுத்தமடையும். சுத்தமடைந்த மனம் அழுக்கை வெளியேற்றும். நீ உனது மனதிலுள்ள அழுக்குகளை வெளியேற்ற வேண்டுமானால் முழுமுதல்வனான சிவனை வணங்கு என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2885. போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
ஆகிப் படைத்தன ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டொடு நாலு புரவியும்
பாகன் விடாவிடிற் பன்றியு மாகுமே.

"சிவனடியார்களே, பெருந்துன்பத்துடன் அழுது கொண்டிருந்த மயில்வாகனத்திற்குக் கதிரேசன் சொன்னார்; "அழுவதாலோ கவலைப்படுவதாலோ

துன்பம் போகாது. துன்பத்தை நீக்க உன்னால்தான் முடியும். அதற்குச் சிவன் துணை செய்வார். உனது துன்பங்களை நீ யாரிடம் சொன்னாலும் அவர்கள் கேட்கக்கூட மாட்டார்கள். கேட்டாலும் விருப்பத்தோடு பதில்சொல்ல மாட்டார்கள். மனதுக்குள்த் திட்டுவார்கள். புலன்களிற் செல்லும் நலமில்லாத விருப்பமும், உள்ளே புகுந்து பற்றக்கூடிய உயிர்ப்பின் மாத்திரை அளவு எட்டும் ஆகிச் சமைந்தன. கண் முதலாகிய ஒன்பது துளையுள்ள வாயில்கள் நிலையான எண் விரல் மூச்சும் நால் விரல் மூச்சும் முறையே நாகம் எனவும், புரவி எனவும் கூறப்பட்டுள்ளன. இவற்றைச் செலுத்தும் ஆருயிரான பாகன் செலுத்தாது அடக்குதல் வேண்டும். அங்ஙனம் அடக்கினால் மெய்யுணர்வு உண்டாகும். மெய்யுணர்வு உண்டானால் உலகின் மாயத்தன்மை புரியவரும். அதைப் புரிந்து கொண்டவன்தான் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், வெற்றி பெறுகிறான். இதைப் பலர் உணராமையால்தான் துன்பங்களைத் தாமே தேடித் துன்பப்படுகின்றனர் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2886. பாசி படர்ந்து கிடந்துகு குளத்திடை
கூசி யிருக்குங் குருகிரை தேர்ந்துண்ணுந்
தூசி மறவன் துணைவழி எய்திடப்
பாசங் கிடந்து பதைக்கின்ற வாறன்றே.

"சிவனடியார்களே, கதிரேசன் மயில்வாகனத்திற்குச் சொன்னார்; குளமாகிய ஆருயிர்களின் உள்ளத்தில் பாசியாகிய காமம், வெகுளி, மயக்கங்கள் படர்ந்துள்ளன. அவ்வுள்ளத்தோடு கூடியிருக்கும் ஆருயிர் இரையாகிய ஐம்புல நுகர்ச்சிகளை ஆராய்ந்து அனுபவித்தல் வேண்டும். பற்றுக்களை அகற்றிய காமம், வெகுளி, மயக்கம் என்னும் பாசங்களை அடக்கி வாழும். அடக்குதலே அவற்றை வெல்லும் வழியாகும். உன்னால் உனது புலன்களை அடக்க முடியாமையால்தான் துன்பப்படுகிறாய். பற்றற்றவன் பணமில்லாவிட்டாலும் மகிழ்வுடன் வாழ்கிறான். அதற்குக் காரணம் அவனின் உறுதியான கடவுள்பக்தி. இருவினைகளுக்கீடாகத்தான் இன்பமும் துன்பமும் வருகின்றன என்று நினைப்பவன் கடவுளிடம் தனது குறைநிறைகளைக்கூறி நிம்மதியடைகிறான். கடவுள் தனக்குக் குறைவிடார் என்று நினைக்கிறான். அந்த நினைப்புத்தான் அவனை மகிழ்வுடன் வாழ வைக்கிறது. இதை நீ ஊரவர்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். அறிவு என்பது உண்மையை உணர்த்துவதாக இருக்க வேண்டும். மற்றவர்களைக் கெடுக்க நினைத்தால் அந் நினைவு நினைப்பவரை வருத்தும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2887. கும்ப மலைமேல் எழுந்ததோர் கொம்புண்டு
கொம்புக்கும் அப்பால் அடிப்பதோர் காற்றுண்டு
வம்பாய் மலர்ந்ததோர் பூவுண்டப் பூவுக்குள்
வண்டாய்க் கிடந்து மணங்கொள்வன் ஈசனே.

“சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; “துன்பங்களை அகற்ற ஐந்தெழுத்து மந்திரத்தை இடைவிடாது ஓதுதல் வேண்டும். நமசிவய, சிவயநம, சிவசிவ என்று தினமும் ஓது. உனது துன்பங்கள் படிப்படியாகக் குறைந்து முற்றாக அழியும். புலன்களின் தாக்கம் அடங்கிய மனதைக் கும்பமலை என்பர். அதனால் வரும் திருவடிப் பேரின்பம் தொடர்ந்து வருமாறு திருவருளால் வீசுவதோர் தென்றலாகிய தமிழ்மென்காற்று ஒன்று உண்டு. மெய்யுணர்வுள்ள ஆருயிர் என்ற மலரில் முழுமுதலான சிவன் வண்டாக அமர்ந்திருந்து அருள்செய்வான். இதை மெய்யுணர்வில்லாதவர்கள் நம்பமாட்டார்கள். நம்பிக்கைதான் கடவுள். நம்பிக்கைதான் வாழ்க்கை. நம்பிக்கைதான் எதிர்காலம். வெற்றி, நிம்மதி, மகிழ்ச்சி என்பன. வாழ்க்கையை வளப்படுத்துவது நம்பிக்கை. அது கடவுள் நம்பிக்கையாக இருந்தால் துன்பங்கள் எவையும் வராது. வந்தாலும் சிவனருளால் வந்தவழி தெரியாது சென்றுவிடும் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2888. வீணையுந் தண்டும் விரவி யிசைமுரல்
தாணுவும் மேவித் தகுதலைப் பெய்தது
வாணிபஞ் சிக்கென் றதுவடை யாமுன்னங்
காணியும் அங்கே கலக்கின்ற வாறன்றே.

“சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; “நீ, உனது மனதை அமைதிபெற வேண்டும் என்று விரும்பினால் ஆச்சிரமத்திற்கு வந்து அகத்தவம் என்று சொல்லப்படும் உயிர்ப்புப் பயிற்சியைச் செய். அது உனது துன்பங்களை முழுமையாக அகற்றும். உயிர்ப்புப் பயிற்சியால் பத்து வகையான முழக்கம் அகத்தே எழும். அவற்றுள் யாழ் ஒலி, புல்லாங்குழல் ஒலி என்பனவும் உண்டு. இவ்விரு ஒலிகளும் ஒன்றுகூட உயிர்ப்பானது தாணு என்ற பெயரைப் பெறும். அவ் உயிர்ப்பைப் பயிலுவாருக்கு புலனுகர்வு விரைந்து வந்து அதனைக் கெடுத்தற் பொருட்டு சேர்வதற்கு முன்னர், யாவற்றையும் ஓர் இடத்தில் ஒருங்கே காணும் யோகக்காட்சி ஏற்படும். ஏற்பட்டதும் அது உயிர்ப்புப் பயிற்சியுடன் கலந்து கொள்ளும். அதனால் யோகக் காட்சியினர் ஓர் இடத்தில் இருந்து எல்லாவற்றையும் காண்பர். இது சிவனது திருவருளால் நடைபெறுவது. ஆருயிர், கண் முதலிய புலன்களால், புத்தியினால் உழைப்பு, உணர்வு, உவர்ப்பு என்னும் கருவிகளால் அறியும் அறிவு அவ்வவ் எல்லைவரையுமே அறியும். இவற்றையெல்லாம் நீ அறிய மாட்டாய். அறிந்தாலும் நம்பமாட்டாய். உன் அறிவைப் பயன்படுத்தி ஊரவரைப் பார். சிவநினைவோடு இருப்பவர்களின் நிலையையும், அவர்களது குடும்பங்களையும் நினைத்துப்பார். அதன் பின்பும் புரியாவிட்டால் சிவனாலும் உன்னைத் திருப்திப்படுத்த முடியாது என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2889. கொங்குபுக் காரொடு வாணிபஞ் செய்தது
அங்குபுக் காலன்றி ஆய்ந்தறி வாரில்லை
திங்கள்புக் கால்இரு ளாவ தறிந்திலர்
தங்குபுக் கார்சிலர் தாபதர் தாமன்றே .

"சிவனடியார்களே, ஒருவனுக்குச் சிவசிந்தனையை ஏற்படுத்த வேண்டுமானால் கதிரேசன் அவனோடு பல நாட்களையும் செலவு செய்வார். அவனது அறியாமையை முழுமையாக நீக்க வேண்டும் என்பதே அவரது எண்ணமாக இருக்கும். அதனால் மயில்வாகனத்திற்குச் சொன்னார்; "புலப்பசையாகிய விசய வாசனையில் வெளிவந்து மனம் புகுவதே வாணிகம் செய்வது. இந்தியரியங்கள் மனம் என்னும் பொருளையும் உடையது. புலன்கள் அடங்கிய மனதையும் அலைபாயவைப்பது. அவ்வாறானவர்கள் சிறப்பில்லாத சிறியோராவர். இச் சிறியாருடன் சேர்ந்து சிறப்பில்லாத தொழிலை, பிறப்புலாந்தொழிலைப் புரிகின்றோம் என்னும் எண்ணம் இவரை விட்டுநீங்கி சிறப்புள்ளவர்களுடன் சேர்த்து செயலாற்றும்போது புலனாவதாகும். அதுபோன்று அங்கொன்று சொல்லப்படும் செயலறும் இடமாகிய நன்னிலத்துப் போனாலல்லாமல் சிறப்பில்லாத் தொழில் புலனாகாமாட்டாது. இதை நீ அறிந்திருக்க-மாட்டாய் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2890. போதும் புலர்ந்தது பொன்னிறங் கொண்டது
தாதவிழ் புன்னை தயங்கு மிருகரை
ஏதமில் ஈசன் இயங்கு நெறியிது
மாத ரிருந்ததோர் மண்டலந் தானன்றே.

"சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; திருவருளினால்தான் அறியாமை-யாகிய இருள் அகலும். அது அழிந்தால்தான் பேரறிவாகிய சிவஞாயிற்றின் ஒளி பரவும். திருவருள் வசப்பட்டால் சிவபெருமான் அகமும் புறமுமாகிய இரு பக்கங்களிலும் வெளிப்பட்டு நின்றருள்வன். இது ஆருயிர்களுக்குச் சிவன் செய்யும் ஒப்பில்லாத உதவியாகும். சிவனை ஒரு மனத்துடன் வணங்கு. செந்தமிழ்த் திருமறையான நமசிவய, சிவயநம, சிவயசிவ, சிவசிவ என்று ஓது. திருவருள் உன்னைத் தேடி வரும். அதன்பின் சிவன் வந்து உதவுவான் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2891. கோமுற் றமருங் குடிகளுந் தம்மிலே
காமுற்ற கத்தி இருவர் கடைதொறு
மீவற்ற வெல்லை விடாது வழிகாட்டி
யாமுற்ற தட்டினால் ஐந்துண்ண லாகுமே.

"சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; "விருப்பு வெறுப்புக் காரணமாக ஆருயிர் தான் விரும்பிய புலப்பொருட்களை அடைய முயன்று அப்பொருட்கள் உள்ள இடங்களுக்கெல்லாம் சென்று முயன்று நிற்கும். அங்ஙனம் நிற்கும் அவ்வுயிரைத் திருவருட் சிவகுரு உள்ளத்தை உலக விடயங்களில் செல்லவிடாது

திருவைந்தெழுத்தைச் செவியறிவுறுத்தியருள்வன். அதனால் ஆருயிரின் முனைப்பு நீங்கும். அதனால் திருவடிப் பேரின்பம் கிடைக்கும். ஆகையால் ஆச்சிரமத்திற்குவா. உனக்குத் தேவையான உபதேசத்தை ஆச்சிரமத்தில் இருக்கும் சுவாமி வழங்குவார் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2892. தோட்டத்தில் மாம்பழந் தொண்டி விழுந்தக்கால்
நாட்டின் புறத்தில் நரியழைத் தென்செயும்
மூட்டிக் கொடுத்து முதல்வனை முன்னிட்டுக்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறன்றே.

"சிவனடியார்களே, ஆருயிரின் செயலறலாகிய நிட்டை கலைந்தவிடத்து, ஆருயிரின் நாட்டத்தின்கண் பண்டைப் பயிற்சியின் பசையினால் மாற்றம் ஏற்படும். ஏற்படவே நிட்டை கலையும். நிட்டை கலைந்தால் உள்ளம் புறத்தே செல்லும். சென்றால் பூசை முறையை மேற்கொள்வர். அதனால் பயன் இல்லை. திருவருளால் சிவகுருவானவர் நிட்டை புரியுமாறு தூண்டித் துணைசெய்து, முதல்வனான ஆலமர் செல்வனை முன்வைத்துத் திருவைந்தெழுத்தை செவியறிவுறுத்திச் சிவபெருமானின் திருவடியினைக் காட்டிக் கொடுப்பர். அங்ஙனம் காட்டிக் கொடுத்தவரை நாம் நினையாது தினைப்பொழுது இருப்பினும் அவரும் கைவிடுவர். இவையெல்லாம் அவர் கைவிட்டமையால் நேர்வன. அங்ஙனம் நேராவண்ணம் சிவகுருவினை இடையறாது நாடுதல் வேண்டும். திருவைந்தெழுத்தை ஓதிச் சிவகுருவை ஓயாது நினைத்திருப்பதே எம் கடமையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2893. புலர்ந்தது போதென்று புட்கள் சிலம்பப்
புலர்ந்தது போதென்று பூங்கொடி புல்லிப்
புலம்பி வைளோடும் போக நுகரும்
புலம்பனுக் கென்றும் புலர்ந்திலை போதே.

"சிவனடியார்களே, செந்தமிழ் வேதங்களும் ஆகமங்களும், அவற்றை ஓதும் உண்மைக் குருமாரும் புட்கள் எனப்படுகின்றனர். அப்புட்களின் அறியாமையாகிய இருள் அருளால் கெட்டது. அதை உறுதியானது என்று நம்பாது பலர் மாயாகாரியப் பொருட்களையும் பெண்களையும் நாடியலைகின்றனர். இவர்களது நிலை இருள் நிலையாகும். பலர் பெண்களுடன் கூடும் கூட்டையே பெரிதென்று நினைத்துக் கெட்டழிகின்றனர். தன்முனைப்புடன் இறைவனை மறந்து எதை அனுபவித்தாலும் அது பிறவிக்கு வித்தாகும் என்பதை அறிவாரில்லை. அது பெரும்பாவம் என்பதையும் உணர்வதில்லை. அறக்கூழ்ச் சாலையில் கொடுக்கப்பட்ட கூழை அவர்கள் அருளுடன் வாங்கி உண்பர். நன்றி மறவா நினைவும் அன்பும் கொண்டு உண்டால் அ.்.து அறமாகும். அங்ஙனமின்றி உண்டால் அது பாவமாகும். அறியாமை வசப்பட்ட ஆருயிர் புலம்பன் எனப்படும். அத்தகைய புலம்பனுக்கு ஒருபோதும் அறியாமையாகிய அகவிருள் நீங்காது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2894. போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு
மாதிரண் டாகி மகிழ்துட னேநிற்குந்
தாதிரண் டாகிய தண்ணம் பறவைகள்
வேதிரண் டாகி வெறிக்கின்ற வாறன்றே.

"சிவனடியார்களே, காலையும் மாலையும் வேதாகமங்களை முறைப்படி ஓதுதல் வேண்டும். அவ்வாறு ஓதி வந்தால் அகம் புறம் ஆகிய இரு இடங்களிலும் திருமகள் வந்தமர்ந்து அருள் புரிவாள். மகிழ்வுடன் அங்கு தங்கியிருப்பாள். வெண்ணீரும் செந்நீரும் கலந்து கருவுட் புகுந்து ஆருயிர் பிறக்கும். அவ் உயிர்களைப் பறவைகள் என்பர்."

"சிவனடியார்களே, மயில்வாகனத்தின் நண்பன் ஏகாம்பரம். மயில்வாகனத்துடன் சேர்ந்து தீய செயல்களைச் செய்பவன். அவனுக்கு வயது முப்பத்தைந்து. பத்து வருடங்களுக்கு முன் திருமணமானபோதும் பிள்ளைகள் பிறக்கவில்லை. அதனால் துயரப்பட்ட அவனது மனைவி ஆரணி ஏகாம்பரத்தின் தீய செயல்களால் தான் பிள்ளை பிறக்கவில்லையென்று நினைத்தாள். அத்துடன் மயில்வாகனம் தீமைகள் செய்தமையால் தான் பிள்ளைகள் ஒழுக்கமின்றி வாழ்ந்து இறந்தன என்றும் நினைத்து ஏகாம்பரத்திற்கு சொன்னாள்; "ஊரில் நல்லவர்கள் எல்லோரும் சிவனடியார்களாக இருப்பதால் அவர்களது வாழ்வு மேலோங்கியுள்ளது. சிவன் எமக்கு அளவில்லாத பொருளைத் தந்தபோதும் ஒரு பிள்ளையைத் தரவில்லை. அது நீங்கள் செய்யும் பாவத்தால் வந்தது. அதனால் சிவனை வழிபடுங்கள். ஆச்சிரமத்திற்குச் சென்ற தீயவர்கள் பலர் திருந்தி மேலான வாழ்வு வாழ்கின்றனர். அதனால் ஆச்சிரமத்திற்கு வாருங்கள் என்று பலமுறை இரந்தபின் ஏகாம்பரம் சம்மதித்து ஆச்சிரமத்திற்கு வந்தான். அவர்களின் நிலை தெரிந்த கதிரேசன் சொன்னார்; "திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுங்கள். ஆரணி ஓதி வருகிறாள். நீ தன்முனைப்புக் கொண்டு தீயவற்றையே செய்கிறாய். அவற்றை விட்டுவிட்டு முழு மனதுடன் திருவைந்தெழுத்தை ஓது. காலை மாலை வேளைகளில் வேதாகமங்களை முறைப்படி ஓதினால் ஓதுபவரின் அகத்தும் புறத்தும் திருமகள் வந்து அமர்வாள்" அவள் மகிழ்ந்தால் கரு உண்டாகும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2895. தோணியொன் றுண்டு துறையில் விடுவது
ஆணி மிதித்துநின் றவைர்கோ லான்றலும்
வாணிபஞ் செய்வார் வழியிடை யாற்றிடை
ஆணி கலங்கில் அதுவிது வாகுமே.

"சிவனடியார்களே, ஆருயிர்கள் பிறவிப்பெருங்கடலைக் கடக்க வேண்டும். அதற்கு மக்கட் பிறப்பே உதவி செய்யும். அதனால் மக்களைத் தோணி என்பர்.

தோணியாகிய உடம்பு மெய்யுணர்ந்தவர்களைத் திருவடிக் கரையாகிய பெருந்துறைக்கு அழைத்துச் லெல்லும். தோணியின் பக்க இடம் ஆணி எனப்படும். அவ் ஆணியை மிதித்து ஏறுதல் வேண்டும். ஏறிய பின் ஐம்புலன்களையும் அடக்குதல் வேண்டும். அவை அகலச் சிவகுரு வந்தருள்வார். அவர் ஒரு பெரு வணிகர். ஊதியம் தரும் வணிகர். அவர் எழுந்தருளி எமது அறியாமையை வாங்கிக் கொண்டு அறிவைத் தந்துதவுவார். ஆற்றின் இடை நடுவில் உடம்பாகிய தோணியின் இருப்புக்கு ஆணி என்னும் அறியாமை நீங்குமானால் அதுவாகிய சிவன் இதுவாகிய ஆருயிராகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

18. மோன சமாதி

(மேன்மை ஒடுக்கம்)

2896. நின்றார் இருந்தார் கிடந்தார் எனவில்லை
சென்றார் தருஞ்சித்த மோனச மதியாம்
மன்றேயு மங்கே மறைப்பொரு ளொன்றுண்டு
சென்றாங் கணைந்தவர் சேர்கின்ற வாறன்றே.

"சிவனடியார்களே, மேன்மையான சமாதி மோன சமாதி எனப்படும். அதனை அருளால் அடைய வேண்டி முயற்சிப்பார் காலம் தாழ்த்தாது உடனே பயில்வர். அவர்கள் அப்பயிற்சியின் கண் நின்றார். சில காலம் பின் சிறிது பயின்று இருந்தார் சில காலம் எனக் கால இடைவெளி கூறுவார் எவரும் இல்லை. புறத்துக் காணப்படும் ஐவகை மன்றங்களிலும் மிக்க தாய் அகத்துக் காணப்பாடும் நெஞ்சு ஒன்றுண்டு. அப்பொருளே சிவபெருமான். நெஞ்சாக மன்றத்தின் கண் நிகழ்த்தும் நடிப்பே முதற் கண் நடித்த நடிப்பாகும். மறவாத உணர்வால் சென்று அச் சிவபெருமானின் திருவடிக்கீழ் உறைபவர் அவனுடன் பின்னிப்புணர்ந்து மன்னி இன்புறும் அணைந்தோராவர். அணைந்தவர் திருவடியைச் சேர்வர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2897. காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருந்நதி - கூட்டிடி னல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே.

"சிவனடியார்களே, ஆருயிர்களின் செவ்வி பார்த்துத் திருவருளே திருமேனியாகக் கொண்டு வெளிப்பட்டு வந்தருளும் சிவபெருமான் சிவகுருவானவன். அவனை அடையும் காரணமாகிய பயிற்சிகளைக் கூறி உணர்த்தியவாறே இடையறாது பயிலுதல் வேண்டும். ஏட்டில் அவற்றை எழுதி வைப்பதால் பயன் எதுவும் ஏற்படாது. திருவடியைக் கூட்டுவித்தருளும் குருநந்தி கூட்டினால் அல்லாமல் வேறு நன்னெறிக்கு

உய்விக்கும் வாயில் இல்லை. ஏனையவை ஆட்டின் கழுத்தில் பயனின்றித் தொங்கும் மடியோடொக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2898. மறப்பது வாய்நின்ற மாயநன் நாடன்
பிறப்பினை நீங்கிய பேரரு ளாளன்
சிறப்புடை யான்திரு மங்கையந் தானும்
உறக்கமில் போகத் துறங்கிடுந் [2]தானோ.

"சிவனடியார்களே, ஆருயிர்கள் அறியாமை வலுப்பட்டு புலம்பு எய்தின. பின்னர் அருளால் அவ் அறியாமையைத் தேய்த்து மாய்தற் பொருட்டு மாயாகாரிய உடம்பினை எய்தின. எய்திப் புணர்வு நிலை அடைந்தன. இந்நிலையில் அவ்வுயிர்கள் தம்மையும் தமது தலைவனான சிவனையும் மறந்து உழல்கின்றன. அம்மறப்புக்கு ஏதுவான மாயாகாரிய உடம்பினையே அவ்வுயிர்கள் பெற்றுள்ளன. பேரருளை உடைய சிவன் திருவருளம்மையுடன் கூடி உடனாக நின்று அருளி தானும் உடன் உறங்கிவிடுவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2899. துரியங்கள் மூன்றும் கடந்தொளிர் சோதி
அரிய துரியம் அதில்மீது மூன்றாய்
விரிவு குவிவு விழுங்கி யுமிழ்ந்தே
உரையில் அநுபூ திகத்தினுள் ளானே.

"சிவனடியார்களே, ஆருயிர் செயலறல், அருட் செயலறல், அருளோன் செயலறல் ஆகிய மூன்றும் முத்துரியங்களாகும். அம் மூன்று நிலைகளையும் கடந்த பேரொளிப்பிழம்பு சிவன். அம் மூன்றினதும் அப்பால் நிலையாகிய துரியாதீதமும் மூன்றாகும். அந்நிலையின் போது ஆருயிருக்கு விரிவு குவிவாகிய நினைப்பும் மறப்பும் உண்டாக மாட்டாது. விழுங்கி உமிழ்தல் என்பது கொண்டும் ஒழிந்தும் வருதலில்லாத சொற்கழிவாகிய பேரின்ப நுகர்வு. நல்லார் தம் நுகர்வுணர்வாகுமேயன்றி வேறன்று. அந்நுகர்வின் கண் நுகரின்பமாய்ச் சிவபெருமான் நீங்காது உறைந்தருள்வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2900. உருவிலி யூனிலி யூனமொன் றில்லி
திருவிலி தீதிலி தேவர்க்குந் தேவன்
பொருவிலி பூதப் படையுடை யானி
மருவிலி வந்தென் மனம்புகுந் தானே.

"சிவனடியார்களே, சிவபெருமான் மலம் வினைகளுக்கு ஈடாக வரும் உருவினை உடையவனல்ல. அவன் பிறப்பல்லாதவன். சென்றடையும் திருவில்லாதவன். குற்றமற்றவன். தேவர்களுக்கெல்லாம் தேவனாகவுள்ளவன். ஒப்பில்லாதவன்.

பூதப்பண்டங்களை உடையவன். தான் எப்பொருளையும் சார்ந்திருக்காமல் தன்னைச் சார்ந்தே பொருட்களை உருவாக்கியவன். அவன் வலிய வந்து என் உள்ளத்தில் புகுந்து கொண்டான் என்று திருமூலர் சொல்கிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2901. கண்டறி வாரில்லைக் காயத்தின் நந்தியை
எண்டிசை யோரும் இறைவனென் றேத்துவர்
அண்டங் கடந்த அளவிலா ஆனந்தத்
தொண்டர் முகந்த துறையறி யோமன்றே

"சிவனடியார்களே, மெய்யடியார்களின் உள்ளத்தில் சிவபெருமான் பள்ளத்தில் நிற்கும் வெள்ளம் போல நின்றருள்வன். ஏனைய திருக்கோவில் முதலியனவெல்லாம் இறைவனை நினைவூட்டும் வழியடையாளங்களாகும். இவ்வுண்மையை உணர்ந்து உள்ளத்தைப் பெருங்கோவிலாகக் கொண்டு நந்தி எழுந்தருளியிருப்பதைத் திருவருள் நினைவால் கண்டறிவாரில்லை. எட்டுத்திசையிலும் உள்ளோர் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று தொழுது வணங்குகின்றனர். அண்டங்கள் அனைத்தையும் கடந்த பேரன்பு மிக்க திருத்தொண்டர்கள் அனுபவிக்கும் திருவடிப் பேரின்பத்தை நாம் உணரமுடியாது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2902. உடலாங் குகையில் உணர்வாகும் பீடத்து
அடலார் சமாதி இதயத் தாக
நடமா டியகுகை நாடிய யோகி
மிடையாகா வண்ணம்சா திக்குமெல் வல்வே.

"சிவனடியார்களே, உடலென்னும் குகையில் உணர்வெனும் இருக்கையில் மலம் முதலியவற்றை வெல்லும் திண்மை வாய்ந்த நிட்டை கூடும் நிலையம் நெஞ்சமாகும். இந் நெஞ்சத்தை இடமாகக் கொண்டு இறைவன் நடமாடுகின்றனன். யோகியர் அவனையே நாடி நிற்கின்றனர். இடையூறு எதுவும் நேராவண்ணம் நிட்டையினை நிலைபெறச் செய்து இன்புறுகின்றனர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2903. தற்பர மல்ல சதாசிவன் தானல்ல
நிட்கள மல்ல சகள நிலையல்ல
அற்புத மாகி யர்போகக் காமம்போற்
கற்பனை யின்றிக் கலந்துநின் றாபனன்றே[1].

"சிவனடியார்களே, முழுமுதற் சிவபெருமான் ஆண்டானுமல்ல, அருளோனும் அல்ல, உருவும் உறுப்புக்களையும் உடையவனும் அல்ல அவை இல்லாதவனுமல்ல. இன்னவாறு உள்ளான் என்று எவராலும் கூற முடியாத வியத்தகு நிலையனாகவுள்ளவன். அவன் கருத்தொருமித்த காதலர் அனுபவிக்கும் காம இன்பம் போல அவனது நிலையும்

திருவடி இன்பமும் நுகர்வும் நுண்ணுணர்வால் உணர்வனவாகும். அதைக் கருவி உணர்வால் உணரமுடியாது. அது பொய் என்று சொல்லத்தக்க கற்பனையும் அல்ல" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2904. முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே.

"சிவனடியார்களே, பொருட்களின் வடிவினை முகத்தில் உள்ள கண்களைக் கொண்டு பார்க்கலாம். அப்பொருளின் பண்பினை அகக்கண்ணாகிய அறிவுக் கண்களால் மட்டுமே உணர முடியும். அறிவுக் கண்ணால் உணரப்படும் அம்மெய்ப்பொருளை முகக் கண்ணால் காணலாம் என நினைப்பவர்கள் மூடர்கள். நல்லறிவும் மனை மாண்பும் வினைத்திறனும் மக்கட்பேறும் உடைய ஒரு சிறந்த தாயானவள் தன் காதல் கணவனுடன் கூடி இன்பம் பெற்றாள். இவ்வின்பத்தைத் தன் மகள் உணர வினவினால் அவளுக்கு எப்படி உணர்த்துவாள் அவள் ஒழுக்கமுள்ள ஒருவனைத் திருமணம் செய்து கூடி மகிழ்ந்த பின்பே அறிவாள். இதுபோல் ஆருயிர் சிவகுருவின் திருவருளால் திருவடியில் கூட்டப் பெற்றதும் அப்பேரின்பத்தைத் தாமே அறியும். முகக்கண்ணால் காண்பது சிற்றின்பம் அகக்கண்ணால் காண்பதே பேரின்பம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2905. அப்பினில் உப்பென அத்தன் அணைந்திட்டுச்
செப்பு பராபரஞ் சேர்பர மும்விட்டுக்
கப்புறு சொற்பத மாளக் கலந்தமை
எப்ப டியப்படி என்னுமவ் வாறன்றே.

"சிவனடியார்களே, நீரில் கரையும் உப்பு போலச் சிவபெருமான் ஆருயிர்களுடன் அணைந்தருள்வன். அவை இரண்டும் புணர்ப்பால் ஒன்றாகிவிடும். அந்நிலை இறவா இன்பமாகும். அந்நிலையில் அவன் நான் அல்லது ஆண்டான அடிமை, இன்பு அன்பு எனக் கூறப்படும். கோவிலுக்குச் செல்வோர் எல்லோரும் 'கோவிற் பிணாப் பிள்ளைகாள்' என்பது போன்று கோவிலார் என்றே பெயர் பெறுவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2906. கண்டார்க் கழகிதாங் காஞ்சிரத் தின்பழந்
தின்றார்க் கறியலாம் அப்பழத் தின்சுவை
பெண்டா னிரம்பி மடவிய ளானாற்
கொண்டான் அறிவன் குணம்பல தானே[1].

"சிவனடியார்களே, காஞ்சிரம் பழம் தின்பாரைக் கொல்லும். ஆனால் பார்ப்பாரைத் தன்வனப்பினால் ஈர்க்கும் தன்மைது. அதுபோல் மாயாகாரியமாகிய

உலகமும் தன்பாற் பற்றுக் கொண்டாரை மயக்கிப் பிறப்பினுள்த் தள்ளும். அது மாயாகாரியங்களைக் காட்டி மயக்கித் தன்பால் ஈர்க்கும். எட்டிப் பழத்தை அறிவால் மருண்டு நின்றவர் உண்மையை அறிந்தது போன்று உலக இன்பங்களில் சிக்குண்டவர் தாமே உண்மையை அறிவர். அழகிய பருவமடைந்த ஒரு பெண்ணை மணந்தவன் மட்டுமே அப் பெண்ணின் இன்பத்தை நுகர்ந்து மகிழ்வன். அதுபோல ஆருயிர்கள் சிவத்தைப் பேணிப் பேரின்பம் அடைதல் வேண்டும். பெண்நிலையில் ஆருயிர்கள் ஆண்டானான சிவனின் திருவடியின் கண்வேறக் கூடும். அப்பொழுது திருவடியின்பத்தினை எய்தும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2907. நந்தி யிருந்தான் நடுவுள் தெருவிலே
சந்தி சமாதிகள் தாமே யொழிந்தன
உந்தியி னுள்ளே யுதித்தெழுஞ் சோதியைப்
புந்தியி னாலே புணர்ந்துகொண் டேனன்றே.

"சிவனடியார்களே, திருவருளின் துணையால் சிவகுருவின் அருளால் உள்ளத்தின் நடுவில் நந்தி எழுந்தருளியிருந்தான். தாலி கட்டி முடிந்ததும் திருமணத்திற்கு வாங்கிய மணச் சடங்குப் பொருட்கள் தாமே கழிவது போன்று நந்தி எழுந்தருளியமையால் சந்தி சமாதிகள் தாமே அகன்றன. மேல் வயிறாகிய மணிபூரகத்துத் தோன்றி மிக்கு எழும் திருவருட் பேரொளிப் பிழம்பாகிய சிவபெருமானை உற்றுநோக்குதலாகிய உள்ளத்தினால் மீளா அடிமையாகப் புணர்ந்து கொண்டேன் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2908. விதறுபடாவண்ணம் வேறிருந் தாய்ந்து
பதறு படாதே பழமறை பார்த்துக்
கதறிய பாழைக் கடந்ததந்தக் கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின் றேனே.

"சிவனடியார்களே, திருவருளின் நினைவால் சோர்வுண்டாகாமல் தனித்திருந்து ஆராய்தல் வேண்டும். அங்ஙனம் ஆராய்ந்தால் பதறுதல் உண்டாகாது. 'சிவ சிவ' என்னும் செந்தமிழ்த்திருமறையை உணர்வில் கணித்து உறுதியுடன் நிற்றல் வேண்டும். இவ்விரண்டும் கைகூடினால் துன்புறுத்தும் மாயை அடங்கியொடுங்கும். அது அடங்கினால் ஆருயிர் சிவனில் ஒடுங்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2909. வாடா மலர்புனை சேவடி வானவர்
கூடார் அறநெறி நாடொறு மின்புறச்
சேடார் கமலச் செழுஞ்சுட ருட்சென்று
நாடார் அமுதுற நாடார் அமுதமே.

"சிவனடியார்களே, சிவவுலகினர் நறுமணம் கமழும் வாடாத மாலை சூடிச் சிவனைத் தினமும் வழிபடுவர். அத்தகைய சிவனை மனதால் ஓயாது நினைத்தல் வேண்டும். அவ்வாறு செய்பவர்கள் அறநெறியினைக் கூடுவர். அவ்வாறு செய்யாதார் கூட மாட்டார்கள். ஆருயிர்கள் எப்போதும் நிறைவான இன்பத்தைப் பெறும்பொருட்டு சிவபெருமானின் அழகிய தாமரையை ஒத்த திருவடியை வணங்குதல் வேண்டும். ஆருயிர்களின் நெஞ்சத்தினுள் செழுஞ்சுடராய் திகழ்கின்ற சிவனை நாடாதவர்களுக்குத் திருவடித்தேனமுது கிடைக்காது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2910. அதுக்கென் றிருவர் அமர்ந்தசொற் கேட்டும்
பொதுக்கெனக் காமம் புலப்படு மாபோல்
சதுக்கென்று வேறே சமைந்தாரைக் காண
மதுக்கொன்றைத் தாரான் வளந்தரு மன்றே.

"சிவனடியார்களே, ஒழுக்கமாக வாழும் நல்லோர் மனையறத்தில் இன்பமும் மகப்பேறும் வேண்டி திருமணமும் செய்து நன்மக்களை பெறுதற் பொருட்டே உடனுறைவின்பம் பெறுவர். அவர்கள் இருவரும் சிவநினைவு மறவாதவர்களாக வாழ்க்கையைத் தவநெறியாகக் கொண்டு வாழ்வர். அவர்கள் மகவு வேண்டச் சிவ நினைவுடன் கூடுவர். அப்போது அன்புடன் காமமும் வெளிப்படும். இது சிவபெருமானின் திருவாணை என்று அவர்கள் நினைப்பார்கள். அத்துடன் உலக வாழ்வைச் சிவனுக்கு அர்ப்பணித்து வாழ்வர். அத்தகையவர்களைச் சிவன் தனது திருவுள்ளத்தால் உணர்வன். உணர்ந்ததும் தனது திருவடிப் பேரின்பம் முழுவதையும் ஈந்தருள்வன்"

"சிவனடியார்களே, கதிரேசனும் அவரது மனைவியும் வாழ்வது சிவ வாழ்வு. அவர்கள் சைவ சித்தாந்தம் கூறும் நெறிமுறைகளைத் தவறாது கடைப்பிடிப்பவர்கள். எவ்வேளையில் யார் பசிக்கிறது என்று சொன்னாலும் அவர்களுக்கு உணவு கொடுப்பார்கள். ஏழைகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்வார்கள். மாணவர்கள் கற்க வழிகாட்டுவார்கள். உதவிகள் செய்வார். இவையெல்லாம் உங்களுக்குத் தெரியும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2911. தானும் அழிந்து தனமும் அழிந்துநீ
டூனும் அழிந்து உயிரும் அழிந்ததுடன்
வானும் அழிந்து மனமும் அழிந்தபின்
நானும் அழிந்தமை நானறி யேனன்றே.

"சிவனடியார்களே, திருவருளின் நினைவால் எழுந்தருளி வந்த சிவகுருவின் உபதேசத்தால் தானாகிய உடம்பு அழிந்து அழிந்தது என்பது சகல பற்றுக்களும் அகன்றதைக் குறிக்கும். ஈட்டும் பொருளும் அழிந்தது. வளமுள்ள ஊனும் அழிந்தது. உயிர்ப்பும் அழிந்தது. பூதங்களும் அழிந்தன. மனமும் அழிந்தது. இவையாவும்

அழிந்தது. பற்றற்றானின் திருவடியைப் பற்றுவதற்காகவே. இவை அனைத்தையும் அழிந்ததை நான் அறியவில்லை என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2912. இருளும் வெளியும் இரண்டையும் மாற்றிப்
பொருளிற் பொருளாய்ப் பொருந்தவுள் ளாகி
அருளால் அழிந்திடும் அத்தன் அடிக்கே
உருளாத கன்மன முற்றுநின் றேனே.

"சிவனடியார்களே, மறப்பும், நினைவும் திருவருளின் நினைவால் மாற்றுதல் வேண்டும். மாற்றம்தான் சிவத்துடன் பொருந்த வைக்கும். பொருந்தினால் சிவன் எழுந்து ஆட்கொண்டருளுவன். ஆட்கொண்டதும் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றும் அகலும். அகன்றதும் சிவபெருமானின் திருவடிநிலை எழும். அப்போது முன்பு உருகாத மனம் உருகும். சிவனோடு பொருந்தும். அதுதான் முடிவில்லாத பேரின்பத்திற்குரிய வீடு" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2913. ஒன்றுநின் றுள்ளே யுணர்ந்தேன் பராபரம்
ஒன்றுநின் றுள்ளே யுணர்ந்தேன் சிவகதி[1]
ஒன்றுநின் றுள்ளே யுணர்ந்தேன் உணர்வினை
ஒன்றிநின் றேபல வூழிகண் டேனன்றே.

"சிவனடியார்களே, திருவருள் நினைவால் உள்ள ஒரு முகப்பட்டுச் சிவனை மனதுள் நினைத்தேன். பராபரமாகிய பெரும் பொருளை உணர்ந்தேன். அதுபோலச் சிவனையும் உணர்ந்தேன். அதனால் திருவடியுணர்வையும் உணர முடிந்தது. அது போன்று பல ஊழிகளையும் கண்டுணர்ந்தேன் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

19. வரையுறை மாட்சி

2914. தான்வரை வற்றபி ணாரை வரைவது
தானவ ணானகி ணாரை நினைவது
காமனை வென்றகண் ணாரை யுகப்பது
தூமொழி வாசகஞ் சொல்லுமின் நீரன்றே.

"சிவனடியார்களே, ஒருவன் எதிலும் பற்றில்லாமல் இருக்க வேண்டுமானால் பற்றில்லாதவனைப் பற்றுதல் வேண்டும். அந்தரத்தில் நிற்பவன் நிலையாக நிற்க வேண்டுமானால் தரையில் இறங்கி நிற்றல் வேண்டும். அதுபோலத்தான் திருவருளால் சிவனோடு கூடிச் சிவனானபின் நினைப்பதற்கு எதுவும் இருக்காது. ஒரு நூலை வாங்க வேண்டும் என்று நினைப்பவன் அதை வாங்கிய பின்கு அந்நினைப்பு மனகதை

விட்டகல்வது இதற்கு ஒப்பாகும். அவன் அந்நூலைப் படித்து மகிழ்வான். அதுபோலத் திருவடியைச் சார்ந்த ஆருயிருக்குச் செயல் இல்லை என்று சொல்வது மெய்யுணராதார் சொல்லும் சொல் உரையாகும். காமம், வெகுளி, மயக்கமாகிய முக்குற்றங்களும் நீங்கிய திருவடியுணர்வின்கண் பெற்றாரை உவப்பதும், அவர்கள் பாடியருளிய திருநெறியான தமிழ்வாசகம் சொல்வதும் சிறப்பினுக்கு வாயில்களாகும். அதைத் தெளிவாகக் கூறலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2915. உரையற்ற தொன்றை யுரைசெய்யு மூமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண வாகுமோ
திரையற்ற தனநீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே.

"சிவனடியார்களே, எல்லையில்லாத ஒன்றை எல்லையைக் கண்டு சொல்வார் யார்? கரை இல்லாத ஒன்றின் கரையை எவ்வாறு காண்பது? தெளிந்த நீரைப்போலச் சிந்தை உள்ளவர்களுக்குச் சிவபெருமான் மறைதலின்றி அவர்களது சிந்தையிலே வெளிப்பட்டு அருளுவன். அவன் பின்னல் திருச்சடையை உடையவன். அவன் அகல் நிறைவானவன். ஆருயிர்க்கு அமை நிறைவானவன். மாறுலக அடக்க நிறைவானவன். இவை முறையே வியாபகம், வியாப்பியம், வியாத்தி எனப்படும். சடைப்பின்னல் மூன்றாக வகுக்கப்பட்டுள்ளது. இதுவே திருச்சடையின் கண்ணுள்ள சல மகள் நடப்பாற்றல்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2916. மனமாயை மாயைஇம் மாயை மயக்க
மனமாயை தான்மாய மற்றொன்று மில்லை
பினைமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டா
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே.

"சிவனடியார்களே, மாயையின் தொடக்கு அம்மாயையைப் பற்றியவர்-களுக்கே உண்டு. பற்றாதவர்களுக்கு இல்லை. சிவனை மறவாத மனம் உடையவர்களுக்குச் சிவத்துடன் அவர்கள் ஒடுங்கும்போது மாயையும் ஒடுங்கிமாயும். மாயை மாய்ந்தால் வினையும் செருகும் நிலைக்கு முன் மாயும். வீடு அழிந்தால் அங்குள்ள பொருட்கள் யாவும் அழிவது இதற்கொப்பாகும். அத்துடன் மாயை இல்பொருளன்று. அதனால் அவ்வாறு சொல்ல வேண்டாம். திருவருளின் துணையால் தன்னை அறிவதே தத்துவமாகும். ஆருயிர்கள் சிவனுக்கு அடிமை என்பதை உணர்வதே தன்னையுணரும் தத்துவமாகும். இதுவே சாலச் சிறந்ததாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

20. அணைந்தோர் தன்மை

2917. மலமில்லை மாசில்லை மாணபி மானங்
குலமில்லை கொள்ளுங் குணங்களு மில்லை
நலமில்லை நந்தியை ஞானத்தி னாலே

பலமன்னி யன்பிற் பதித்துவைப் போர்க்கே.

"சிவனடியார்களே, முழுமுதற் சிவபெருமானை நந்தி என்று அழைப்பர். அவனைப் பேரன்பினால் மனதில் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருத்தி வைப்போர் சித்தாந்த சைவச் சென்நெறிச் சீரியோராவர். அவர்கள் பொய் நூல்கள் கூறும் ஒழுக்கக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு ஒன்றாய், மூன்றாய், ஐந்தாய் விரிந்து பிணிக்கும் மலம் இருந்தால் இல்லை. மாசில்லை. அகத்தே ஐந்தெழுத்தும் புறத்தே திருவெண்ணீறும் சிவமணியும் அணிவதால் அகமும் புறமும் தூய்மையாக இருக்கும் கட்டுப்பாடு பற்றித் தோன்றும் மானாபிமானம் இல்லை. உலகோர் வகுத்த குலங்களும் இல்லை. முக்குணங்களும் இல்லை. தன் நலமில்லை. இவையாவும் அற்றவரே அற்றவராவர். அவர்களே அறுபகையும் அற்றவராவர்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2918. **ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்**
கழிந்தேன் கடவுளும் நானுமொன் றானேன்
அழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் [4]டேனே.

"சிவனடியார்களே, எப்பொருளையும் சாராது இன்பத்தைத் தருபவன் சிவபெருமான். அன்பு நாவாகவும், இன்பு தேனாகவும் கொள்ளுதல் வேண்டும். அன்பும் இன்பும் ஒன்றானால் ஆராத அருஞ்சுவையாகும். அத்தகைய சிவனை அவனது திருவடியுணர்வினால் உணர்வினுள் புணர்ந்து நின்று இன்புற்றேன். அதனால் ஒழிக்கமுடியாத பிறவித் தொல்லையை ஒழித்தேன். உறவென்ற பாசம் அறுந்தது. அதனால் அவனும் நானும் ஒன்றானோம் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2919. **ஆலைக் கரும்பும் அமுதும்அக் காரமுஞ்**
சோலைத்தண் ணீரும் உடைத்தெங்கள் நாட்டிடைப்
பீலிக்கண் ணன்ன வடிவுசெய் வாளொரு
கோலப்பெண் ணாட்குக் குறைவொன்று [1]மில்லையே.

"சிவனடியார்களே, ஆலையிலிட்டு எடுத்த கருப்பஞ்சாறும், தூய பாலும், வெல்லக்கட்டியும், தண்ணீரும் உண்டு. வியத்தகு உருக்களை அவ்வப்போது படைத்தருள்பவள் அருட்பெரும் திருவாகும். அவளே கோலப் பெண்ணாவாள். அவளே வனப்பாற்றலினளாவாள். அத்தகைய உலக அன்னையைச் சார்ந்தர்களுக்கு குறைகள் எதுவும் இல்லை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2920. ஆராலும் என்னை அமட்டவொண் ணாதினிச்
சீரார் பிரன்வந்தென் சிந்தை புகுந்தனன்
சீராடி யங்கே திரிவதால் லால்இனி
யார்படுஞ் சாரா அறிவறிந் தேனன்றே.

"சிவனடியார்களே, சிவபெருமான் எளியோனின் மனத்துள் புகுந்து நிறைந்து நின்றருளுவதால் யாராலும் என்னைக் கட்டுப்படுத்த முடியாது. அதனால் சிவனடியான் என்னும் சிறப்புநிலை பெற்று நீங்காக இன்ப வாழ்வு பெற்றுத் தூங்குகின்றேன். இனி எது நேர்ந்தாலும் நினையாத சிறப்பில்லாதவர்களுடன் சேரமாட்டேன். அந்தளவில் என்னைத் திருவருள் ஆட்கொண்டுள்ளது. அதனால் எனக்கு இனி வேறு உறவுகள் தேவையில்லை என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2920. பிரிந்தேன் பிரமன் பிணித்ததோர் பாசந்
தெரிந்தேன் சிவகதி செல்லு நிலையை
அரிந்தேன் வினையை அயில்மன வாளால்
முனிந்தேன் புரத்தினை முந்துகின் றேனே.

"சிவனடியார்களே, மலநோய் நீங்குதற்பொருட்டு படைப்போனால் கூட்டிப் பிணிக்கப்பட்ட வினை மாயைகளைப் பாசம் என அருளால் தெரிந்து கொண்டேன். அதனால் மும்மலப்பிணிப்பிலிருந்து பிரிந்தேன். சிவனின் அருளை அவனருளாலே தெரிந்து கொண்டேன். அந் நிலையினை அடையும் வழிவகைகளையும் தெரிந்து கொண்டேன். திருவைந்தெழுத்தை ஓதும் மனம் தூய்மையுறும். அதனால் வினைப்பிணி அறுந்தது. அதனால் உடல் அழித்து திருவடிப் பேற்றினை அடைய முற்படுகிறேன் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2922. ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவதும்
நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறன்றே.

"சிவனடியார்களே, காரியவுலகம் பலவாயினும் காரண மாயை ஒன்றாகும். அப்பொருளின் முதற் காரணத்தில் இருந்து பல காரியத்தை உண்டாக்கி உதவும் வினை முதலாகிய நிமிர்த்த காரணமும் ஒன்றே. அக் காரிய ஆக்கப்பாட்டைப் பயன் எய்துவதும் உண்பதுவும் பலவாகும். ஆக்கப்பாடு எய்துவதற்குத் துணைநிற்கும் துணைக்காரணமாகிய அறிவாற்றலும் ஒன்றே. அவ் அறிவாற்றலுக்குத் துணைசெய்யும் கருவிகள் பலவாகும். இக் கருவிகளும் ஆக்கப்பாடுகளே. எனவே ஆக்குவோன் ஆக்கமுதல் ஆக்கத்துணை ஆகிய காரணங்கள் ஒவ்வொன்றே. அவ்வாக்கப்பாட்டைப் பெற்றுப் பயனடையும் ஆருயிர்கள் பலவாகும். ஆக்குவோன், ஆக்கமுதல், ஆக்கப்பாடு,

ஆக்கத்துணை, ஆக்கக்கோன் எனப் பொருள் ஐந்து. இவை திருவைந்தெழுத்தால் பெறப்படுபவையாகும். இம்முறையால் பல்வேறுபட்ட உலகங்களுக்கும் தெய்வம் ஒன்றே. அது நடப்பெனும் ஆதியாகும். உலகையும், ஆருயிர்களையும் கட்டுநிலையில் நடத்தும் திருவருள் நடப்பு. ஒட்டுநிலையில் நடத்தும் திருவருள் வனப்பு. இவ்விரண்டுமே உலகாகும். ஆருரையும் பேருயிரான சிவனையும் பழுக்கச் செய்வது வனப்பு. அப்பழத்தை உண்டு இன்புறுவது யாப்பு. அப்பழம் நமசிவய என்பதாகும். அதை உண்ட அடியேன் இன்பத்தில் திகழ்கிறேன். சிவபெருமான் நான்கு வேறுபட்ட நிலைகளில் நின்று உலகையும், உயிர்களையும் நடத்து விக்கின்றான். அவை கடந்தநிலை, காரணநிலை, கடத்துநிலை, கலப்பு நிலை என்பனவாகும். இவை முறையே சிறப்பு, நடப்பு, வனப்பு, மறைப்பு, யாப்பு என்பவற்றையும் குறிப்பனவாகும். கலப்பு நிலையில் மறைப்பும் யாப்பும் அடங்கும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2923. சந்திரன் பாம்பொடுஞ் சூடுஞ் சடாதரன்
வந்தென்னை யாண்ட மணிவிளக் கானவன்
அந்தமும் ஆதியும் இல்லா அரும்பொருள்
சிந்தையின் மேவித் தியக்கறுத் தானன்றே.

"சிவனடியார்களே, ஆருயிர் நினைவாம் திங்களும், ஐம்புலன் நினைவாம் பாம்பும், திருவருள் வெளியாம் சடைக்கண் அவற்றின் பிறப்புப் பகையை அகற்றி ஆருயிர் சிறப்புற ஐம்புலன்களும் துணையாக நிற்குமாறு பணித்தருள்பவன் சிவன். அத்தகைய திங்களையும் பாம்பையும் தனது திருச்சடையில் சூடியவன் சிவன். அத்தகைய சிவன் என்னை வலிந்து அழைத்தனன். அரும்பெரும் பொருளான அவன் யாவர்க்கும் மேலானவன். அத்தகைய மேலானவன் கடையவனான என்னை ஆட்கொண்டு என் மனதின்கண் வீற்றிருந்து அருளுகின்றான். அதனால் அடியேன் யான் எனது என்ற செருக்கை அறுத்தேன் என்கிறார் திருமூலர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2924. பண்டெங்கள் ஈசன் நெடுமால் பிரமனைக்
கண்டங் கிருக்குங் கருத்தறி வாரில்லை
விண்டங்கே தோன்றி வெறுமன மாயிடில்
துண்டங் கிருந்ததோர் தூறது வாகுமே.

"சிவனடியார்களே, ஐந்தொழில்களைக் கூட்டொருவரை வேண்டாது திருவருள் வழியாகத் திருவுள்ளத்தால் புரிந்தருள்வன். பிரமனையும் அவனே படைத்துக் காத்தருளுகிறான். ஊழிக்காலத்தில் அவர்களையும் அழித்துப் பின் படைத்தருளுகிறான். இதை அறிவாரே அறிவர். அங்கு விண்டுவாகிய மேகம் போற்றோனும் திருவடியை நாடுதல் வேண்டும். அப்படி நாடுவதற்கு வேறு எதையும் எண்ணாத உறுதியான மனம்

வேண்டும். அதுவே வெறுமனம். அதுவே தூய இருக்கை. அந்நிலை எய்தினால் சிவபெருமான் கலப்புத் தன்மையினால் ஒன்றாய் உடனாய் ஒடுங்கியிருப்பன். அத்தகைய தூய உள்ளமே அவனது இருக்கையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2925. அன்னையும் அத்தனும் அன்புற்ற தல்லது
அன்னையும் அத்தனு மாரறி வாரென்னை
அன்னையும் அத்தனும் யானும் உடனிருந்து
அன்னையும் அத்தனை யான்புரந் தேனன்றே.

"சிவனடியார்களே, அன்னையாகிய திருவருளோடும், அத்தனாகிய சிவபெருமானோடும் அடியேன் உடன் இருந்தேன். அவர்கள் மீது நான் கொண்ட பெருங்காதலால் அவர்களுக்கு அடிமையாகி அவர்தம் நினைவில் அடங்கி அவர்களை என் உணர்வுள் உணர்ந்தேன். உணரவே நொசிப்பாகிய சமாதியால் என்னைவிட்டு அவர்கள் நீங்காதவாறு காத்தேன். இதுவே சமாதி என்னும் செயலறுநிலை என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2926. கொண்ட சுழியுங் குலவரை யுச்சியும்
அண்டரும் அண்டத் தலைவரும் ஆதியும்
எண்டிசை யோரும்வந் தென்கைத் தலத்துளே
உண்டனர் நானினி உயர்ந்தொழிந் தேனன்றே.

"சிவனடியார்களே, எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் சிவபெருமானே உலகின் தலைவனாவான். அவன் எனது உளம் புகுந்து கொண்டான். அதனால் இன்று யானே உலகென்பேன். அதனால் கடல், மலைகள், அண்டங்கள், அண்டத் தலைவர்கள், ஆதியாகிய அரன், எண்திசைக் காவலர் அனைவரும் என் வசப்பட்டனர் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2927. நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்
சிவன்வரின் நானுடன் போவது திண்ணம்
பலம்வரும் வல்வினை பண்டே யறுத்தேன்.
தவம்பெருஞ் சிந்தைக்குத் தானெதி ராரே.

"சிவனடியார்களே, பிறப்புக்கும் இறப்புக்கும் உட்படும் ஆருயிர் சிவனை நினைப்பதற்கும், பிறவாதிருப்பதாற்காக யமன்முன் செல்லும். அப்படி நான் செல்ல மாட்டேன். யமன் என்முன் வந்தால் ஞானவாள் கொண்டு எதிர்ப்பேன். சிவனோடு நான் இருப்பதால் அவனை விட்டு என்னைப் பிரிக்க முடியாது. எனது வல்வினைகள் யாவும் அறுந்துவிட்டன. தவம் செய்த மனதை வெல்லக்கூடியவர் யார்? என்று திருமூலர் கேட்கிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2928. சித்தஞ் சிவமாய் மலமூன்றுஞ் செற்றவர்
சுத்தச் சிவமாவர் தோயார் மலபந்தங்
கத்துஞ் சிலுகுங் கலகமுங் கைகாணார்
சத்தம் பரவிந்து தானாமென் றெண்ணியே.

"சிவனடியார்களே, தினமும் திருவைந்தெழுத்தை ஓதும் அடியார்களின் நெஞ்சும் சிவனின் இருக்கையாகவும், சிவவடிவாகவும் இருக்கும். அப்புண்ணியப் பேறுள்ளவர்கள் மும்மலப் பிணிப்பும் அற்றவர்களாவர். சிவனின் அடியார்களும் ஆவர். அவர்கள் மலப்பசைகளால் தொடக்குறார். அதனால் அவர்கள் பால் பிதற்றுரையும், சிறு சண்டையும், பெரும் பூசலும் உண்டாகா. சொல்லும் பொருளும் பரவிந்துவாகிய மாயா காரியம் என்று அவற்றை விட்டொழிப்பர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2929. நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சம்
வினைப்பற் றறுக்கும் விமலன் இருக்கும்
வினைப்பற் றறுக்கும் விமலனை தேடி
நினைக்கப் பெறிலவன் நீளிய [1]னாமே.

"சிவனடியார்களே, நினைப்பும் மறப்பும் சிவனைக் கலவாது வேறிருக்கும் நிலையில் நிலவுவன. இவை இரண்டும் இல்லாதவரின் நெஞ்சம் பற்றறுத்த விழுமிய நெஞ்சமாகும். இறைவனின் திருவடிக் கலப்பு எய்தியபின் நினைப்பும் மறப்பும் தானாகவே அகன்றுவிடும். அதனால் சிவபெருமானாகவே நிற்பர். அப்படி நிற்பவர்களின் வினைகளும் தாமாகவே அகலும். வினைப்பற்று அகல விமலன் மேலோங்கி விளங்குவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2930. சிவபெரு மானென்று நானழைத் தேத்தத்
தவபெரு மானென்று தான்வந்து நின்றான்
அவபெரு மானென்னை யாளுடை நாதன்
பவபெரு மானைப் பணிந்துநின் றேனே.

"சிவனடியார்களே, திருவருளின் துணையால் சிவபெருமான் என்று அன்புடன் இனிய தமிழால் அழைத்தேன். அழைத்ததும் அவன் தாழ்சடையுடன் அருந்தவ முனிவனாய் எழுந்தருளி காட்சி தந்தருளினான். பற்றற்ற எம்பெருமானான அவன் தான் அடியேனின் ஆளுடைய நாதன். அவனை நமசிவய என்ற நற்றமிழால் பலமுறை வாழ்த்திப் பணிந்து நின்றேன் என்கிறார் திருமூலர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2931. பணிந்துநின் றேன்பர மாதி பதியைத்
துணிந்துநின் றேன்இனி மற்றொன்றும் வேண்டேன்
அணிந்துநின் றேனுடல் ஆதிப் பிரானைத்
தணிந்துநின் றேன்சிவன் தன்மைகண் டேனே.

"சிவனடியார்களே, சிவபெருமானைத் திருவருளால் பணிந்து நின்றேன். அவனே புகலிடம் எனத் துணிந்து நின்றேன். அதனால் இனி எனக்கு எதுவும் வேண்டத் தேவையில்லை. எல்லாத் துன்பங்களும் அகன்றதால், அமைதியாக நின்றேன். அதனால் சிவனின் பெருந்தன்மைகளை விளக்கும் செந்தமிழ் மறைமொழிகளை அவனருளால் கண்டு கொண்டேன் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2932. என்னெஞ்சம் ஈசன் இணையடி தாஞ்சேர்ந்து
முன்னஞ்செய் தேத்த முழுதும் பிறப்பறுந்
தன்னெஞ்சம் இல்லாத் தலைவன் தலைவிதி
பின்னஞ் செய் தென்னைப் பிணக்கறுத் தானன்றே.

"சிவனடியார்களே, எனது நெஞ்சம் சிவனது திருவடிகளைச் சேர்ந்தது. முன் செய்த வினைகள் அகலப் பிறப்பும் அகன்றது. ஆருயிர்களின் காதலனாகிய சிவபெருமான் எனது நெஞ்சத்தில் என்றும் நிலைத்திருக்கும் உள்ளம் கவர்ந்த கள்வனாவன். அவன் எனது பிணக்குகள் யாவற்றையும் அறுத்துவிட்டான். அதனால் ஐந்து வகையான மலங்களும் அகன்றன என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2933. பிணக்கறுத் தான்பிணி மூப்பறுத் தெண்ணுங்
கணக்கறுத் தாண்டனன் காணந்தி என்னைப்
பிணக்கறுத் தென்னுடன் முன்வந்த துன்பம்
வணக்கலுற் றேன்சிவம் வந்தது தானே.

"சிவனடியார்களே, நந்தியாகிய சிவபெருமான் என்னை உலகியல் பிணக்குகளில் இருந்து விடுவித்தான். மூப்பினை அகற்றினான். வாழ்நாளை எண்ணி மடிய வேண்டும் என்ற உலகோர் சொல்லும் கணக்கினையும் அறுத்தருளினான். என்னை வாட்டிய துன்பங்களை அகப்புறக் கலன்களாகிய எண்ணம், எழுச்சி, இறுப்பு என்னும் கருவிகளின் தன்மைகள் எனக்கண்டு அவற்றை ஒழித்தேன். அவை ஒழியச் சிவபெருமான் வெளிப்பட்டுத் திருவருள் புரிந்தான் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2934. சிவன்வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம்வந் திடநின்ற பாசம் அறுத்திட்டு
அவனெந்தை யாண்டருள் ஆதிப் பெருமான்
அவன்வந்தென் னுள்ளே யகப்பட்ட வாறே.

"சிவனடியார்களே, சிவபெருமான் திருவருளால் நந்தி முதலிய தேவர்களோடு வந்து அடியேனுக்குப் பிறப்பு, இறப்புக்களைத் தந்து பெரும் துன்பம் தரும் சிற்றறிவு, சுட்டறிவு ஆகிய உயிர்மை, உடமை என்னும் பசுபாசத் தன்மைகளை அறுத்தருளினான்.

அவனே எனது தந்தையாவான். அடியேனை ஆண்டு அருளிய ஆதிப்பெருமானும் அவனே. அவன் தன்னருளால் அடியேன் உள்ளத்து வந்திருந்தான் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2935. கரும்புந் தேனுங் கலந்ததோர் காயத்தில்
அரும்புங் கந்தமு மாகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே.

"சிவனடியார்களே, கரும்பாகிய உண்டலும், தேனாகிய உறங்கலும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும். சரக்கு நிறையக் காயப் பையாகிய இவ் உடம்பகத்து முளையும் கிழங்கும் போன்று தோன்றுதலும், நிலைத்தலும் போன்றுள்ள நிலையில்லாச் சிற்றின்பத்தினை உள்ளம் விரும்பி இன்புற்றது. பின் அவ் உள்ளம் அவ்வின்பங்கள் நிலையானவை அல்ல என அருளால் கண்டது. கண்டதும் கரும்பாகிய உண்டலினும், தேனாகிய உறங்கலினும் உள்ளம் செல்லவில்லை. உள்ளம் வலிய ஆண்டருளிய வள்ளலிடமே ஓவாது செல்கிறது என்கிறார் திருமூலர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2936. உள்ள சரியாதி ஒட்டியே மீட்டென்பால்
வள்ளல் அருத்தியே வைத்த வளம்பாடிச்
செய்வன எல்லாஞ் சிவமாகக் காண்டலாற்
கைவள மின்றிக் கருக்கடந் [1]தேனன்றே.

"சிவனடியார்களே, என்றும் உளதாய் நின்று பயன் அருளுவதாய் உள்ள சிவம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்னெறி நான்மையின் வாயிலாக அடியேனைப் பயிற்றுவித்து அவற்றிலிருந்து மீட்டருளினன். பின்பு சிவபெருமான் தனது திருவடியின்பத்தினைத் தந்துதவினான். அவனருளால் அவனது சிறப்புக்களைப் பாடிக் கொண்டிருக்கின்றேன். அதனால் நிகழ்த்தப்படும் செயல்கள் யாவும் சிவச் செயலெனவும், காண்பதெல்லாம் அவன் திருவருள் எனவும் உணர்த்திக் கண்டு கொண்டிருக்கப் பண்ணினான். எஞ்சுவினை மாய்ந்தது. ஏறுவினை ஓய்ந்தது. ஏறுவினை தேய்ந்தது. அதனால் இன்னொரு தாயின் வயிற்றில் புகும் நிலை நீங்கிச் சிவநிலை எய்தினேன் என்கிறார் திருமூலர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2937. மீண்டார் கமலத்துள் அங்கி மிகச்சென்று
தூண்டா விளக்கின் றகளிநெய் சோர்தலும்
பூண்டாள் ஒருத்தி புவனசூ டாமணி
மாண்டா னொருவன்கை வந்தது [2]தானன்றே.

“சிவனடியார்களே, புலன்களின் வழியிற் செல்லும் மனத்தைத் திருவருளால் திருப்பிச் சிவபெருமானின் திருவடிக்கண் செல்ல வைத்தல் வேண்டும். வைத்ததும் மெய்யுணர்வு மேன்மேலும் முறுகி வளரும். தூண்டாமணி விளக்கின் தன்மை வாய்ந்த ஆருயிரினிடத்து நெய்யாகிய திருவருள்ப் பேரின்பத்தைத் திருவருளால் சேர்த்தல் வேண்டும். சேர்த்ததும் அவ்வுள்ளத்தை அருள் நிறைந்த ஒருத்தி ஏற்றுக் கொள்வாள். அவளே நல்லாள். அவளே படியில்லா முடிமணியனையாள். அந்நிலை அருளால் வந்துறைய அறியாமையைத் தரும் ஆணவம் அகன்று விடும்”” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2938. அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருவ இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் [1]தானன்றே.

“சிவனடியார்களே, நன்னெறி நான்மை நற்றவத்தால் திருவருள் வீழ்ச்சி எய்தப் பெறுவர். அவ்வாறு பெற்றவரின் மனம் திருவருளியலில் விரியும். பின் திருவடியின் மீது வேட்கைப்படும். வேட்கை உண்டானதும் அடியேனைப் ‘போக்கருளீர்’ என்று முறையிட நேரும். நேரவே திருவடியின்கண் உள்ளம் ஒடுங்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2939. மனம்தான் விரிந்து குவிந்தமா தவ்வம்
மனம்தான் விரிந்து குவிந்தது வாயு
மனம்தான் விரிந்து குவிந்தமன் னாவி
மனம்தான் விரிந்துரை மாண்டது வீடே.

“சிவனடியார்களே, நன்னெறி நாண்மை நற்றவத்தால் திருவருள் வீழ்ச்சி எய்தப் பெறுவர். அவ்வாறு பெற்றரின் மனம் திருவருளில் விரியும். அதன்பின் திருவடி மீது நாட்டம் கொள்ளும். நாட்டம் கொண்டதும் அடியேனைப் போக்கருளீர் என்று முறையிட நேரும். இந்நிலை வந்ததும் மனம் திருவடியில் குவிந்து ஒடுங்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

21. தோத்திரம்

(புகழ்வு)

2940. மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமும் நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின் னாட்டிடைக் கண்டுகொண் டேனன்றே.

"சிவனடியார்களே, மாயை நினைப்பதற்கு நிலைக்களனாக இருப்பவன் சிவபெருமான். அவன் அந்நிலையில் மாயன் என்று அழைக்கப்படுகிறான். ஆருயிர்கள் அவனை அடைய மனமாகிய தேரில் ஏறி ஓடும். ஓடுதல் என்பது அல்லும் பகலும் ஓயாது நினைத்தல். அந் நினைவுக்கு ஓர் எல்லை காணாமையால் புலம்புவர். அடியேனும் புகுவார் பின் சென்று பல நாட்கள் அலைந்தேன். பொன்னான இவ்வுடம்பு என்னும் நாட்டின்கண் நல்லருளால் நாடிக் கண்டுகொண்டேன் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2941. மன்னு மலைபோல் மதவா ரணத்தின்மேல்
இன்னிசை பாட இருந்தவ ராரெனில்
முன்னியல் கால முதல்வனார் நாமத்தைப்
பண்ணினர் என்றேமெய்ப் பாடறி வீரன்றே.

"சிவனடியார்களே, கைலாயமலை என்று சொல்லப்படும் அகப்புறக் கலன்களான அந்தக்கரணங்களுள், அம்மலை போலக் காணப்படும் மதயானையாகிய உணர்வெழுச்சியில் தோன்றும் தூயமனத்தின்மேல் மெய்யடியார்கள் செந்தமிழ்பாட எழுந்தருளி இருந்தவர் யாரெனில் கால மெய்க்கும் காலமாக விளங்கும் கால காலனாகிய சிவபெருமானாகும். அவரது திருப்பெயரான செந்தமிழ்த் திருவைந்தெழுத்தைப் பலகாலம் ஓதினர். அவர்கள் யாரெனில் திருநீலகண்டப் பெருமானாகிய சீகண்ட உருத்திரன், திருநந்திதேவர் ஆகியோரே" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2942. முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை
எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணா தரற்றுகின் றேனையோர்
பித்தன் இவனென்று பேசுகின் றாரன்றே.

"சிவனடியார்களே, முத்தினுள் சிறந்த முத்து ஆணிமுத்தாகும். அம் முத்தைவிடச் சிறந்தவன் சிவபெருமான். ஆருயிர்களின் உள்ளத்தில் பேரொளிப் பிழம்பாகத் தோன்றுபவனும் அவனே. அந்நிலையில் அவன் முகிழிள ஞாயிறு எனப்படுவன். அவனது திருவடியை எல்லாத் தேவர்களும் தொழுவர். அத்தகைய சிவபெருமானைக் காணாதவர்கள் நான் கூறும் பெருமைகளை நம்பாது என்னைப் பித்தன் என்று தூற்றுகின்றனர் என்று திருமூலர் சொல்கிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2943. புகுந்துநின் றானெங்கள் புண்ணிய மூர்த்தி
புகுந்துநின் றானெங்கள் போதறி வாளன்
புகுந்துநின் றானடி யார்தங்கள் நெஞ்சம்
புகுந்துநின் றானையே போற்றுகின் றேனே.

"சிவனடியார்களே, திருவருளால் பெண்ணொரு கூறான சிவபெருமான் அடியேனின் நெஞ்சத்துள் புகுந்து நின்றனன். அங்கே அறவொளி அந்தணன், அடியேனுக்கு மெய்யுணர்வை உண்டாக்கி திருவடியுணர்வினைப் போதிக்கும் முற்றுணர்வினனும் அவனே. அத்தகைய போதறிவாளன் என்னுள்ளம் புகுந்து நின்றனன். மெய்யடியார்களின் உள்ளத்தைத் தூய்மைப்படுத்திப் புகுந்து நிற்பவனும் அவனே. அதனால் அவனைப் போற்றுகின்றேன் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2944. பூதக்கண் ணாடியிற் புகுந்திலன் போதுளன்
வேதக்கண் ணாடியில் வேறே வெளிப்படும்
நீதிக்கண் ணாடி நினைவார் மனத்துளன்
கீதக்கண் ணாடியிற் கேட்டுநின் றேனன்றே.

"சிவனடியார்களே, பூதக்கண்ணாடி என்பது முகத்துள்க் காணும் கட்பொறியாகும். அக் கண்ணுக்குள் புலனாகும் வண்ணம் அமைந்த நிலைமையன் அல்லன் சிவன். காட்சிக்குப் புலனாகும் தோற்றங்கள் அனைத்தும் திருவுருவேயாகும். இவ்வுரு அவனுக்குச் சார்புருவாகும். மேலும் ஆருயிர்கள் அருவாய் நின்றே சார்ந்த சிறப்புடலாகிய பருவுடலின் தன்மையால் ஆண், பெண் எனப் பெயர் பெறுவதும் இதற்கொப்பாகும். நுண்ணுடல் பிறப்புடலாகும். பிறப்புடல் கை போன்றது. சிறப்புடல் கருவி போன்றது. கை எல்லாத் தொழிலுக்கும் உதவி செய்யும். கருவி குறிப்பிட்ட சில தொழில்களுக்கு மட்டுமே உதவும். கையில் வேறுபாடு இல்லை. கருவியில் வேறுபாடு உண்டு. பிறப்புத் திருவருளால் வினைக்கேதுவாகக் கொடுக்கப்படுவது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2945. நாமமோ ராயிரம் ஓதுமின் நாதனை
ஏமமோ ராயிரத் துள்ளே இசைவீர்கள்
ஓமமோ ராயிரம் ஓதவல் லாரவர்
காமமோ ராயிரங் கண்டொழிந் தாரன்றே.

"சிவனடியார்களே, நந்தியின் நாமம் நமசிவய என்பது பொருள்மறை ஆதலின் அதை அகமும் புறமும் தூய்மையுடன் கணித்தும் ஓதியும் சிவபெருமானை வழிபடுங்கள். அவ்வாறு வழிபட்டால் இன்பம் பெருகும். ஈண்டு ஆயிரம் என்பது அளவின்மையாகும். அதுவும் நம் உள்ளத்துள்ளே ஊற்றெடுத்து வெள்ளம் போன்று மேன்மேலும் பெருகும் அத்திருவைந்தெழுத்தால் சிறு வேள்வியினையும் அளவின்றிப் புரியுங்கள். அங்ஙனம் புரிவோர் வேண்டியவை அனைத்தும் பெற்று வேட்கை அடங்கினர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2946. நானோ விதஞ்செய்து நாடுமின் நந்தியை
ஊனோர் கமலத்தி னூடுசென் றப்புறம்

வானோர் உலகம் வழிப்பட மீண்டபின்
தேனார வுண்டு தெவிட்டலு [2]மாகுமே.

"சிவனடியார்களே, செம்பொருட்டுணிவின் சிறப்பினை எய்துதல் வேண்டும். அதற்கு நன்னெறி நான்மையினை நாள்தோறும் விடாது விதிப்படி செய்தல் வேண்டும். சீலம், நோன்பு, செறிவு, அறிவு இவை ஒவ்வொன்றும் நான்காக விரியும். எனவே அவை பதினாறு ஆகும். இவையே நானாவிதம் எனப்படுகிறது. இத் திருத்தொண்டினை அருளால் தினமும் புரிந்து நந்தியை வணங்குங்கள். மூலாதாரம் முதலாகச் சொல்லப்படும் ஆறு நிலைகளும் தனித்தனியாகத் தாமரையின் வடிவில் இருப்பன.இத் தாமரையினூடாக உயிர்ப்பின் வழிச்சென்று உணர்தல் வேண்டும். உணர்ந்த பின்பு அவ்வாதாரங்களில் நின்று இயக்கும் தெய்வங்கள் புலனாகும். இயைந்து இயக்கும் தெய்வம் அதிட்டான் தெய்வம். அவை பிள்ளையார், அயன், அரி, அரன், ஆண்டான், அருளோன் என்பவர்களாவர். அத் தெய்வங்கள் வழிபடுபவர்களிடம் வசப்பட்டு அருள்புரியும். இந்நிலையில் திருவடியின்பத் தேனை ஆரப்பருகி அளவில்லாப் பேரின்பத்தை அடையலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2947. வந்துநின் றானடி யார்கட் கரும்பொருள்
இந்திர னாதி இமையவர் வேண்டினுஞ்
சுந்தர மாதர் துழனியொன் றல்லது
அந்தர வானத்தின் அப்புற மாகுமே.

"சிவனடியார்களே, சிவபெருமானை செந்தமிழ்த் திருமுறைமறையினால் வழிபடுபவர்கள் சிவனடியாராவார். அவ் வழிபாட்டின் பெறுபேறாக எல்லா நிலைகளுக்கும் அப்பாலாகி நின்றருளும் அவன் அரும்பொருள் எனப்படுவன். அவன் முன்னேவந்து தோன்றி அருள்வான். அதனால் பேரின்பம் பெருகும். இந்திரன் முதலாகச் சொல்லப்படும் தேவர்கள் விரும்பினும் ஆண்டெல்லாம் மாண்டு மடிவதும், மீண்டும் பிறப்பினைத் தருவதுமான பெண்ணின்பமே உண்டாகும். கண்ணுதலோன் காட்டிக் காணும் திருவடியின்பம் அவ் விண்ணுலகில் கனவு காண்பது போன்றது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2948. மண்ணிற் கலங்கிய நீர்போல் மனிதர்கள்
எண்ணிற் கலங்கி இறைவன் இவனென்னார்
உண்ணிற் குளத்தின் முகந்தொரு பால்வைத்துத்
தெண்ணிற் படுத்தச் சிவனவ னாகுமே.

"சிவனடியார்களே, மழைநீர் வானத்தில் இருக்கும்போது இனிமையான சுவையும், வெண்நிறமும் கொண்டது. அது மண்ணை வந்தடைந்ததும், சுவையும், நிறமும் நிலத்திற்கேற்றவாறு மாறும். இது சார்ந்ததன் வண்ணமாக வாழும் ஆருயிரை

ஒத்தது. மண்ணின் தன்மைக்கேற்ப மழைநீர் மாறுவதுபோல ஆருயிரும் சார்ந்ததன் வண்ணமாக மாறும் இயல்புடையது. அதனால் அறியமை உண்டாகும். உண்மை புரியாது. தெய்வத்தின் தன்மையும் புரியாது. நல்லவர்கள் அசுத்தமான நீரைத் தூய்மைப்படுத்திக் குடிப்பர். அதுபோலச் சார்ந்ததன் வண்ணமாக வாழும் ஆருயிரைச் சிவன் சுத்தப்படுத்தி அருள் செய்வான்"

"சிவனடியார்களே, மயில்வாகனம் வந்து கதிரேசனுக்குச் சொன்னான்; "ஐயா, மழைநீர் தூய்மையானது. அது நிலத்தை வந்தடைந்ததும் அடைந்த நிலத்தின் தன்மையைப் பெறுவதுபோல, நானும் நல்ல குடும்பத்தில் பிறந்தேன். பணம் வந்து சேர்ந்ததும் கெட்ட நண்பர்களின் சகவாசத்தால் கெட்டழிந்தேன். என்னைப் பின்பற்றி வாழ்ந்த மகன் இறந்து போனான். நான் நல்லவர்களின் சொல்லைக் கேளாமையால்தான் இந்நிலை வந்தது. உங்கள் ஆலோசனைப்படி இப்போ சிவனை வணங்குகின்றேன். அவன் எனது மனத்தில் உள்ள அறியாமையை நீக்குகிறான். முன்பே நல்லபடி வாழ்ந்திருந்தால் இவ்வாறு நடந்திருக்காது என்று அழுதவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2949. மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்
கைத்தலஞ் சேர்தரு நெல்லிக் கனியொக்குஞ்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்கள்
அத்தனை நாடி அமைந்தொழிந் தேனன்றே.

"சிவனடியார்களே, மயில்வாகனம் அவ்வாறு சொல்லக் கதிரேசன் சொன்னார்; "மயில், மெய்யடியவர்களுக்கு மெய்ப்பொருளாக விளங்குவன் சிவபெருமான். அவனது திருவடியை வணங்குவோர்க்கு அவன் உள்ளங்கையில் நெல்லிக்கனிபோலக் காட்சி தருவான். அவன் இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கிய தூயவன். தேவர்களும் தம் முதல்வன் அவன் என்று தொழுகின்றனர். அத்தகையவனை நான் தூயமனத்துடன் தொழுதமையால் தான் எனது வாழ்வு மலர்ந்தது. பிள்ளைகள் வளமாக வாழ்கின்றனர். அது உனக்குத் தெரியும். இனியாவது திருந்தி வாழ்ந்து பிறவியை அறு என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2950. அமைந்தொழிந் தேன்அள விற்புகழ் ஞானஞ்
சமைந்தொழிந் தேன்தடு மாற்றமொன்றில்லை
புகைந்தெழும் பூதலம் புண்ணியன் நண்ணி
வகைந்து கொடுக்கின்ற வள்ளலு மாமே.

"சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; "உன்னைப்போன்று பலர் கடவுளை அறியாதவர்களாக வாழ்ந்து துன்பப்படுகின்றனர். திருவடியுணர்வில்

அடங்கினால் அளவுக்கதிகமான நன்மைகள் வரும். தடுமாற்றம் இராது. ஒரு செயலைச் செய்யும்போது சிவனை நினைத்தால் அவனும் கூடவந்து உதவிகள் செய்வான். நன்னெறி நான்மையில் வாழ்வோர்க்குப் பிறப்பு, இறப்புப் பற்றிய கவலை இராது. காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றங்களும் ஏற்பட மாட்டாது. அவைதான் மனிதரைச் சீரழித்துப் பாவிகளாக்குகின்றன. அதுதான் உனக்கும் நடந்தது. மெய்யடியாரை ஆட்கொள்ளச் சிவன் சிவகுருவாக எழுந்தருளி வந்து ஆவன செய்து தனது திருவடியில் சேர்ப்பிப்பான். இதைத் தெரியாதவர்கள் தான் பணத்தால் எல்லாவற்றையும் செய்யலாம் என்று நினைக்கின்றனர். உன்னிடம் கோடிக்கணக்கில் பணம் இருக்கிறது. அதனால் குடித்துக் கும்மாளம் அடித்ததைத்தவிர வேறு எதைச் செய்தாய். ஏழைகள் என்றாலும் சிவனடியார்களாக ஊரில் இருப்போர் பலர். அவர்களின் வாழ்வைப்பார். எந்த ஒரு சிவனடியானும், அவனது குடும்பமும் துன்பப்படவில்லை. அதற்குக் காரணம் சிவபெருமான் தனது அடியவர்களுக்கு வேண்டும் போதெல்லாம் உதவுவதுதான். அவர் பெருவள்ளல். இரக்கமுள்ளவன். மனம் கசிந்து வேண்டினால் தன்னையும் கொடுப்பான் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2951. வள்ளற் றலைவனை வானநன் னாடனை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர்கொ லோஎன்று
உள்ளத்தி னுள்ளே ஒளித்திருந் தாளுமே.

"சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; "வள்ளல் தலைவன் சிவபெருமான். அவன்தான் சிவவுலகத் தலைவன். கங்கையைச் சடையில் வைத்திருக்கிறான். அதற்குக் காரணம் ஆருயிர்களின் அகங்காரமாகிய முனைப்பை அகற்றுதற் பொருட்டேயாம். அவன் மெய்யடியார்களின் வேண்டுதல்களை வெளிப்பட்டுத் தீர்ப்பான் என்பதை எனது வாழ்வில் நான் பலமுறை கண்டுள்ளேன். அவன் மறைந்து நிற்பதற்குக் காரணம் பிறப்பு இறப்புக்களில் மீண்டும் மீண்டும் ஈடுபடுவோர் கள்ளப் பெருமக்களாவர். அவர்கள் தானாகவும் உணரமாட்டார்கள். பிறர் சொல்வதையும் கேட்கமாட்டார்கள். அத்தகைய கள்ளர் தன்னைக் கண்விடுவார்கள் என்பதற்காகத்தான் அவன் மறைந்து நிற்கின்றான். தனது மெய்யடியார்கள் நினைத்ததும் அவர்களின் உள்ளத்தில் தோன்றியருள்வான். உனக்கு நான் எத்தனை தடவைகள் சொல்லியிருப்பேன். சொல்வதைக் கேட்காவிட்டாலும் சொந்த அறிவால் நன்மை தீமைகளைப் புரியாதவர்களாகவே பலர் உலகில் வாழ்கின்றனர். அவர்கள் ஒருபோதும் இன்பமடைய மாட்டார்கள். பணமும், பகட்டும், பொன்னும்தான் இன்பமென்று நினைத்துக் கடைசிக் காலத்தில் பெருந்துன்பப்படுவர் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2952. ஆளும் மலர்ப்பதந் தந்த கடவுளை
நாளும் வழிபட்டு நன்மையுள் நின்றவர்

கோளும் வினையும் அறுக்குங் குரிசிலின்
வாளு மனத்தோடும் வைத்தொழிந் தேனன்றே.

‘‘சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; “கெடுகுடி சொற்கேளாது என்பார்கள். ஊரில் பலர் இப்போதும் தான் என்ற முனைப்பில தான் வாழ்கின்றனர். ஒவ்வொருவரையும் நன்கு அறிந்து வைத்திருப்பவன் சிவன். அவன் மெய்யடியார்களையும் தனது திருவுள்ளத்திருக்குறிப்பால் நோக்கி ஆண்டருள்பவன். அவன் தனது திருவடியைத் தந்துதவுவான். அவனை நற்றமிழ் மறையால் தினமும் வழிபடல் வேண்டும். அங்ஙனம் வழிபடுவோருக்குத் துன்பங்கள் வராது. அவர்களது தீய பண்புகளையும், செயல்களையும் அகற்றி அவர்களது மனதில் கோவில் கொண்டு நல்ல வழியில் அவர்களை வாழவைப்பான். இவர்களை வினையும் கோள்களும் (கிரகங்கள்) எதுவும் செய்யாது என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2953. **விரும்பில் அவனடி வீர சுவர்க்கம்**
பொருந்தில் அவனடி புண்ணிய லோகந்
திருந்தில் அவனடி தீர்த்தமு மாகும்
வருந்தி யவனடி வாழ்த்தவல் லார்க்கே.

‘‘சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; “பெரும் எடுப்பில் விழாக்கள் செய்வதும் புகழிற்காகத் தானம் செய்வதும் தேவையில்லாத செயல்களாகும். நன்னெறி நான்மை நற்றவத்தைப் பேணி வாய்த்தொண்டும் கைத்தொண்டும் செய்யும் அடியவன் விரும்பினால் சிவபெருமான் தனது திருவடியைக் கொடுப்பான். திருவடி தான் மறமாணுலகமாகும். அதுவே புண்ணியப்பேற்றின் பெரு உலகமுமாகும். அவனது அருளால் உள்ளம், வாக்கு, உடல், மூன்றும் தூய்மையுடையதாக இருக்குமானால் திருவடியே தீர்த்தமாகும். அடியவர்கள் விரும்புவனவெல்லாம் சிவனது திருவடியில் கிடைக்கும். வேறு வேறு காலங்களில் பெறுவன அனைத்தும் சிவபெருமானின் திருவடியில் ஒரு காலத்தில் ஒருங்கு கிடைக்கும். இதெல்லாவற்றையும் முன்பே உனக்குச் சொன்னேன். கேட்டிருந்தால் உனது வாழ்வு மேம்பட்டிருக்கும். இப்போ எல்லாவற்றையும் இழந்த நிலையில் வந்துள்ளாய். இனி உனக்குத் தேவை நிம்மதியும் மகிழ்ச்சியும் தான். அதை வேண்டு அடுத்த பிறப்பிலாவது உண்மையை உணர்ந்து நல்வாழ்வு பெறவேண்டுமென்று பிரார்த்தனை செய் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2954. **வாகை மூடறுத் தானில் வுலகினில்**
தானக மில்லாத் தனியாகும் போதகன்
கானக வாழைக் கனிநுகர்ந் துள்ளுறும்
பானகச் சோதியைப் பற்றிநின் றேனன்றே.

“சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; “உனது மனமாற்றம் எனக்கு மகிழ்வைத் தருகிறது. மரணத்துடன் வாழ்வு முடிவதில்லை.மரணம் நிகழ்ந்த அன்றே வினைக்கேற்ப மறு வாழ்வு தொடங்குகிறது. அந்த வாழ்வு சிறப்படைய வேண்டுமானால் சிவனை வணங்கு. ஐந்தெழுத்தை ஓது. தான தர்மங்கள் செய், சிவபெருமான் தனது எண்பெரும் குணங்களையும் பதிப்பான். அதனால் முக்குணங்களும் அக்கணமே நீங்கும். அதுவே இவ்வுலகில் வானகம் ஊடறுத்தலாகும். திருத்தமிழின் செவ்விய பண்களினை அன்புடன் பாடித் திருவடியை நினைந்து நிற்பவர்களுக்கு திருவடியின்பம் எளிதாகக் கைகூடும். அவன் தனிப்பெரும் பேரின்ப வடிவினன். அவனது திருவடி இன்பத்தேனாகும். அவனை அருளாற் பற்றினால் இன்பமான வீடுபேற்றைப் பெறலாம் அதனால் அவனது திருவடியைப் பற்றுங்கள் என்று திருமூலர் கூறுகிறார். அது உண்மை. அவனை மெய்யன்புடன் தொழுதால் கேட்டவை எல்லாம் கிடைக்கும். நான் சிவனடியார்களின் துன்பத்தைப் போக்கு. அவர்களுக்கு உதவி செய் என்று கேட்பேன். நான் கேட்ட அத்தனை பேருக்கும் அவன் உதவியுள்ளான். ரவீந்திரனுக்கு பதவி உயர்வு கொடு என்று கேட்டேன். அவன் பல பதவியுயர்வுகளை வழங்கியுள்ளான். இப்போ உனக்கு நல்ல புத்தியைக் கொடு என்று வேண்டுகிறேன் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2955. விதியது மேலை யமரர் உறையும்
பதியது பாய்புனற் கங்கையும் உண்டு
துதியது தொல்வினைப் பற்றறு விக்கும்
பதியது வவ்விட்ட தந்தமு மாமே.

“சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; “தேவர், மூவர் மற்றும் யாவர்க்கும் அவரவரது வினைக்கீடாகத் தனது திருவாணைப்படி விதியை அமைக்கும் விதிப்பொருளானவன் சிவன். தூமாயையை உடையவர்கள் உறையும் சிவவுலகமாக உள்ளவனும் அவன் தான். அத்துடன் பொன்றாப் புகழுக்கும் உரியவன் அவன். அவனுக்குச் செந்தமிழ்ப் பாமாலைகளில் விருப்பம் அதிகம். அதனால் அதனைப் பாடிப் பணிவோரின் பழவினையை இல்லாதொழிப்பான். சிவயநம என்ற ஐந்தெழுத்தில் உள்ள வகரமாகிய வனப்பாற்றலான திருவருளை வழங்குபவனும் அவனே. அவனே அனைத்திற்கும் அந்தமாவான். அவனை நம்பிப் பாமாலைகள் சூட்டிய ரவீந்திரனைப் பார். இளம்வயதில் பெரும் அதிகாரியாக இருக்கிறான். ஒவ்வொரு பதவியுயர்வின்போதும் நான் அவனுக்காகப் பிரார்த்திப்பேன். இப்போ உனது ஈடேற்றத்துக்காகப் பிரார்த்திக்கிறேன் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2956. மேலது வானவர் கீழது மாதவர்
தானிடர் மானுடர் கீழது மாதனங்
கானது கூவிள மாலை கமழ்சடை

ஆனது செய்யுமெம் ஆருயிர் தானன்றே.

‘‘சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; “உன்னைப் போன்ற பலர் சிவன் மீது நம்பிக்கையில்லாது அவனைத் தூற்றிக் கொண்டு தான் என்ற அகந்தையில் தீயவற்றையெல்லாம் செய்தவர்கள். அவர்கள் துன்பங்களைத் தாங்க முடியாது. சிவனை வணங்கிய பின் துன்பங்கள் யாவும் அகன்று நிம்மதியாக வாழ்கின்றனர். எந்நேரமும் போதையில் உழறும் பூபாலசிங்கத்தின் வாழ்க்கையைப் பார். அவன் திருந்தி கோவில் தலைவர் அருளானந்தனையும் திருத்தினவன். இப்போ சகல வசதிகளோடும் வாழ்கிறான். அதற்குக் காரணம் சிவனின் அருள் என்கிறான். தேவர்களால் வணங்கப்படும் சிவன் முனிவர்களால் போற்றப்படுபவன். அவன் தான் மனிதர்களுக்கு வரும் துன்பங்களை நீங்கித் தூய மனம் படைத்தோரின் உள்ளத்தைக் கோவிலாக்கி அமர்ந்திருப்பவன். அவனே செல்வமாவான். அவனது திருச்சடையில் வில்வமாலை எப்பொழுதும் இருக்கும். அதனால் தனி முதல்வனான அவனை வில்வம் மாலை சாத்தி வணங்கு. உன்னை வாட்டும் வினைகள் யாவும் அகலும் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2957. **சூழுங் கருங்கடல் நஞ்சுண்ட கண்டனை**
ஏழும் இரண்டிலும் ஈசன் பிறப்பிலி
ஆழுஞ் சுனையும் அடவியும் அங்குளான்
வாழும் எழுத்தைந்து மன்னனு மாகுமே.

‘‘சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; “எத்தகைய பெருங்குற்றம் செய்தவர்களையும் மன்னித்தருள்பவன் சிவன். கருமையான கடலின் கண் பெரும் நஞ்சு தோன்றியது. அதைக் கண்டு அஞ்சிய மால் உள்ளிட்ட தேவர்களெல்லாம் சிவனிடம் அதை முறையிட்டனர். சிவபெருமான் ஆணவ முனைப்புடன் செயற்பட்டு ஆலகாலவிடத்தை வரப் பண்ணிய தேவர்களை மன்னித்துக் கடலில் தோன்றிய நஞ்சைத் தான் உண்டவன். அது கண்டத்தில் தங்கியது. அவ்வாறான மாபெருங் குற்றத்தை மன்னித்த சிவபெருமான் உலகங்களுக்கெல்லாம் பதி ஆவான். அவன் கோவில் கொண்டிருந்து அருளுமிடம் திருக்கையிலாய மலையாகும். காட்டின் நடுவே உள்ள அவனது இருப்பிடத்தைச் சுற்றி ஆழமான சுனைகளும் மந்திகளும் உள்ளன. அவனைத் திருவைந்தெழுத்தால் போற்றுபவர்களை மன்னித்து ஆட்கொள்வான். அதனால் உனது குற்றங்களையும் மன்னித்து உன்னை ஏற்றருள்வான். அதற்கு மெய்யன்புடன் வணங்க வேண்டும் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2958. **உலகம தொத்துமண் ணொத்துயர் காற்றை**
அலர்கதிர் அங்கியொத் தாதிப் பிரானும்
நிலவிய மாமுகில் நீரொத்து மீண்டச்
செலவொத் தமதுதிகைத் தேவர்பி ரானே.

"சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; "மயில் வேண்டுபவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தருளும் வள்ளல் சிவன். அவன் கலப்புத் தன்மையால் உலகமாய், உயிராய், மண்ணாய், காற்றாய், ஞாயிறாய், திங்களாய், தீயாய், ஆகாயமாய், மழை நீராய்த் திகழும் எண்பேருருவத்தன். அவனே அவற்றை தொழிற்படுத்துகின்றவன். அவன் தான் எண்புலக் காவலர்களுக்கும் முதல்வன். அதனால் அவனே தேவர் பிரானாவான். எல்லாவற்றையும் படைத்து இயக்கிக் காத்தருளும் அவனைத் தூய மனதுடன் வணங்குபவர்களின் துன்பம் உடனே அறும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2959. பரிசறிந் தங்குளன் அங்கி அருக்கன்
பரிசறிந் தங்குளன் மாருதத் தீசன்
பரிசறிந் தங்குளன் மாமதி ஞானப்
பரிசறிந் தன்னிலம் பாரிக்கு மாறே.

"சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; "தீயையும் சூரியனையும் ஆழ்பவன் சிவன். அது போலக்காற்றிலும் இருப்பான். சந்திரனிலும் ஆருயிர்களின் அறிவின் உள்ளேயும் உள்ளவன் சிவன். எங்கும் அவன் உள்ளதால் உலகில் நடக்கும் எல்லாவற்றையும் அறிபவன். மெய்யடியார்க்கு அவன் உணர்த்துவான். தீயவர்களுக்கு இன்னொருவரைக் கொண்டு உணர்த்துவிப்பான். மெய்யடியார்கள் தமது ஞான அறிவால் உணர்வர். தீயோர் மலத்தின் முனைப்பால் கெடுவர். இவ்வளவு காலமும் உணர்த்தியும் உணராத நீ காலம் கடந்தென்றாலும் உணர்ந்தமை மகிழ்வுக்குரியது என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2960. அந்தங் கடந்தும் அதுவது வாய்நிற்கும்
பந்த வுலகினிற் கீழோர் [1]பெரும்பொருள்
தந்த வுலகெங்குந் தானே பராபரன்
வந்து படைக்கின்ற மாண்பது வாகுமே.

"சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; "அந்தம் கடந்து நிற்கும் விழுப்பொருள் சிவபெருமான். அந்தம் கடந்து நின்றபோதும் கலப்பால் அது அதுவாக நிற்பன். திருவடியை நினைத்து உருகும் அடியார்கள் திருவடியின்கீழ் நீங்காத நினைவினராக இருப்பதால் அவனைக் கீழோர் என்பர். அவர்கள் சிவனின் நினைவில் பிரிவின்றிக் கலந்திருப்பர். சிவனது திருக்குறிப்பால் ஆனது இவ் உலகம். இவ் உலகம் முழுவதும் நிறைந்திருப்பவன் அவன். அவனே சிவகுருவாக எழுந்தருளி வந்து நல்லோரை ஆட்கொண்டருளுவன். நீயும் நல்லவனாக மாறினால் உன்னையும் ஆட்கொண்டருள்வான் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2961. முத்தண்ட வீரண்ட மேமுடி யாயினும்

அத்தன் உருவம் உலகே ழெனப்படும்
அத்தன்பா தாளம் அளவுள்ள சேவடி
மத்தர் அதனை மகிழ்ந்துண [2]ரான்றே.

"சிவனடியார்களே, வழிப்பேற்றின் நிலைக்களமாகிய முத்தியண்டம் பெருமை மிக்க அண்டமாகும். அதுதான் சிவனது திருமுடியாகும். எனினும் அச் சிவபெருமானின் திருவுருவம் ஏழு உலகமாகும். அவனது திருவடி பாதாளம். அது ஏழுக்கும் அப்பாற்பட்டது. மெய்யுணர்வில்லாத உன்மத்தர் அறிவும் செயலும் திரிபுற்று தீய நெறிகளை நாடிச் செல்வதால் அவர்கள் இவற்றை ஏற்கவும் மாட்டார்கள் உணரவும் மாட்டார்கள் " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2962. ஆதிப் பிரான்நம் பிரானவ் வகலிடச்
சோதிப் பிரான்சுடர் மூன்றொளி யாய்நிற்கும்
ஆதிப் பிரான்அண்டத் தப்புறங் கீழவன்
ஆதிப் பிரான்நடு வாகிநின் றானன்றே.

"சிவனடியார்களே, அனைத்திற்கும் காரணமாகவுள்ள ஆதிபிரான் சிவன். அவனே எம்பெருமானுமாவான். அவனே எல்லா உலகங்களிலும் பேரொளிப் பிழம்பாக நிற்பவன். ஞாயிறு திங்கள் தீ என்னும் முச் சுடர்களுக்கும் உள்ளொளியாக நின்று ஒளியை அருள்பவன். ஆதியான நடப்பாற்றலும் அவனே. அவன் கீழ் மேல் அண்டங்களுக்கும் அப்பால் உள்ளவன். அவன் சிவசிவ என்னும் பெருமறையுள் நடுவாகி நிற்பது போலவும், ஆருயிர்களின் நெஞ்சத்தின் நடுவில் நிற்பது போலவும், பொன்னம்பலத்துள் நிற்பது போலவும், எங்கும் நடுவாகி நின்றருள்கின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2963. அண்டங் கடந்துயர்ந் தோங்கும் பெருமையன்
பிண்டங் கடந்த பிறவிச் சிறுமையன்
தொண்டர் நடந்த கனைகழல் காண்டொறுந்
தொண்டர்கள் தூயநெறி தூங்கிநின் றானன்றே.

"சிவனடியார்களே, அண்டங்கள் யாவும் கடந்து அப்பாலாய் உயர்ந்தோங்கும் பெருமை உடையவன் சிவன். இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியவன். மால் முதலான தெய்வங்கள் பிறந்திறக்கும் தன்மையுள்ளன. இத்தெய்வங்களை வணங்குவோர் தமது தெய்வங்கள் பிறந்திறப்பதைப் பெருமையாகக் கருதிகின்றனர். அத்தகைய பிறவி எடுக்கும் பிணிப்பில்லாதவன் சிவன். கழலினை அணிந்தவன் சிவன். அக் கழலின் ஒலி கேட்டு மகிழும் தொண்டர்கள் அளவில்லாத இன்பம் அடைவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2964. உலவுசெய் நோக்கம் பெருங்கடல் சூழ

நிலமுழு தெல்லா நிறைந்தனன் ஈசன்
பலமுழு தெல்லாம் படைத்தனன் முன்னே
புலமுழு பொன்னிற மாகிநின் றானே.

"சிவனடியார்களே, சிவனது கண்கள் எங்கும் சென்று உலாவுதலைச் செய்து நடப்பவற்றை அறிந்து கொள்ளும். அதனால் அவன் எங்கும் நீக்கமற நின்றருள்கிறான். அத்துடன் பயனுள்ள பொருட்கள் முழுவதையும் படைத்தருளியுள்ளான். மெய்யடியார்களைக் காப்பதற்காகப் பொன்மேனியுடன் பொலிந்து திகழ்கின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2965. **பராபர னாகிப்பல் லூழிகள் தோறும்**
பராபர னாயிவ் வகலிடந் தாங்கித்
தராபர னாய்நின்ற தன்மை யுணரார்
நிராபர னாகி நிறைந்துநின் றானே.

"சிவனடியார்களே, உலகனைத்தும் ஒருங்கு முடிவுறும் காலம் ஓர் ஊழி எனப்படும். அத்தகைய பல ஊழிகளைப் புரிந்து நிற்கும் பராபரன் சிவபெருமான். அவனே முழு உலகங்களையும் தாங்கிக் காத்தருள்பவன். அவன் ஆனேற்றில் ஏறி ஊர்ந்து வருபவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2966. **போற்றும் பெருந்தெய்வந் தானே பிறரில்லை**
ஊற்றமும் ஓசையும் ஓசை யொடுக்கமும்
வேற்றுடல் தானென் றதுபெருந் தெய்வமாங்
காற்றது ஈசன் கலந்துநின் [3]றானன்றே.

"சிவனடியார்களே, மண்ணவர், விண்ணவர் மற்றும் அனைவராலும் போற்றப்படும் இன்பப் பெரும்பொருள் சிவபெருமான். அவனது கலப்புத் தன்மையால் அனைத்தையும் தாங்குகின்றான். நாதமெய்யின் நிலைக்களனும் அவனே. அ.ஃது ஒடுங்கும் ஒடுக்கச் சிவனும் அவனே. தனக்கு வேறாக வேறு எதுவும் இல்லாமையால் வேற்றுடல்கள் என்று கூறப்படுவது அனைத்தும் அவனே. அவனே பெருந்தெய்வம். காற்றுப் போலத் தோற்றமின்றி தொழிலால் தோன்றுபவனும் அவனே. அவன் விண்ணைப்போல் எங்கும் பரந்தும் காற்றுப் போல இயைந்து இயக்கியும், தீயைப் போல ஒளி கொடுத்தும், நிலம் போலத் தாங்கியும் நின்றருள்கின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2967. **திகையனைத் துஞ்சிவ னேயவ னாகின்**
மிகையினைத் துஞ்சொல்ல வேண்டா மனிதரே
புகையனைத் தும்புறம் அங்கியிற் கூடு
முகையனைத் தும்எங்கள் ஆதிப் பரானன்றே[2].

"சிவனடியார்களே, சிவபெருமான் எல்லாத் திசைகளிலும் நின்றருள்கின்றவன். அதற்கு மாறாக அவனுக்குப் புறம்பாக ஓர் இறைவன் உண்டென்று மனிதர்கள் கூறுவது

உண்மைக்கு மாறானதாகும். எப்பெயரிட்டு எவ்வுரு அமைத்து எங்ஙனம் வழிபட்டாலும் அவை அனைத்தும் சிவபெருமானையே சாரும். புகையானது தீயில் ஒடுங்கி நின்று தோன்றுவது போல, உலகப் பொருட்கள் அனைத்தும் ஆதிப்பிரானாகிய சிவபெருமானில் ஒடுங்கி நின்று பின் தோன்றும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2968. கலையொரு மூன்றுங் கடந்தப்பால் நின்ற
தலைவனை நாடுமின் தத்துவ நாதன்
விலையில்லை விண்ணவ ரோடும் உரைப்பன்
நரையில்லை யுள்ளுறு முள்ளவன் தானே.

"சிவனடியார்களே, இடப்பால்நாடி, வலப்பால்நாடி, நடுநாடி ஆகிய முக்கலைகளையும் கடந்து அப்பால் நின்றருள்பவன் சிவபெருமான். அவனே அனைத்துலகங்களுக்கும், அனைத்து உயிர்களுக்கும் தலைவனாவான். அவனை மெய்யன்பினால் நினைத்து வழிபடுங்கள். வினைகள் அற்றுப் போகும். விண்ணவர்களாலும் வழிபடப்படும் சிவபெருமான் ஆருயிரின் உள்ளத்தில் வேறற நின்று வெளிப்பட்டருள்வன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2969. படிகால பிரமன்செய் பாசம் அறுத்து
நெடியான் குறுமைசெய் நேசம் அறுத்துச்
செடியார் தவத்தினிற் செய்தொழில் நீக்கி
அடியேனை உய்யவைத் தன்புகொண் டானே.

"சிவனடியார்களே, படைக்கும் கடவுள் ஆருயிர்களைப் பூமியிலே பிறக்குமாறு செய்வதற்கு அவ்வாருயிர்கள் செய்யும் இருவினையே காரணமாகும். அவ்வினை எஞ்சுவினை எனப்படும். அதைப் பாசம் என்பர். அப்பாசத்தை நீக்கியருள்பவன் சிவன். காப்பவன் செய்யும் இழிவு குறுமை எனப்படும். அதற்குரிய வாயில் நேசமாகும். அதுவே ஏறுவினை எனப்படும். அவ் ஏறு வினையும் சிவபெருமானே நீக்கியருள்வான். நன்னெறி நான்மை நற்றவப் பேரொளி செடி எனப்படும். அத்தகைய பெருந்தவத்தால் ஊழ்வினையுந்த செய்யும் தொழிலையும் அறுத்தருள்வான். இவற்றால் என்னை உய்ய வைத்தான் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2970. ஈசனென் றெட்டுத் திசையும் இயங்கின
ஓசையி னின்றெழு சத்தம் உலப்பிலி
தேசமொன் றாங்கே செழுங்கண்டம் ஒன்பதும்
வாச மலர்போல் மருவினின் றானன்றே.

"சிவனடியார்களே, எண் திசைகளிலும் சிவபெருமானின் திருவடிவமே விளங்கி ஒளிர்கின்றது. ஓசையில் இருந்து எழும் சத்தமாகிய எழுத்துக்கள் என்றும் உள்ளன. அதுபோலச் சிவபெருமானும் என்றும் நிலைத்து நிற்கும் இயல்பினன். தேசம்

ஒன்று. கண்டமாகிய பிரிவுகள் ஒன்பது. எப்பொழுதும் சிவபெருமான் மலரில் உள்ள நறுமணம்போல நிலைத்த பரம்பொருளாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2971. இல்லனு மல்லன் உளனல்லன் எம்பிறை
கல்லது நெஞ்சம் பிளந்திடுங் காட்சியன்
தொல்லையன் தூயன் துளக்கிலன் தூய்மணி
சொல்லருஞ் சோதி தொடர்ந்துநின் றானன்றே.

"சிவனடியார்களே, சிவபெருமான் திருவடியுணர்வு கைவந்த மெய்யடியார்கள் மீது உணர்வுக்குள் உணர்வாய் நின்று தனது இயற்கை உண்மை அறிவின்ப வடிவினை உணர்த்தியருள்வன். அதனால் அவர்களது உணர்வினில் உள்ளவனாகவே என்றும் இருப்பான். அத்தகைய மெய்யுணர்வு இல்லாதவர்களது உணர்வுக்குள் அவன் புலப்பட மாட்டான். அதனால் அவர்களுக்குச் சிவன் உள்ளவனுமல்ல. ஆணவ மேலீட்டால் அகங்காரம் என்னும் கல்லாய் பிறந்தருள்வன். அவன் அக்கல்லைக் கனியாக்கும் வல்லவன். அவனே மாசில்லாச் செம்மணி. சொல்லுதற்கரிய அரும் பெரும் சோதி. அவன் எம்மையெல்லாம் அன்று தொட்டு இன்று வரை அருள் செய்யும் தடங்கடலந்தணன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2972. உள்ளத் தொடுங்கும் புறந்துளும் நானெனுங்
கள்ளத் தலைவன் கமழ்சடை நந்தியும்
வள்ளற் பெருமை வழக்கஞ்செய் வார்கள்தம்
அன்னற் கடலை அறுத்துநின் றானன்றே.

"சிவனடியார்களே, நற்றவநிலை பெறாதவர்களுக்கு அவர்களது உள்ளத்துள் அடங்கி வெளிப்படாதிருப்பான். புறத்தே அவ்வுயிர்கள் நான் என முனைந்திடுமாறு அவையே தானாக நிற்பன். அவன் இரக்கமில்லாதவன். நெஞ்சினர்க்கு அரியன். அதனால் கள்ளத் தலைவன் என அழைக்கப்படுகிறான். கொன்றை மலரைத் திருச்சடையில் அணிந்திருக்கும் அவன் நந்தி என்னும் திருப்யெரினை உடையவன். அவனை நீங்காத நினைவுடன் வணங்குவார்க்கு வாய்மைப் பெருமானாவான். அதனால் பிறவிகளை ஒழித்தருளுபவனாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2973. மாறெதிர் வானவர் தானவர் நாடொறுங்
கூறுதல் செய்து குரைகழல் நாடுவர்
ஊறுவர் உள்ளத் தகத்தும் புறத்துளும்
வேறுசெய் தாங்கே விளக்கொளி யாகுமே.

"சிவனடியார்களே, வானவரும் அசுரர்களும் தம்முள் மாறுபட்டு ஒருவரோடு ஒருவர் போரிடுவர். அப்போரில் வெற்றியடைந்தவர்கள் மகிழ்வர். தோற்றவர்கள் துன்பப்படுவர். தோற்றவர்கள் தாம் வெற்றிபெச் சிவபெருமானின் திருவடியை வணங்குவர். இவ்விரு திறத்தாரும் ஒழிந்த அறநெறிப் பேற்றினராகிய மனிதர், உள்ளம் கனிந்து வாழ்த்தி வணங்குவர். அவர் உள்ளகத்தும் புறத்தும் சிவபெருமான் வெளிப்பட்டருள்வன். அவ் வெளிப்பாட்டால் அவை சிறந்தனவாகத் தோன்றும். சிவபெருமான் தூண்டாமணி

விளக்காய் அவர்தம் உள்ளத்துள் புகுந்து நின்றருள்வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2974. விண்ணிலும் வந்த வெளியிலன் மேனியன்
கண்ணிலும் வந்த புலனல்லன் காட்சியன்
பண்ணினில் வந்த பயனல்லன் பான்மையன்
எண்ணிலா னந்தமும் எங்கள் பிரானன்றே.

"சிவனடியார்களே, சிவபெருமான் உலகங்களை உருவாகக் கொண்டு எங்கும் நிறைந்துள்ள திருமேனியை உடையவன். புலனாற் காணும் காட்சிக்கு அப்பாற்பட்டவன். ஆனால் திருவடியுணர்வால் அவனைக் கண்டு மகிழலாம். நம் உள்ளப் பண்பால் கொள்ளத்தகும் பாண்மைப் பயனுடையவனல்லன். உணர்வுக்குள் உணர்வாய் உள்நின்று எண்ணில்லாத பேரின்பப் பெருவாழ்வைத் தந்தருள்பவன். அவனே எம்பெருமானாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2975. உத்தமன் எங்கும் உகக்கும் பெருங்கடல்
நித்திலச் சோதியின் நிலக் கருமையன்
எத்தனை காலமும் எண்ணுவர் ஈசனைச்
சித்தர் அமரர்கள் தேர்ந்தறி யாரன்றே.

"சிவனடியார்களே, தன்னைச் சார்ந்தாரைக் காக்கும் தலைமைப்பாடுடைய தனி முதல்வன் சிவபெருமான். எல்லோரும் வேண்டிப் பயன்பெறும் பேரின்பப் பெருங்கடல் அவன். பேரொளிமயமானவன். திருநீலகண்டத்தையுடைய கருமையானவன். அவனது திருவடியை அவனது திருவருளால் தொழுவதே சிறப்பானது. சித்தர்களும், தேவர்களும் எவ்வளவோ காலம் எண்ணியபோதும் சிவனை உள்ளவாறு அறியவில்லை. அதனால் அவனை அவனது திருவருளாலேயே காணுதல் வேண்டும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2976. நிறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன்
அறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் இன்பம்
மறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் பாலன்
புறம்பல காணினும் போற்றகி லாரே.

"சிவனடியார்களே, சிவபெருமானின் திருநிறம் மெய்யடியார்களின் நினைவின்படி காணப்படும். அவன் எல்லாம் கடந்தவன். அதனால் அவன் எல்லாம் கொள்பவன். அதனால்தான் அவன் மெய்யடியார்களின் விருப்பு வண்ணப்படி தன்னை மாற்றிக் கொள்கிறான். அவன் புரிந்தருளும் அறப்பாங்கும் பலவாகும். மெய்யடியார்களின் அன்பு எவ்வண்ணமாக விளங்குகின்றதோ அவ்வண்ணமாக அவன் புரிந்தருளும் இன்பமும், மேலும் அவன் புரிந்தருளும் நெறியல்லா நெறிச்சென்று வெறியராய், சிறியராய் கொடுமை பலவும் செய்து வடுவுடன் வாழ்ந்தழிந்த கொடியோர்

எவ்வண்ணமோ அவ்வண்ணமாகும். இவை அனைத்தும் வெளிப்படுமாறு உலகிடைப்புறத்தே நூல் வழக்காகவும், உலக வழக்காகவும் காட்டியருள்கின்றனன். அவ்வாறிருந்தும் நற்றவம் செய்யாதோர் போற்றாதிருக்கின்றனர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2977. இங்குநின் றானங்கு நின்றனன் எங்குளான்
பொங்கிநின் றான்புல னாபதி புண்ணியன்
கங்குல்நின் றான்கதிர் மாமதி ஞாயிறு
எங்குநின் றான்மழை போலிறை [2]தானன்றே.

"சிவனடியார்களே, சிவபெருமான் என்றும் எங்கணும் நீக்கமின்றி நின்றருள்கின்றனன். அதனால் அவனை இங்கு நின்றான், அங்கு நின்னான் என்றோ, இவ்வுலகத்துள்ளான், அவ்வுலகத்துள்ளான் என்றோ சுட்டிக்கூற முடியாது. அவன் எங்குள்ளான் என வினவவும் முடியாது. அவன் இல்லாத இடமில்லை. மெய்யடியார்களின் அகக்கண்ணிற்கும், புறக்கண்ணிற்கும் பொங்கி விளங்கி அருள்கின்றனன். அவனே உலக முதல்வன். அவனே புண்ணிய வடிவினன். அவன் இரவிலும் நின்றருள்கின்றனன். திங்களாகவும், ஞாயிறாகவும் நின்றருள்கின்றனன். மழைபோலப் பேரருள் பொழியும் பெரும்பொருளாகவும் நின்றருள்கின்றனன். அவனே எல்லாம் வல்ல இறைவனாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2978. உணர்வது வாயமெ யுத்தம மாயும்
உணர்வது நுண்ணெறி வெம்பெரு மானைப்
புணர்வது வாயும் புல்லிய தாயும்
உணர்வுடல் அண்டமு மாகிநின் றானே.

"சிவனடியார்களே, சிவபெருமான் ஆருயிர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக அறிவிற்கு அறிவாக நிற்கின்றனன். மேலும் இயற்கையுணர்வு, முற்றுணர்வு உடையவனாதலால் தன்னைச் சார்ந்தாரைக் காக்கும் தலைவனும் ஆகின்றான். பொருள்களை மாறுபாடின்றி அறிந்து கொள்வது நுண்ணறிவாகும். அவன் வேற்றுமையின்றிப் புணர்ந்து நிற்கின்றபோதும் திருவருளால் கிடைத்த அருட்கண்ணால் மட்டுமே அவனை உணரமுடியும். ஆருயிர்களின் கண்களாலும், உணர்வாலும் அறிந்து கொள்ள முடியாதவன். உணர்வு, உடல், உலகம், அண்டம் எல்லாமாக நிறைந்து நின்று அருள்பவன் அவனே" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2979. தன்வலி யாலுல கேழுந் தரித்தவன்
தன்வலி யாலே அணுவினுந் தானொய்யன்
தன்வலி யான்மலை எட்டினுந் தான்சாரான்
தன்வலி யாலே தடங்கட லாகுமே.

“சிவனடியார்களே, சிவபெருமான் தனது முடிவில்லாத ஆற்றலால் ஏழுவகையான உலகங்களையும் தாங்குகின்றான். அவன் அணுவிலும் நுண்ணியன். அண்டங்கள் யாவற்றையும் விட உருவில் பெரியவனும் அவனே. தன் ஆற்றலாலேயே எண்பெரும் மலைகளும் கூடினும் ஒப்பாகாத பெருமை உடையவன். அவனது பேராற்றலுக்கு அளப்பரிய கடலும் ஒப்பாகாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2980. ஏனோர் பெருமைய னாகிலும் எம்மிறை
ஊனே சிறுமையுள் உட்கலந் தங்குளான்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே யறியுந் தவத்தின் அளவன்றே.

“சிவனடியார்களே, சிவன் மண்ணவர், விண்ணவர், மற்றுமுள்ளவர் எல்லாரினும் மேலானவன். ஆனால் மெய்யன்பர்களுக்கு அன்பானவன். அதனால் பாகுபாடு காட்டாது மெய்யன்பர்களின் உள்ளங்களில் மகிழ்வுடன் எளிமையாக வீற்றிருக்கின்றான். அவன் வானோர் உட்பட எத்தகைய வானவர்களாலும் அளந்தறிய முடியாத அளப்பெருங்காட்சியன். அவனே எல்லாத் தெய்வங்களுக்கும் அவரவரின் தவத்திற்கேற்றவாறு அருள்பவன். அதனால் அவன் மகாதேவன் எனப்படுகிறான். அவன் தன்னைத்தானே ஆருயிர்களுக்கு அறியப்படுத்தும் தாயானவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2981. பிண்டாலம் வித்தில் எழுந்த பெருமுளைக்
குண்டாலங் காயத்துக் குதிரை பழுத்தது
உண்டனது உண்டார் உணர்வினை மூடர்கள்
பிண்டத்துட் பட்டுப் பிணங்குகின் றார்களே.

“சிவனடியார்களே, இப்போது மயில்வாகனம் முற்றாகமாறி விட்டான். அவன் தனது வியாபார நடவடிக்கைகளைத் தனது சகோதரனான சரவணபவனிடம் ஒப்படைத்துவிட்டுத் தனது முழுநேரத்தையும் ஆச்சிரமத்தில் இருந்து சிவசேவை செய்தான். அதனால் மகிழ்ந்த கதிரேசன் சொன்னார்; “மகனே உன்னை நினைக்க ஆச்சரியமாக உள்ளது. சுகபோகங்களை அனுபவித்த நீ இப்போது கடினமான வேலைகளைச் செய்கிறாய். இதிலிருந்து உனது மனவுறுதி தெரிகிறது. மகனே, ஆருயிரின் உடம்பு ஆலமரத்திற்கு ஒப்பாகும். அம்மரத்தை அம்மரத்தில் தோன்றிய விழுது தாங்குவது போன்று மக்களும் பெற்றோரைத் தாங்க வேண்டும். உனது தந்தையான பொன்னம்பலம் பெரும் சிவபக்தர். அவரும் உனது தாயாரும் உனது சொற்கள் பிடிக்காமையால் தனிமையாக இருக்கின்றனர். அவர்களுடன் சென்று வாழ். அது அவர்களுக்கு மகிழ்வைக் கொடுக்கும்.அத்தகைய உடம்பாகிய ஆல விதையிலிருந்து ஒரு பெருமுளை எழுந்தது. அதுதான் உள்ளத்தின் உறுதியாகிய வைராக்கியம். அம்மரம் வளர்ந்து உருள் வடிவாக ஆலங்காய் காய்த்தது. அக்காயை சிவநுகர்வாகிய மாங்கனியாகப் பழுத்தது. திருவருளால் அச் சிவப்பெருங்கனியை

உணர்வால் நுகர்ந்தவர் உண்டவராவார். அவரே திருவடியுணர்வு கைவந்த பெருந்தவத்தோராவார். அவ்வுணர்வு இல்லாதவர்கள் பெரும் மூடர்களாவர். அவர்கள் பிண்டமாகிய உடம்புள் புகுந்து பிறப்பிறப்புக்குட்பட்டு பெருந் துன்பப்படுவர். அவர்கள் நன்னெறிக்கு வராது புன்னெறிக்கு செல்வர் என்று நினைத்தேன். ஆனால் உனது மனமாற்றம் எனக்கும் உனது பெற்றோருக்கும் மகிழ்வினைத் தருகிறது என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

22. சர்வ வியாபி
(பெரு நிறைவி)

2982. ஏயுஞ் சிவபோக மீதமின்றி யோரொளி
ஆயும் அறிவையும் ஆயா உபாதியால்
ஏய பரிய புரியுந் தனதெய்துஞ்
சாயுந் தனது வியாபகந் தானன்றே.

"சிவனடியார்களே, மயில்வாகனம் சொன்னார்; "நான் ஆராயாது செருக்கால் மற்றவர்களை மதியாது நான் உயர்ந்தவர்கள் சிறந்தவர்கள் என்று நினைத்தவர்களுடன் அன்பாகவும் உரிமையாகவும் பழகி வந்தேன். இப்போது அவையெல்லாம் போலியானவை என்பதைப் புரிந்து கொண்டேன். பெற்றோரும் மனைவி மக்களும் தான் உரிமையானவர்கள் என்றும் சிவன் தான் கடவுள் என்றும் புரிந்து கொண்டேன். சிவனை நினைக்க மகிழ்வாக உள்ளது. அவனை வணங்கத் துன்பங்கள் குறைகின்றன என்று உணர்ச்சிவசப்பட்டான்.அப்போது கதிரேசன் சொன்னார்; "மகனே உன்னைப் போலத்தான் பலர் வாழ்கின்றனர். பலர் படவேண்டிய துன்பங்கள் அனைத்தையும் பட்டும் திருந்தாது வாழ்கின்றனர். நீ திருந்தி வாழ விரும்பிவிட்டாய். அதனால் சிவனை ஏற்றுக் கொண்டாய். அதனால் இனி உனது மனம் அமைதியடையும். நன்னெறி நான்மை நற்றவப்பேற்றால் சிவக்களிப்பாகிய சிவயோகம் வந்து சேரும். அத்துடன் ஆயும் அறிவும் பெருகும். நிலைப்பதும் நிலையாததுமாகிய பொருட்களின் வேறுபாடுகளை அறியும் அறிவே ஆயும் அறிவாகும். அந்த அறிவை நீ பெற்றுள்ளாய். இனி அறியாமை ஏற்பட்டுப் பொருட்களில் பற்கேடேற்பட வாய்ப்பில்லை. சிவபெருமானின் அன்புக்குட்பட்ட உயிர்கள் சலனமின்றி அடங்கி இருக்கும். அந்நிலைக்கு நீ வந்துவிட்டாய். எந்நேரமும் பணத்தைத் தேடும் ஆசையால் புத்தியை இழந்து தன் முனைப்புடன் செயற்பட்ட நீ பணம் தேடும் முயற்சியைக் கைவிட்டு விட்டு ஆச்சிரமத்திலேயே தங்கிவிட்டாய். அத்துடன் மாமிச உணவை மறந்து ஆச்சிரம உணவை உண்ணத் தொடங்கிவிட்டாய். இது பெரும் மாற்றமாகும். இப்போ உனது தன்முனைப்பு அடங்கிவிட்டது என்றவர்"என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2983. நானறித் தப்பொருள் நாடவிட மில்லை
வானறிந் தங்கே வழியுற விம்மிடும்
ஊனறிந் துள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்

தானறிந் தெங்குந் தலைப்பட லாகுமே.

“சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; “மகனே சுட்டறிவினாலும் சிற்றறிவினாலும் சிவபெருமானை நாடியறிய முடியாது. திருவடியுணர்வு கை வந்த மேலோர் அவனருளாலே அவனை அறிதல் வேண்டும். அப்போது தான் சிவபெருமான் வெளிப்பட்டு அருள்வான். அருளால் உயிர் அறிந்து நன்நிலை பெறுமாறு நின்று அருளி ஒளிரும் சுடர் ஆவான். அவ் உண்மையைத் திருவருளால் உணர்ந்து கொண்டால் அவ்வுயிர் எங்கும் செறிவாக நிற்கும். பாலில் கலந்த தேனின் நிலையில் ஆருயிர் நிற்கும். அதனால் வேறு நினைவுகள் வராது என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2984. கடலிடை வாழ்கின்ற கவ்வை யுலகத்து
உடலிடை வாழ்வு கொண் டுள்ளொளி நாடி
உடலிடை வைகின்ற உள்ளுறு தேவனைக்
கடலின் மலிதிரை காணலு மாமே.

“சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; “மயில் நீ திருந்தியதால் சிவபெருமானைப் பற்றிச் சொல்கிறேன். ஆருயிரானது கடலில் காணும் கலம்போலப் பெரும் துன்பங்களுடன் வாழும். இதுதான் உண்மை. துன்பத்துடன் வாழும் ஆருயிர் தன் அறிவால் ஆராய்தல் வேண்டும். அப்படியாராய்ந்தால் சிவனை உணரும் தன்மை உண்டாகும். இது கடல்நீர் தன்பால் தோன்றும் பேரலையைக் காண்பது போன்றது. இதனால் நீரே நீரைக் காண்பதாக மக்கள் மாறுபடக் கூறுவர். கடல் என்பது நீருக்கு இடங்கொடுக்கும் பெருவெளி. இது சிவபெருமானுக்கு ஒப்பாகும். நீர் ஆருயிருக்கு ஒப்பாகும். அலையை எழுப்பும் காற்றுத் திருவருளுக்கு ஒப்பாகும். அலை ஆருயிரின் புடைப்பெயர்ச்சிக்கு ஒப்பாகும். இந் நான்கு பொருளும் கெடாது. அவை ஒரு பொருளுமாகாது. அவை பின்னிப் பிணைந்து வேறற நிற்கும் நிலையில்தான். இக்காட்சி புலனாகிறது. இதைத் தெளிவாக உணர்பவர்கள் மயக்கமுறார். எதையும் தெளிவாக அறிதல் வேண்டும். எதற்கும். அவசரப்படக்கூடாது. பொறுமையாக இருந்து ஆராய்ந்து முடிவெடுக்க முடியாதவர்கள் மெய்யடியார்களிடம் வினவி அறிதல் வேண்டும். நீ இப்போது அந்த நிலையில் உள்ளாய் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2985. பெருஞ்சுடர் மூன்றிலும் உள்ளொளி யாகித்
தெரிந்திட வாய்நிற்குந் தேவர் பிரானும்
இருஞ்சுடர் விட்டிட டிகலிட மெல்லாம்
பரிந்துடன் போகின்ற பல்கோரை யாமே.

“சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; “மகனே ஞாயிறு, திங்கள், தீ என்ற பெருஞ்சுடர்கள் மூன்றும் சிவபெருமானின் எண்பெரும் வடிவங்களாகும். ஏனைய

ஐந்தும் முறையே நிலம், நீர், காற்று, ஆகாயம், ஆருயிர்கள் என்று சொல்லப்படும். சிவபெருமான் அம்முச்சுடர் வடிவாக இருப்பதோடு அவற்றை ஒளிரவும் செய்து, அவற்றின் உள்ளொளியாகவும் நிற்கின்றான். உலகம் முழுவதிலும் பிறப்பால், இறப்பால், பேசும் மொழியால், குறிக்கோள்களால் ஒருவரோடு ஒருவர் மாறுபட்டபோதும் அவர்களுள் அவன் வேறுபாடின்றிக் கலந்து இருக்கின்றான். அவன் பல்வேறு வகையாகக் காணப்படும் சிறிய கோரைப்புல் போன்று மிகமிக நுண்ணியவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2986. உறுதியி னுள்வந்த வுள்வினைப் பட்டும்
இறுதியின் வீழ்ந்தார் இரணம தாகுஞ்
சிறுதியின் உள்ளொளி திப்பிய மூர்த்தி
பெறுதியின் மேலோர் பெருஞ்சடை [1]ராமே.

"சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; "மயில், எதையும் சொன்னால் புரிவது கடினம். அதை அனுபவத்தால் உணரல் வேண்டும். உனக்குப் பலமுறை நான் சொன்னேன். நீ கேட்கவில்லை. அனுபவங்கள் இப்போ உன்னைப் புரிய வைத்துள்ளன. மூன்றும் இரண்டும் ஐந்தென்றால் குழந்தைக்குப் புரியாது. மூன்று மாம்பழங்களையும், இரண்டு விளாம்பழங்களையும் வைத்தால் அது சுலபமாகப் புரிந்து கொள்ளும். ஆருயிர் உடம்பின்மீது அதீத பற்றுக்கொண்டமையால் இரு வினைகளும் வந்து கூடும். அதனால் துன்பங்கள் பலவும் வந்து சேரும். அத்துன்பங்களைத் தாங்க முடியாதவர்கள் பலரின் உதவிகளை நாடுவர். யாரின் துன்பத்தையும் யாராலும் தீர்க்க முடியாது. அதைக் கடவுளால் மட்டுமே தீர்க்க முடியும் என்று உணந்த பின் சிவனை வந்து சார்வர். அச்சிவன் துன்பங்களை நீக்குபவன். அதனால் அவன் தன்னை நம்பியவர்க்குத் துணையாகித் துன்பங்களை அகற்றுவான். அதனால் அவர்கள் பொன்போல மிளிர்வர். அதனால் அவர்களின் உள்ளத்தில் அவன் உள்ளொளியாக விளங்குவான். அதனால் அவ்வுயிர் அதன்பின் சிவனை நம்புமே தவிர வேறு எதையும் நம்பாது, நாடாது. இந்நிலையில் அது சிவநினைவாகி விடும். அதை இப்போ நீ உணர்ந்துள்ளாய். சிவமிருக்கப் பயமில்லை என்ற எண்ணம் வலுத்தால் மனப்பாரம் யாவும் நீங்கும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2987. பற்றினுள் ளேபர மாய பரஞ்சுடர்
முற்றினு முற்றி முளைக்கின்ற மூன்றொளி
நெற்றியி னுள்ளே நினைவாய் நிலைதரு
மற்றவ வாய்நின்ற மாதவன் தானன்றே.

"சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; "மயில் பற்றுக்களை அகற்ற வேண்டுமானால் பற்றற்ற மெய்ப்பொருளான சிவபெருமானைப் பற்ற வேண்டும். அவன் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான். அவன் அன்பு அறிவு ஆற்றல் ஆகிய மூன்று ஒளிகளை உடையவன். அவன் ஆருயிர்களின் புருவநடுவில் நின்று அவ்வுயிர்களின் நினைப்பிற்கும் நினைவை அருள்பவன். அவன் உள்ளத்தின் உள்ளே அருளுருவாய்

நிற்பவன். அதனால் தான் உன்னை அவன் ஏற்று, உன்னைத் தீயவழியில் செல்லாது காக்கிறான் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2988. தேவனு மாகுந் திசைதிசை பத்துளும்
ஏவனு மாம்விரி நீருல கேழையும்
ஆவனு மாமமர்ந் தெங்கு மூலகினும்
நாவனு மாகி நவிற்றுகின் றானன்றே.

"சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; "மயில், சிவபெருமான் பத்துத் திசைகளிலும் விரவி நிற்பவன். அவன் வினைகளை நீக்கி அறிவையூட்டுபவன். எல்லா உலகங்களிலும் நிறைந்திருப்பவன். அவன் எல்லா உலகினிலும் வாழும். உயிர்களின் நாவில் நிற்கும் நன்மொழியுமானவன். அதனால் எல்லா நிகழ்வுகளும் அவனருளால் தான் நடைபெறுகின்றன. மெய்யடியார்களின் நாவில் நின்று அவர்களும் உலகமும் உய்தற்பொருட்டு அவர்களை இயக்குவிக்கின்றான். அதனால்த்தான் தேவார திருவாசகங்கள் பாடப்பட்டன. எல்லாம் அவன் செயலென உணர்ந்தால் எல்லாம் இன்பமாக மாறும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2989. நோக்குங் கருடன் நொடியே ழுலகையும்
காக்கு மவனித் தலைவனு மங்குள
நீக்கும் வினையென் நிமலன் பிறப்பிலி
போக்கும் வரவும் புணரவல் லானன்றே.

"சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; "மயிலு, விண்ணில் பறந்து கொண்டே மண்ணில் உள்ள நுண்ணிய பொருளையும் அறியும் தன்மை கருடனுக்கு உண்டு. அதனால் சிவபெருமானைக் கருடனுக்கொப்பிடுவர். சிவபெருமான் நொடிப்பொழுதில் ஏழுலகங்களிலும் நடப்பவற்றை அறிந்து காத்தருள்வன். இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியமையால் அவனை நிர்மலன் என்பர். அவன் பிறவாதவன். அதனால் போக்கும் வரவும் புணர்வும் இன்றிப் புணரவல்லான். அத்தகைய பெருமைகள் மிக்கச் சிவபெருமானை இப்போதாவது உணர்ந்துள்ளாய் அது பெருமையான விடயம் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2990. செழுஞ்சடை யன்செம்பொ னேயொக்கு மேனி
ஒழிந்தன வாயும் ஒருங்குடன் கூடுங்
கழிந்திலன் எங்கும் பிறப்பிலன் ஈசன்
ஒழிந்தில கேழுல கொத்துநின் றானே.

"சிவனடியார்களே, சிவபெருமான் பின்னல் சடையன். செம்பொன்னைப் போன்ற திருமேனியை உடையவன். அவன் ஆக்கப்பாடாகிய காரியநிலை ஏதும் எய்தாதவன். அங்ஙனமிருந்தும் முழுமுதற் சார்ப்புத் தன்மையினால் சாரப்படும் காரியப்பாடுகள் அனைத்துடனும் ஒன்றுகூடி உறையும் ஒபபில்லாதவன். அவன் எதையும்

ஒருபோதும் விட்டு நீங்காதவன். எல்லாவற்றையும் இயைந்து இயக்கி ஆள்பவன். தன்பொருட்டு எதையும் வேண்டாது ஆருயிர்களின் பொருட்டே அனைத்தையும் வேண்டி அவற்றுடன் கலந்து விளங்கி நிற்பவன். இவ்வாறு ஏழு உலகங்களிலும் கலந்து நின்று அருள்கின்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2991. புலமையின் நாற்றமில் புண்ணியன் எந்தை
நலமையின் ஞான வழக்கமு மாகும்
விலமையில் வைத்துள வேதியர் கூறும்
பலமையில் எங்கும் பரந்துநின் [1]றானே.

"சிவனடியார்களே, சிவபெருமான் இயற்கையுணர்வும், முற்றுணர்வும் ஒருங்கே அமையப் பெற்றவன். அதனால் செயற்கைப் புலமையின் நாற்றமும் இல்லாதவன். அவன் புண்ணிய வடிவினன். அவனே எந்தையாவான். அவன் நன்மைப் பாடமைந்த மெய்மை வடிவினன். ஆருயிர்களைவிட்டு நீங்காத பெருவழக்குள்ளவனும் அவனே. வேதியர் தாம் கற்ற வேதங்களைக் கூறி விற்கின்றனர். அதனால் அச் சிவபெருமான் அவர்களிடத்து பாலில் நெய்போல மறைந்து நிற்கின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2992. விண்ணவ னாயுல கேழுக்கு மேலுளன்
மண்ணவ னாய்வலஞ் சூழ்கடல் ஏழுக்குந்
தண்ணவ னாயது தன்மையின் நிற்பதோர்
கண்ணவ னாகிக் கலந்துநின் [2]றானன்றே.

"சிவனடியார்களே, சிவபெருமான் விண்ணில் உறைந்து ஏழு உலகங்களுக்கும் அப்பால் உள்ள மண்ணுலகத்துள் உறைந்து கடல் ஏழுக்கும் இப்பாலுள்ளான். அவன் அறவாழி அந்தணன். அதனால் மிக்க தண்ணளியை உடையவன். இது அவனது இயற்கைத் தன்மையாகும். அவன் அனைத்துயிர்களுடனும் பிரிப்பின்றிக் கலந்து நிற்கும் பேரருட் பெருமையன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2993. நின்றனன் மாலொடு நான்முகன் தானாகி
நின்றனன் தான்நிலங் கீழொடு மேலென
நின்றனன் தான்நெடு மால்வரை ஏழ்கடல்
நின்றனன் தானே வளங்கனி யாயன்றே.

"சிவனடியார்களே, சிவபெருமான் மாலொடு நான்முகன் தானாகவும் நின்றனன். அ.·.தாவது அவர்கள் இருவருடனும் விரவி நின்று அவர்களைக் கொண்டு காத்தல், படைத்தல் ஆகிய தொழில்களைப் புரிவித்து நிற்கின்றனன். பேரூளிக்குப் பின் தானே நேரில் படைத்தும் காத்தும் அருள்வதால் அப்பொழுது நேரே அவ்வவ் பெயர்களுடன் விளங்குபவன். அவன் நிலத்தின் மேலும், கீழும், நிலத்திலும் நிறைந்து

நிற்கின்றனன். மேலும் பெருமலையாய், ஏழு கடலாய் விரிந்து நின்றாலும் மெய்யடியார்களின் உள்ளத்தில் தீங்கனியாய் விளங்குபவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2994. புவனா பதிமிகு புண்ணியன் எந்தை
அவனே உலகில் அடர்பெரும் பாகன்
அவனே அரும்பல சீவனு மாகும்
அவனே இறையென மாலுற்ற வாறே.

"சிவனடியார்களே, இருநூற்று இருபத்து நான்கு புவனங்களுக்கும் முதல்வன் சிவபெருமான். அவன் புண்ணிய வடிவினன். ஆருயிர்களுக்குத் தந்தையானவன். அவனே உயிர்க்குள் உயிராக நின்று அவ்வுயிர்களைத் திருவடியை அடையும்படி இயக்குபவன். அவனே ஆருயிர்கள் அனைத்தோடும் கலந்து நிற்பதால் அவ்வுயிர்களுமானவன். இ.ஃது உயிர் உடலாக இருப்பது போன்றதோர் ஒப்பாகும். அவனையே இறைவன் அருளால் உணர்ந்த மெய்யடியார்கள் நீங்காத நினைவினராய்ப் பேரின்பம் எய்தினர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2995. உண்ணின் றொளிரும் உலவாப் பிராணனும்
விண்ணின் றியங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மண்ணின் றியங்கும் வாயவ மாய்நிற்குங்
கண்ணின் றிலங்குங் கருத்தவன் தானன்றே.

"சிவனடியார்களே, ஆருயிர் உள்ளத்துள் நின்று இயக்கும் உயிர்ப்பும், அவனின் அருளாலேயே இயங்குகின்றது. அதனால் அவ்வுயிர்ப்புச் சிவனெனப்படுகிறது. வானத்தில் உதிக்கும் சூரியனும் அவனே. காற்றும் அவனே. ஆருயிர்களை இயக்கும் கர்த்தாவும் அவனே" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2996. எண்ணும் எழுத்தும் இனஞ்செயல் அவ்வழிப்
பண்ணுந் திறனும் படைத்த பரமனைக்
கண்ணிற் கவருங் கருத்தில் அதுவிது
உண்ணின் றுருக்கியோர் ஆயமு [1]மாகுமே.

"சிவனடியார்களே, சிவபெருமானை இடையறாது எண்ணி ஈடேறுவதற்குரிய செந்தமிழ்த் திருமறை திருவைந்தெழுத்தாகும். அதை ஓதுமுன் திருவெண்ணீறு அணிதல், சிவமணி பூணுதல், சிவனடியார்களையும் திருக்கோவில்களையும் சிவனென வழிபடுதல் முதலியவற்றைச் செய்தல் வேண்டும். அத்துடன் திருமுறைகளைப் பண்ணோடும், திறனொடும் பாடுதல் வேண்டும். அத் திருவைந்தெழுத்தாகத் திகழ்பவன் சிவன். அதனால் அவனை அவனருளால் உணரல் வேண்டும். உணர்ந்தால் சுட்டறிவால் தோன்றும் வேறுபாடு நீங்கும். உள்ளன்பு பெருகும்.அதன் வாயிலாகத் திருவடிப்பேறு கிடைக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2997. இருக்கின்ற எண்டிசை அண்டம்பா தாளம்

உருக்கொண்டு தன்னடு வோங்கலிவ் வண்ணங்
கருக்கொண்டு எங்குங் கலந்திருந் தானே
திருக்கொன்றை வைத்த செழுஞ்சடை யானே.

"சிவனடியார்களே, எண்திசைகளோடும், அத்திசைகளில் காணப்படும் பல்வேறு அண்டங்களோடும், பாதாளத்தோடும் கலப்பால் உலகமே உருவாக திருவுருக் கொண்டவன் சிவன். அத்துடன் அவை இயங்குதற்பொருட்டுத் தான் நடுவாய்க் காரணமாய் நின்றுள்ளான். இதனால் அவன் எங்கும் நிறைந்துள்ளான். அவனே திருக்கொன்றை மாலை அணிந்த திருச்சடையன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2998. **பலவுடன் சென்றஅப் பார்முழு தீசன்**
செலவறி வாரில்லை சேயன் அணியன்
அலைவிலன் சங்கரன் ஆதிஎம் ஆதி
பலவில தாய்நிற்கும் பான்மைவல் லோனே.

"சிவனடியார்களே, அளவிடமுடியாத பல்வேறு பொருட்களுடன் கூடியது இந்த நிலவுலகம். இவ்வுலகில் கலப்புத் தன்மையால் ஒன்றாய்ப் பிரிப்பின்றி விரவி நிற்கும் முழுமுதற் பரம்பொருள் சிவபெருமான் ஒருவனே. அவனே ஈசன். அவன் இவ்வுலகுடன் இணைந்து நடத்தும் மெய்மைத் தன்மையை உள்ளவாறு உணர்வாரில்லை. அவன் அன்பர்களுக்கு அன்பான நண்பனாக உள்ளான். அல்லாதவர்க்கு அந்நியனாகவும் உள்ளான். அவன் மாறுபாடு அடையாதவன். எல்லா உயிர்களுக்கும் இன்பம் செய்வதால் அவனுக்குச் சங்கரன் என்ற நாமம் உண்டாயிற்று. ஆதியாகிய நடப்பாற்றலுடன் கூடியவன். உயிர்களது அன்பு, அறிவு, ஆற்றல் என்பன செம்மையாக நடைபெறுவதற்கு என்றும் காரணமாகவுள்ளவனும் அவனே. அவன் ஒன்றாய், வேறாய், உடனாய் எனப் பலவாகக் கலப்புற்றிருப்பினும், அவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முதல்வன். அத்துடன் பலவாகக் காணப்படுபவனும் அல்ல" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2999. **அதுவறி வானவன் ஆதிப் புராணன்**
எதுவறி யாவகை நின்றவன் ஈசன்
பொதுவறு வான புவனங்கள் எட்டும்
இதுவறி வான்நந்தி எங்கள் பிரானே.

"சிவனடியார்களே, ஆருயிர்களின் அறிவை விளக்கி அவற்றின் அறிவுக்குள் அறிவாக இருப்பவன் சிவன். எல்லாவற்றிற்கும் காரணமான ஆதியாற்றலை உடைய பழையோன். எவ்வகை அளவையினாலும் அறிய முடியாதவன். அவனே அருளாட்சிச் செல்வன். பேருலகங்கள் எங்கும் நிறைந்து நிற்கும் பெரும் பொருள். என்னைப் படைத்துத் தன்னை நன்றாகப் பாடும்படி பணித்த பெருமான். அவனே நான் பாடிய திருமந்திரத்தின் நாயகன். அவனே திருநந்தி" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

3000. **நீரும் நிலனும் விசும்பங்கி மாருதந்**
தூரும் உடம்புறு சோதியு மாயுளன்
பேரும் பராபரன் பிஞ்ஞகன் எம்மிறை
ஊருஞ் சகலன் உலப்பிலி தானன்றே.

"சிவனடியார்களே, சிவபெருமான் நீரும், நிலமும், ஆகாயமும், தீயும், காற்றுமாய் உலகெங்கும் பரந்து விளங்குகின்றான். அவன் எங்ஙணும் தூரு போன்று வெளிப்பட்டுத் தோன்றும் காரணமுமாய் நிற்கும் மெய்ப்பொருள் மேலோன். உடம்பின் அகத்தே அறிவொளியாய் விளங்கும் ஆருயிர்களுடன் தனிப்பெரும் தலையளியாற் கலந்து அவ்வுயிர்களாகவே நிற்பவனும் அவன். எல்லாவற்றுடனும் இவர்தந்தூரும் எழில்சேர் விழுமியானும் அவனே. அவனே பெரும் பூதங்களின் முறைவைப்பு ஒருபுடையொப்ப 'நமசிவய' என்னும் நற்றமிழ் திருவைந்தெழுத்துத் திருமந்திரத் திருக்குறிப்பாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

வாழ்த்து

வாழ்கவே வாழ்என் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருச்சிற்றம்பலம்

ஒன்பதாம் தந்திரம் முற்றும்.

திருமந்திரக் கதைகள் 25.05.2018இல் முடிவடைந்தன.